# அரபு மக்களின் வரலாறு

தி. வை. சொக்கப்பா

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—753

# அரபு மக்களின் வரலாறு

(பட்டப் படிப்பிற்குரியது)

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகின்றது)

ஆசிரியர்
இ. வை. சொக்கப்பா, எம்.ஏ., எல்.டி.,
முன்னாள் பேராசிரியர்,
வரலாற்றுத் துறை,
அரசினர் கலைக் கல்லூரி,
சேலம்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—July, 1977

Number of Copies—2,000

T.N.T.B.S. (C.P.) No. 753

© Government of Tamilnadu

**HISTORY OF THE ARABS**

T. V. CHOKKAPPA

Price Rs. 4-05

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

*Printed by*

Vijayakumar Printing Works

6/144, Mount Road,

Madras-600 006

# பதிப்புரை

அரபு மக்களின் வரலாறு என்ற இந் நூல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 753ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 788 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநிலமொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின்கீழ் வெளியிடப் படுகிறது.


**மேலாண்மை இயக்குநர்**

*தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்*

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அரேபியாவும் அரபு மக்களும் | ... | 1 |
| 2. | இஸ்லாம் சமயத் தோற்றம் | ... | 10 |
| 3. | குடியரசு முறையில் அமைந்த கலீபா ஆட்சி | ... | 20 |
| 4. | உமையடு கலீபாக்களின் ஆட்சி | ... | 49 |
| 5. | அப்பாசிடு ஆட்சி | ... | 79 |
| 6. | எகிப்திலும் வட ஆப்பிரிக்காவிலும் ஃபாதிமைடு கலீபாக்கள் | ... | 126 |
| 7. | ஐரோப்பாவில் அரபுக்கள் | ... | 133 |
| | சிறப்பு நிகழ்ச்சிகள் | ... | 155 |
| | மேற்கோள் நூற்பட்டியல் | ... | 156 |
| | கலைச்சொற்கள் (அரபு—ஆங்கிலம்) | ... | 157 |
| | ,, (ஆங்கிலம்—தமிழ்) | ... | 159 |


2166


நண்ணிலக்கடல்
சிரியா
அரேபியா
பாலஸ்தீன்
பல்மைரா
ஜெருசலம்
டமஸ்கஸ்
பஸ்ரா
பெட்ரா
பாக்தாது
அல்பஸ்ரா
மதீனா
பாதர்
மக்கா
அரேபியா
செங்கடல்
பாரசீக வளைகுடா
உமான் வளைகுடா
ஆதான்
ஆதான் வளைகுடா

# 1. அரேபியாவும் அரபு மக்களும்

[ நில அமைப்பும் இனமும்—சமூகமும் சமயமும்—ஹிஜாசும் (Hijaz) மக்களும் (நகர-நாடு)]

2166

இந்தியத் துணைக்கண்டத்தினும் பெரிய தீவக்குறையாய் விளங்கும் அரேபியா செமிட்டிக் இன மக்களின் தொட்டிலாய்க் கருதப்படுகிறது. அரேபியாவின் நிலப்பரப்பு, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியும், ஐரோப்பாவின் பரப்பில் நான்கில் ஒரு பகுதியுமாகும். அரேபியாவை மூன்று திசைகளில் கடலும், நான்காவது திசையில் மணலும் சூழ்ந்த ஒரு தீவாயும் கருதலாம். அதன் பெரும்பகுதி பாலையாகும்; கடற்கரைப் பகுதிகளில் மக்கள் வாழ்ந்தார்கள். ஆப்பிரிக்காவில் தொடங்கி, ஆசியாக் கண்டத்தில் ஈரான் நாட்டின் இடைப்பகுதி வழியே நீண்டு, கோபிப் பாலைவரை பரந்துகிடந்த சகாராப் பாலைவனத்தின் தொடர்ச்சியாகவே அரேபிய மணல்வெளி இருந்தது; பிற்காலத்தில் நைல் ஆற்றுப் பள்ளத்தாக்கும் செங்கடலும் அதனைப் பிரித்தன. அரேபியாவின் மேலைக்கரையையொட்டி தெற்கு வடக்காக ஒரு மலைத்தொடரும், அதன் கிழக்கில் பல்வேறு உயரங்களில் மேட்டு நிலங்களும் உள்ளன. மலையும் நிலமேடும் நீங்கலாகப் பாலைநிலமும் புல்வெளியுமாகவே அரேபிய நாடு காட்சியளிக்கிறது. கிழக்கிலும் மேற்கிலும் உள்ள குறுகிய கடல்களால் நாட்டின் வெப்பத்தைக் குறைக்கமுடியவில்லை. தென்கடலிலிருந்து வீசும் பருவக்காற்றும், அது சுமந்து வரும் மழை முகிலும் கடற்கரைப் பகுதியன்றி உள்நாட்டிற்குப் போதுமான நீர்வளமளிக்கவில்லை.

வற்றாத ஆறுகளோ அல்லது ஏரிகளோ அரேபியாவில் கிடையாது. ஆனால், சிறு குளங்களும் நீரூற்றுகளும் நாட்டில் பெருமளவில் உள்ளன. பாலைவனச் சோலைகள், மக்களும் மாக்களும் வாழ்வதற்கான உணவுப்பொருள்களை வழங்கின. ஆங்காங்கு பசும்புற்றரைகளையும், பேரீச்சம்பழத்தோட்டங்களையும், கோதுமை, பார்லி முதலிய கூலங்கள் விளையும் கழனிகளையும் காணலாம். மலைப் பகுதிகளில் காப்பியும் பல்வகைப் பழங்களும் விளைகின்றன. நாட்டுக்காடுகளில் அழகிய மான்களும்

காட்டுப்பசுக்களும் வாழ்கின்றன. மக்களுக்குப் பல்லாற்றானும் வாழ்வும் வளமும் தரும் ஒட்டகங்களும், புகழ்பெற்ற அரபுக் குதிரைகளும், வலிமைமிக்கக் கழுதைகளும், கொழுத்த ஆடுகளும் அரபுமக்களின் செல்வங்களாகும். நீர்வளமில்லாத குறையை ஈடுசெய்யும் வகையில் அண்மையில் கண்டுபிடிக்கப் பட்ட எண்ணெய்வளம் நாட்டிற்குப் பெரும்பொருளைத் தேடித் தருகிறது. மேலைக்கரையிலுள்ள அல்-யாமன், ஆசிர் முதலிய இடங்களில் பருவமழையின் காரணமாய்க் கடற்கரையிலிருந்து இருநூறு மைல் அளவிற்கு உள்நாட்டில் எக் காலத்திலும் பயிரிடக்கூடிய வளமான பகுதிகள் இருக்கின்றன. இஸ்லாம் சமயத்தின் பிறப்பிடமாகிய அல்-ஹிஜாஸ் பகுதியில் வாழ்கின்ற பெரும்பாலான மக்கள் இடம்பெயர்ந்து வாழவேண்டிய நிலைமைக்கு மழைக்கோளாறே காரணமாகும்.

அரேபியாவில் வாழ்ந்த மக்கள், வரலாற்றில் சிறந்து விளங்கியவர்கள். இடைக்காலத்தில் அன்றைய நாகரிக உலகின் பெரும்பகுதியை வென்று அரசோச்சிய மக்களினத்தையும் கோடிக்கணக்கான மக்கள் பின்பற்றும் இஸ்லாமியச் சமயத்தையும் ஈன்றெடுத்தது அரேபியா. யூத, கிறித்தவச் சமயங்களின் தொடக்கத்தையும், செமிட்டிக் பண்பாட்டின் ஊற்றினையும் மணற்பாங்கான அரபுநாட்டில்தான் காண வேண்டும். டை கிரீஸ்-யூப்ரடீஸ் ஆற்றங்கரைகளிலும், நைல் ஆறு பாயும் நாட்டிலும் நண்ணிலக்கடலின் கீழ்ப்பகுதியிலும் தழைத்த பாபிலோனிய, எகிப்திய, கிரீட் நாகரிகங்களின் வாரிசாய் வளர்ந்து கிரேக்க, உரோமானிய நாகரிகத்தின் சிறப்புக் கூறுகளைத் தமதாக்கிக்கொண்டவர்கள் அரபு மக்களாவார்கள். மேலைஉலகம் விழித்தெழுந்து இலக்கிய, கலை மறுமலர்ச்சிப் பாதையில் நடைபோடுவதற்கான அறிவுச்செல்வத்தை அளித்தவர்கள் அரபுமக்களே. இடைக்கால மக்களின் முன்னேற்றத்தில், அரேபியரும் அரபுமொழி பேசியவர்களும் பங்குகொண்டதுபோல் வேறெந்த மக்களும் பங்குபெறவில்லை. அவர்கள் பல நாடுகளை வென்று பல்வேறு இன மக்களுக்குத் தங்களுடைய மொழி, சமயம், ஏன் உடலமைப்பையும் தந்து, தங்களோடு இணைத்துக்கொண்டனர்.

அரேபியர் கி.மு. 3,500 முதல் பிறைச்சந்திரன் வடிவில் அமைந்த வளமிக்க நாட்டில் (Fertile Crescent) குடியேறி, பாபிலோனியர்களாகவும், அசிரியர்களாகவும், பினீசியர்களாக வும், ஹீப்ருக்களாகவும் நாகரிக வரலாற்றில் இடம்பெற்றனர்.

2166

நாட்டின் இருவகை இயற்கையமைப்பிற்கேற்ப, அரபு மக்களில் ஒருசிலர் நிலையாகவும், ஒரு சிலர் நாடோடிகளாகவும் வாழ்ந்துவந்தனர். பாலைநிலத்திலிருந்து புல்வெளியைத் தேடிச் சென்றவர்கள் பிடூயின் (Bedouin) மக்களாவார்கள். ஒட்டகம், குதிரை வளர்த்தல், ஆடு மேய்த்தல், வேட்டையாடுதல், வழிப்பறி செய்தல் ஆகியவை பிடூயின்களின் தொழில்களாகும். பயிரிடுதலையும், பண்டமாற்றுதலாகிய வணிகத்தையும் அவர்கள் இழிவாய்க் கருதினார்கள். அவர்கள் கூடாரங்களில் வாழ்ந்தனர். பாலைவன வாழ்க்கையில் பிடூயின் மக்களுக்குப் பேரீச்ச மரங்களும் ஒட்டகங்களுமே துணையாக இருந்தன. அரேபியரின் பொருளியல் வாழ்வில் ஒட்டகத்தின் பங்கு கணிசமானது. அதுவே அவர்களுக்குச் செல்வமாகும். அதன் பாலும் இறைச்சியும் அவர்களுக்கு உணவு; அதன் தோல் அவர்களுக்குப் போர்வை; ஒட்டகத்தின் மயிர் கூடாரம் அமைக்கப் பயன் பட்டது. அதன் சிறுநீர் முடிவளர்வதற்கும் நோய் குணமாவதற்கும் நன் மருந்தாகும். அதன் சாணம் எரிபொருளாகியது. மேலும், மக்களுக்கு ஊர்தியாகவும், மணப்பெண்களுக்குத் தரும் சீதனமாகவும், பண்டமாற்றுப் பொருளாகவும், இணைபிரியா நண்பனாகவும் ஒட்டகம் பயன்பட்டது. ஆதலால், அது பாலை வனக் கப்பல் மட்டுமன்றி அருளாளர் அல்லாவின் அருங்கொடையாகவும் கருதப்பட்டது. பிடூயின்கள், ஒட்டகத்தை அண்டி வாழ்பவர்களாயிருப்பதால், 'ஒட்டகங்கள் வாழ்ந்தால் அரபுக்கள் வாழ்வார்கள்' என்னும் பழமொழி வழங்கிற்று. பாலைவனத்தில் வாழ்கிற மக்களுகக்கு அப் பாலைவனமே பகைவர்களிடமிருந்து அவர்களைக் காக்கும் அரணாகவும்,சமயமரபுகளின் காவலனாகவும் இருந்தது. அவர்கள் பல குலங்களாயும் குடும்புகளாயும் பிரிந்து வாழ்ந்தனர். நீர்நிலைகள், புல்வெளிகள், கால்நடைகள் ஆகியவை காரணமாகவே அவர்களுக்குள் பூசலும் போர்களும் நிகழ்ந்தன. நீர், பயிரிடும் நிலம், புல்வெளி ஆகிய மூன்றும் குடும்பின் பொதுச்சொத்தாகும்.

அரபுக்கள், குறிப்பாகப் பிடூயின்கள் சுதந்தரமாய் வாழ விரும்பினார்கள். சமத்துவ அடிப்படையிலே மக்கள் வாழ்வு உருப்பெற்றிருந்தது. குலத்தலைவனாகிய ஷெய்க்கோடு மக்கள் சமமாகவே பழகினார்கள். பிடூயின் பெண்களும் ஓரளவு உரிமை பெற்றிருந்தார்கள். பிறமக்களோடு பழகும் வாய்ப்பேற்படும் போது அவர்களின் நாகரிகத்தைத் தமதாக்கிக்கொள்ளும் தனித் திறமையினைப் பிடூயின்களிடம் காண்கிறோம். இஸ்லாத்தின் மூலக்கூறுகளைப் பிடூயின்களே அளித்தார்கள் என்று காலிஃப் உமர் கூறியுள்ளார்.

கிரேக்கர்கள் கட்டட, சிற்பக் கலைகளிலும், ஈபுருக்கள் பாசுரம் பாடுவதிலும் சிறந்திருந்தார்கள் எனில், அரபுக்கள் எழுச்சிப் பாடல்கள் (lyrics), துள்ளற்பாடல்களில் (ods) திளைத்தனர். சொல்வன்மையில் அழகையும் அறிவையும் கண்டனர். சொல்லாற்றலுக்கு அடுத்தபடியாக வில்லாண்மையும் குதிரையேற்றத் திறமையும் அவர்களுக்குச் சிறந்த இலக்கணமாய் இருந்தது. குலம், குதிரை, வாள், கவிதை இந் நான்கிலும் அரபு மக்கள் பெருமைப்பட்டார்கள். கவிதையே அறிவின் அளவுகோலாயிருந்தது; வரலாற்றிற்கும் ஆதாரமாய் விளங்கிற்று. சமுதாயத்தின் நாவலனாயும் வழிகாட்டியாயும் வருங்குறி உரைப்போனாகவும் வரலாற்றாசிரியனாகவும் கவி திகழ்ந்தான்.

நாடோடிமக்களுக்குச் சமயப்பற்று குறைவு. பிடுயின்கள், இயற்கை நிகழ்ச்சிகளையும் உயிரில்லாப் பொருள்களையும் வணங்கும் ஆன்மவாதிகளாய் இருந்தார்கள்; கற்கள், மரங்கள் போன்ற இயற்கைப்பொருள்களையும் வழிபட்டார்கள். வெப்ப நாட்டில் வாழ்ந்த முல்லைநிலமக்கள் ஆடுமேய்க்க வசதியாயிருந்த குளிர்ந்த இரவினை நண்பனாகவும், மிகுந்த வெப்பத்திற்குக் காரணமாயிருந்த பகலவனைப் பகைவனாகவும் கருதித் தண் மதியை வணங்கியது இயற்கையே. பிடுயின்கள் பின்பற்றிய புறச்சமயம் தொடக்கத்தில் மதி வழிபாட்டினை மையமாய்க் கொண்டிருந்தது. வேளாண்மைக்குக் கதிரவன் ஒளிக்கதிர்களின் இன்றியமையாமையை அறிந்த மருதநில மக்கள் ஞாயிறு வழிபாட்டினை மேற்கொண்டனர். பயிரிடும் நிலங்களுக்குரிய தெய்வம் நலம் தருமென்றும் வறண்ட நிலத்திற்குரிய தெய்வம் தீமை செய்யுமென்றும் எண்ணிய மக்கள் ஒன்றை வழிபட்டும், மற்றொன்றிற்கு அஞ்சியும் வாழ்ந்தார்கள். பாலைவன வாழ்வில் பேரச்சத்தை விளைத்த பொருள்களைப்பற்றிய கற்பனை உருவங்களே பிடுயின்கள் வழிபட்ட சிறு தெய்வங்கள் (Jinn). விண்மீன் வழிபாட்டுக் கூறுகள், விரிவான சடங்குமுறை, அழகிய கோயில்கள், உயிர்ப்பலி வேள்விகள் இவையே தென் அரேபியரின் சமய மரபாயிருந்தன.

விண்ணிலிருந்து இறங்கிய 'ஹஜருல் அஸ்வத்' என்னும் ஒரு கருங்கல்லின் குடிலாய்த் திகழ்ந்த காபா (Kabah) பொலிவற்றிருந்தது. அவ்வெளிய, சதுர வடிவமான வழிபாட்டிடத்திற்குத் தொடக்கத்தில் கூரையுமில்லை. காபாவில் 360 தெய்வ உருவங்களிருந்தனவாம். காலங்கடந்த இச் சமயம் மக்களுக்கு மனநிறைவைத் தரவில்லை. ஒரே கடவுட்கோட்பாட்டைப் பற்றிய தெளிவற்ற கருத்துகள் மக்களிடையில் பரவத்

தொடங்கின. அக் கருத்துகள் பரவக் கிறித்தவச் சமயம் துணை செய்தது தங்கள் சமய நம்பிக்கைகளின் அறிவீனத்தை உணர்ந்த அறிஞர்கள் ஆறாம் நூற்றாண்டினிறுதியில் அவற்றை எதிர்க்கலானார்கள். ஆயிரம் தெய்வங்களை வழிபட கலீபா உமரின் சிற்றப்பா மறுத்தார். சமயத்துறையில் உண்மைகாண விழைந்தவர்கள் ஹனிஃப்கள் (Hanifs) என அழைக்கப் பட்டார்கள்.

ஹிஜாஸ் பகுதியில் மக்காப் பட்டணத்தில் பண்டைக் காலத்திலிருந்தே அல்லா வழிபாடு வழக்கிலிருந்து வந்தது. இஸ்லாம் தோன்றுவதற்கு ஐந்து நூற்றாண்டுகளுக்குமுன் அல்லாவின் திருநாமம் ஓர் எழுத்துப் பொறிப்பில் 'ஹல்லா' என்ற வடிவத்தில் காணப்படுகிறது. மக்கா நகர மக்களால், படைத்துக் காக்கும் தெய்வமாய்க் கருதப்பட்ட அல்லா,குறைஷிகளின் (Quraysh) குல தெய்வமாய்த் திகழ்ந்தார். அல்லாவிற்கு அடுத்த நிலையில் வைத்து வணங்கப்பட்ட அவருடைய மூன்று பெண்களுக்கும் (Al-Uzza, Al-Lat, and Manah) திருக் கோயில்களிருந்தன. அரேபியரின் சமுதாய அமைப்பு, தாயைக் குடும்பத் தலைவியாய்க் கொண்டிருந்ததால் பெண் தெய்வ வழிபாடே முதலில் இருந்தது. முகம்மது நபியின் தந்தையின் பெயர் அல்லாவின் ஊழியன் அல்லது அவரை வழிபடுவோன் என்ற பொருள் தரும் அப்துல்லாவாகும். அப்துல்லாவின் திருக் குமாரர் அல்லாவன்றி வேறொரு தெய்வமில்லை என்ற உண்மையை அரபுமக்களுக்கு அறிவிக்க இருந்தார்.

அரேபியா, பாலைவனத்தால் வடபகுதி, தென்பகுதியெனப் பிரிந்திருந்தது. இனவகையில் வட அரேபியர்கள் நண்ணிலக் கடல் மக்களையும். தென்அரேபியர்கள் ஈபுரு, ஹிட்டைட் மக்களை யும் ஒத்திருந்தார்கள். தென்புல மக்கள்தாம் சிறப்பாய் வாழ்ந்து முதலில் ஒரு நாகரிகத்தை உருவாக்கினார்கள். வடவர்கள் இஸ்லாம் சமய வருகைக்குப் பிறகே பிறநாடுகளோடு தொடர்பு கொண்டனர். இஸ்லாம் அரேபியாவை ஒன்றுபடுத்திய பின்பும் அவ்விரு பகுதி மக்களுள்ளும் பிளவு நீடித்தது. பிற்காலத்தில் அரபுக்கள் நிறுவிய பேரரசின் வலிமையைக் குறைத்ததும் இந்த வேறுபாடே.

அரபுக்கள் தாராள சிந்தையோடு விருந்தோம்பும் பண்பின ராய் வாழ்ந்தார்கள். நண்பர்களிடம் பற்றுடையவர்களாயும், வாக்குத் தவறாதவர்களாயுமிருந்தார்கள். ஒருவன் ஒருத்தியோடு வாழ்வதுதான் பெருவழக்காயிருந்தது. செல்வர்களிடையில் மணவிலக்கும், பல பெண்களை மணப்பதும் சாதாரணமா

யிருந்தது. பல கணவர்களுக்கு ஒருத்தி மனைவியாயிருத்தலும் ஓரோவிடங்களில் காணப்பட்டது. திருமணக்காலத்தில் மணமகன் மணமகளுக்கும் அவள் தந்தைக்கும் பொருள் தர வேண்டும். சமுதாயத்தில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் மிகச் சிலரே. ஆனால், பலருக்குக் கேள்வி அறிவு இருந்தது. ஒருசிலர் செல்வர்களாயும், பலர் வறியவர்களாயுமிருந்தனர். பெரும் பொருளீட்டிச் சிலர் தீய ஒழுக்கத்தில் திளைத்தார்கள்; கடுமையாய் உழைத்தும் போதிய உணவோ, நல்ல ஆடையோ இன்றிப் பெரும்பாலோர் தொல்லையும் கவலையும் பட்டார்கள். வறுமையினால் சிலர் தங்கள் பெண்களைக் கொல்லவேண்டி வந்தது. ஓருயிர்க் கொலைக்கு மற்றோர் உயிரைப் பறித்தலே அக் கால வழக்கம். 'உயிருக்கு உயிர், உறுப்பிற்கு உறுப்பு'—இதுவே அக் கால தண்டனை நியதி. சமுதாயத்தில் அடிமை முறையுமிருந்தது. சந்தையில் வாங்கப்பட்டவர், போரில் பிடிபட்டவர் என்று அடிமைகள் இருவகைப்பட்டனர். ஆண்களுக்கே வாரிசுரிமை உண்டு. சூதும் குடியும் பெருவழக்காயிருந்தன. சூதில் வந்த பொருள் ஏழைகளுக்கு உணவளித்தல் போன்ற காரியங்களில் செலவழிக்கப்பட்டது. மது, மங்கை, போர் மூன்றும் அரபுக்களின் வாழ்விற்குச் சுவை ஊட்டின. அவர்கள் ஒன்றுபட்டு ஓர் ஆட்சியில் வாழவில்லை; எந்த அரசுக்கும் இறை செலுத்த விரும்பவில்லை. வரிகொடுப்பது இழிவாய்க் கருதப்பட்டது. இஸ்லாம் சமயம் தோன்றுவதற்குமுன் அரபுக்கள் வாழ்ந்த வகையை அக் காலக் கவிதைகள் வாயிலாக அறியலாம்.

அரேபியாவின் பண்டைய வரலாறு அல்-யாமன் பகுதியில் கி.மு. 1200-க்கு முன்னால் தொடங்குகிறது. மன்னர்களின் பெயர்கள் பாபிலோனிய எழுத்துப்பொறிப்புகளில் குறிக்கப் பெற்றுள்ளன. கி.மு. 950-க்குப் பின்னால் சபா (Saba) ஆட்சியில் அணைகட்டி, நீர்தேக்கிப் பாசனத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வேளாண்மையும் வணிகமும் சபேயன் நாகரிகத்தின் அடிப்படையாயிருந்தன. சொத்துபற்றிய சட்டங்கள் தொகுக்கப்பெற்றன. மக்கள் உழைப்பிற்கும் கடவுள் பற்றுக்கும் சான்றாய்க் கோட்டைகளும் கோயில்களும் காணப்படுகின்றன. கீழை நாடுகளுக்கும் மேலை நாடுகளுக்கும் இடையே நடைபெற்ற வணிகம் முழுவதும் தென் அரேபியர்கள் கைகளில் இருந்தது. அவர்கள் அபிசீனியாவில் குடியேறினார்கள்; எகிப்திலிருந்து பல கம்மியர்களையும் தொழிலாளிகளையும் பெற்றார்கள். கி.பி. 300-க்கும் 525-க்கும் இடையில் யூத, கிறித்தவச் சமயங்கள் அல் யாமன் மக்களுக்கு அறிமுகமாயின. கி.பி. 525-ல் அல்-யாமனை அபிசீனியப் படை கைப்பற்றியது. பாரசிகப் படை உதவியுடன்

அபிசீனியர்களை அரேபிய மக்கள் விரட்டியடித்தார்கள். அபிசீனிய ஆதிக்கத்தை அகற்றவந்த பாரசிகர்கள் அல்-யாமனைத் தங்கள் பேரரசில் ஒரு மாகாணமாக்கிக்கொண்டார்கள். பாரசிக ஆளுநர் பின்னர் இஸ்லாம சமயத்தைத் தழுவியபோது அம் மாகாணம் மீண்டும முஸ்லிம் ஆட்சியின்கீழ் வந்தது.

நாட்டின் வடபகுதியிலிருந்த அல்-ஹிஜாசை மக்காவிலிருந்த திருக்கோயில் தலைசிறந்த சமய மையமாக்கிற்று. முக்கிய வணிகப் பாட்டையில் அமைந்திருந்த அல்-ஹிஜாஸ் வணிக நடவடிக்கைகளுக்கு ஈடுஇணை இல்லாத வாய்ப்பினைப்பெற்று விளங்கிற்று. இஸ்லாம் தோன்றியபின் அல்-யாமனுக்கு இருந்த வரலாற்று முக்கியத்துவம் அல்-ஹிஜாசிற்குச் சென்றுவிட்டது. வணிகத்தால் வளமும் வலிமையும் பெற்ற நபடேயன் (Nabataean) அரசின் தலைநகராய் விளங்கிய பெட்ரா (Petra), பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்ட நகரமாகும். கி.மு. நான்காம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து, ஐநூறாண்டுகளுக்குமேல் வணிகர்களுக்குத் தூய தண்ணீரைத் தாராளமாய்த் தந்து உதவிய பெட்ரா கி.பி. 106-ல் அழிக்கப்பட்டது. உரோமானிய, பார்த்திய அரசுகளுக்கிடையிலிருந்த சிரியாப் பாலைவனத்தில் பல்மைரா (Palmyra) பட்டணம், வணிகக் கூட்டம் செல்லும் வழியில் அமைந்து சிறப்புற்றது. கனிச்சத்துகள் நிறைந்த நீரை நிறையப் பெற்றிருந்த பல்மைரா வணிகத்துறையில் பெட்ராவின் வாரிசாயிற்று. கிழக்கு, மேற்குத்திசை வணிகர்களும் தென் அரேபியாவிலிருந்து வடக்கே சென்று வணிகஞ் செய்தவர்களும் பல்மைராவில் சந்தித்தனர். அதன் செமிட்டிக் பெயராகிய டாட்மோர் (Tadmore) கி.மு. 1100ஆம் ஆண்டின் எழுத்துப் பொறிப்பில் காணப்படுகிறது. டமாஸ்கஸ் நகரிலிருந்து யூப்ரடீஸ் பகுதிக்குச் செல்லும் பாதையில் அமைந்திருந்த பல்மைராவின் படைத்துறை முக்கியத்தை உரோமானியர் உணர்ந்தனர். கி.பி. 265-ல் பல்மைரா படைத்தலைவன் மேலை ஆசியாவில் ஆதிக்கஞ் செலுத்தினன். அவன் மனைவி செனோபியா தன்னைக் கீழைநாடுகளின் அரசியென அறிவித்துக்கொண்டு உரோமானிய அரசினை எதிர்த்து எகிப்தையும் சிற்றாசியாவையும் தன்னாதிக்கத்திற் குட்படுத்தினாள். கி.பி. 272-ல் அவள் சிறைப்பட்டபின் உரோமப் பேரரசன் ஆருலியன் பல்மைராவை அழித்தான். பாலைவன அரபுக்கள் அடைந்த உன்னத நாகரிகத்திற்கு எடுத்துக்காட்டாய் விளங்கியது பல்மைரா நாகரிகம். அது கிரேக்கர்கள், சிரியா மக்கள், பார்த்தியர்கள் ஆகியோர் உருவாக்கிய கலவை நாகரிகமே. பல்மைரா மக்கள் பேசிய மொழி மேற்கு அரமெயிக் Arama ic) மொழியின் கிளையாகும். அவர்களின் சமயத்தில்

ஞாயிறு வழிபாட்டின் கூறுகளைக் காணலாம். பல்மைரா அழிந்த பின் நிலவழிப் போக்குவரத்து பஸ்ரா முதலிய நகரங்களின் வழியே நடைபெற்றது.

அல்-ஹிஜாஸ் வளமற்ற வறண்ட பகுதியாயினும், அல்யாமனைச் சிரியா நாட்டோடு இணைத்த நறுமணச் சரக்குப்பாட்டையில் (Spice Road) அமைந்திருந்த மக்கா, மதீனு நகரங்கள் வாணிக வளம்பெற்று நபிநாயகத்தின் தொடர்பால் மேலும் சிறப்புறவிருந்தன. வழிபாட்டிடம் என்று பொருள்படும் பெயரைத்தாங்கிய மக்கா, சமயக் குழுவினரால் தோற்றுவிக்கப் பட்டு முகம்மது நபி பிறப்பதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே சமய மையமாயிருந்தது. தாலமி அந் நகரை மக்கோரபா (Macoraba) எனக் குறிப்பிட்டுள்ளார். மக்காவில் வணிகர்களும் அறிஞர்களும் சந்தித்துத் தங்கள் கருத்துகளைப் பரிமாறிக்கொண்டார்கள். காபாவின் காவலராயிருந்த குறைஷி குலத்தினர் அதனைத் தேசியக் கோயிலாக்கினார்கள். மக்காவைக்காட்டிலும் இயற்கை வசதியோடு விளங்கிய யாத்திரிப் (Yathrib) பட்டணம் மக்கா நகருக்கு வடக்கில் 300 கல் தொலைவில் சிறந்த பாலைவனச் சோலையாயிருந்தது. அங்கு வாழ்ந்த யூதர்கள் பேரீச்ச மரங்களை வளர்த்தும், கூலங்களை விளைவித்தும் அப் பட்டணத்தை வேளாண்மை மையமாக்கினார்கள். அவர்கள் பேசிய அரமெயிக் மொழியில் 'யாத்திரிப்' என்ற பெயர் 'மெதிந்தா' என மாறிப் பிற்காலத்தில் 'நபிநாயகத்தின் நகர'மெனப் பொருள்படும் மதீனு (Madinah) எனப் பெயர் பெற்றது.

கி.மு. 1225 அளவில் எகிப்திலிருந்து பாலஸ்தீனம் திரும்பும் வழியில் ஈபுரு மக்கள் சினாய்த் (Sinai) தீவக்குறையில் நாற்ப தாண்டுகள் தங்கினார்கள். அந்த இடைத்தங்கலின்போது யூதர்களின் நபி மோசஸ் (Moses) ஒரு சமய குருவின் மகளாகிய அரபுப் பெண்மணியை மணந்தாரென்றும் அவள் வணங்கிய 'யாவே' அல்லது 'ஜெஹோவா' என்று பிற்காலத்தில் வழங்கிய யாஹு (Yahu) என்ற எளிய பாலைத்தெய்வத்தைப்பற்றியும், அவள் பின்பற்றிய சமயக்கோட்பாட்டு முறையையும் அவளிடமிருந்து அறிந்தாரென்றும் சொல்லப்படுகிறது. ஈபுருக்களின் பாலைவனப் பிறப்பிடத்தைப்பற்றிய எதிரொலிகள் கிறித்தவ மறைநூலின் பழைய ஏற்பாட்டில் (Old Testament) மலிந்துள்ளன. வான்வெள்ளியைப் பின்பற்றிக் குழந்தை ஏசுவைக் காண ஜெருசலம் சென்ற கீழை நாட்டு நல்லறிவாளர்கள் (The wise men from the East) வடஅரேபியப் பாலைவன வாசிகளாகிய பிடுயின்களாயிருக்கலாம். நாட்டளவில் யூதர்கள் அரபுக்களுக்கு

அண்டை வீட்டார்கள்; இனவகையில் நெருங்கிய உறவினர்கள் ஆவார்கள்.

வட அரேபியர்கள் அரமெயிக் எழுத்துகளைப் பயன்படுத்தி இஸ்லாமியத் திருமறை மொழியாகிய அரபுமொழியைக் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் உருவாக்கினார்கள். எகிப்திய எழுத்து முறை, சினாய்த் தீவக்குறையில் வாழ்ந்த செமிட்டிக் மக்கள் கையில் மாற்றம்பெற்று, தென் அரேபியாவில் மேலும் வளர்ந்து, பிறகு பினீசிய மக்களால் உருப்பெற்று, அதன் பிறகு கிரேக்கர்களால் செப்பமடைந்து ஐரோப்பிய நெடுங்கணக்கின் தாயாகியது.

பண்டைய நாகரிக நாடுகளாகிய எகிப்து, பாபிலோனியா ஆகிய நாடுகளுக்கு இடையில் ஆப்புபோல் அமைந்திருந்த அரேபியா அவ்விரு நாகரிகங்களினாலும் உருவாக்கப்பெற்றது. அரேபியாவை உருவாக்கிய மூன்றாவது நிலப்பகுதி பஞ்சாபாகும். அரேபியாவின் தென்கிழக்கில் வாழ்ந்த மக்கள் பஞ்சாபோடு வாணிபஞ்செய்த காரணத்தால் அவ்விரு நாடுகளுக்குமிடையில் இருந்த கடல் அரபிக் கடல் என்ற பெயரைப் பெற்றது. தென் அரேபியாவின் வளமிக்க கடல்சார்ந்த நாகரிகம் இந்தியாவையும் ஆப்பிரிக்காவையும் இணைத்தது.

## 2. இஸ்லாம் சமயத் தோற்றம்

[அல் அமீன்—முகம்மதுவின் முற்பகுதி வாழ்க்கை—மக்காவில் முகம்மது நபி—மதீனாவில் நபிநாயகம்—இஸ்லாமும் அதன் மூலமும்]

முகம்மது நபி அவர்களின் காலத்திற்குமுன் சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளில் அரேபியா மிகச் சீர்குலைந்திருந்தது. அரபு மக்கள் இஸ்லாம் சமயம் தோன்றுவதற்கு முன்பிருந்த அக்காலத்தை 'ஜஹிலியா' (Jahiliyah) அல்லது 'அறியாமை மிகுந்த இருண்டகால'மெனக் குறிப்பிட்டார்கள்.

அக்காலத்தில் பெரும்பாலான மக்கள் தாங்கொணா வறுமையில் வருந்தினார்கள். அடிக்கடி நிகழ்ந்த குலமரபுச் சண்டைகளில் ஆண்கள் மடிந்தனர்; பெண்கள் மிகத் துன்புற்றனர். அடிமைகளின் துயருக்கு அளவேயில்லை. தண்ணீரும் புல்வெளிகளும் பொதுச்சொத்தாய்ப் பயன்பட்டு வந்த நிலைமை மாறித் தனியார் சொத்துரிமை தலைகாட்டத் தொடங்கிற்று. பண்டைய குலமரபுச் சமுதாய ஒழுக்க முறைகள், வளர்ந்துவந்த புதிய சமுதாயத்திற்குப் பொருந்தவில்லை. அரபு மக்கள் ஒன்றுபடுவதற்கான துணைக்கூறுகள் நிறைய இருந்தன; ஒன்றுபட்டாலன்றி வாழமுடியாத நிலை உருவாயிற்று. அரபுக்கள் அண்டை நாட்டு மக்களாகிய பைசாண்டிய, உரோமானியர்களோடும், பாரசிகர்களோடும் ஈடுபட்ட சண்டைகளில் அரபுப் போர்வீரன் போர்த்திறமையில் யாருக்கும் இளைத்தவனாக இருக்கவில்லை. ஆனால், ஒற்றுமையில்லாததால் தோல்வியுற்றான். 'நாடு ஒன்றுபடின் அண்டை மக்கள்மீது ஆதிக்கஞ்செலுத்தலாம், ஒன்றுபடாவிடில் அவர்களுக்கு அடிமைப்படவேண்டிவரும்' என்ற உண்மை புலப்படத் தொடங்கிற்று. சமுதாய, பொருளாதார, அரசியல் துறைகளில் ஒரு பெரிய மாற்றத்தை எதிர்நோக்கி அரேபியா ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. சமயத்துறையில் பெரும் புரட்சி செய்து, மக்களை ஒன்று சேர்த்து நாட்டின் வரலாற்றினைத் தலைகீழாய் மாற்றியமைக்கக்கூடிய ஒரு தேசியத்தலைவரின் வருகைக்குக் காலம் கூடிவந்ததோடு அரங்கும் அமைந்திருந்தது.

நபிநாயகம் முகம்மது, மக்காவில் உயர்குலமாய்த் திகழ்ந்த குறைஷிக் குடும்பத்தில் கி.பி. 571-ல் பிறந்தார். தாய் தன் குழந்தைக்கு இட்ட பெயர் தெரியவில்லை. 'அல் அமீன்' (The Faithful) என்று பொதுமக்களால் அழைக்கப்பட்டார். திருக்குரானில் அவர் நாமம் அகம்மது என்று ஓரிடத்திலும் முகம்மது என்று ஓரிரு இடங்களிலும் குறிக்கப் பெற்றுள்ளது. முகம்மது, தந்தை அப்துல்லாவைத் தாம் பிறக்கும் முன்பேயும், தாய் அமீனுவைத் தமது ஆறும் வயதிலும் இழந்தார். அநாதைக் குழந்தை முதலில் பாட்டனிடத்திலும் பின்னர் பெரிய தந்தை அபூதாலிப்பிடத்திலும் வளர்ந்துவந்தது. அபூதாலிப்பின் அன்பிலும் அரவணைப்பிலும் வளர்ந்த சிறுவன் பன்னிரண்டாம் வயதில் பெரிய தந்தையோடு சிரியா நாட்டிற்குச் சென்று அங்கு ஒரு கிறித்தவத் துறவியைச் சந்தித்தான். பாலைவனப் பகுதியில் பிறந்து வளர்ந்த முகம்மது, சிரியாவில் அந்த நாட்டின் இயற்கை வளத்தையும் பழத்தோட்டங்களையும் பார்த்தபோது, அவற்றைப் படைத்து உலகிற்களித்த கடவுளின் வள்ளன்மையைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்கலானார். அவர் தம் பதினைந்தாம் வயதில் தம் குலத்திற்கும் மற்றோர் குலத்திற்கும் நிகழ்ந்த குலச் சண்டையைக் காணும் வாய்ப்பினைப் பெற்றார். அப் பட்டறிவு அவருக்கு முப்பதாண்டுகளுக்குப்பின் பயன் பட்டது. புல்வெளிகளில் ஆடுகளின் பின்னால் திரிந்த ஓய்வு நாள்கள் அவருக்கு ஆழ்ந்து சிந்திக்கும் வாய்ப்பினை அளித்தன. அல்-அமீன் என்ற தம் பெயருக்குப் பொருத்தமாய் அவர் இளமையிலேயே எல்லோருடைய நம்பிக்கைக்கும் பாத்திரமாய் விளங்கினார். பெரிய தந்தைக்குச் சுமையாய் இருக்க விரும்பாத இளைஞர், கதீஜா என்ற செல்வச் சீமாட்டியின் ஊழியரானார். வணிகக் குழுவொன்றிற்குத் தலைமைதாங்கிச் சிரியா நாட்டில் வாணிபஞ்செய்து பெரும் ஆதாயத்தோடு திரும்பிய முகம்மதுவின் திறமையையும் நேர்மையையும் பாராட்டிக் கதீஜா இருபத்தைந்து ஆண்டு நிரம்பிய இளைஞரைத் தமது வாழ்க்கைத் துணைவராக்கிக்கொண்டார். பதினைந்து ஆண்டு மூத்தும், முன்னரே இரு முறை மணமுடித்து விதவையாகியுமிருந்த சீமாட்டியின் செல்வமும் உயர்பண்பும் முகம்மதுவிற்குக் கவலையற்ற அமைதியான வாழ்வையும், மக்களைப்பற்றியும் நாட்டின் நிலைமையைப் பற்றியும் சிந்திக்க ஓய்வையும், அளித்தன. அவற்றின் பயனாய்ச் செயல்படத் தொடங்கியதும் உறுதியான ஆதரவையும் அளித்தன. பிற்காலத்தில் நபிநாயகம் கண்ட உண்மையை ஏற்று அவருக்கு முதல் சீடராகி, அவ்வுண்மையை உலகிற்கு எடுத்தியம்ப உதவி, அவருக்கு உறு

துணையாயிருந்து இஸ்லாம் சமய வரலாற்றில் கதீஜா சிறப்பிடம் பெற்றார்.

திருமணம் முடித்த இருபத்தைந்தாம் ஆண்டிலிருந்து முகம்மதுவின் வரலாற்றினைத் தெளிவாக அறிய முடிகிறது. உலகியலிலிருந்து பெரிதும் விடுபட்டு மக்காவிற்கருகில், ஹிரா மலைக்குகையில் தங்கி, உணவையும் மறந்து ஆண்டவன் வழிபாட்டிலும், அரபுமக்களின் வாழ்க்கை முறைகளில் காண வேண்டிய மாற்றங்களைப்பற்றி ஆராய்வதிலும் காலங்கழித்து வந்தார். ஐயத்திற்கு இடமின்றி உண்மை காண்பதில் மும்முரமாய் முனைந்திருந்தபோது ஒருநாள் தெய்வக் குரலைக் கேட்டார். அருள் வெளிப்பாட்டுச் செய்தியை அவனியோருக்கு அறிவிக்குமாறு மகம்மதுவிற்குத் தெய்வ ஆணை பிறந்தது. அவர் தமது நாற்பதாவது வயதில் தெய்வம், சமயம்பற்றிய உண்மைகளை இறைவனின் தலைமைத் தூதர் கேபிரியல் வாயிலாக அறிந்துகொள்ளும் அரிய வாய்ப்பினைப் பெற்றார். கடவுட் காட்சிகளைக் கண்டு மெய்மறந்திருந்த நிலையில் நபிநாயகம் கேட்ட தெய்வ வாசகங்களை அவருடைய நண்பர்களும் சீடர்களும், அவ்வப்போது கிடைத்த ஓலையிலும், தோலிலும், கல்லிலும், எலும்பிலும் எழுதி உலகிற்கு உதவினார்கள். அவற்றின் தொகுப்பே திருக்குரான் என்ற முகம்மதிய மறைநூலாகும்.

'கடவுள் ஒருவரே; அவர் எல்லாம் வல்லவர்; இப் பேரண்டத்தைப் படைத்தவர்; தீர்ப்புநாள் ஒன்றுண்டு; கடவுளின் ஆணையை நிறைவேற்றியவர்கள் பேரின்பமடைவார்கள்; அதனைப் புறக்கணித்தவர்கள் பெருந்துன்பமடைவார்கள்' என்பதே நபிநாயகம் உலகிற்களித்த சமய உண்மையும் எச்சரிக்கையுமாகும். அல்லாவின் தூதராகிய நபிநாயகம், இஸ்லாம் சமயத்தை மக்களிடையில் விளக்கத்தொடங்கினார். தொடக்கத்தில் மக்காவாசிகள் அவரது கோட்பாடுகளை ஏளனம் செய்தனர். அவர் பேசிய அருண்மொழிகள் இரத்தினச் சுருக்கமாகவும், ஊக்கமூட்டுவனவாகவும், மனத்தில் பதிந்து மக்களை ஆட்கொள்வனவாகவும் இருந்தன. அவருடைய மனைவி, பெரிய தந்தையின் மகன் ஆலி, உறவினர் அபூபக்கர், அடிமை சைது போன்ற ஒரு சிலரே அவர் கருத்துகளை ஏற்றுக் கொண்டனர். உயர்குல மக்கள் அவருடைய கொள்கையை எதிர்த்தனர். அடிமைகளும் கீழ்நிலை மக்களும் அவர் பரப்பி வந்த சமயத்தைத் தழுவினார்கள். அவருடைய சீடர்களின் எண்ணிக்கை பெருகத்தொடங்கியதும் அவர்கள் துன்புறுத்தப் பட்டார்கள். அடக்குமுறை காரணமாய் நபிநாயகத்தைப் பின்

பற்றிய பல குடும்பங்கள் நாட்டிலிருந்து வெளியேறி அபிசீனியாவில் குடியேறின. உருவ வழிபாட்டையும் பல தெய்வ வணக்கத்தையும் முகம்மது வன்மையாய்க் கண்டிக்கத் தொடங்கியதும் எதிர்ப்பு வலுத்தது. பிற்காலத்தில் இஸ்லாமிய ஆட்சியை நிறுவுவதில் முதன்மையிடம் வகித்த உமர், முகம்மதுவிற்கு ஆதரவளித்தார்.

காபாவிலிருந்து வான்வழியாக ஜெருசலமேகி, அங்கிருந்து வானுலகிற்குச் சென்று திரும்பிய மகம்மதுவின் பயண நிகழ்ச்சியினையொட்டி, யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் புனித நகரமாயிருந்த ஜெருசலம் முஸ்லிம்களுக்கு மக்கா, மதீனு பட்டணங்களை அடுத்து மூன்றும் திருத்தலமாயிற்று. தாந்தே காவியமாகிய 'தெய்வீக இன்ப நாடக'த்திற்கு மூலாதாரமாய் இருந்தது முகம்மதுவின் விண்பயணமே என ஸ்பானிஷ் புலவர் ஒருவர் கூறியுள்ளார்.

இனி மக்காவில் வாழமுடியாது என்ற நிலை ஏற்பட்டதும் முகம்மது இருநூறு சீடர்களை இரகசியமாய்த் தம் தாயாரின் பிறப்பிடமாகிய மதீனுவில் குடியேறச் செய்தார். பிறகு மதீனு மக்களின் அழைப்பையேற்று நபிநாயகம் கி.பி. 622ஆம் ஆண்டில் அங்கு போய்ச்சேர்ந்தார். ஈராண்டுகள் திட்டமிட்டு மதீனவில் குடியேறிய நிகழ்ச்சியை ஹிஜ்ரி (Hegiri) என்று முஸ்லிம்கள் குறிப்பிட்டுள்ளார்கள். முகம்மது மக்காவிலிருந்து மதீனு சென்ற ஆண்டிலிருந்து முஸ்லிம் ஊழி தொடங்குகிறது.

ஹிஜ்ரியிலிருந்து முகம்மதுவின் மக்கா வாழ்க்கை முடிந்து மதீனு வாழ்வு தொடங்கிற்று. மக்கா மக்களால் மதிக்கப்படாத நபி, மதீனுவில் பெருமதிப்பிற்குரிய சமயத்தலைவராய் வரவேற்கப்பட்டார். அவர் அங்கு வாழ்ந்த எட்டாண்டுகளில் இஸ்லாமிய சமயமும் அரசும் உருப்பெற்றன. பலசமயத்தினரும் வாழ்ந்த மதீனுவில் தம் சமயத்தை முதன்மையாக்குவதிலும் அதற்கு வேண்டிய அமைப்பு முறைகளை வகுப்பதிலும் முகம்மது கருத்தைச் செலுத்தினர். மதீனுவில் முகம்மது சிறந்த அரசியல் அறிஞராய்க் காட்சியளித்தார். நாடு தழுவிய ஓர் அரசு அரேபியாவில் இல்லாததால் அவருடைய சமய அமைப்பு அரசியல் அமைப்புமாயிற்று. மக்காவில் மெய்யுணர்வாளராய் இருந்த முகம்மது மதீனுவில் ஆட்சி வல்லுநராயும் சிறந்த படைத்தலைவராயும் மாறிவிட்டார். அவர் மும்முனைகளில் செயல்படத் தொடங்கினர். உள்நாட்டுப் பிரிவின்களைத் தம் சமயத்தை ஏற்கச் செய்தார். தம்மை எதிர்த்த யூதர்களைத்

தோற்கடித்து வெளியேறச் செய்தார். சிரியாவிலிருந்து மெக்கா நோக்கிச் சென்ற வணிகக் குழுவினரைத் தாக்கித் தமக்கு வேண்டிய பொருளைக் கவர்ந்து கொண்டார். வணிகர்களைத் தாக்கியது வணிகப் பட்டணமாகிய மெக்காவிற்குப் பேரிடியா யிருந்தது. மதீனு நோக்கிவந்த ஆயிரம் மக்கா வீரர்களை நபியின் சீரிய தலைமையில் அணிவகுத்து நின்ற முன்னூறு முஸ்லிம்கள் கி. பி. 624-ல் பத்ரு (Badr) போர்க்களத்தில் புறமுதுகிட்டோடச் செய்தனர். போரில் இஸ்லாம் பெற்ற இந்த முதல் வெற்றி புதிய சமயத்திற்குத் தெய்வம் தந்த இசைவாணையாகக் கருதப்பட்டது. முதல் சண்டையில் முஸ்லிம்கள் காட்டிய கட்டுப்பாடும், சாவைப் பொருட்படுத்தாது போரிட்ட வீரமும் பிற்காலப் பெரும்போர்களில் அவர்களின் தனிப்பெரும் பண்புகளாய்க் காணப்பட்டன. பத்ரு சண்டை சிறியதாயினும் நபியின் உலகியல் அதிகாரத்திற்கும் ஆட்சிக்கும் அடிப்படை அமைத்துக்கொடுத்தது.

கி. பி. 625-ல் மக்காவாசிகள் மதீனுமீது படையெடுத்து வந்து, நபிநாயகத்தைக் காயப்படுத்தி மதீனு முஸ்லிம்களைத் தோற்கடித்தனர். ஆயினும், மக்கத்து மக்களின் வெற்றி நீடிக்க வில்லை. மக்கத்து மக்களுக்கு உதவிய யூதர்கள் பக்கம் முகம்மது தமது கவனத்தைத் திருப்பினுர். அவர்களில் பலர் கொல்லப் பட்டார்கள். மற்றவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். மக்காவி லிருந்து வந்து மதீனுவில் வாழ்ந்தவர்கள், வெளியேறிய யூதர்கள் விட்டுச்சென்ற பேரீச்சைத் தோட்டங்களில் குடியேற்றப்பட்டார் கள். இஸ்லாம் சமயத்தை எதிர்த்தவர்கள் தங்கள் தங்கள் சமயத்தையோ உயிரையோ துறக்க வேண்டும் என்ற நிலை உருவாயிற்று. கி.பி. 627-ல் மக்கா மக்கள் அபிசினியக் கூலிப்படை வீரர்கள் உதவியுடன் மீண்டும் போர்தொடுத்து மதீனுவை முற்றுகையிட்டனர். மதீனுவைச் சுற்றிலும் மறை குழிகள் வெட்டி அவற்றிலிருந்து போரிட்டு முற்றுகையிட்டவர் களை முகம்மது பின்வாங்கச் செய்தார்.

நபிநாயகம் மதீனுவில் இருந்தபோது இஸ்லாம் ஒரு குலத்திற் குரியதாயில்லாமல் அரபு மக்களின் சமயமாகியது. ஓர் அரசுக் கடங்கியிருந்த சமயம், அரசாங்கச் சமயமாகி அரசே ஆகிவிட்டது. அதிலும் போராடும் அரசாயிற்று. கி.பி. 628-ல் 1400 முஸ்லிம் வீரர்களோடு மக்கா சென்று சமதத்துவ அடிப்படையில் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டுத் தம் குலத்தோடு நடைபெற்றுவந்த போராட்டத்திற்கு முடிவுகண்டார். கி.பி. 630-ல் பெரும்படை யுடன் சென்று முகம்மது மக்காவைத் தம் வசமாக்கிக்

கொண்டார். எட்டாண்டுகளுக்கு முன் ஆதரவற்ற நிலையில் வெளியேறிய நபிநாயகம் இப்போது வெற்றிவாகை சூடினார். ஆலயத்திலிருந்த சிறு தெய்வ உருவங்களை உடைத்துவிட்டு, மக்கா மக்களின் ஆதரவைப் பெறுவதற்காகக் காபா வழிபாட்டை ஏற்றுக்கொண்டார். யூத, கிறித்தவச் சமயங்களுக்கு மாறாக வெள்ளிக்கிழமையைத் தம் சமய வார ஓய்வுத் திருநாளாக்கினார். காபா ஆலயத்திற்குப் புனிதப் பயணம் மேற்கொள்வதற்கும் கறுப்புக்கல்லை முத்தமிடுவதற்கும் இசைவாணை வழங்கப்பட்டது. ரமலான் (Ramzan) நோன்பு மாதம் ஆயிற்று. ஜெருசலத்தை நோக்கி வழிபட்டவர்கள் இனி மக்காவை நோக்கி இறைவணக்கம் செய்யவேண்டுமென முடிவாயிற்று. வழிபாட்டிற்கு அழைப்பு, பள்ளிவாயில் தூபியிலிருந்து விடுக்கப்பட்டது. பல தெய்வங்களை வழிபட்டோர் காபாவை நெருங்கவும் கூடாதென விதிக்கப்பட்டது.

கி.பி. 630-31 ஆம் ஆண்டில் ஆட்சித் தலைமையும் சமயத் தலைமையும் ஒருங்கே வகித்த நபிநாயகத்தின் மேலாண்மையை ஏற்று அண்டை அயல் நாடுகள் தூதுக் குழுக்களை அனுப்பி வைத்தன. இதுகாறும் ஓர் அரசின்கீழ் வர மறுத்த அரபு நாடு முகம்மதுவின் தலைமையை ஏற்க இசைந்தது. கிறித்தவ, யூதத் தலைவர்களுடன் உடன்படிக்கைகள் செய்துகொண்டு, தலைவரியும் நிலவரியுமாகிய ஜசியாவைச் செலுத்திய புறச் சமயத்தினருக்கு முஸ்லிம் சமுதாயத்தில் முகம்மது பாதுகாப்பு அளித்தார். இச் செயல் பிற்கால அரசுகளுக்கு முன்மாதிரியாய் அமைந்தது. மக்கா திருத்தலத்தைக் காண ஆண்டுதோறும் செல்லும் பக்தர்களுக்குத் தலைமைதாங்கிப் பத்தாம் ஹிஜிரி ஆண்டில் நபிநாயகம் மக்காப் பட்டணம் சென்றடைந்தார். அதுவே அவர் மக்காவிற்கு மேற்கொண்ட இறுதிப்பயணமாகும். மதீனா திரும்பிய மூன்று மாதங்களுக்குப் பின் கி.பி. 632-ல் முகம்மது இம் மண்ணுலக வாழ்வை நீத்தார்.

ஒருசில அறைகளே உடைய மண்ணாலான வீட்டில் மிக எளிய முறையில், ஆதிநாள்களில் வாழ்ந்த மாதிரியே ஆதிக்க நாள்களிலும் முகம்மது வாழ்ந்தார். தம்முடைய ஆடைகளைத் தாமே தைத்துப் பழுதுபார்த்துக்கொண்டார். எந்த நேரத்திலும் காட்சிக்கு எளியராயிருந்தார். கதீஜா இறந்தபின் முகம்மது அன்பின் அடிப்படையில் சில பெண்களையும், அரசியல் காரணங்களுக்காகச் சிலரையும் மணந்துகொண்டார். அபுபக்கரின் மகள் ஆயிஷா அவருக்கு மனத்திற்குகந்த மனைவியாவார். முகம்மதுவின் மனைவிமார்களுள் மேரி என்ற

கிறித்தவப் பெண்ணொருத்தியும் இருந்தாள். கதீஜாவிற்குப் பிறந்த பெண் ஃபாத்திமா (Fatimah) பின்னால் அவர் வளர்ப்பு மைந்தர் ஆலியை மணந்துகொண்டாள்.

நபிநாயகம் தமக்குக் கிடைத்த ஆதிக்க வாய்ப்பைச் சிறந்த அரசியல் விரகோடு பயன்படுத்திக்கொண்டார். மக்கா மக்களுக்கு விட்டுக்கொடுத்துக் காபா ஆலயத்தையும் அங்கிருந்த விண்கல்லேயும் பேணிக்காக்க இசைந்ததன் மூலம், ஒரே தெய்வ வணக்கக் கோட்பாட்டை எல்லோரையும் ஏற்றுக்கொள்ளச் செய்து நாட்டில் நிலைக்கச் செய்தார். சமயத் தலைவராய்த் தோன்றி, போர்த்தலைவராய் வளர்ந்து, அரசியல் அறிஞராய் விளங்கி அரேபியாவில் இஸ்லாம் சமயத்தையும் அரசையும் நிலைநாட்டினார். ஒரே கடவுட்கொள்கையுடன் இஸ்லாம் ஆதிபத்தியம் மூன்று கண்டங்களில் பரவ வழிவகுத்தார். முஸ்லிம்கள் எல்லோரும் எந் நாட்டில் வாழ்ந்தாலும், ஒரு குலம், உடன்பிறந்தவர்கள் என்ற கருத்தை வலியுறுத்திக் குலப்பிரிவுகளை விட்டுவிடச் செய்தார். உறவின் முறையினரே ஒரு சமுதாயமாய் அமைந்திருந்த நிலைமையை மாற்றிச் சமய அடிப்படையில் ஒரு சமூக அமைப்பை முதல் முறையாக அரேபியாவில் ஏற்படுத்தினார். மதீனாவிலிருந்த சமயச் சமுதாயமே அரசியல் சமுதாயமாய் வளர்ந்து இஸ்லாமிய அரசைத் தோற்றுவித்தது. நிலப்படத்தில் வெறும் நிலப்பரப்பாயிருந்த அரேபியாவில தம் வாழ்நாளிலே ஒரு நாட்டினத்தையே உருவாக்கிய பெருமை நபிநாயகத்தைச் சேர்ந்தது. அவர் தோற்றுவித்த சமயம் உலகில் பரவிக் கிறித்தவ, யூதச் சமயத்தினர் வாழ்ந்த பெரும் நிலப்பகுதிகளைத் தனதாக்கிக்கொண்டது. அவர் அடிகோலிய பேரரசு நாகரிக உலகின் வளமான பகுதிகளில் ஆதிக்கஞ் செலுத்திற்று. அவர் வாயிலாக வெளிப்பட்ட குரான் அறிவியல், மெய்யறிவு, சமய சித்தாந்தம் ஆகிய மூன்றினையும் உள்ளடக்கிய மறை நூலாய் மிளிர்கிறது.

முகம்மதுவின் சமயக் கொள்கைகளையும், முஸ்லிம்களின் வாழ்க்கை நெறிகளையும் குரானில் காண்கிறோம். கடவுள் வாய்மொழியும், அல்லாவின் சுவடியுமாகிய குரான் கேபிரியல் வாயிலாக முகம்மதுநபிக்கு வெளிப்படுத்தப்பட்ட நூலாகும். நபிநாயகம் மறைந்து இருபது ஆண்டுகளுக்குள் முதல் முறையாகவும் ஆனால், இறுதியாகவும் கி.பி. 651-ல் குரான் தொகுக்கப்பெற்றது. துருக்கி, லத்தீன், ஃபிரெஞ்சு, ஆங்கிலம் போன்ற நாற்பது உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. குரான் என்ற சொல்லுக்கு ஓதுவித்தல், சமயவுரை

என்றெல்லாம் பொருள் கூறப்படுகிறது. சமய உயிர்நிலையாகவும், வானுலகிற்கு வழிகாட்டியாகவும் இருப்பதுடன், குரான் மண்ணுலகிற்கு வேண்டிய சட்டத்தொகுப்பாயும், அறிவியல், அரசியல் விளக்க நூலாகவும் இருக்கிறது. உலக முஸ்லிம் பல்கலைக்கழகமாயுள்ள அல்-அஸாரில் (Al-Azhar) கற்கப்படும் பாடத்திட்டத்தின் அடிப்படையாய் இம் மறைநூல் பயன் படுகிறது. அரபுமொழியைக் கற்க விரும்பும் இளைஞர்களுக்குப் பாடப்புத்தகம் திருக்குரானே. ஆங்காங்கு வாழும் அரபுமக்களின் பேச்சுவழக்குவகை உரோமான்ஸ் மொழிகளைப்போல் தனித் தனி மொழிகளாகிவிடாமல் காக்கப்படுவதற்குக் காரணம் குரானின் இலக்கியச் செல்வாக்காகும். வெவ்வேறு முஸ்லிம் நாடுகளில் அரபு மொழியின் பேச்சுவழக்கு வேறுபட்டிருந்த போதிலும் குரானால் உருவாக்கப்பட்ட இலக்கியமொழி எங்கும் ஒன்று போலவே உள்ளது. அரபுமொழியில் குரானே முதல் உரைநடை நூல். அதுவே முன்மாதிரியாகவும் கருதப்படுகிறது.

குரான் சூராக்களாய் அல்லது அதிகாரங்களாய் வகைப் படுத்தப்பட்டு, மக்காவில் போராட்டக் காலத்தில் எழுதப் பட்டவை என்றும் மதீனாவில் வெற்றி நேரத்தில் தொகுக்கப் பெற்றவை என்றும் பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது. தொடக்கக்காலச் சூராக்கள், ஏறக்குறைய தொண்ணூறு சிறிய அளவினதாகவும் உணர்ச்சி மிக்கனவாயுமுள்ளன. அல்லாவின் ஒருமை (Oneness) அவருடைய பண்புகள், மனிதன் கடைப் பிடிக்க வேண்டிய நெறிமுறைகள், தீவினைக்குக் காத்திருந்த தண்டனை ஆகியவை அவற்றில் பெருமளவில் இடம் பெற்றன. மதீனா சூராக்கள் இருபத்து நான்காகும். அவை நீண்டும் சட்ட, பொருட்கூறுகள் நிறைந்தும் உள்ளன. பொதுவழிபாடு, நோன்பு, புனிதப் பயணம் பற்றிய சமயக் கோட்பாடுகள், ஐயம், சமயப்போர்பற்றிய ஆணைகள், கட்குடி, பன்றி இறைச்சி உண்ணுதல், சூதாடுதல்பற்றிய விதிமுறைகள், திருமணம், மணவிலக்கு, சொத்துரிமை, பிறன்மனைநயத்தல், கடுவட்டி முறை, திருட்டு, கொலைபற்றிய சட்டதிட்டங்கள் ஆகியவற்றைக் குரானில் மதீனாப் பகுதியில் காண்கிறோம்.

'ஆண்டவன் ஆணைக்கு உட்படுதல்' என்ற பொருளுடையது இஸ்லாம் என்ற சொல். 'கடுஞ்சோதனையில் ஆபிரகாமும் அவர் மகனும் காட்டிய கீழ்ப்படிவும், உயிர்ப்பலியிடத் தந்தையின் முயற்சியும், அக் கருத்தைத் தெரிவிக்கிற 'அஸ்லாமா' என்ற வினைச் சொல்லும் புதிய சமயத்தின் பெயரை முகம்மதுவிற்குத் தந்திருக்க வேண்டும். இஸ்லாம் சமயத்தின் முதல் கோட்பாடு-லா இலாஹ இல்லல்லாஹ் – அல்லாவன்றி வேறு தெய்வமில்லை

என்று பொருள்படும் வாசகமாகும். அல்லாவிடம் தம்மை ஒப்படைத்துக்கொண்டு முகம்மதுவே அல்லாவின் இரசூல் (தூதர்) என்ற உறுதி படைத்தவர்களே உண்மை முஸ்லிம் களாவார்கள். நபிகளின் நீண்ட வரிசையில் முகம்மதுவே இறுதியாவார். அவர் எல்லோரிலும் உயர்ந்தவர். அல்லா, தொண்ணூற்றென்பது திருநாமங்களும், பண்புகளும் உடை யவர். அதே எண்ணிக்கை அளவு உருமணிகளை முஸ்லிமின் முழுச்செபமாலையில் காண்கின்றோம். மெக்காவின் திசையை நோக்கி நாடோறும் ஆண்டவனை ஐந்துமுறை தொழவேண்டும்; ஆயுட்காலத்தில் ஒரு முறையேனும் மெக்காவிற்குச் சென்று காபாவில் வழிபடவேண்டும். முஸ்லிம்கள் தங்கள் வருவாயில் நாற்பதில் ஒருபங்கை இரவலர்க்களித்துப் புனிதமான இராம லான் மாதத்தில் பகலில் உண்ணுநோன்பு நோற்க வேண்டும். களவு, கள் இரண்டையும் ஒழித்து, அவதூறு பேசாதிருப்பதே சிறந்த இஸ்லாமிய வாழ்வாகும்.

முஸ்லிம்கள் இறந்தபின் அவரவர் வினைக்கேற்ப இன்ப உலகிற்காயினும் துன்ப உலகிற்காயினும் செல்கிறார்கள். 'தீர்ப்பு நாள்', 'இறந்த உயிர்களின் மீட்டெழுச்சிநாள்' (Resurrection) இத்தொடர்கள் மறுமையை உறுதிப்படுத்தின. அல்லாவன்றி வேறு கடவுள் கிடையாது என்ற உறுதியுடையவர்களும், இறந்த பின்னும் வாழ்வுண்டு என்று எண்ணுபவர்களும் வானுலகம் செல்கின்றனர். பொன்னுலகில் அழகிய ஆரணங்குகள் பணி விடைபுரிய, நீரூற்றுகளும், குளிர் தருக்களும் நிறைந்த இன்பச் சோலையில் வாழ்ந்து, தீங்கனிகளையும், சிறந்த உண்டி வகைகளை யும் உண்டு களிக்கலாம். நேர்மையிலிருந்தும், கடமையிலிருந்தும் தவறியவர்கள், கரிய புகை, பொசுக்கும் காற்று, சுடுநீர் இன்ன பிறவற்றால் அளப்பரிய இன்னலுறுவார்கள்.

தமக்கு முன்னால் தோன்றிய தீர்க்கதரிசிகளாகிய ஆபிரகாம், மோசஸ், இயேசு ஆகிய மூவரும் அருளிச்சென்ற கோட்பாடுகளை நிறைவாக்கி முடிப்பதற்கே தாம் இறுதித்தூதராய்த் தோன்றி யிருப்பதாக முகம்மது அறிவித்தார். முகம்மதுவின் கோட் பாடுகள் காலத்திற்கு ஏற்றதாயிருந்ததால், மக்கள் மனதில் தெளிவும், திடநம்பிக்கையும் ஏற்பட்டன. அடையமுடியாத குறிக் கோள், அறிவுநிலை கடந்த வினைமுறை, சமயசித்தாந்தத்தில் சிக்கல், குழப்பம் ஏதுமின்றி நடைமுறைக்கெளியதாய் இஸ்லாம் இருந்தது. எளிதில் புரிந்துகொண்டு பாமரர்களும் பின்பற்றும் வகையிலே சமயவிளக்கங்கள் இருந்தன. இறையியல் விரிவுரை களால் கிறித்தவர்கள் மனம் குழம்பிப் பிளவுபட்டதுபோல, முஸ்லிம்கள் மயங்கி, மாறுபட்டுப்பிரிவதற்கான நிலைமை இஸ்லாம்

தோற்றுவிக்கவில்லை. இதுவோ, அதுவோ எனத் திகைக்கச் செய்யும் குறிப்பு அடையாள முறைமைக்கு (Symbolism) இஸ்லாம் இடம் தரவில்லை.

யூத, கிறித்தவச் சமயங்களோடு இஸ்லாம் மிகவும் ஒத்திருந்ததால், அதனைத் தனிச்சமயமாய்க் கருதாது கிறித்தவ முரண்சமயமாகவே கருதினார்கள். புதிய ஏற்பாட்டின் கிறித்தவச் சமயத்தினும், பழைய ஏற்பாட்டின் யூதச் சமயத்திற்கே இஸ்லாம் நெருக்கமாயுள்ளது. பழைய ஏற்பாட்டில் வரும் ஆதாம், நோவா, ஆபிரகாம், மோசஸ், சாலமன் முதலியவர்களைக் குரானில் திரும்பத்திரும்ப சந்திக்கிறோம். புதிய ஏற்பாட்டில் பேசப்படுகிறவர்களில், சக்கேரியா, மேரி, இயேசு போன்ற சிலரையே குரானில் காண்கிறோம். குரானில் விவரிக்கப்படும் பெரும்பாலான வரலாற்று நிகழ்ச்சிகளுக்குச் சரிநேர் நிகழ்ச்சிகளைக் கிறித்தவ மறைநூலில் படிக்கிறோம். பழைய ஏற்பாட்டில் உள்ள ஈபுரு நபிகளின் கூற்றுகளும், அரபுநபியின் அறிவிப்பும் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன.

முகம்மது வாழ்ந்த உலகில், யூதர்களின் சமயம், சொராஸ்டிரியக்கோட்பாடு, கிறித்தவக் கொள்கை ஆகிய மூன்றும் மக்களிடையில் செல்வாக்குப்பெற்ற சமயங்களாயிருந்தன. இச் சமயக் கருத்துகளையெல்லாம் கேட்டறிந்து, ஆராய்ந்த பின்னரே நபிநாயகம் தம் சமயக் கருத்துகளை உலகிற்களித்தார். ஒன்றில் மூன்று (Three in one) என்ற கிறித்தவக் கடவுள் தன்மையை ஏற்காது, யூதர்களின் கடவுள் தத்துவத்தையே இஸ்லாம் உலகிற்களித்தது. தம்காலச் சமயங்களிலிருந்த சில பழக்க வழக்கங்களைத் திட்டமிட்டே நபிநாயகம் நீக்கிவிட்டார். ஒரு வகுப்பாருக்கு மட்டும் பொருத்தமான ஒழுக்கத்தைக் காணாது உலகச் சமயத்திற்கேற்ற ஒழுக்க முறைகளைக் குரானில் காண்கிறோம். மனிதருக்கிடையே ஏற்றத்தாழ்வு இல்லையென்பதை இஸ்லாம் வலியுறுத்தியது. ஆண்டவன் திருமுன் அரசனுக்கும் அடிமைக்கும் சமத்துவம் கண்டது இஸ்லாம். ஆண்டவனுக்கும் வழிபடுவோருக்கும் இடையில் தரகர் இல்லை. பள்ளிவாசலில் நடைபெறும் பொதுவழிபாட்டினை முன்னின்று நடத்த ஒரு தலைவர் உண்டு ஆனால் குருமார் அமைப்பு முறைக்கு இடமளிக்கப் படவில்லை. தனியாய் வழிபாட்டுச் சுவடியும் இல்லை. விரிவான வெற்றுச்சடங்கு எதனையும் இஸ்லாம் ஏற்கவில்லை. படையல் மேடையை பலிமேடையாக்கும் அநாகரிகம் தலைகாட்டவில்லை. அடிமை வாழ்வும் ஒருவன் பல பெண்களை மணக்கும் உரிமையும் ஒப்புக்கொள்ளப்பட்டன. ஆயினும், பெண்கள், அடிமைகள் இருவர் நிலையும் ஓரளவு உயர்ந்தது.

# 3. குடியரசு முறையில் அமைந்த கலிபா ஆட்சி

[அபுபக்கர்—பெரியார் உமர்—உஸ்மான் (உத்மான்)—அலி]

முகம்மது நபி சமயத் தலைவராகவும், சட்டமியற்று பவராகவும், உயர் நடுவராகவும், படைத் தலைவராக வும், ஆட்சித் தலைவராகவும் இருந்து மறைந்தார். அரபு ஆட்சித் தலைமை வழிவழியாகத் தொடர்கிற வழக்கமில்லை; தேர்தலுக் குரிய பதவியாகவே இருந்துவந்தது. முகம்மது ஆண்வாரிசை விட்டுச்செல்லவில்லை. தமக்குப்பின் தலைமைக்கு யாரையும் குறிப்பிடவுமில்லை. மதீனாவில் குடியேறிய முஸ்லிம்கள் தாங்கள் நபிநாயகம் பிறந்த குறைஷிக் குலத்தைச் சேர்ந்தவர்கள், அவருடைய சமயக்கொள்கையைத் தொடக்கத்திலேயே ஏற்றுக் கொண்டவர்கள், என்ற இரு காரணங்களைக் காட்டித் தங்களில் ஒருவருக்கே காலிஃப் பதவியைத் தரவேண்டுமென உரிமை கொண்டாடினார்கள். நபியவர்களின் மதீனா ஆதரவாளர்கள் நபி நாயகத்திற்குத் தங்கள் ஊரில் அடைக்கலம் தந்திராவிடில், நபிக்குக் கேடும், இஸ்லாமிற்கு அழிவும் ஏற்பட்டிருக்குமாகை யால் தங்களுக்கே அப் பதவி உரியது என வழக்காடினார்கள். இவ் விரு சாராரும் இணைந்து பிற்காலத்தில் கூட்டாளிகளானார்கள். தம்மை நம்பிய இஸ்லாமியச் சமுதாயத்தை வழிகாட்டி நடத்திச் செல்லத் தகுதி வாய்ந்த ஒருவரைச் சுட்டாமல், நபியவர்கள் தமக் குப்பின் தலைமையைத் தேர்வாளர்களின் சபல மனப்போக்கிற்கு விட்டு மறைந்திருக்கமாட்டார் என நேர்மையாளர்கள் வாதித் தார்கள். இஸ்லாம் சமயத்தைப் பின்பற்றிய முதல் இரண்டு மூன்றுநபர்களில் ஒருவரும், நபிநாயகத்தின் வளர்ப்பு மைந்தனும் எஞ்சிய அவருடைய ஒரே மகளாகிய பாத்திமாவின் கணவருமான அலியே நபிநாயகத்தின் பின்தோன்றலெனச் சுட்டப்பட்டவரும் உரிமையுடையவருமாவார் என்று மேலும் வலியுறுத்தினார்கள். தலைமைப் பதவிக்குத் தேர்தல் முறை சரியன்று; தெய்விக உரிமை முறையே சரியென வற்புறுத்தினார்கள்.

நபிநாயகத்தின் பின்தோன்றல் என்ற பொருளுடைய காலிஃப் பதவிக்கு நபியவர்களின் மாமனாரும் (ஆயிஷாவின்

தந்தை) அவருடைய தொடக்ககால ஆதரவாளரும் வயதில் மூத்து, அவரின் சிறந்த பற்றுளருமாயுமிருந்த அபூபக்கர் ஏனைய தலைவர்களின் நல்லாதரவுடன் முதல் காலிஃப் ஆனார். காலிஃப் பதவியிலமர்ந்த முதல் நால்வருமே நபிநாயகத்தின் உறவினர்களும் உடனிருந்து ஆதரவு தந்தவர்களுமாவார்கள். முதல் மூவரும் மதீனாவிலிருந்து ஆட்சி செய்தார்கள். அலி இராக் பகுதியில் கூஃபாவைத் தலைநகராக்கிக் கொண்டார்.

**அபூபக்கர் (கி.பி. 632-634)**

சமயத்தலைமையை எதிர்த்துப் பிரிந்துசென்றவர்களோடு போரிடுவதிலேயே அவருடைய குறுகிய பதவிக்காலம் அழிந்தது. நபி வாழ்ந்த காலத்தில் அரேபியாவின் மூன்றில் ஒரு பகுதிக்கு மேல் அவருடைய சமயத்தையும், ஆட்சியையும் ஏற்றுக் கொண்டிருக்க முடியாது. புதிய சமயத்தைப் பரப்பக் காலம் மிகக் குறைவாயிருந்தது; போக்குவரவுச் சாதனங்கள் இல்லை; தீவிர முறைகளும் கையாளப்படவில்லை. நபியவர்களின் மறைவிற்கு இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்புதான் அல்-ஹிஜாஸ் பகுதியே இஸ்லாம் சமயத்தைத் தழுவியது. பல அரபுக் குடும்புகள் மதீனாவிற்குப் பணிய விரும்பவில்லை. காரணம் அவை இணைந்து ஒரு நாட்டினமாய் வாழ விரும்பாத அரேபியப் பண்பேயாகும்.

இஸ்லாம் சமயத்தை விட்டு வெளியேறியவர்களை மீண்டும் சமயத்திற்குத் திருப்பவேண்டும், திரும்ப மறுப்பவர்களைப் போரிட்டு அழிக்கவேண்டும் என்று அபூபக்கர் திட்டமிட்டார். இத் திட்டத்தை நிறைவேற்றிய மாபெரும் வீரர், 'அல்லாவின் வாள்' (The Sword of Allah) என்று வரலாற்றில் பேசப்படும் கலீத் இபின் அல்வலித் ஆவார். நபி மறைந்த பின் நாடே இஸ்லாமியப் போர்வீரர்களின் பாடிவீடாகிவிட்டது. உலகத்தை வெற்றிகொள்ளும் கட்டத்திற்குமுன், அரேபியா உள்நாட்டின் வெவ்வேறு வட்டாரங்களை வென்று அதற்கு ஆயத்தமாக வேண்டியிருந்தது. பல குடும்பத்தினர் இஸ்லாமியர்களானார்கள். ஒரு சில குலங்கள் இஸ்லாம் சமயத்தை ஏற்க மறுத்துக் கடும் போரிட்டதால் இஸ்லாமிய வீரர்கள் பெருவாரியாக மாண்டனர். ஆயினும், ஆறே மாதங்களில் அரேபியாவின் இடைப்பகுதியைக் கலீத் இஸ்லாமிய ஆட்சிக்கு அடிபணியச் செய்தார். கலீதின் வாள் உதவியினால் அரேபியா அபூபக்கரின் கீழ் ஒன்றுபட்டது. உள்நாட்டுப் போர்க்களங்களில் மக்கள் காட்டிய திட்டமிட்ட போர்த்திறமை, ஊக்கம், அவற்றால் மக்களுக்கு ஏற்பட்ட போர்க்குணம் ஆகியவற்றை வெளிப்

படுத்தும் வாய்ப்பு அண்டை நாடுகளைத்தாக்கி அங்கு சமயத்தைப் பரப்பும் பணியில் கிடைத்தது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பைசாண்டியப் பேரரசும் பாரசிகப் பேரரசும் பல்வேறு நாடுகள், இனங்கள் மீது ஆதிக்கஞ் செலுத்தி வந்தன. உலக அரங்கில் அநாகரிக நாடாய்க் கருதப் பட்ட அரேபியா, முகம்மது மறைந்து பத்தாண்டிற்குள், இஸ்லாம் அளித்த உரத்தாலும், ஊக்கத்தாலும், பைசாண்டியப் பேரரசின் வளமான மாகாணங்களைக் கைப்பற்றிக்கொண்டு, பாரசிகப் பேரரசினை ஆண்ட சசனீடு பரம்பரையின் வாரிசாக விளங்கப் போகிறது என யாராவது கூறியிருந்தால் அவன் ஒரு பைத்தியக்காரன் என்றே கருதப்பட்டிருப்பான். ஆனால், நிகழ்ந்தது என்னவோ அதுவே. முகம்மது மறைந்தபின் அரேபியா, வீரர்களின் தாயகமாய்த் திகழ்ந்தது. உலகில் வேறெங்கும் காணமுடியாத அளவிற்கு எண்ணற்ற வீரர்கள் அரேபியாவில் தோன்றி அரிய சாதனைகள் புரிந்தனர். போர் வரலாற்றிலேயே மிகச்சிறந்த வெற்றிகளை—ஹனிபால், அலெக்ஸாண்டர், நெப்போலியன் போன்ற பெருவீரர்களின் போர்ச்சாதனைகளோடு ஒப்பிடத்தக்க வெற்றிகளை முஸ்லிம் படைகள் இராக், பாரசிகம், சிரியா, எகிப்து முதலிய நாடுகளில் பெற்றன.

பைசாண்டியமும், பாரசிகமும் தலைமுறை தலைமுறையாய்த் தமக்குள் சண்டையிட்டு நலிவுற்றிருந்தன. அப் போர்களினால் ஏற்பட்ட வரிச்சுமை இருநாடுகளின் மக்களிடையே வெறுப்பையும், எதிர்ப்பையும் தூண்டிவிட்டிருந்தன. பைசாண்டியர்கள் எல்லைப்புறக் கோட்டைகளை நல்ல நிலைமையில் வைத்திருக்கவில்லை. சிரியாவிலும், எகிப்திலும் கிறித்தவர்கள் பிளவுபட்டும், துன்புறுத்தப்பட்டும் வாழ்ந்தனர். சிரியா, மெசொபொட்டோமியா நாடுகளில், குறிப்பாக எல்லைப்புறங்களில் வசித்த அரபுக்குலங்கள் நாகரிகமடைந்து, மூர்க்கத்தனம் குறைந்திருந்தனர். அரபு வீரர்கள் வெற்றிப்பாதையில் விரைந்து முன்னேற இச் சூழ்நிலை பெரிதும் உதவியது. கி.பி. 629-ல் நபிநாயகத்தின் படையை மூட்டா (Mu'tah) போர்க்களத்தில் தோற்கடித்தபின், மதீனா—காசா வணிகப்பாதையில் வாழ்ந்த சிரியா—அரபுக்குல மக்களுக்குக் கொடுத்துவந்த பணத் தொகையைப் பைசாண்டியப் பேரரசர் ஹெராக்ளியஸ் நிறுத்தி விட்டார். சிரியாவிலும், பாலஸ்தீனத்திலும் வாழ்ந்த செமிடிக் மக்களும், எகிப்திலிருந்த ஹமிடிக் (Hamites) மக்களும், தங்களை வருத்தி ஆண்டுவந்த ஆட்சியாளர்களை அன்னிய

ராகவும், தங்கள் நாட்டின்மீது படையெடுத்து வந்த அரபுக்களை உறவினராகவும் கருதினார்கள். மேலைநாடுகளுக்கு ஆயிரமாண்டுகளாய் அடிமைப்பட்டிருந்த நிலையிலிருந்து கீழை நாடுகள் விழித்துக்கொண்டு தாங்கள் இழந்த சுதந்திரத்தை மீட்ட வரலாறாகவே முஸ்லிம் போர்களும் வெற்றிகளும் அமைந்தன. தோல்வியுற்ற மக்கள் முஸ்லிம் ஆட்சியில் தங்கள் சமயமரபுகளைப் பின்பற்றுவதில் தடையேதுமிருக்கவில்லை. பழைய ஆட்சியிலிருந்த வரிச்சுமையைவிட புதிய ஆட்சியில் அது குறைவாகவே இருந்தது.

படையெடுத்துச்சென்ற புல்வெளி நாடுகளுக்கேற்ப அவர்கள் கையாண்ட போர்முறைகளும், அவர்களுடைய குதிரை, ஒட்டகப்படைகளும் அரேபியர்களுக்கு வெற்றி தேடித் தந்தன. இஸ்லாமிய ஆட்சிப்பரப்பின் விரிவினை ஒரு சமய இயக்கமாகவே கருதிய அரபு வரலாற்றாதாரங்கள், அதற்கான அடிப்படைப் பொருளாதாரக் காரணங்களை வலியுறுத்தவில்லை. ஒரு கையில் வாளையும், ஒரு கையில் திருக்குரானையும் கொண்டு முஸ்லிம் ஆதிக்கம் வளர்ந்ததென கிறித்துவ ஆதாரங்கள் கூறுகின்றன. ஆனால் வாளையும், குரானையும் தவிர்த்து, தோற்ற மக்கள் திறைசெலுத்தும் முறையை அரபுக்கள் கையாண்டார்கள். வென்ற நாடுகளில் வேற்றுச்சமயத்தினருக்குக் குரானுக்கும், வாளுக்கும் மாற்றாக வழங்க அங்கு நிலவிய சூழலுக்குத் திறை செலுத்தும் முறையே, பெரிதும் பொருத்தமாயிருந்தது.

வறண்ட பகுதியில் வாழ்ந்த பிடுயின்களை வாய்ப்புக் கிடைத்தவுடனே வளமிக்க பிறைவடிவ நாட்டிற்குப் (Fertile crescent) போகத்தூண்டியது, சமய ஆர்வத்தைக் காட்டிலும் அவர்களுடைய வறிய வாழ்க்கை நிலையே எனலாம். அல்-பாலார் தூரி என்ற அரபு வரலாற்றாசிரியர் இக் கருத்தை ஒப்புக் கொண்டுள்ளார். மறுமை இன்பம் ஒரு சிலரின் குறிக்கோளாய் இருந்திருக்கலாம்; நாகரிக நாட்டில் வசதியோடு வாழலாம் என்ற எண்ணமே பலரைப் படையெடுப்புகளில் பங்கு பெறச்செய்தது. சிரியாவுடன் போரிடப் படை திரட்டுங்கால், கிரேக்கர்களிடம் கிடைக்கக்கூடிய கொள்ளைப்பொருளை நினைவூட்டியே காலிஃப் அபூபக்கர் புனித சமயப்போருக்கு வருமாறு அரபு மக்களுக்கு அழைப்பு விடுத்தார் பாலைவனப்பகுதி மக்கள் பக்கத்திலிருந்த பிறை வடிவ நாட்டில் நீண்டகாலமாய் ஊடுருவிக் குடியேறிவந்த நடைமுறையின் இறுதிக்கட்டமாகவே இஸ்லாமியரின் படையெடுப்பும், விரிவும் இருந்தன. முஸ்லிம் சகோதரர்களுக்குள்

சண்டை கூடாது எனச் சமயம் தடுத்துவிட்ட நிலையில், போரிட்டுப் பழகிய அரபுக்குலங்களுக்கு வாய்ப்பளிக்கவே, அயல் நாடுகளைத் தாக்கிச் சூறையாடும் திட்டத்தோடு படைகள் அணி வகுக்கப்பெற்றன. நாடுகளைக் கைப்பற்றி ஆளவேண்டுமென்ற எண்ணம் பின்னால் ஏற்பட்டது. வெற்றிமேல்வெற்றி கிடைத்ததும் அரபுப் பேரரசு நிறுவும் பாதையில் வீரர்கள் உந்தப்பட்டார்கள். அப்போது போர்கள் திட்டமிடப்பட்டன; போர் அணிவகுப்பும் செம்மைப்பட்டது.

இஸ்லாம் என்ற சொல் முதலில் சமயத்தையும், பின்னர் நாட்டரசையும் குறித்து, இறுதியில் நாகரிகத்தையும், பண்பாட்டையும் சுட்டிற்று. அரேபியாவின் வடபகுதிகளைத் தாக்கி வெற்றிக்கொடி நாட்டியது சமயம் அன்று, இஸ்லாமிய அரசேயாகும். சிரியா, மெசொபொட்டோமியா, பாரசிகம் ஆகிய நாடுகள் அரேபிய ஆதிக்கத்திற்குட்பட்டு, நீண்ட காலத்திற்குப் பிறகே முஸ்லிம் நாடுகளாயின. திறை செலுத்துவதிலிருந்து விடுபடவும், ஆளும்இனத்தோடு ஒன்றுபடவுமே மக்கள் முஸ்லிம்களானார்கள். சிரியா, அரமேயன், பாரசிக, கிரேக்கப் பண்பாடுகளை அடித்தளமாய்க்கொண்டு இஸ்லாமியப் பண்பாடு வளர்ந்தது ஐரோப்பாவை ஒட்டியிருந்த கிழக்குநாடுகள் இஸ்லாம் துணைகொண்டே பழைய அரசியலாதிக்கத்தையும், அறிவுலகத் தலைமையையும் ஒருங்கே திரும்பப்பெற்றன.

## முஸ்லிம்களின் முன்னேற்றம்

### 1. சிரியா

அரேபியாவின் வடக்கிலிருந்த சிரியா நாடு கிழக்குப் பேரரசின் பகுதியாயிருந்தது. நபியவர்களின் காலத்திலேயே சிரியா நாட்டுடன் போர் தொடங்கிற்று. கி.பி. 629-ல் நிகழ்ந்த மூட்டாச் (Mu'ah) சண்டையில் அரபு வீரர்கள் கிழக்குப் பேரரசர் ஹெராக்ளியசின் படையிடம் தோற்று மதீனா திரும்பினார்கள். அடுத்த ஆண்டில் நாயகம் தலைமை வகித்து நடத்திச்சென்ற வீரர்கள் யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் சொந்தமான பாலைவனச் சோலைகள் சிலவற்றைக் கைப்பற்றினார்கள். இதனைத் தொடர்ந்து சிரியாவின் தென் பகுதியும், தென்கிழக்குப் பகுதியும் அரேபியர்களால் தாக்கப் பட்டன. பிற்காலத்தில் உமையது பரம்பரையினரின் ஆட்சியை நிறுவவிருந்த முவாவியா (Muawiah) சிரியப் போரில் கலந்து கொண்டார். சிரியா நாட்டைத் தாக்கிய அரபுப்படை, விரைந்து இடம்பெயர்ந்து போரிடக்கூடிய ஆற்றலாகிய புதிய படைக் கலத்தையும், புதிய உரத்தையும் பெற்றிருந்தது. சிரியா முனை

யில் போரிட்டவர்களுக்கு உதவுமாறு இராக் நாட்டில் போரிட்டுக் கொண்டிருந்த பெரும்வீரர் கலீது, காலிஃப் அபூபக்கரால் ஏவப் பட்டார். கி.பி. 634-ல் அல்ஹிராவிலிருந்து கலீது தலைமையில் புறப்பட்ட ஐந்நூறு வீரர்கள் ஐந்து நாள்கள் தண்ணீரே இல்லாத பாலைவனப் பகுதியைக் கடந்துசெல்லவேண்டியதாயிற்று. அரபு வீரர்கள் எல்லோரும் கலீது தலைமையில் அணிவகுத்து நின்றனர். பஸ்ரா நகரை எளிதில் கைப்பற்றியபின் உலகிலேயே மிகப் பழைமையான நகரமாகிய டமஸ்கஸ் நகரின்முன் கலீது வந்து சேர்ந்தான். ஆறுமாத முற்றுகைக்குப்பின் கோட்டைக் காவல் அதிகாரிகளின் துரோகச் செயலால் கி.பி 635-ல் டமஸ்கஸ் முஸ்லிம்கள் வசமாயிற்று. அதனைத் தொடர்ந்து பல நகரங்கள். இஸ்லாமியருக்குச் சொந்தமாயின. டமஸ்கஸ் மக்களின் உயிர், உடைமை, ஆலயங்கள் யாவற்றிற்கும் பாதுகாப்பு உறுதி அளித்த பிறகே அரபுத் தலைவர் காலீது நகருக்குள் புகுந்தார். நகரின் புறச்சுவர்கள் அழிக்கப்படமாட்டா, முஸ்லிம் வீரர்கள் கிறித்துவர் இல்லங்களில் தங்கவைக்கப்படமாட்டார்கள் என்று வாக்குறுதி தரப்பட்டது. தோற்றமக்கள் ஆள் வரி கொடுக்க இசைந்தார்க ளானால் அவர்களுக்குத் தீங்கொன்றும் நேரிடாது என்றும் அறிவிக்கப்பட்டது. ஒவ்வொருவரும் ஆள்வரியாக ஒரு தினாரும் ஒரு ஜாரிப் கோதுமையும் கொடுக்கவேண்டுமென விதித்தார்கள். இம் முறையைத்தான் பின்னர் வென்ற நாடுகளிலும் முஸ்லிம்கள் கையாண்டார்கள்.

காலீதுடன் போரிட்டுச் சிரியா நாட்டைப்பற்றி ஒரு முடிவு காணப் பேரரசன் ஹெராக்ளியஸ் தன் சகோதரன் தலைமையில் 50,000 வீரர்களைக்கொண்ட ஒரு படையை அனுப்பினர். பிடித்த நகரங்களைப்பற்றிக் கவலைப்படாமல் எல்லா வீரர்களையும் ஒன்று திரட்டிக் காலீது போருக்கு ஆயத்தமானுன். யார்முக் (Yarmuk) ஆற்றுப் படுகையில் 25,000 அரபு வீரர்கள் அணிவகுத்தனர். பாலைவன வீரர்களின் கடுந்தாக்கினைப் பைசாண்டிய வீரர்கள் சமாளிக்கமுடியாமல்கி.பி.636-ல் படுதோல்வி அடைந்தனர்;பெரும் பாலோர் செத்துமடிந்தனர். சிரியாவின் எல்லையாகிய டாரஸ்மலை வரை எதிர்ப்பின்றி அரபுக்கள் முன்னேறினார்கள். கிழக்குப் பேரரசு வளமிக்க சிரியா மாகாணத்தை நிரந்தரமாய் இழந்தது.

கலிபா பெயரால் சிரியா நாட்டினை ஆள ஒரு மதினுவாசி அமர்த்தப்பட்டார். அந் நாட்டை அடித்தளமாய்க்கொண்டு அர்மீனியா முதலிய நாடுகளைக் கைப்பற்றுவது எளிதாயிற்று. ஆண்டியோக் (Antioch) அலெப்போ முதலிய வடபுல நகரங் களும் கி.பி.638-ல் ஜெருசலமும்,கி.பி.640-ல் சிசேரியாவும் முஸ்லிம்

ஆதிக்கத்திற்குள் வந்தன. ஏழே ஆண்டுகளில் (கி.பி. 633-640) சிரியா நாடு முற்றிலும் முஸ்லிம்களின் வசமாயிற்று. இனத்தாலும், சமயக் கருத்தாலும் மாறுபட்ட கிரேக்க ஆட்சியாளர்களைச் சிரியாவில் வசித்த செமிடிக் மக்கள் வெறுத்ததே அவ்வெளிய வெற்றிக்குக் காரணமாகும். ஆட்சி வசதிக்காகச் சிரியா நான்கு மாகாணங்களாய்ப் பிரிக்கப்பட்டது. பிற்காலத்தில் தனிநாடுகளாய் விளங்கிய ஜோர்டனும், பாலத்தீனமும் அந் நான்கில் இரண்டாகும். முவாவியா சிரியாவின் ஆட்சிப் பீடமேறினர். சிரியாவை வல்லரசிடமிருந்து கைப்பற்றியதால் அரபுஆட்சிக்குத் தன்னம்பிக்கையும் செல்வாக்கும் ஏற்பட்டன. சிரியாவிலிருந்து எகிப்தைத் தாக்கவும், முகம்மது மறைந்து நூறுண்டிற்குள் ஐரோப்பாவின் மேல் கோடியிலிருந்த ஸ்பெயின் நாட்டை இஸ்லாமிய ஆதிக்க வட்டத்திற்குள் கொண்டுவரவும் அந்த நாடு பயன்பட்டது.

**2. பாரசிகப் போரசு**

சிரியா நாட்டைத் தாக்கிய விரைவோடு, அந் நாட்டில் வெற்றி பெறக் கையாண்ட போர்முறைகளையே கொண்டு அல்லாவின் வீரர்கள் பாரசிகத்தின் மீது போர் தொடுத்தார்கள். தொடக்கத்தில் கி.பி. 634-ல் அல்ஹீராவிற்கருகில்,ஒருபோர்க்களத்தில் அரேபியர் பாரசிகரிடம் தோல்வியுற்றனர். யூப்ரடிஸ் ஆற்றங்கரைப் பட்டணத்தில் நடந்த சண்டையில் முஸ்லிம்கள் வெற்றியடைந்தனர். மீண்டும் கி.பி.637-ல் அல்-ஹீராவிற்கருகில் அல்-காதிசியாப் போர்க்களத்தில் ஆறுயிரம் அரபு வீரர்கள் பாரசிக ஆட்சியாளர் ருஸ்டத்தோடு போரிட்டு வாகைசூடியதோடு அவரையும் கொன்றனர். அதற்குப்பின் டைகிரிஸ் ஆற்றிற்கு மேற்கிலிருந்த வளமிக்க இராக்கின் பள்ளப் பகுதி நிலத்தில் முஸ்லிம்கள் தாராளமாய்ப் படையெடுத்துச்செல்ல முடிந்தது. எந்தக் காரணங்களுக்காக அரபுக்களை சிரியா வரவேற்றதோ அதே காரணங்களுக்காக அரேபியர்களை அரமேய உழவர்கள் வரவேற்றனர். இராக்கில் வாழ்ந்த செமிடிக் மக்கள் கிறித்தவர்கள்; ஆட்சியாளர்கள் சொராஸ்டிரியச் சமயத்தைச் சேர்ந்தவர்கள். ஆதலால் அவர்கள் இரானியர்களை அன்னியர்களாகவும், படையெடுத்து வந்தவர்களை உறவினராகவும் கருதினர்கள். யார்முக்வெற்றிக்குப் பிறகு அரபுக்கள் சிரியாவில் குடியேறியதைப்போல், இராக்கிலும் வாழ்க்கை வசதிகருதிக் குடியேறினர்கள்.

பாரசிகப் பேரரசரும், அவருடைய படையும் தலைநகரிலிருந்து வெளியேறிவிடவே, அரபுத் தலைவர் சாத்இபின் அபி வக்காஸ் (Sadibn-abi-waqqas) டீசிஃபன்னுக்குள் (Ctesiphon)

வெற்றிவீரராய் நுழைந்தார். அந் நகரில் கொள்ளைப் பொருளாகக் கிடைத்த பொன்னும், பொருளும் தொள்ளாயிரம் கோடி டர்ஹாம்கள் (dirhams) ஆகும் என அரபு வரலாற்றைத் தொகுத்தவர்கள் மதிப்பிட்டுள்ளார்கள். மிகப்பெரிய அரசாங்கத்தின் தலைநகரம் முஸ்லிம்களின் வசமானபின் வறண்ட அரேபியாவில் வாழ்ந்தவர்கள் உயர்ந்த இன்ப வாழ்க்கையின் வசதிகளையும் போகப் பொருள்களையும் முதன்முதலில் கண்டார்கள். அரபு எழுத்தாளர்கள் அவ்விரு மக்களின் வாழ்க்கை நிலையை ஒப்பிட்டுக் காட்டும் வகையில் நகைச்சுவையோடு சில செய்திக் குறிப்புகளைத் தொகுத்துள்ளார்கள். கற்பூரத்தைப் பார்த்தறியாத அரபுக்கள் அதனை உப்பென நினைத்து உணவு தயாரிப்பதில் பயன்படுத்திக் கொண்டார்களாம். பழக்கமில்லாத பொன்னைக் கொடுத்துவிட்டுப் பழகிய வெள்ளியை வாங்கிக்கொண்டார்களாம். அரபு வீரன் ஒருவன் தன் பங்கிற்குக் கிடைத்த ஓர் உயர் குடும்பப் பெண்ணை ஆயிரம் டர்ஹாம்களுக்கு விற்றதைக் கேலி செய்தபோது, அதற்கு மேல் ஓர் எண் இருப்பதாகத் தான் எண்ணவில்லையெனக் கூறினும்.

அல்பஸ்ராவை அடித்தளமாய்க்கொண்டு பாரசிகப் பேரரசின் பல்வேறு பகுதிகளையும் வெல்ல அரபு வீரர்கள் திட்டமிட்டனர். இராக் எல்லையைத் தாண்டிப் பாரசிகத்தினுள் நுழைந்ததும் அவர்கள் கடும் எதிர்ப்பைச் சந்தித்தனர். அந் நாட்டை முஸ்லிம் ஆதிக்கத்தில் கொண்டுவர ஏறத்தாழப் பத்தாண்டுகள் பிடித்தன. பாரசிகர்கள் செமிட்டிக் மக்களல்லர்; ஆரியர்களாவார்கள். மேலும் அவர்கள் உரோமானியர்களோடு நான்கு நூற்றாண்டுகளுக்கு மேல் போரிட்டுப் போர்த்திறமை பெற்றிருந்தனர். அல்பஸ்ரா ஆளுநர் அப்துல்லா, பர்சிப் போலிஸ் (Persepolis) நகரத்தைக் கி.பி. 649-50-ல் கைப்பற்றினர். கொராசானைக் கைப்பற்றியதும் ஆக்ஸஸ் ஆற்றுப் பகுதிக்கு வழி திறந்தது. பலுசிஸ்தானில் மக்ரான் பிடிபட்டதும் கி.பி. 634 ஆம் ஆண்டிற்குப்பின் அரபுக்கள் இந்தியாவின் எல்லைப்பகுதிக்கே வந்துவிட்டனர். சிரியாவிலிருந்து சென்ற படை அர்மீனியா முழுவதையும் கி.பி. 652-ல் தன் வசமாக்கிக்கொண்டது. அர்மீனியாவை அடக்கியாள கி.பி.640-ல் செய்த முயற்சி கி.பி. 652-ல் வெற்றிதந்தது.

அல்இராக் பகுதியில் முதல் பள்ளிவாசல் கட்டப்பெற்ற இடமாகிய அல்கூஃபாவைத் தலைநகராக்கவேண்டுமெனக் காலிஃபிடமிருந்து ஆணை பிறந்தது. புதிதாய் வென்ற நாடுகளுக்கு அல்கூஃபா தலைநகராயிற்று. காலிஃப் உமார் விரும்பிய எளிமைக்கு

மாறாக டீசிஃபோனிலிருந்த அரண்மனையை ஒத்த ஓர் அரசு மாளிகை அல்கூஃபாவில் கட்டப்பெற்றது. பழைய தலைநகரின் முன்வாயில் புதிய தலைநகரின் வாயிலாயிற்று. அப்பாசிடு பரம்பரையைச் சேர்ந்த அல்மன்சூர் பாக்தாத் நகரை நிறுவும் வரை அல்கூஃபா அரபு மெசோபொட்டேமியாவின் அரசியல் தலைநகராயும் அறிவாற்றல் மையமாயும் விளங்கிற்று.

பன்னிரண்டு நூற்றாண்டுகள் தழைத்திருந்த பாரசிகப் பேரரசு கி.பி. 652-ல் முடிவுற்றது. அவ்வரசு மீண்டும் உயிர் பெற்றுஎழ 800 ஆண்டுகளுக்குமேல் பிடித்தன. முன்னூறு ஆண்டு அரபு ஆட்சியில் அரபுமொழி ஆட்சி மொழியாகவும், பண்பட்ட மக்களின் பேச்சு மொழியாகவும், ஓரளவு சாதாரண மக்களின் மொழியாகவும் வளர்ச்சி பெற்றது. தோல்வியுற்ற பாரசிக மக்கள் உணர்ச்சி பெற்றுப் புறக்கணிக்கப்பட்ட தங்கள் மொழிக்கு மீண்டும் அதற்குரிய இடத்தைப் பெற்றார்கள். பாரசிக ஆதரவைப் பெருமளவிற்குப்பெற்ற கார்மேத்திய இயக்கம் காலிஃப் ஆட்சியை அலைக்கழித்தது. ஷியாப் பிரிவை வளர்ப்பதிலும், இருநூறாண்டுகளுக்குமேல் எகிப்தை ஆட்சிசெய்த ஃபாத்திமாப் பரம்பரையை உருவாக்குவதிலும் பாரசிகத்தின் பங்கு கணிசமானது. பாரசிகரின் கலை, இலக்கியம், தத்துவம், மருத்துவக்கலை ஆகியவை அரபு உலகின் பொதுச் சொத்தாகி அவர்களை வென்ற அரபுக்களை வென்றுவிட்டது. முதல் மூன்று நூற்றாண்டுகளில் இஸ்லாமிய அறிவுவானில் மிகுந்த ஒளிவீசிய விண்மீன்களில் சிலர் பாரசிகர்களாவார்கள்.

கிழக்குத் திசையில் அரபு வீரர்கள், சிரியாவையும், பாரசிகப் பேரரசையும் வென்று வெற்றிவாகை சூடிவந்த நேரத்தில் ஓர் அரபுப்படை சிறப்பான தலைமையில் நைல்ஆற்றுவெளி மக்களையும், வடஆப்பிரிக்காவில் வசித்த பெர்பெர் (Berber) இனத்தாரையும் வளர்ந்துவரும் இஸ்லாமியப் பிறைவட்டத்திற்குள் கொண்டு வந்துகொண்டிருந்தார்கள். ஈடுஇணையற்ற இஸ்லாமிய ஆதிக்க வளர்ச்சி சமயச் சார்புடையதாய்த் தோன்றினும் அது அரசியல், பொருளியல் அடிப்படையில் ஏற்பட்ட ஒன்றாகும். அரபுக்கள் நிறுவிய அரசு அலெக்ஸாண்டர் நிறுவிய பேரரசின் பரப்பளவினதாயிருந்தது. அப் பேரரசினை மதீனாவிலிருந்து காலிஃப் ஆட்சி செய்துவந்தார்.

### 3. எகிப்து

தானியம் விளைவிக்கும் மண்வளம் பெற்ற எகிப்து கான்ஸ்டாண்டிநோபிளின் களஞ்சியமாயிருந்தது. அதன் தலைநகர்

அலெக்சாண்டிரியா பைசாண்டியப் பேரரசின் கடற்படைத் தலைமைத் தளமாகும். ஏனைய வடஆப்பிரிக்க நாடுகளைக் கைப் பற்ற எகிப்து வழியாகத்தான் செல்லவேண்டும். மேலும், எகிப்து அல்ஹறஜாசிற்கும் சிரியாவிற்கும் மிக அண்மையிலிருந்து அரபு ஆதிக்கத்திற்கு அச்சத்தைத் தந்தது. ஆதலால் ஆதிக்க நாள்களின் தொடக்கத்திலேயே அரபுக்களின் நாட்டம் நைல் ஆற்றுப்பகுதியின்பால் திரும்பிற்று. ஏற்கனவே வாணிகத்தை முன்னிட்டுப் பலமுறை எகிப்து சென்று அதன் நகரங்களையும், வழிகளையும் நன்கறிந்த ஓர் அரபுப்படைத் தலைவன் காலிஃப் உமாரின் இசைவோடு, ஃபாரோக்கள் அரசாண்ட நாட்டைப் பிடிக்கப் புறப்பட்டான். படைத்தலைவன் அமீர் (Amer) ஏற்கனவே ஜோர்டனுக்கு மேற்கில் இருந்த பாலஸ்தீனத்தை வென்று புகழ்பெற்றவன். பிற்காலத்தில் தன் நண்பன் முவாவி யாவைக் காலிஃப் பதவியில் அமர்த்தி அரேபியாவின் நான்கு பெரும் அரசியல் மேதைகளில் ஒருவன் என வரலாற்றில் இடம் பெறப் போகிறவனும் அவனே! ஆபிரஹாமும், ஆண்டியோகசும், அலெக்சாண்டரும் நெப்போலியனும் சென்ற கடற்கரை வழியே நாலாயிரம் அரபு வீரர்கள் சென்று கி.பி. 640-ல் கிழக்கு எகிப் தில் போர்க்கொடி உயர்த்தினர்கள். பல கோட்டைகள் அரபுக் களுக்குச் சொந்தமாயின. அரேபியாவிலிருந்து மேலும் படை உதவி வந்தும் பைசாண்டியப்படை அரபுப் படையைப்போல் இருமடங்கிருந்தது. ஆயினும், கிரேக்கப்படை நிலைகுலைந்து புற முதுகிட்டு ஓடிற்று. கிரேக்கத் தலைவர்களில் தியோடோரஸ் அலெக்சாண்டிரியாவில் அடைக்கலம் புகுந்தார். கைரஸ் பாபிலன் கோட்டையில் அடைபட்டார். முற்றுகையிடப்பட்ட பாபிலனி லிருந்து தப்ப வேறு வழியின்றித் திறை செலுத்த இசைந்ததன் பேரில் விடுதலைபெற்ற கைரஸ் அரேபியருடன் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்குப் பேரரசர் ஹெராக்ளியசின் ஒப்புதலைப்பெற அலெக்சாண்டிரியாவிற்கு விரைந்தார். கைரசின் அரசப்பற்றில் ஐயமுற்றுப் பேரரசர் அவ்வுடன்படிக்கையை ஏற்க மறுத்து அவனை நாடுகடத்தினர்.

வெற்றிமேல் வெற்றிகளைக் குவித்த அமீர் தாயகத்திலிருந்து மேலும் படை உதவி பெற்றுக் கான்ஸ்டாண்டிநோபிளுக்கு அடுத்த அழகும் வலிமையும் பெற்று எகிப்தின் தலைநகரமாயும் முதன்மையான துறைமுகமாயும் விளங்கிய அலெக்சாண்டிரியா வின் கோட்டை கொத்தளங்களுக்கு முன் தன்னுடைய இருபதி னாயிரம் மறவர்களை அணிவகுத்து நிறுத்தினன். முற்றுகை யிட்ட அரபுப்படைக்கு ஒருபுறம் ஒருகாலத்தில் தேவாலய மாகவும், உலகப்புகழ் பெற்ற நூலகமாகவும் இருந்த கட்டட

மிருந்தது; மற்றொருபுறம் ஒரு தேவாலயம் காணப்பட்டது. அலெக்சாண்டிரியாக் கோட்டையைக் காவல் புரிந்தவர்களின் எண்ணிக்கை ஐம்பதினாயிரம் ஆகும். கோட்டைக்குப் பின்னால் பைசாண்டியக் கடற்படைத்தளம் அமைந்திருந்தது. அரபுப் போர் வீரர்களின் எண்ணிக்கையும், அவர்கள் வசமிருந்த போர்த்தடவாளங்களும் மிகக்குறைந்த அளவே இருந்தன. மேலும், அவர்களிடம் முற்றுகைக்கு வேண்டிய இயந்திரச் சாதனங்களோ, கப்பலோ கிடையாது. கோட்டை வீரர்களின் எறிபடை வீச்சைத் தாங்கிக்கொள்ள முடியாமல் அரபுக்கள் பின்னடைந்தனர். ஹெராக்ளியஸ் இறந்தபின் கைரஸ் அரபுக்களோடு அலெக்சாண்டிரிய உடன்படிக்கையைக் கி.பி 641-ல் செய்துகொண்டான். எகிப்தைக் கி.பி. 642-ல் அரபுக்களிடம் ஒப்படைத்துவிட்டுப் பைசாண்டியப்படை அலெக்ஸாண்டிரியாவிலிருந்து வெளியேறியது. கான்ஸ்டாண்டிநோபிள் ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெற்ற எகிப்தைக் கைரஸ் ஆளுவதென்று ஏற்பாடாயிற்று. வயதுவந்த ஒவ்வொருவனிடமிருந்தும் இரண்டு தினார் திறை வாங்குவதென்றும், விளைபொருளினமாய் நிலவரியை வசூலிப்பதென்றும் பைசாண்டியப் படைநாட்டிற்குள் வராதவாறு பார்த்துக்கொள்வதென்றும் கைரஸ் ஒப்புக்கொண்டான். 4000 குளியலறைகளோடு 4000 மாளிகைகளும், ஆள்வரி கொடுக்கின்ற 40,000 யூதர்களும், அரசர்களை மகிழ்விக்கும் 400 இடங்களும் தன்னால் அலெக்சாண்டிரியாவில் கைப்பற்றப்பட்டன என்று காலிஃப் உமாருக்கு அமீர் விடுத்த செய்தி தெரிவிக்கிறது.

கிழக்குப் பேரரசின் கிறித்துவச்சமயக் கொள்கையை எகிப்தியக் கிறித்துவர்கள் ஏற்காததால் கான்ஸ்டாண்டிநோபிள் அவர்களைத் துன்புறுத்திவந்தது. ஆதலால் படையெடுத்துவந்த முஸ்லிம்களை அவர்கள் தொடக்கத்திலிருந்தே எதிர்க்கவில்லை. ஹெலியாப்போலிசில் அமீர் பாசறை அமைத்த இடம் தலைநகராயிற்று. அங்கு எழும்பிய முதல் பள்ளிவாசல் மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு இன்றும் நிலைத்திருக்கிறது. கி.பி. 969-ல் ஃபாத்திமா வம்சம் கெய்ரோத் தலைநகரை நிர்மாணிக்கும்வரை, பழைய கெய்ரோவென வழங்குமிடம் இஸ்லாமிய எகிப்தின் தலைநகராயிருந்தது. ஃபாரோ மன்னர்கள் வெட்டிய பழைய கால்வாய் ஹெலியோபோலிஸ் வழியே ஓடிச் செங்கடற்கரையில் இருந்த அல்குசுமை பாபிலனுக்கு வடக்கில் நைல் ஆற்றோடு இணைத்தது. அரேபியாவின் புனித நகரங்களுக்கு நேர் நீர்வழியொன்றை ஏற்படுத்த அக் கால்வாயை அமீர் ஆழப்படுத்தினான்.

எகிப்தின் விளைபொருள்களை ஏற்றிவந்த இருபது மரக்கலங்கள் அவற்றைக் கி.பி 644-ல் அரேபியத் துறைமுகங்களில் இறக்கின. பிற்காலத்தில் அக் கால்வாய் கலீபா அல் ஹக்கீம் பெயரால் அல் ஹக்கீமிக் கால்வாய் என அழைக்கப்பெற்றது.

எகிப்தின் புதிய ஆட்சியாளர்கள் பழைய பைசாண்டிய ஆட்சிமுறையைச் சில மாற்றங்களுடன் பின்பற்றினார்கள். நைல் ஆற்றின் கொடையாக விளங்கிய எகிப்து இஸ்லாமியப் பேரரசின் பணத்தேவையை நிரப்பப் பயன்படுத்தப்பட்டது. அமீர் எகிப்திய மக்களிடமிருந்து போதிய அளவு பொருள் வசூலிக்கவில்லையென்று கருதி உமர் நாட்டின் மேல்பகுதிக்கு அப்துல்லாவை ஆளுநராக்கினார். அடுத்துவந்த கலீபா, உதுமான் (Uthman) அமீரை ஆட்சியிலிருந்தே நீக்கிவிட்டுக் கி.பி. 645–ல் தம்முடைய உறவினர் அப்துல்லாவிடம் நாட்டின் முழு ஆட்சிப்பொறுப்பையும் அளித்தார். புதிய ஆட்சியை விரும்பாத அலெக்சாண்டிரிய மக்கள் கிழக்குப் பேரரசரிடம் முறையிட, அவர் அலெக்சாண்டிரியாவை மீட்கக் கலங்களை அனுப்பினார். ஆயிரம் கோட்டை வீரர்களும் பைசாண்டிரியர்களால் கொல்லப்பட்டனர். அலெக்சாண்டிரியாவிலிருந்து பைசாண்டியர்கள் எகிப்தைத் தாக்கினார்கள். உடனடியாக அமீர் மீண்டும் ஆட்சியில் அமர்த்தப்பட்டார். கி.பி. 646–ல் அலெக்சாண்டிரியா மீண்டும் அரபுக்களால் கைப்பற்றப்பட்டது. அதுமுதல் அத் துறைமுகப் பட்டினம் முஸ்லிம்களிடமே இருந்து வருகிறது. தாக்குதலுக்கு அசைபாத அதன் சுவர்கள் தகர்க்கப்பட்டன.

அலெக்சாண்டிரியாவை இரண்டாவது முறையாக வென்ற அமீர் படைத்தலைவராகவும், அப்துல்லா நிதி அதிகாரியாகவும் பணிபுரியுமாறு உதுமானால் பணிக்கப்பட்டார்கள். தான் பசுவின் கொம்புகளிரண்டையும் பற்றிக்கொண்டிருக்க, இன்னொருவர் அதனிடம் பால் கறப்பதைப் பார்த்திருக்கச் சம்மதியாத அமீர் படைத்தலைமையிலிருந்து விலகிக்கொண்டார். அதன்பின் அப்துல்லா காலிஃப் உதுமானின் பிரதிநிதியாக ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தார். கொள்ளையடிக்கும் நோக்கத்தோடு நாட்டின் மேற்கு, தெற்குப் பகுதிகளைத்தாக்கி அவர் நாட்டெல்லைகளை விரிவடையச் செய்தார். முதல் முஸ்லிம் கப்பல்படையை நிர்மாணித்ததுதான் அப்துல்லாவின் பெருஞ்சாதனையாகும். சிரியா ஆளுநர் முவாவியாவிற்கும் அச் சாதனையில் பங்குண்டு. பைசாண்டியப் பேரரசினைத் தாக்கக் கப்பல்படை உதவிற்று. சிரியாவிற்கு அருகி

லிருந்த பைசாண்டியக் கடற்படைத் தளமாகிய சைப்ரசைக் கி.பி. 649-ல் முவாவியா பிடித்துக்கொண்டார். அதுவே இஸ்லாம் பெற்ற முதல் கடல் வெற்றி; சைப்ரசே இஸ்லாமிய ஆதிக்கத்திற்குட்பட்ட முதல் தீவாகும். அப்துல்லா அலெக்சாண்டிரியாக் கடற்கரையில் கிரேக்கக் கப்பல்படையைக் கி.பி. 652-ல் முறியடித்தார். முவாவியாவின் கடற்படைத் தலைவன் கி.பி. 654-ல் ரோட்ஸ் தீவைச் சூறையாடினன். கி.பி. 655-ல் அப்துல்லா, முவாவியா இருவரின் கப்பற்படைகளும் இணைந்து 500 பைசாண்டியக் கலங்களை லிசியன் கடற்கரையில், பொனிக்சிற்கருகில் அழித்தன. பைசாண்டியக் கடல்படைக்குத் தலைமை தாங்கிய பேரரசர் உயிர்தப்பிப் பிழைத்ததே அரிதாகிவிட்டது. அரபு மொழியில் தூ-அல்-சவாரி எனக் குறிப்பிடப்பட்ட இக் கடல்சண்டை பைசாண்டியக் கடலாதிக்கத்திற்கு முடிவு கண்டது. முஸ்லிம்களுக்குள் இருந்த குழப்பம் காரணமாய், அக் கடல் வெற்றியைத் தொடர்ந்து அவர்களின் குறிக்கோளாயிருந்த கான்ஸ்டாண்டிநோபிளைத் தாக்க முடியவில்லை. கி.பி. 669-ல் 200 அரபுக் கலங்கள் சிசிலியைத் தாக்கிச் சூறையாடின. இக் கடல் சண்டைகளைக் காலிஃப்கள் அவ்வளவாக ஆதரிக்கவில்லை. அப்துல்லாவும் முவாவியாவும் இஸ்லாமிய முதல் கடற்படைத் தலைவர்களாவார்கள்.

எகிப்தையும் அலெக்சாண்டிரியாவையும் காப்பாற்ற எகிப்தின் மேற்கிலிருந்த நாடுகளையும் மக்களையும் முஸ்லிம் ஆதிக்கத்திற்குட்படுத்துவது இன்றியமையாததாகிவிட்டது. கி.பி. 642-43-ல் குதிரைப்படையுடன் விரைந்த அமீர், நபியவர்களின் கொடியை வடஆப்பிரிக்கக் கரையோரமாய் பெர்பெர் இனம் வாழ்ந்த டிரிப்பொலிவரை எடுத்துச்சென்று நாட்டினன். மேற்கொண்டு அத் திசையில் படையுடன் சென்ற அப்துல்லா கார்த்தேஜிடம் திறைபெற்றுத் திரும்பினன். கி.பி. 652-ல் அப்துல்லா தெற்கிலிருந்த நூபியா நாட்டினரோடு உடன்படிக்கை செய்துகொண்டான். தெற்கில் இஸ்லாமிய ஆதிக்கம் பல நூற்றாண்டுகளுக்குப் பரவாதவாறு கிறித்தவ நாடாகிய நூபியா தடுத்து நிறுத்திவிட்டது.

காலிஃப் உமாரின் ஆணைக்கிணங்க அமீர் அலெக்சாண்டிரியா நூலகத்திலிருந்த அரிய நூல்களை ஆறு மாதங்கள் தொடர்ந்து எரியிட்டு அழித்தான் என்பது நல்ல கற்பனைக் கதையாகலாம். ஆனல், தவறான வரலாறாகும். ஏனெனில் டாலமிகளால் நிறுவப்

பட்ட நூலகம் ஜூலியஸ்சீசரால் கி.மு. 48-ல் எரியூட்டப்பட்டு விட்டது. அதன்பின் ஏற்பட்ட நூலகம் கி.பி. 389-ல் உரோமப் பேரரசர் தியோடோசியசின் ஆணையினால் அழிக்கப்பட்டு விட்டது. அரபுக்கள் அலெக்சான்டிரியாவைத் தாக்கிக் கைப் பற்றிய காலத்தில் நல்ல நூலகமே அங்கில்லை. அக் கால எழுத் தாளர் யாரும் அமீர் மீதோ உமர் மீதோ அப்பழியைச் சுமத்த வில்லை. கி.பி. 1231-ல் இறந்துபோன அப்துல் லத்தீஃப் என்பவரே அக்கதையை முதலில் வெளியிட்டவர்; பின்னால்வந்த எழுத்தாளர்கள் அக்கதையைப் பெருக்கிவிட்டார்கள்.

## கலிபா ஆட்சியும் அவர் ஆட்சி முறையும்

நபிநாயகத்தின் பின்தோன்றலாய்க் கலிபா பதவியேற்ற அபூபக்கர் நபியவர்களைத் தொடக்கத்திலிருந்து ஆதரித்து அவருக்கு உற்ற நண்பராய் இருந்தவர். அவருடைய மகள் ஆயிஷா, முகம்மதுவின் ஆசை மனைவியாகவும் பிற்காலத்தில் நபியை நம்பினவர்களின் அன்னையாகவும் விளங்கினர். நபியின் மறைவிற்குப்பின், மதீனாவிலிருந்த இஸ்லாமியத் தலைவர்களின் இசைவுடன் அபூபக்கர் தலைமைப் பதவியை ஏற்றார்; ஒருவகை யில் அப்பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று கொள்ள லாம். இஸ்லாமிய எழுச்சியின் திருவுருவாய்த் திகழ்ந்த அபூபக்க ருக்கு அன்னாரின் திடநம்பிக்கையும், கோட்பாட்டுத் தெளிவும் பெருந்துணையாயிருந்தன. அவர் பதவியேற்றபோது நாடு ஓர் ஆட்சிக்குக் கட்டுப்பட்டிருக்கவில்லை; மக்கள் ஒரு சமயத் தலைமை யின் கீழிருக்க விரும்பவில்லை. குறைஷிக் குலத்திலேயே சமயத் தலைமை தொடர்ந்திருப்பதை விரும்பாத சில குலங்கள் தங்களுக் கென்று தனித்தனியே தெய்வத் தூதரைத் தெரிந்து எடுத்துக் கொண்டு அவரைப் பின்பற்றின. அரேபியாவின் சில பகுதிகள் மதீனாத் தலைமைக்குக் கீழ்ப்படிய மறுத்தன. பொதுவாகப் பிடூயின்கள் எல்லோருமே வறியோர்க்கென்று வசூலிக்கப்பட்ட கட்டாய வரியாகிய சக்காத்தை (Zakat) வெறுத்தனர். சமயத்தை விட்டு வெளியேறியவர்களை மீட்டு நபியை நம்பச் செய்வதும், மதீனாத் தலைமைக்குக் கட்டுப்படாத பகுதிகளைத் தம் ஆட்சியின் கீழ்க் கொண்டுவருவதுமே புதிய கலிபா மேற்கொண்ட பணி யாகும். 'அல்லாவின் வாள்' என்று போற்றப்பட்ட கலீது போன்ற படைத் தலைவர்களின் உதவியோடு நாட்டை ஒன்று படுத்தி அண்டை நாடுகளில் முஸ்லிம் முன்னேற்றத்திற்கு வழி கோலினர். அரேபியத் துணைக்கண்டத்தில் நடுநாடு, கிழக்குப் பகுதி, தென்பகுதி ஆகியவற்றில் கடும்போரிட்டுத் தம் ஆதிக் கத்தை நிலைநாட்டியபின், கலிபாவின் நாட்டம் வடக்கே திரும் பிற்று. அபூபக்கர் எவ்வாறு சிறந்த படை வீரர்களைக்கொண்டு

அல்-இராக்கைக் கைப்பற்றி, சிரியா நாட்டையும் ஊடுருவச் செய்தார் என்று மேலே கண்டோம். யார்முக் வெற்றிக்குச் சற்று முன்பு முதல் கலிபா இறந்தார்.

வணிகத்தொழிலில் ஈடுபட்டு, நற்பண்புகளின் உறைவிடமாயிருந்த அப்துல்லாவே அபூபக்கர் என்றும் அழைக்கப்பட்டார். மக்காவிலிருந்து நபியவர்கள் மேற்கொண்ட மதீனாப் பயணத்தில் அவருடனிருந்த ஒரே தோழர் அவரே. சமயத்தை எல்லோரும் ஏற்று, பின்பற்றச்செய்து, நிலைநாட்டுவதில் நபிக்கு உறுதுணையாயிருந்த அபூபக்கர் எளிமை, அடக்கம் ஆகியவற்றின் சின்னமாய் விளங்கினார். ஆட்சியில் அமர்ந்திருப்பவருக்கு ஒதுக்கப்பட்ட செலவுத்தொகையை (Privy Purse) அரசுடைமையிலிருந்து (State Property) பிரித்து வேறுபடுத்தித் தம் மகளின் வெறுப்பிற்கு ஆளானார். அவருடைய அரிய சமயத்தொண்டு இஸ்லாமிய வரலாற்றில் முகம்மதுவிற்கு அடுத்த இடத்தை அவருக்களித்தது.

**உமர் I (634—644)**

அபூபக்கரால் குறிப்பிடப்பெற்ற உமர், அவரைத் தொடர்ந்து முஸ்லிம் தோழர்களின் ஒப்புதலோடு கலிபா பதவியேற்றார். அவருடைய பத்தாண்டு ஆட்சிக்காலத்தில் முஸ்லிம் வீரர்கள் கடும் போரிட்டு சிரியா, பாரசிகம், எகிப்து முதலிய நாடுகளை இஸ்லாமிய ஆதிக்கத்திற்குள் கொண்டுவந்த செய்தி விளக்கப்பட்டுள்ளது. புதியதாய் வென்ற நாடுகளை எவ்வாறு ஆட்சிபுரிவது, பண்டைய அரபுச்சமுதாயத்தில் நிலவிய ஆணைகளைப் புதிய அரபு ஆதிக்கத்தின் தேவைக்கேற்பச் சட்டங்களாய் எப்படி மாற்றி அமைப்பது என்பவற்றிற்கு விடை காண வேண்டிய பெரும் பொறுப்பு இஸ்லாமிய ஆதிக்கத்திற்கு ஒரு சவாலாய் இருந்தது. அப்பொறுப்பான பணியை நிறைவேற்ற முன் வந்த முதல் கலிபா உமரே.

அரபுப்பேரரசிற்கு உமர் ஒரு நல்ல ஆட்சிமுறையை வகுத்துத் தந்தார். இஸ்லாமிய அரசினைச் சமய அடிப்படையில் நிறுவினார்; நாட்டின் விவரப்பட்டியல் குறிப்பைத் தயாரித்தார். ஹிஜ்ரியை முஸ்லிம் காலப்பிரிவின் தொடக்கமாய் அறுதி செய்தார்; அல்லாவின் சொற்களுக்கு ஒரு நிலையான வடிவம் தந்தார். நீதிவழங்குவதில் தன் மகனுக்கும் கண்ணோட்டம் காட்டாத நெறியாளராயிருந்தார். கடவுட்பற்று, நேர்மை, எளிமையாகிய அவருடைய பண்புகளை முஸ்லிம் எழுத்தாளர்கள் போற்றிப்பாராட்டி அவருக்குப் 'பெரியார்' என்ற பட்டத்தைச்

சூட்டினார்கள். இஸ்லாம் சமயத்தை மீண்டும் உறுதியாய் நிறுவி, ஒருபெரும் நிலப்பரப்பினை முஸ்லிம் ஆதிக்கத்திற்குட்படுத்திப் புகழேணியின் உச்சியிலிருந்த நேரத்தில் திருக்கூட்டத்தினிடையே நச்சுவாளால் குத்தப்பட்டு அவர் உயிர் துறந்தார்.

**உதுமான் (644—56)**

குத்துவாளிற்கு இரையான நிலையில் கலிபா உமர் தமக்குப் பின் யாரெனக் குறிப்பிடாது, அறுவர் குழுவிற்கு அப்பொறுப்பினை விட்டுச்சென்றார். அலி, உதுமான் இவர்களில் யார் கலிபா ஆவது என்ற சூழ்நிலையில் முதலிரண்டு கலிபாக்கள் சென்ற பாதையில் செல்ல அலி மறுக்கவே, உதுமானே அப்பதவிக்கேற்றவர் என முடிவு செய்யப்பட்டது. மதீனாவில் குடியேறியவர்களிலிருந்து அபூபக்கரும், உமரும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். உதுமான் உயர்ந்த உமையடு (Umayyad) குடியில் தோன்றியவர். இவர்களில் யாரும் வழிவழி மரபினை ஏற்படுத்தவில்லை.

உதுமானின் ஆட்சிக்காலத்தில் முஸ்லிம்கள் அர்மீனியாவில் சில பகுதிகளை வென்றார்கள்; இரான், அதர்பெய்ஜான் இரு நாடுகளும் முழுவதுமாய் அவர் ஆட்சிக்குட்பட்டன. அர்மீனியா, அலெக்ஸான்டிரியா முதலிய இடங்களில் ஏற்பட்ட கலகங்கள் அடக்கப்பட்டன. முவாவியா மதீனாவிலிருந்து படை உதவி பெற்றுக் கிரேக்கப்பேரரசின் படையைத் தோற்கடித்தபின், அர்மீனியாவில் நுழைந்து காஸ்பியன் கடற்கரையை அடைந்தான். முஸ்லிம் ஆதிக்கத்தை எதிர்த்துக் கொராசானில் ஏற்பட்ட கலகம் ஒடுக்கப்பட்டது. காபூலில் ஒரு பகுதியும் பால்கும் (Balkh) அரபு வீரர்களால் கைப்பற்றப்பட்டன.

அவருடைய பன்னிரண்டு ஆண்டு ஆட்சியில் முதல் ஆறு ஆண்டுகள் உதுமான் ஆட்சிச்சகடம் உமரின் ஆட்சிச் சுவட்டிலேயே உருண்டோடிற்று; கலிபாவின் முதுமை காரணமாய்ப் பின் ஆறு ஆண்டுகளில் விரும்பத்தகாதவர்களின் ஆதிக்கத்தால் மக்களிடையே வெறுப்பும் எதிர்ப்பும் வளர்ந்தன. பேராசை பிடித்த உறவினர்களின் வற்புறுத்தலை மறுக்க முடியாத நிலையில் உயர்பதவிகளையும், கொள்ளைப்பொருளினை உரிய அளவிற்கு மேலும் அவர்களுக்கு அளித்து, உறவினர்களுக்குத் தனிச் சலுகையும் தவறான ஆதரவும் தந்தார் என்ற குற்றச்சாட்டிற்கு ஆளானார் அக் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது எனச் சொல்வதற்கில்லை. வளர்ப்புச் சகோதரனாகிய அப்துல்லாவை எகிப்திற்கு ஆளுநராக்கினார்; ஒன்றுவிட்ட

சகோதரன் அல்-வாலீதைத் அல்கூஃபா ஆட்சித்தலைமையில் அமர்த்தினர்; தம் குலத்தோன்றல்கள் பலருக்கு உயர்பதவிகள் அளித்தார்; எகிப்தில் கிடைத்த கூறைப்பொருளில் அரசுக்குரிய பங்கில் ஐந்தில் ஒருபாகத்தை அப்துல்லாவிற்குக் கொடுத்துப் பழிச்சொல்லிற்கு ஆளானர். மாகாண ஆளுநர்களிடம் அவரே பரிசுப்பொருள்களைப் பெற்றார்.

நபிநாயகத்தின் தோழர்களின் மக்களுக்கு உயர்பதவிகள் கிட்டவில்லை. காபாவையும், மதீனப் பள்ளிவாசலையும் கலிபா விரிவாக்கிய போது, பலர் தங்கள் வீடுகளை இழக்க நேரிட்டது. அவர்கள் கலிபாவின்பால் தீராப்பகைமை கொண்டனர். மேலும் அவர் வெளியிட்ட குரான் இறுதிப்பதிப்பு பல்வேறு மக்களால் கண்டிக்கப்பட்டது. உதுமான், நபியின் முத்திரை மோதிரத்தை இழந்ததால் அவர் பதவியில் இருப்பதை ஆண்டவனே அவர் திருத்தூதரோ விரும்பவில்லை என்று குருட்டு நம்பிக்கையாளர்கள் கருதினர்கள்.

மாகாண நகரங்களில் குறைஷிகள் நிலஉடைமைக்காரர்கள் ஆவதற்கு அனுமதிக்கப்பட்டதால் சிரியா, எகிப்து, இராக் முதலிய நாடுகளில் நிலமிழந்தவர்களிடையே மனக்கசப்பு வளர்ந்தது. அல்மதீன, அல்-கூஃபா, அல்பஸ்ரா, எகிப்து முதலிய பகுதிகளின் மக்கள் கலிபா ஆட்சியை வெறுத்தனர்; அவர்களைக் கிளர்ச்சி செய்யுமாறு பிரபுக்களும் தூண்டினர்கள். குறைஷி குலத்தினருக்கும் ஏனைய குலத்தோருக்கும் போட்டியும், உமையாடு, ஹாஷிமிடு குலங்களுக்குள் பகைமையும் இருந்து வந்தன. நபியின் தோழர்கள் ஒற்றுமையாயில்லை. இச் சூழ்நிலையில் கிளர்ச்சிக்காரர்கள் மதீனவில் கூடி எண்பது வயதைக் கடந்த உதுமானை அவர் இல்லத்திலேயே அடைத்துவிட்டார்கள் அவர்கள் விரும்பிய சீர்திருத்தங்களைக் கலிபா புறக்கணிக்கவே, அவர் இல்லத்தில் புகுந்து உதுமானை வன்முறையில் கொன்றுவிட்டார்கள். முன்னாள் கலிபா அபூபக்கரின் மகன் முகம்மதுவே உதுமனை முதலில் தாக்கினன். இவ் வன்முறைக் கொலைபோடு இஸ்லாமிய வரலாற்றில் குடும்ப ஆட்சிக்காலம் (Patriarchal epoch) முடிவுற்றது. அதன்பிறகு கலிபா பதவிக்கு முதலில் அலிக்கும் அவருடைய நெருங்கிய போட்டியாளர்களுக்கும் போர் நிகழ்ந்தது; பின்னர் உமையடுகளுக்காகக் கச்சை கட்டிக்கொண்டு போரிட முன்வந்த சிரியா ஆளுநர் மூவாவியாவிற்கும் அலிக்கும் போர் மூண்டது.

**குரான் தொகுப்பு**

ஏற்கனவே நிலையாய்ப் பதிவுசெய்யப்பட்டிருந்த குரான் நபி நாயகத்திற்கு அவ்வப்போது நான்கு வகையில் அறிவிக்கப் பட்டது. சில பகுதிகள் கனவிலும், சில உள்ளுணர்வாகவும் அவருக்கு உணர்த்தப்பட்டன; மணியோசை போன்ற பேரொலி களால் வேறு சிலவும், தெய்விக உருவில் மேலும் சில பாக்களும் தெரிவிக்கப்பட்டன. அவற்றை முகம்மது தம் தோழர்களைக் கொண்டு எழுதச்செய்தார். அவ்வப்போது கிடைத்த காகிதம், மட்பாண்டத்துண்டு, மரப்பலகை, ஒட்டகத்தின் தோள்பட்டை எலும்பு முதலியவற்றில் குரானின் சிறுபாக்கள் எழுதப் பெற்றன. அவற்றைத் திரட்டி ஒரு சுவடியை உருவாக்க நாயகம் காலத்தில் முயற்சி செய்யவில்லை. குரான் பாக்களை அவருடைய தோழர்களில் சிலர் எழுதிவைத்திருந்தனர்: பலர் மனப்பாடஞ்செய்திருந்தார்கள். சமயத்தை ஏற்காதவர்களோடு போர் நிகழ்ந்தபோது குரானை மனப்பாடஞ்செய்திருந்தவர்களில் எழுபதின்மர் இறந்துபோகவே, பல பாக்கள் மறைந்துவிடக் கூடும் என்று அஞ்சிய உமர் குரானைத் தொகுக்குமாறு கலீபா அபூபக்கரை வேண்டினார். குரான் தொகுப்புப்பணி எளிதா யில்லை. குரான் பாக்களை வரிசைப்படுத்தி, எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் முறையில் ஏட்டுச் சுவடி உருவாக்க வேண்டி யிருந்தது. நபியவர்களின் இறுதி ஆண்டுகளில் தலைமைச் செயலாளராயிருந்த சையதிடம் அப்பணி ஒப்படைக்கப்பட்டது. பாக்களைச் சூருக்களாய்ப் பாகுபாடு செய்து ஒரு சுவடியை எழுதி அபூபக்கரிடம் சையது அளித்தார். அச் சுவடி பின்னால் உமரிடமும், அதன் பிறகு அவருடைய மகளிடமும் இருந்து வந்தது. இஸ்லாம் ஆதிக்கம் விரிவடைந்த நாள்களில் பல்வேறு முஸ்லிம்கள் போர்க்களங்களில் சந்தித்தபோது சமயத்தைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் வெளிப்பட்டன. கருத்து வேறுபாடு வளர்ந்து முஸ்லிம்களிடையே பிரிவுகள் ஏற்படா மல் தடுக்க எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு குரான் தொகுப்பு இன்றியமையாதது என உயர்மட்டத்தில் உணர்ந் தார்கள். நபிநாயகத்தின் தோழர்களைக் கலந்துகொண்டு கலிபா உதுமான் ஒரு அறிஞர் குழுவினிடம் குரான் தொகுப்புப் பணியைத் தந்தார்.

நபிநாயகம் காலத்தில் அரபுக்குலத்தினர் குரானை அவரவர் களின் மொழிப்பிரிவுகளில் எழுதிப்படிக்க அனுமதி அளிக்கப் பட்டிருந்தார்கள். இன்றளவில் குரானிற்கு ஏழு வெவ்வேறு ஏட்டு மூலங்கள் இருந்து வருகின்றன. ஆனால், உதுமானால் தொகுக்கப்பெற்ற சுவடி குறைஷிமொழியில் மட்டிலுமே எழுதப்

பட்டது. அதனால் அத் தொகுப்பைப் பலர் கண்டித்து ஏற்க மறுத்தனர். அக் காலத்தில் எல்லோரும் விரும்பும் முறையில் ஒரு தொகுப்பு வெளியிட்டிருக்க முடியாது. எதிர்ப்பைச் சமாளித்துக் குரான் தொகுப்பு வெளியிடப்பட்டது உதுமான் இஸ்லாம் சமயத்திற்குக் காலத்தில் செய்த பெருந்தொண்டாகும்.

பொருள் முறைப்படியோ, அறிவிக்கப்பட்ட கால முறைப் படியோ குரான் பாக்கள் தொகுக்கப்பெறவில்லை. நீண்ட சூறுக்கள் முன்னும், அளவிற்கேற்ப ஏனைய சூறுக்கள் வரிசையாகப் பின்னுலும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. இம் முறையும் ஒரோவிடங்களில் மாறியுள்ளது. இவ்வாறு தொகுக்கப்பெற்ற சுவடி ஒன்றினை அல்-மதீனாவிலும் மற்ற மூன்றை அல்-கூபா, டமஸ்கஸ், எகிப்து ஆகிய இடங்களிலும் பாதுகாப்பாய் வைத்திருக்கக் கலீபா ஏற்பாடு செய்தார்.

**அலி (656-661)**

உதுமான் வன்முறைக்கு ஆளானபின் அலி நான்காவது கலீபாவென அறிவிக்கப்பட்டார். அநேகமாய் முஸ்லிம் உலகம் முழுவதும் அலியை ஏற்றுக்கொண்டது. அலி, முகம்மதுவின் ஒன்று விட்ட சகோதரனும் நபியின் மகள் ஃபாத்திமாவின் மணாளனும் ஆவார். முகம்மதுவால் குறிப்பிடப்பட்ட பின் தோன்றல் அலியேயென்றும் முதல் மூன்று கலீபாக்களும் அவரை வஞ்சித்து அவருக்குரிய பதவியைப் பறித்துக் கொண்டார்களென்றும் அலியின் கட்சிக்காரர்களாகிய நேர்மையாளர்கள் (Legitimists) கருதினர்கள். அலி, சமயப்பணியில் ஆர்வமுடையவர்; எல்லோரிடத்திலும் இன்சொல் பேசி அன்பாய்ப்பழகினர்; துணிவும் வலிவும் உடையவராயிருந்தார்.

கலீபா உதுமானைக் கொலை செய்தவர்களைத் தேடித் தண்டிக்க வேண்டும் என அலியை வற்புறுத்தினர்கள். கலீபாவைக் கொன்றவனைப்பற்றி உறுதியான சான்று ஒன்றும் கிடைக்கவில்லை ஆதலால் கொலைக்காரன் தண்டிக்கப்படவில்லை. அதனையே காரணமாய்க்கொண்டு சிலர் அலியைக் கலிபாவாய் ஏற்க மறுத்தனர். அலியின் ஆதரவாளர்களில் உதுமானை எதிர்த்துக் கலகஞ்செய்தவர்களும் ஒரு பகுதியாவார்கள்.

மக்காக் கட்சியைச் சேர்ந்த இருவர் அலியின் தலைமைப் பதவிக்கு உரிமை கொண்டாடிப் போருக்கு ஆயத்தமானர்கள். நபியின் வாழ்க்கைத்துணைவி ஆயிஷாவின் ஆதரவும் அவர்களுக்குக் கிடைத்தது. ஆயிஷா ஏறிவந்த ஒட்டகத்தைச் சுற்றி அணிதிரண்டு வீரர்கள் போரிட்டதால் ஒட்டகச் சண்டை என்ற

பெயர் அப் போருக்குச் சூட்டப்பட்டது. அல்-பஸ்ராவிற்கு வெளிப்புறத்தில் அக் கூட்டணி அலியிடம் தோல்வியுற்றது. போட்டியாளர்கள் இருவரும் போரில் மடிந்தனர். இறந்தவர்கள் பெருமையோடு அடக்கஞ்செய்யப்பட்டனர்; சிறை செய்யப்பட்ட ஆயிஷாவும் நாட்டின் முதல் பெருமாட்டிக்குரிய தகுதியோடு மதீனுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டாள். இவ்வொட்டகச் சண்டையே இரு முஸ்லிம் படைகளிடையே நிகழ்ந்த முதல் சண்டையாகும். சிலநேரங்களில் இஸ்லாமிய அரசின் அடிப் படைக்கே கேடுவிளைத்து அவ்வரசினை நடுங்கவைத்த அரச மரபுச் சண்டைகள் (Dynastic Wars) தொடங்கிவிட்டன.

விரும்பத்தகாத பல மாகாண ஆளுநர்களை அலி பதவியில் இருந்து நீக்கினுர்; சிலரிடம் தமக்குக் கட்டுப்பட்டிருப்பதாய் வாக்குறுதி பெற்ருர். சிரியா நாட்டு ஆளுநரும், கொலை செய்யப் பட்ட உதுமானின் உறவினருமான முவாவியா அலியைக் கலீபா வாய் ஏற்க விரும்பவில்லை. கொலைசெய்யப்பட்ட உதுமானின் குருதி தோய்ந்த மேலங்கியையும், அவரைக் காக்கும்முயற்சியில் வெட்டுண்ட அவருடைய மனைவியின் விரல்களையும் டமஸ்கஸ் பள்ளிவாசலில் காட்சிப் பொருள்களாய் வைத்து முஸ்லிம்களின் உணர்ச்சியை அலிக்கு எதிராகத் தூண்டிவிட்டார். கலீபாவைக் கொன்றவனைத் தேடித் தண்டிக்காவிடில், அலி அவனுக்கு உடந்தையாயிருந்ததாகக் கருத வேண்டிவரும் என்றும் உடந்தையாயிருந்ததால் கலீபா பதவிக்கு அலி தகுதியற்றவராகி விட்டார் என்றும் முவாவியா வாதிட்டான்.

இஸ்லாமிய ஆட்சிப் பரப்பு விரிவடைந்திருந்ததாலும், தம்முடைய போர்களில் அல்-கூஃபா மக்கள் ஆதரவளித்த தாலும் அல் மதீனுவிலிருந்த தலைநகரத்தை அலி அல்-கூஃ பாவிற்கு மாற்றினுர். இப்போது மூண்டபோர் அலி, முவாவியா ஆகிய இரு நபர்களுக்குள் ஏற்பட்ட போர் என்று சொல்வதைக் காட்டிலும் இஸ்லாமிய ஆட்சித் தலைமை அல்-கூஃபாவிலா, டமஸ்கஸிலா, அல்-இராக் நாட்டிலா, சிரியாவிலா எங்கிருப்பது என்ற கேள்விக்கு விடைகாண நிகழ்ந்த போராட்டமாகவே கொள்ளலாம். முவாவியா, அலி ஆகிய இருவரின் படைகளும் யூப்ரடீஸ் ஆற்றின் மேற்குக்கரையிலிருந்த சிஃபின் (Siffin) சமவெளியில் கி.பி. 657-ல் மோதின. அலியின் படை வெற்றி பெறும் தறுவாயில் எதிரிப்படைத்தலைவர் ஒரு சூழ்ச்சி செய்தார். குரான் வாசக ஏடுகள் இணைக்கப்பட்ட ஈட்டிகள் எதிர்த் தரப்பு வீரர்களால் திடீரென்று விண்ணில் உயர்த்தப்பட்டன. அச் சண்டைக்கு அமைதியாய்க் குரான் பெயரால் முடிவுகாண

விருப்பம் தெரிவிப்பதாக அந் நிகழ்ச்சி கருதப்பட்டது. அலிக்கும் முவாவியாவிற்கும் இடையே உள்ள வழக்கை நடுவர் தீர்ப்பிற்கு விட்டுவிடலாம் என்ற அடிப்படையில் போர் நிறுத்தம் ஏற்பட்டது.

அலி ஒருவரை நடுவராகவும், முவாவியா வேறொருவரை நடுவராகவும் குறிப்பிட்டு அவர்கள் முடிவை ஏற்க இசைந்தார்கள். அலி குறிப்பிட்ட நடுவர் அலியைப் பதவியிலிருந்து நீக்கி விட்டார். முவாவியா குறிப்பிட்டவர் அவரைப் பதவியில் அமர்த்தி விட்டார். அலியின் நடுவர் மற்ற நடுவரால் வஞ்சிக்கப்பட்டார் என்ற இச் செய்தி உமையடுகளின் பகைவர்களாகிய அப்பாசிடு பரம்பரையின் புனைவாய்க் கருதப்படுகிறது. பதவிப் போராட்டத்தை நடுவர் தீர்ப்பிற்கு விட்டுவிட இசைந்ததால் அலிக்கு அது பலவகையிலும் கேடாய் முடிந்தது. அவருடைய ஆதரவாளர்களில் பலர் அவருடைய பகைவர்களாக மாறிப் பெருந்தொல்லை தந்தார்கள். நடுவர்களை அமர்த்தியதால் ஆளுநராய் இருந்த முவாவியாவிற்கு எவ்வித இழப்புமில்லை. கலீபாவாயிருந்த அலியின் நிலைக்கு அவர் உயர்த்தப்பட்டதால், அலி போலி உரிமையாளர் (Pretender) நிலைக்குத் தாழ்த்தப்பட்டார். தான் கலீபா பதவிக்குப் போட்டியிடுவதாக வெளிப்படையாய்த் தெரிவிக்கக்கூடத் துணிவில்லாத முவாவியாவின் போலி உரிமைக் கோரிக்கையைத்தான் நடுவர் தீர்ப்பு பறிக்க முயன்றது; ஆனால், அலியின் கலீபாப் பதவியையே பறித்து விட்டது.

சிரியா நாட்டைத் தவிர ஏனைய இஸ்லாமிய நாடுகள் அலியின் தலைமையை ஏற்றுக்கொண்டன. முவாவியாவின் ஆள்கள் அலிக்கும் எகிப்திய ஆளுநருக்கும் ஐயுறவை உண்டாக்கிக் குழப்பம் விளைவித்தனர். எகிப்தை ஆண்ட ஆளுநரை அகற்றிவிட்டுத் திறமையற்ற ஒருவரை அப் பதவியில் அலி அமர்த்தினார். அதனால் எகிப்து நாட்டையும் இழக்க வேண்டி வந்தது. அரேபியாவும் பாரசிகப் பேரரசும் அலியின் ஆதிக்கத்திலிருந்தன. சிரியா, எகிப்து இரு நாடுகளிலும் முவாவியா ஆதிக்கஞ் செலுத்தினார். இந்தியாவில் ஆதிக்கஞ் செலுத்தும் நோக்கத்தோடு அலி அங்கு ஒரு படையை அனுப்பினார். அலி கொலையுண்ட பின் அப் படை திரும்பி விட்டது.

பள்ளிவாசலுக்குப் போய்க்கொண்டிருந்த அலி நஞ்சு தோய்த்த கொடுவாளால் கி. பி. 661-ல் கொல்லப்பட்டார். தனித்ததோரிடத்தில் அலி அடக்கஞ்செய்யப்பட்ட போதி

லும், அவருடைய கல்லறை புனிதப் பயணத்தலமாயிற்று. அலி யின் ஆதரவாளர்களாகிய ஷியாக்கள் அலியை அருட்தொண்டராகவும், அல்லாவின் வலியாகவும் (Wali) போற்றினர்கள். உயிருடன் இருந்த காலத்தைக்காட்டிலும் இறந்த பின் அலியின் செல்வாக்கு மிகுதியாயிற்று. ஒரு தலைசிறந்த அரபுப் பெருமகனிடம் இருக்க வேண்டிய உயர் பண்புகளாகிய வீரம், மதி நுட்பம், சொல்வன்மை, உண்மை நட்பு, பகைவர்களிடம் பெருந்தன்மை ஆகியவை அவரிடம் நிறைந்திருந்தன. ஒப்பற்ற உயர் குடிமகனுகவும், நயத்தக்க நாகரிகராகவும் அலி விளங்கினர். அரசியல் வல்லுநருக்கும் தலைவருக்கும் இன்றியமையாத சுறு சுறுப்பு, முன்னேக்கு, செயல்கனிவு, சூழலுக்கேற்ற திறமை அவரிடமில்லை. பரந்துபட்ட அரசினை ஆளத் தேவையான கீழ்த்தரமான முறைகளைக் கையாள அவருடைய பெருந்தன்மை இடந்தரவில்லை. உலக வாழ்க்கையில் தோல்விகண்ட அலிக்கு இறந்த பின் ஏற்பட்ட செல்வாக்கு, நபிநாயகத்தின் சக்திக்கு அடுத்த படியில் இருந்தது. ஆண்டுதோறும் முகரத்தின் பத்தாம் நாளன்று வெளிப்படுத்தப்படும் பேருணர்ச்சியே அலியின் செல்வாக்கிற்குப் போதிய சான்ருகும். அரபு மரபு வழி வந்த சாலமனுகக் கருதப்பட்ட அலியைப்பற்றிப் பாக்களும் பழ மொழிகளும் தோன்றின.

அலிக்குப் பிறகு கலீபா ஆட்சியில் குடியரசுப்பகுதி முடிவுற்றது. முதல் நான்கு கலீபாக்களும் இஸ்லாமிய மரபுக் கோட்பாட்டை உறுதியாய்ப் பின்பற்றியவர்கள். இரண்டாவது கலீபா ஆட்சியை நிறுவிய முவாவியா உலகியல் சார்ந்தவர். தனக்குப்பின் தன் மகனையே அப் பதவியில் அமர்த்தி ஒரு வம்சத்தைத் தொடங்கினர். கலீபா ஆட்சியில் மரபுவழி உரிமை புகுத்தப்பட்டது. அவ்வாறு ஏற்பட்ட முதல் வம்சம் உமையடுகளுடையதாகும்.

### ஆட்சிமுறை

அரேபியத் தீவக்குறையில் இஸ்லாம் அன்றி வேறு சமயம் அனுமதிக்கப்படலாகாது என்ற கொள்கையோடு, பழைய உடன்படிக்கைகளைப் புறக்கணித்துவிட்டு யூதர்களையும், கிறித்துவர்களையும் உமர் வெளியேற்றினர். அரபு முஸ்லிம்களின் நாட்டைச் சமய அடிப்படையில் போர் வீரர்களின் அரசாக ஆக்கிவிட உமர் திட்டமிட்டார். வேற்றினம் கலவாத அவ்வாட்சியில் அரபுக்கள் அல்லாதவர்களுக்குக் குடியுரிமை வழங்கப்படவில்லை. அரபுக்கள் அரபு நாட்டிற்கு வெளியே நில உடைமைக்காரர்களாகவோ, நிலத்தைப் பயிரிடுவோராகவோ

இருக்கலாகாது என்றும் விதிக்கப்பட்டது. புதிதாய் வென்ற நாடுகளில் அரபு வீரர்கள் பாசறைகளில், அல்லது புதிதாய் நிறுவிய பட்டணங்களில் வசித்தார்கள். தோற்ற மக்களிடம் இருந்த நிலம் பறிமுதல் செய்யப்படாமல் அவர்களே தங்கள் நிலத்தைப் பயிரிட்டுக்கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள்.

அக் குடிமக்கள் முஸ்லிம்கள் ஆன பிறகும் அரபுக்களோடு சமத்துவமாய்க் குடியுரிமை பெறவில்லை. திம்மிகள் (Dhimmis) நிலையிலிருந்த யூதர்கள், கிறித்தவர்கள், சபியன்கள் ஆகியோரின் உயிருக்கும் உடைமைக்கும் முஸ்லிம்கள் அளித்த பாது காப்பிற்காக அவர்கள் அரசிற்குக் கணிசமான கப்பங் கட்டினர் கள். அவர்கள் படையில் சேர்ந்து போர்ப்பணிசெய்ய வேண்டியதில்லை. திம்மிகள் தத்தம் சமயச் சட்ட ஆட்சியிலிருக்க அனுமதிக்கப்பட்டார்கள். முஸ்லிம் சமயத்திற்குச் சொந்தமான நிலத்திற்கு முஸ்லிம்கள் நிலவரி கொடுத்தார்கள். குடிமக்கள் முஸ்லிம்களாகிவிட்டால் ஆள்வரி முதல் எல்லா வரிகளிலிருந்தும் விடுபட்டார்கள். இஸ்லாமியர்கள் ஆள்வரிக்குப் பதிலாக ஏழை வரியாகிய சக்காத்தைத் தரவேண்டும். ஓய்வுகால ஊதியம் போன்ற நலன்களில் அவர்களுக்குப் பங்குண்டு.

பைசாண்டிய ஆட்சிமுறை சில மாற்றங்களுடன் சிரியாவிலும் எகிப்திலும் பின்பற்றப்பட்டது. பாரசிகப் பேரரசின் மாகாண ஆட்சி அமைப்பில் பெரும் மாற்றங்கள் செய்யப்படவில்லை. முதலிலிருந்தே ஒவ்வொரு மாகாணத்தின் பழைமையையும், மண்ணியல்பையும் ஒட்டியே அம்மாகாணத்தின் கப்பத் தொகை நிர்ணயிக்கப்பட்டது. ஜிசியா, கராஜ் என்ற இரு சொற்களும் பொதுவாய்க் கப்பம் என்ற பொருளிலேயே வழங்கின. ஜிசியா என்ற சொல் ஆள் வரியையும், கராஜ் நிலவரியையும் சுட்டத் தொடங்கியது உமையடு ஆட்சிக்காலத்தில்தான். நிலம், கால் நடைகள் முதலியவற்றிலிருந்து கிடைத்த பொருள்களையே நில வரியாகத் தவணைமுறையில் வசூலித்தனர். எகிப்து, பாரசிகம், சிரியா முதலிய நாடுகளில் நிலவரி பழைய விகிதப்படியே வசூலிக்கப்பட்டது. ஆளப்படுகிற மக்கள் மீது ஜிசியா விதிக்கும் வழக்கம் நபி காலத்திற்கு முந்தியே உரோமானியர்கள், பாரசிகர்களிடமிருந்தது. மக்களின் கீழ்நிலையைக் குறித்த ஆள் வரி, அவர்களுக்குப் படைப்பாதுகாப்பு அளிப்பதற்காகவே வாங்கப்பட்டது. பாதுகாப்பு அளிக்க முடியாத நிலையில் வசூலிக்கப்பட்ட ஜிசியா தொகை அம்மக்களுக்குத் திருப்பித் தரப்பட்டது. யார்முக் சண்டைக்கு முன்னால் டமஸ்கஸ் போன்ற இடங்கள் ஆள்வரித்தொகையைத் திரும்பப்பெற்றன.

போர்ப்பணி செய்த திம்மிகளிடம் ஜிசியா வசூலிக்கும் வழக்க மில்லை. ஏழைகள் ஒருதினாரும், இடைத்தரத்தினர் இருதினார் களும், செல்வர்கள் நான்கு தினார்களும் ஆள் வரியாய்க் கொடுத் தார்கள். படைச்செலவிற்காக ஆளப்பட்ட மக்களிடமிருந்து வேறு வகையிலும் பொருளை வலிந்து தண்டினார்கள். பெண்கள், குழந்தைகள், பிச்சைக்காரர்கள், பைத்தியக்காரர்கள், தீராத நோயாளிகள், முதியோர், துறவிகள் ஆகியோர், அவர்களுக் கென்று தனி வருமானமிருந்தாலன்றி, மேற்கண்ட வரிகளி லிருந்து விலக்களிக்கப்பட்டார்கள். கலீபா ஆட்சியில் தினாரே தங்கச் செலாவணியின் மூல அலகாகும். உமர் காலத்தில் ஒரு தினார் பத்து டர்ஹாம்களுக்குச் சமமாயிருந்தது.

போரில் கைப்பற்றப்பட்ட இயங்குடைமைகளும், சிறைப் படுத்தப்பட்டவர்களுமே, கொள்ளைப் பொருள்களாகக் கருதப் பட்டுப் போர் வீரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. புதியதாய் வென்ற நாடுகளின் நிலத்தில் அவர்களுக்குப்பங்கில்லை. நிலம் முஸ்லிம் சமுதாயத்தின் உடைமையாகும். அந்நிலத்தைப் பயிரிடுவோர் முஸ்லிம்களாயினும் நிலவரி கொடுக்க வேண்டும். அரசுக்கென ஒதுக்கப்பட்ட நிலங்கள், பிரபுக்களால் கைவிடப் பட்ட நிலங்கள், எதிர்த்தவர்கள், கலகஞ்செய்தவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்கள், யாரும் உரிமை கொண்டாடாத நிலங்கள், காடுகள் ஆகியவை அரசுக்குச் சொந்தமான நிலங்கள் ஆகும். பாரசிகத்தில் கோயில் நிலங்கள், பாட்டை களுக்கென ஒதுக்கியிருந்த நிலங்கள் அரசிற்கு உரிமையாக்கப் பட்டன. அரசு நிலங்களின் வருமானம் பொது நலத்துறைப் பணிகளுக்குச் செலவழிக்கப்பட்டது. உமர் காலத்தில் இராக் நிலம் அளவாய்வு செய்யப்பட்டது; முறைகேடான வரிகள் நீக்கப்பட்டன.

சிறப்பாய் ஆட்சி புரிய விரிவடைந்திருந்த பேரரசினை, மக்கா, அல்-மதினா, சிரியா, அல்-ஜாசிரா (மெசொபொட்டேமியா) அல்-பஸ்ரா, அல்-கூஃபா, எகிப்து, பாலஸ்தீனம் என எட்டு மாகாணங்களாய்க் கலீபா உமர் பிரித்தார். வாலி, அமீல், காதி, படைத்துறைச் செயலர் ஆகியோர் மாகாண ஆட்சியமைப்பில் அதிகாரிகளாய்ப் பணிபுரிந்தனர். ஒவ்வோர் மாகாணத் தலை நகரிலும் அரசாங்க மனையும், நிரந்தரத் தலைமைச் செயலகமும், கருவூல மனையும், சிறைச்சாலையும் கட்டப்பட்டன. மாகாணங் கள் மாவட்டங்களாய்ப் பிரிக்கப்பட்டு, மாவட்ட அதிகாரிகள் மாகாண ஆளுநருக்குக்கீழ்ப் பணி புரிந்தார்கள். அவர்களை மூதலாம் உமர் நன்கு கண்காணித்தார். வாலி, அமீர் இருவரும் பதவியேற்றதும் தங்களுடைய சொத்து விவரம் தெரிவிக்க

வேண்டும். அவ்வுடைமை அளவு கடந்து அதிகரிக்குமாயின் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. கைக்கூலி வாங்கும் நிலையில் அலுவலர்களின் நிலை இருக்கக்கூடாது என்பதற்காக அவர்களுக்கு உயர்ந்த ஊதியம் அளிக்கப்பட்டது.

போரில் கிடைத்த கொள்ளைப்பொருள்கள், ஆள் வரி (ஜிசியா), அரசாங்க நில வருமானம், நிலவரி (கராஜ்), சுங்க வரி, ஏழைகளுக்கென வசூலிக்கப்பட்ட தொகை (சக்காத்); தன்னிச்சையாய்த் தரப்பட்ட நன்கொடை (Sadaqah) ஆகியவையே அரசின் வருவாயாகும். போரில் கிடைத்த கொள்ளைப் பொருள்களில் ஐந்தில் நான்கு பங்கு வீரர்களுக்கும், ஒரு பங்கு அரசிற்கும் கிடைத்தன. அரசிற்குக் கிடைத்த அப்பொருள் நபியின் உறவினர்கள், ஏழைகள், அநாதைகள், கால்நடை வழிப் போக்கர்கள் முதலியவர்களுக்குப் பயன்பட்டது. வெளிநாடுகளில் முஸ்லிம் வணிகர்களிடமிருந்து வணிகச்சரக்கின் மதிப்பீட்டின் மீது பத்து விழுக்காடு சுங்கவரி வசூலித்தது போல், அயல் நாட்டு வணிகர்களிடம் அதே சதவிகிதம் உமரும் வசூலித்தார். முஸ்லிம்களுக்குச் சொந்தமான நிலம், ஒட்டகம், குதிரை, ஆடு, வணிகப் பொருள், தங்கம், வெள்ளி ஆகியவற்றின் மதிப்பீட்டில் நாற்பதில் ஒரு பங்கு ஏழைகளுக்கெனச் சக்காத்தாக வசூலித்தார்கள்.

வரிகள் வாயிலாக அரசாட்சிக்கு வருவாய் வரத்தொடங்கியதும், வருமான, செலவினங்களை ஒழுங்குசெய்ய உமர் பாரசிக முறையைப் பின்பற்றி வரவு செலவினங்களைக் காட்டும் பதிவேடுகளைத் தயாரிக்கத் திவான் (Diwan) என்ற நிதி நிறுவனத்தை ஏற்படுத்தினர் ஏழாம் நூற்றாண்டில் பெரும்பாலான நாடுகளில் படைவீரர்களுக்கு நிலமானியம் வழங்குவதுதான் வழக்கமாயிருந்தது. ஆனால், உமர் வீரர்களுக்கு ஒழுங்காய் ஊதியம் தர ஏற்பாடு செய்தார். படைவீரர்கள் போக்குவரவிற்காகவும், பயணிகள் வசதிக்காகவும் பாட்டைகள் அமைத்து அவற்றின் இருமருங்கிலும் நிழல்தருமரங்களை வளர்த்தார்கள்; பாலங்கள் கட்டினார்கள்; புதிய கேணிகள் தோண்டப்பட்டன; பழைய கிணறுகள் துப்புரவு செய்யப்பட்டன; ஆங்காங்கு பயணிகள் தங்க இல்லங்கள் கட்டப்பட்டன. பெரிய நகரங்களில் வாழும் மக்களுக்குக் குடி தண்ணீர் வசதிக்காகவும், பாசனத்திற்காகவும், கலஞ்செலுத்தவும் சிறியதும் பெரியதுமாய்ப் பல கால்வாய்கள் வெட்டப்பட்டன.

அரபுக்கள் அனைவருமே அரபு நாட்டு வீரர்கள் ஆவார்கள். அல்-மதீனாவில் ஆட்சிசெய்த கலீபாவே அப்படையின் உயர்

தலைவர் ஆவார் அவருடைய ஆணையைத் தாங்கிச் சென்றவர்கள் தளகர்த்தர்களே. அரபுப் படையின் வலிமை அவர்களின் சிறந்த போர்க் கருவிகளிலோ, அமைப்பு முறையிலோ இருக்க வில்லை; அதன் தலைவர்களின் மனவுறுதியிலும், கட்டுப்பாட்டமைதியிலுமே இருந்தது. அதற்குச் சமயம் பெருமளவு காரணமாயிருந்தது. பாலைவன வளர்ப்பு, துன்பங்களைத் தாங்கும் ஆற்றலை அவர்களுக்கு அளித்தது; ஒட்டகங்கள் அவர்கள் விரைந்து இயங்க உதவின. ஒரு படையை நடுப்பகுதி, இரு பக்கஅணிகள், முன்னணி, பின்னணியெனப் பாகுபாடு செய்யும் பைசாண்டியப் பாரசிகப் பழக்கத்தை முகம்மதுவின் காலத்தில் முஸ்லிம்கள் அறிந்திருந்தார்கள். பக்க அணிகளில் குதிரைப்படை போரிட்டது. காலாள்படை வில், அம்பு, கவண், வாள், கேடயம் முதலிய கருவிகளைப் பயன்படுத்திற்று. பிற்காலத்தில் அபிசினியாவிலிருந்து வந்த ஈட்டி குதிரைப்படையின் சிறந்த கருவியாயிற்று. அரபுக்கள் பைசாண்டியர்களைவிட இலேசான கவசம் அணிந்தனர். பாரசிகப் பைசாண்டிய வீரர்களின் ஊதியத்தைக்காட்டிலும் அரபு வீரன் அதிக ஊதியம் பெற்றான். அவனுக்குக் கொள்ளைப்பொருளிலும் பெரும் பங்குண்டு. படைப்பணி பெருந்தன்மையான தொழிலாயிருந்ததோடு, ஆதாயமிக்கதாயும், மகிழ்ச்சியூட்டுவதாயுமிருந்தது. ஒவ்வொரு அரபுக்குடும்பும் தன் கொடியோடு தனிப் பிரிவாய்ப் படையில் பங்குபெற்றது. நபிநாயகத்தின் கொடியைக் கழுகு அலங்கரித்தது. போர் தொடங்குமுன் இருதரப்பிலிருந்தும் தனி வீரர்கள் முன்வந்து அறைகூவிச் சண்டைக்கு அழைப்பார்கள்.

தொடக்கக் காலத்தில் நபிநாயகமே படைக்குத் தலைமை தாங்கிப் போரில் வெற்றிபெற்றார். பேரரசு ஒன்பது படை வட்டங்களாய்ப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு வட்டத்திலும் 4000 குதிரைகளுக்குக் கொட்டிலும் தளவாடங்களும் இருந்தன; போர் வீரர்களுக்குக் குடியமைப்பு வசதி அளிக்கப்பட்டது. உயர் சாதிக் குதிரைகளை வளர்க்க வழிவகை செய்திருந்தனர். ஒவ்வொரு வீரனும் தொடக்கத்திலேயே உயர்ந்த ஊதியம் பெற்றான். அவனுக்கு இலவசமாய உணவு, உடை, காலணி முதலியன தரப்பட்டன. காலாள்படை, குதிரைப்படை, விற்படை, ஒற்றர்கள், ஊழியப்பிரிவு எனப் படையில் பல பிரிவுகளிருந்தன. போரில் எறிபடைப் பொறிகளையும், முற்றுகை இயந்திரங்களையும் பயன்படுத்தினார்கள்.

தொடக்கக்காலத்தில் நாட்டை வென்ற படைத் தலைவரே கொள்கைத் தலைவராகவும், நடுவராகவும் இருந்தார். வென்ற

நாடுகளில் நடுவர்களை முதன் முதலில் அமர்த்திய பெருமை உமருக்கே உரியதென அல்-பாலாதூரி என்ற வரலாற்றாசிரியர் கூறுகிறார். குற்றஞ் செய்தவர்களை நாடு கடத்தித் தண்டிக்கும் முறையையும் உமரே ஏற்படுத்தினார். வழக்குகளைக் கேட்டு நீதி வழங்க மாகாணங்களில் காதிகள் அமர்த்தப்பட்டார்கள். நீதி வழங்குவதில் அவர்கள் ஆளுநர்களுக்குக் கட்டுப்பட்டவர்களல்லர். நீதி மன்றங்களில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றி விசாரிக்கப்பட்டார்கள். தாம் இழந்த கவசத்தைப் பெற அலி வழக்கு தொடுத்தபோது குற்றஞ் சாட்டப்பெற்றவரோடு சமமாய் அவரும் காதியின் முன்பு நின்றார். இராக் காவலுக்கு உமர் ஏற்பாடு செய்தார். இராக்காலங்களில் காவலர்கள் ஊர் சுற்றிவந்தனர். காவல்படை, கலீபா அலி காலத்தில் நிறுவப்பட்டது. காவலர்கள் குற்றவாளிகளைத் தேடிப்பிடித்து வழக்குத் தொடுத்தார்கள். அங்காடிகள், அளவைகள், எடைகள் முதலியவற்றைக் கண்காணித்து நெறிப் படுத்தினார்கள்.

இவ்வாறு நாற்பது ஆண்டுகளுக்குள் மாகாண அரசுகளும், மத்திய அரசும் வளர்ந்து, மிகச் சிறந்த ஆட்சிமுறை படிப் படியாய் உருவாயிற்று. அரபு ஆட்சி அமைப்புகளோடு அயல் ஆட்சியமைப்புகள் சிறப்பாக இணைக்கப்பட்டு இஸ்லாமிய ஆட்சிமுறை மலர்ந்தது. உலக வரலாற்றிலேயே முதன் முறையாக அரபு நாட்டில் உள்ள அனைவருக்கும் உணவு, உடை அளிக்கும் பொறுப்பினை அரசு ஏற்றுக்கொண்டதைக் காண்கிறோம். எச் செலவும் போக எஞ்சிய வருவாயை முஸ்லிம் களுக்குப் பகிர்ந்தளித்தனர். அவ்வாறு செய்ய ஆள்தொகைக் கணக்கு இன்றியமையாததாயிற்று. அரபு நாட்டில் புதிதாய்ப் பிறந்த குழந்தையும் அவ் வருவாய்ப் பங்கீட்டில் தனக்கு உரிய பங்கினைப் பெற்றது. அக் குடிக்கணக்குப் பட்டியலில் நபி யவர்களின் மனைவி ஆயிஷா முதலிடம் அளிக்கப்பட்டு ஆண்டிற்கு 12,000 டர்ஹாம்கள் உதவித் தொகையாய்ப் பெற்றாள். முகம்மது வின் குடும்பத்தினருக்குப் பிறகு, மதீனாவில் குடியேறிய மக்கா வாசிகளுக்கும், நபிக்கு ஆதரவளித்த மதீனா மக்களுக்கும், சமயத்தைப் பின்பற்றியதில் அவர்கள் காட்டிய முந்துநிலையை ஒட்டி உதவிப்பணம் ஒதுக்கப்பட்டது. இப் பிரிவில் ஒவ்வொரு வரும் சராசரி 5000 அல்லது 4000 டர்ஹாம்கள் ஆண்டொன்றிற்குப் பெற்றார்கள். அவரவர்களுடைய குரான் அறிவிற்கும், படைப் பணிக்கும் ஏற்ப அரபுக்கள் வரிசைப் படுத்தப்பட்டு உதவித் தொகை அளிக்கப்பெற்றார்கள். ஆண் டிற்கு 500 முதல் 600 டர்ஹாம்கள் அரபு வீரனுக்குக் கிடைத்தது.

பெண்களும், குழந்தைகளும் பதிவேட்டில் சேர்க்கப்பட்டு 200 முதல் 600 டர்ஹாம்கள் பெற்றனர். வேறெங்கும் காணமுடியாத இப் பங்கீட்டு முறை சிறிதுகாலந்தான் நல்லமுறையில் நடைபெற்றது.

உமர் ஆட்சி 'அமைப்பு அரபுக்களுக்கு ஆதிக்கத்தையும், அரபல்லாத முஸ்லிம்களுக்கும், முஸ்லிம் ஆகாதவர்களைக் காட்டிலும், ஏற்றத்தையும் அளித்தது. ஆனால், இச் செயற்கை நிலை நீடிக்கவில்லை. உதுமான் ஆட்சிக் காலத்தில் புதிதாய் வென்ற நாடுகளில் அரபுக்களுக்கு நில உடைமையுரிமை அளிக்கப்பட்டது.

கலீபா சமய அடிப்படையில் தெரிந்தெடுக்கப்பட்ட உலகியல் தலைவரே. அவர் சமயப் பாதுகாவலரும் ஆதரவாளருமாவார். குரானுக்கும், நபியின் மரபுகளுக்கும் முரண்பாடில்லாத கலீபாவின் ஆணைகளே முஸ்லிம்களைக் கட்டுப்படுத்தும். சமய அறிஞர்களைக் கலவாமல் அவர் எதையும் செய்ய முடியாது. முக்கியமான தோழர்களைக் கலந்துகொண்டே அபூபக்கரும் உமரும் செயல்பட்டார்கள். மூத்தோர் அவையில் கருத்து வேறுபாடு காணப்படின் உமர் முஸ்லிம் பொதுஅவையைக் கூட்டிக் கருத்தறிந்தார். பொதுஅவை அவர் ஆட்சியில் இருமுறை கூட்டப்பட்டது. பேரரசுப் பணிகளில் உதுமான் ஆளுநர்களைக் கூட்டிக் கருத்தறிந்தார்.

இமாம் என்ற நிலையில் வழிபாட்டுத் திருக்கூட்டத்திற்குத் தலைமை வகித்ததுடன் கலீபா வெள்ளிக்கிழமைச் சொற்பொழிவையும் (Khutbah) ஆற்றினார். குத்பாவில் கலீபாவின் பெயர் குறிப்பிடும் வழக்கம் ஏற்பட்டது. அவர் பெயர் நாணயங்களிலும் பொறிக்கப்பட்டது. கலீபாப் பதவியினும் இமாம் பதவியை ஷியாப் பிரிவினர் உயர்வாய்க் கருதினார்கள், ஆண்டவன் ஆணைப்படி தம் பின்தோன்றலாய் முகம்மதுவால் குறிப்பிடப்பெற்ற அலியும் அவர் குடும்பத்தினருமே அப் பதவிக்கு உரியவர்கள் என ஷியாக்கள் நினைத்தார்கள்.

அமீர் என்ற முறையில் கலீபா, நபியை நம்பியோரின் ஆணை அதிகாரியாவார். சன்னிப் பிரிவினர் கொள்கைப்படி கலீபா சமயத்தையும் நாட்டையும் காப்பதுடன், ஆட்சி அலுவர்களை அமர்த்தி வரி வசூலிக்கவேண்டும். குற்றவாளிகளைத் தண்டித்து நீதி வழங்கவேண்டும். படைவலிமையைப் பயன்படுத்திக் கலீபாக்கள் இஸ்லாமிய ஆதிக்கப் பரப்பினை விரிவாக்கினார்கள்; முரண் சமயக் கருத்துகளை அடக்குவதையும், சமயத்தை

ஏற்காதவர்களோடு போரிடுவதையும் தங்கள் கடமைகளாய்க் கொண்டார்கள். முகம்மதுவின் ஆட்சிக்கோல், முத்திரை, மிதியடி, தலைமுடி, பல் முதலியன கலீபாவின் பாதுகாப்பில் இருந்தன. கிறித்தவ உலகிற்குப் போப்பைப்போல், முஸ்லிம் உலகிற்குக் கலிபா சமயத் தலைவர் என்ற எண்ணம் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதிவரையில் உலகில் ஏற்படவில்லை.

வளமிக்கப் பிறைவட்ட நாட்டினையும், பாரசிகம், எகிப்து முதலிய நாடுகளையும் வென்றதால், பெரும் நிலப்பரப்புகளைக் கைப்பற்றியதன்றி, உலகிலேயே மிகப் பழம் பெரு நாகரிகங்கள் தழைத்த நாடுகளுக்குப் பாலைவன மக்களாகிய அரபுக்கள் உரிமையுடையவர்களானார்கள்; அந் நாகரிகங்களின் வாரிசுதாரர்களுமாகிவிட்டார்கள். கலை, கட்டடம், இலக்கியம், அறிவியல், மருத்துவம், தத்துவம், ஆட்சிமுறை முதலிய துறைகளில் கற்றுக் கொள்ள அரபுக்களுக்கு மிகுந்த வாய்ப்பேற்பட்டது. மிகுந்த கலை, அறிவு-ஆர்வத்தோடும், தங்கள் ஆட்சிக்குட்பட்ட குடிமக்களின் ஒத்துழைப்போடும், அவர்களின் கலை, அறிவுச் செல்வத்தையெல்லாம் அரபு முஸ்லிம்கள் தங்களுக்கேற்றவாறு மாற்றித் தங்களுடையதாக்கிக்கொண்டார்கள். டீசிஃபன், டமஸ்கஸ், ஜெருசலம், அலெக்சான்டிரியா போன்ற நகரங்களில் வாழ்ந்த கட்டடக் கலைஞன், கைவினைஞன், பொற்கொல்லன், ஆக்கத்தொழிலாளி ஆகியோரின் உழைப்பையும், சாதனைகளையும் கண்டு, வியந்து பாராட்டி அவற்றை அரபுக்கள் பின்பற்றினார்கள். நாடுகளை வென்ற அரபுக்களை, அந் நாடுகளின் அறிவும் கலையும் வென்றுவிட்டன.

ஆதலால் அரபு நாகரிகம் பிறப்பிலோ, மூலாதாரமான அமைப்பிலோ, இனக்கூறுகளிலோ, அரபியருடையதல்ல. மொழித்துறையிலும், ஓரளவு சமயத்துறையிலும்மட்டுமே அரபுக்களுக்குப் பங்கிருந்தது. கிரேக்க, அரமேயிக், பாரசிக நாகரிகங்களை அடிப்படையாய்க்கொண்டு வளர்ந்த அரபிய முஸ்லிம் நாகரிகம் அரபுமொழி வாயிலாக வெளிப்பட்டது. அசிரியர்களும், பாபிலோனியர்களும், பினிசியர்களும், ஈபுருக்களும் பிறைமதி நாட்டில் வளர்த்த பழைய செமிட்டிக் நாகரிகத்தின் தொடர்ச்சியே அரபு நாகரிகம். மேலை ஆசியாவின் நண்ணிலக்கடல் நாகரிகத்தின் ஒருமைப்பாட்டின் உச்ச நிலையை அரபு நாகரிகத்தில் காணலாம். கலீபா ஆட்சிக்காலம் முழுவதும் சிரியா, பாரசிகம், எகிப்து ஆகிய நாடுகளின் மக்கள் அறிவு கொளுத்துவதில் முன்னணித் தொண்டர்களாயிருந்தார்கள்.

# 4. உமையடு கலீபாக்களின் ஆட்சி


கலீபா அலிக்குப்பிறகு அவருடைய மூத்த மகனுகிய அல்-ஹாசனைக் கலீபாவாய் அல்-இராக் ஏற்றுக்கொண்டது. ஆனுல், சிரியா நாட்டுத்தலைவரும் கொலை செய்யப்பட்ட உதுமானுக்காக அலியோடு போராடியவருமாகிய முவாவியா கலீபாவாக ஜெருசலத்தில் அறிவிக்கப்பட்டார். எகிப்து அவரை ஆதரித்தது. மக்காவும் மதீனுவும் அரை குறை ஆதரவைத்தான் அவருக்கு அளித்தன. அரியணையைக் காட்டிலும் அந்தப்புரத்தை நன்கு அறிந்த அல்-ஹாசன் தம்மிலும் திறமைமிக்க முவாவியாவிற்கு ஆட்சியுரிமையை விட்டுக்கொடுத்துவிட்டு அவர் அளித்த பெரும்பொருளைப் பெற்றுக் கலீபாப் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். அரைக்கோடி டர்ஹாம்களையும் பாரசிகத்தில் ஒரு மாவட்ட வருவாயை வாழ்நாள் முழுவதற்குமாய்க்கேட்டு அல்-ஹாசன் வாங்கிக்கொண்டார். அவருடைய இளவல் அல்-ஹுசெயின் முவாவியாவின் ஆட்சிக்காலம் முடியும் வரை மதீனுவில் அமைதியாய் வாழ்ந்து வந்தார். முவாவியாவிற்குப் பிறகு, அவர் மகன் யாசிதைக் கலீபாவாய் ஏற்க மறுத்து, ஏற்கனவே தம்மைக் கலீபாவாய் அறிவித்திருந்த இராக் மக்களின் அழைப்பை ஏற்று, அல்-ஹுசெயின் ஒரு சில ஆதரவாளர்களோடு அல்-கூஃபாவை நோக்கிப் புறப்பட்டார். அல்-கூஃபாவிற்கு வடமேற்கில் அர்-கர்பாலா என்ற இடத்தில் கி.பி. 680 ஆம் ஆண்டு முகரம் திங்கள், பத்தாம் நாளன்று உமர் என்ற தளபதியின் தலைமையில் கூடிய நாலாயிரம் வீரர்கள் அடிபணிய மறுத்த அல்-ஹுசெயினையும் அவரைச்சார்ந்த இருநூறு ஆதரவாளர்களையும் கொன்று குவித்தனர். நபியவர்களின் பெயரன் பல விழுப்புண்களுடன் களத்தில் மடிந்தார். கர்பாலாவில் உயிர் துறந்த ஹுசெயின் நினைவாக முகரத்தின் முதல் பத்து நாள்களை ஷியா முஸ்லிம்கள் துயர நாள்களாய்க் கொண்டாடுவதோடு அன்னுரின் வீரப்போராட்டத்தைச் சமய நாடகமாய்த் தீட்டி முஸ்லிம் உலகிற்கு அளித்துள்ளனர். அல்-ஹுசெயினின் குருதி ஷியா சமயத்தின் வித்தாயிற்று. அலி குடும்பத்தினரையே ஷியாக்கள் இமாம் பதவிக்குரியவர்களாய்க் கருதினுர்கள். அல்-ஹுசெயின் கொலைப்பழி துடைக்க எழுந்த போர்க்குரல் பின்னுல் உமையடு பரம்பரையின் அழிவிற்கு ஒரு காரணமாயிற்று. முறையாய்ப் பதவியிலமர்ந்த கலீபா யாசிதை எதிர்த்த குற்றத்திற்காக அல்-

ஹுசெயின் தண்டிக்கப்பட்டார் எனச் சன்னி முஸ்லிம்கள் வாதிட்டார்கள். முஸ்லிம்களிடையில் ஏற்பட்ட இச்சன்னி-ஷியா பிளவு நீடித்து நிலைத்துவிட்டது.

உமையடு வழிவழி மரபிற்கு ஏற்பட்ட எதிர்ப்பு அல்-ஹுசெயினோடு அடங்கிவிடவில்லை. அலியோடு போட்டியிட்டு ஓய்ந்திருந்த அப்துல்லா இபின் அல்-சுபேயிர் வலிவுள்ள முவாவியா இறக்கும் வரை மதீனாவில் அடங்கியிருந்தான். சிற்றின்பத்தில் திளைத்த யாசிது கலீபாவானவுடன் அல்-சுபேயிர் ஹுசெயினைத் தூண்டி விட்டுவிட்டு அகால முடிவிற்கு அவரை ஆளாக்கினான். பிறகு அவனையே அல்-ஹிஜாஸ் கலீபாவாய் அறிவித்தது. கிளர்ச்சிக் காரர்களை ஒடுக்க யாசீது அனுப்பியபடை அவர்களைத் தோற்கடித்து, மதீனாவைச் சூறையாடிற்று. அல்-சுபேயிர் காபாவில் தஞ்சம் புகவே அப்பள்ளிவாசல் முற்றுகை யிடப்பட்டுக் காபா தீக்கிரையாயிற்று. அங்கிருந்த கருப்புக்கல் மூன்று துண்டுகளாகிவிட்டது. இப்போர் முடிவிற்குள் யாசீது இறந்து விட்டார். அலிக்கும் முவாவியாவிற்கும் நிகழ்ந்த மரபு வழிச் சண்டையை ஒத்த இந்த இரண்டாவது உள்நாட்டுப்போர் தற்காலிகமாய் நிறுத்தப்பட்டது. பிறகு நிகழ்ந்த போரில் உதுமானின் உறவினரும் அதிகாரியுமாயிருந்த மார்வான் கலீபா வாகி உமையடு மரபின் மார்வானியக்கிளை மரபைத் தோற்று வித்தார். யாசீதின் மகன் இரண்டாம் முவாவியா மூன்று மாதங்கள் கலீபாவாயிருந்து, நோய்வாய்ப்பட்டு வாரிசின்றி இறக்கவே, முதலாம் மார்வான் (683-685) கலீபாவானார். அபூ பக்கரின் பெண் வழிப்பெயரின் அல்-சுபேயிர் போட்டிக் கலீபா வாயிருந்து கடும்போரிட்டுக் கி.பி. 692-ல் மடிந்தான். உதுமான் கொலைக்குப்பின் அலி காலத்தில் தொடங்கிய கலவரங்கள் முப்பதாண்டுகளுக்கு மேல் நீடித்து முடிவுற்றன. அயல் நாடு களை அரேபியா ஆட்டிப்படைத்த வரலாறு முடிவுற்றது. வெளி யுலகம் அரேபியாவை உருவாக்கிய வரலாறு தொடங்கிற்று.

**முவாவியா (கி.பி. 661-680)**

உள்நாட்டுப் பகைவர்களை முறியடித்தபின் முவாவியாவின் முயற்சி வடமேற்கில் இஸ்லாமியப் பகைவர்களாயிருந்த பைசாண்டியர்கள் பக்கம் திரும்பியது. சிரியாவை வென்றபின் ஏக்கரில் (Acre) இருந்த பைசாண்டியக் கப்பல் கட்டுந்துறைகளை யும் படைக்கலச் சாலைகளையும் பயன்படுத்தி முஸ்லிம் கப்பல் படையை முவாவியா உருவாக்கியிருந்தார். இஸ்லாமியக்கடல் படை வரலாற்றில் கப்பல் கட்டவும், பழுதுபார்க்கவும் பயன் பட்ட சிரியா நாட்டுக் கப்பல் துறைமுகங்களை, எகிப்தில் இருந்த வற்றிற்கு அடுத்தபடியாகச் சொல்லலாம். பிற்காலத்தில் உமை



கலீபாக்களின் பேரரசு: கி.பி.750

யடு மரபினரால் டயர் (Tyre) பட்டினத்திற்கு மாற்றப்பட்ட கப்பல் துறை, அப்பாசிடுகளின் காலம் வரை அங்கிருந்தது. கடல் பயணத்தில் பழக்கப்பட்ட கிரேக்கச் சிரியர்களே முஸ்லிம் கடல்படை அதிகாரிகளாய் இருந்திருக்க வேண்டும். சைப்பிரஸ் தீவினைக் கைப்பற்ற முவாவியா வகுத்த திட்டத்தைக் கலீபா உமர் அனுமதிக்காததால் கலீபா உதுமான் ஆட்சியில் அது நிறைவேறியது. கலீபா ஆட்சிக்குட்பட்ட நாடுகளை வலிவு படுத்திய தோடு முவாவியா அவற்றை விரிவும் படுத்தினர். வட ஆப்பிரிக்காவில் முஸ்லிம் ஆதிக்கம் மேலும் விரிவடைந்தது. கிழக்கில் அல்பஸ்ராவிலிருந்து சென்ற முஸ்லிம் படை 663-671 ஆம் ஆண்டுகளில் கொரசான் முழுவதையும் பிடித்துக்கொண்டது. ஆக்சஸ் ஆற்றிற்கு அப்பால் தொலைவிலிருந்த புக்காரத் தாக்கப் பட்டது. வழிவழி மரபினைத் தொடங்கிய முவாவியா கலீபா ஆட்சியை இரண்டாம் முறையாக நிறுவினர். ஆட்சியைக் கைப் பற்றுவதற்கும், இஸ்லாமிய ஆதிக்க விரிவிற்கும் கிறித்தவர்களே பெரும்பாலோராய் இருந்த சிரியா மக்களும், அந்நாட்டில் குடியேறிய அல்யாமனைச் சேர்ந்த அரபுக்களும், முவாவியாவிற்குப் பெரிதளவு உதவினார்கள். தங்கள் புதிய தலைவரிடம் சிரியா நாட்டினர் மிகுந்த பற்றுடையவராயிருந்தனர். சிரியாப் படையைச் சிறந்த கட்டுப்பாட்டுடன் அமைத்து, ஆதிக்கவிரிவிற்கான திட்டங்களை வகுத்து, நிறைவேற்றுவதில் முவாவியா இணையற்றவராய் விளங்கினர். குலமரபு அடிப்படையில் அமைந்திருந்த படை புது முறையில் மாற்றியமைக்கப்பட்டது. வழக்கமான ஆட்சி முறைகளைவிடுத்துப் பைசாண்டிய அமைப்பு முறையில் திடமான அரசு ஏற்படுத்தப்பட்டது. பெருங்குழப்பத்திலிருந்த சமுதாயத்தை அவர் ஒழுங்கும் கட்டுப்பாடுமுள்ளதாய் உருவாக்கினர். இஸ்லாமிய வரலாற்றில் பதிவேட்டு அலுவலகத்தை முதன் முறையாய் ஏற்படுத்தினர்; அஞ்சல் துறையில் அக்கறை காட்டினர். பரந்துபட்ட அரசின் பல்வேறு பகுதிகளையும் இணைக்கப்பட்ட அஞ்சல் துறை அப்துல் மாலிக் ஆட்சியில் சிறந்த அமைப்பாய் வளர்ந்தது. நில நடுக்கத்தால் இடிந்த கிறித்தவக் கோயிலை எடீசாவில் கலீபா புதியதாய்க் கட்டிக் கொடுத்தார். மாகாண நிதித்துறைத்தலைவராகவும் அரசவைக் கவிஞராகவும் கிறித்தவர்கள் பணிபுரிந்தார்கள். கிறித்தவர்களின் சமயச் சச்சரவுகளையும் கலீபா தீர்த்து வைத்தார்.

தம்முடைய மகன் யசீதைத் தமக்குப்பின் கலீபாப் பதவிக்குக் குறிப்பிட்டு, மாகாணங்களிலிருந்து யசீதை ஆதரிக்குந் தூதுக்குழுக்களை வருமாறு செய்து, முவாவியா கி.பி. 676-ல் தம்முடைய புதிய திட்டமாகிய வழிவழி மரபாட்சிக்கு ஆதரவு

திரட்டினர். இம்முறை அரபு மரபிற்கும் முஸ்லிம் வழக்கத்திற்கும் மாறுபட்டது. இது உரோமானியப் பழக்கமாகும். முவாவியாவைப் பின்பற்றிக் கலீபாக்கள் தம்முடைய மக்கள் அல்லது உறவினர்களில் ஆட்சித்திறம் பெற்ற ஒருவரைத் தம்முடைய வாரிசாக அறிவித்து, முதலில் தலைநகரத்தின் ஆதரவையும் பிறகு பேரரசின் முக்கிய நகரங்களின் ஆதரவையும், சூளுறவு வாயிலாக, முன்கூட்டியே பெறும் வழக்கம் ஏற்பட்டது.

எகிப்து, அல்-கூஃபா, அல்-பஸ்ரா ஆகிய மாகாணங்களில் ஆளுநர்களும் முவாவியாவும் அக்கால அரபுக்குலத்தின் நான்கு அரசியல் மேதைகளாவார்கள். ஆட்சித்துறையில் முவாவியாவின் வெற்றிக்கு அவர்கள் பெரிதும் உதவினார்கள். ஆட்சித் திறமையிலும், சூழ்ச்சி நயத்திலும், மற்ற கலீபாக்களை முவாவியா விஞ்சியிருந்தார். இன்றியமையாத காலங்களில் மட்டுமே படை வலிமையைப் பயன்படுத்தி, மற்ற நேரங்களில் அமைதியான முறைகளையே கையாளும் அரியதிறம் முவாவியாவின் தனிச் சிறப்பாகும். குடிமக்களுக்கும் தமக்கும் நல்லுறவு கெடாதவாறு சூழ்நிலைக்கேற்ப நடந்துகொண்டார். ஆதிக்கத்தை நிறுவவும், வலுப்படுத்தவும் எக் குற்றத்தையும், ஏன் வஞ்சக மாய்க் கொலை செய்யவும், அவர் பின்வாங்கவில்லை. அலுவலர்களை எடைபோடுவதிலும் சூழ்நிலையைச் சீர்தூக்கிப் பார்ப்பதிலும் இணையற்ற முவாவியா சூழ்ச்சித் திறம்படைத்த அரசியல் விரகராவார். பகைவர்களை அவர் எந்த விலைகொடுத்தும் வாங்கி விடுவார்.

அரபுக்கள் அரசப் பட்டத்தையே அருவருப்போடு நோக்கியதால் அரபல்லாத ஆளுநர்களுக்கே அப் பட்டத்தைச் சூட்டினார்கள். சமயச் சார்பாயிருந்த ஆட்சியை உலகியல் ஆதிக்கமாய் மாற்றியதால் அரசப் பட்டம் முவாவியாவிற்களிக்கப்பட்டது. அரபு மன்னர்களில் முவாவியா முதல் மன்னர் மட்டுமல்லர், சிறந்த அரசர்களில் ஒருவருமாவார். அருள், இரக்கம், ஆற்றல், ஆட்சித்திறம், சூழ்ச்சித்திறம் ஆகிய பண்புகளே உமையடு மரபினருக்கு அவர் அளித்த அருஞ் செல்வமாகும். அவர்களில் பலர் அவற்றைப் பின்பற்ற முயன்று வெற்றிபெறவில்லை. ஓர் அரசுக் கட்டிலை முதன் முதலாக அவர் அமைத்துக்கொண்டார். வெள்ளிக்கிழமை உச்சிநேரக் குத்பாவை அமர்ந்தபடியே படித்தார்; பள்ளி வாசலில் கலீபாவிற்கென்று தனி இடமாய் ஒரு நொடிப்பந்தர்அ மைத்துக்கொண்டார். அரபு வரலாற்றேடுகள் அவருடைய கடவுள் பற்றை மறுத்துள்ளன.

**பைசாண்டியர்களுடன் போர்கள்**

பைசாண்டியர்களைக் கடலிலும் நிலத்திலும் தொடர்ந்து அரபுக்கள் தாக்கிவந்தனர். முவாவியாவின் படை கான்ஸ்டாண்டி நோபிளைத் தாக்க இரு முறை சென்றது. சிற்றாசியாவில் (Asiaminor) நடைபெற்ற இத் தாக்குதல்கள் கொள்ளைப் பொருள்களை நாடியே நிகழ்ந்தன. தொலைவிலிருந்த கான்ஸ்டாண்டி நோபிளும் அத் தாக்குதல்களின் குறிக்கோளாயிருந்திருக்கலாம். ஆண்டுதோறும் நடைபெற்ற சூறையாட்டு அரபு வீரர்களுக்குப் போர்ப் பயிற்சியாக அமைந்தது. ஆயினும் அரபுக்கள் சிற்றாசியாவில் நிலைத்து ஆதிக்கஞ் செலுத்தவில்லை. ஆதிக்கமோ, அரபு மொழியோ பரவமுடியாதவாறு வடவெல்லையாக பிரஸ் மலைகள் அமைந்திருந்தன. செல்ஜூக் மரபினரும் ஆட்டோமன் துருக்கியரும் பிற்காலத்தில் சிற்றாசியாவில் ஆதிக்கம் ஏற்படுத்திக்கொண்டபோதிலும் அந்நாடு அரபு மொழி பேசும் பகுதியாகவில்லை. அரபு நாகரிகம் நிலைத்து வேரூன்ற முடியாதவாறு அதன் வெப்பதட்ப நிலை இருந்தது.

முவாவியா சிரியாவின் ஆளுநராயிருந்தபோது அவருடைய கடல்படை எகிப்தியக்கடல்படையோடு இணைந்து, கி.பி. 655-ல் பைசாண்டியப்பேரரசர் இரண்டாம் கான்ஸ்டன்ஸ் தலைமை தாங்கிய கிரேக்கக் கடல் படையைப் பொனிக்சில் தாக்கி, முதல் கடல் வெற்றியைப் பெற்றது. இச்சண்டையை அரபு வரலாறு பாய்மரங்களின் சண்டையெனக் (Battle of the Masts) குறிப்பிட்டுஉள்ளது. பைசாண்டியப் படை அழிந்தது. கடல் நீரைக் குருதி மயமாக்கிய இப்போர் இரண்டாவது யார்முக் எனக்கருதப்பட்டது. உதுமான் கொலை செய்யப்பட்டதால் அரபுக்கள் அக் கடல் வெற்றியைத் தொடர்ந்து கான்ஸ்டாண்டிநோபிளை நோக்கி முன்னேறவில்லை.

வானளாவிய முச்சுவர்களால் பாதுகாக்கப்பட்ட பைசாண்டியத் தலைநகரைச் சிரியா நாட்டு அரபுக்கள் உமையடுகளின் ஆட்சியில் மும்முறை தாக்கினார்கள். கி.பி. 669-ல் முவாவியாவின் தலைமகன் யாசிது முதல் தாக்குதலுக்குத்தலைமை தாங்கினான். அல்அன்சாரியும் யாசிதும் கான்ஸ்டாண்டிநோபிளை முற்றுகையிட்டனர். பேரரசர் நான்காம் கான்ஸ்டன்ஸ் முற்றுகையை நீடிக்கவிடவில்லை. இம்முற்றுகையில் யாசிது 'இளம் அரபு வீர'னெனப் பாராட்டப்பெற்றான். நபி அவர்களின் பதாகை வீரராயிருந்த (Standard Bearer) அபூஅயூப் அல்-அன்சாரி யாசிதின் படையில் ஒருவராயிருந்து போரிட்டு மடிந்தார். கான்ஸ்டாண்டிநோபிளுக்கு அருகிலிருந்த இவருடைய

கல்லறை கிரேக்கக் கிறித்தவர்களாலும் புனிதப் பயணத் தலமாய்க் கருதப்பட்டது.

கான்ஸ்டாண்டிநோபிள் இரண்டாம் முறையாகக் கி.பி. 674-ல் தாக்கப்பட்டது. கிரேக்க—அரபுக் கடல் படைகளுக்கு இடையே நிகழ்ந்த இப்போர் ஏழாண்டுகள் (674-680) நடைபெற்றது. அரபுக்கள் சிசிக்கஸ் தீவக்குறையில் மார்மராக் கடலில் கடல் படைத்தளம் அமைத்திருந்தனர். கிரேக்க நெருப்பைப் பயன்படுத்தி இரண்டாம் தாக்குதலிலிருந்து கிரேக்கத் தலைநகர் காக்கப்பட்டது. பாதுகாப்பிற்குப் பயன் பட்ட கிரேக்கத் தீ விரைவில் பற்றக்கூடிய எரிபொருள்களின் கலவையாகும். நீரிலும் எரியக்கூடிய அச்சாதனத்தை டமஸ்கஸ் நகரிலிருந்த சிரியா அகதியாகிய காலிநிக்கஸ் கண்டுபிடித்தான். அத்தீயினால் அரபுக்கலங்கள் நாசமடைந்தன. கி.பி. 672-ல் ரோட்ஸ் தீவும், 674-ல் கிரீட்தீவும் தற்காலிகமாய் அரபுக்களால் கைப்பற்றப்பட்டன. கி.பி. 717-18-ல் அரபுக்கள் மீண்டும் ரோட்ஸ் தீவைப் பிடித்தனர்.

கி.பி. 680-ல் முவாவியா இறந்தவுடன், அரபுக் கடல் படை ஈஜியன் கடல் பகுதியிலிருந்தும் பாஸ்பரஸ் (Bosporus) கடலிலிருந்தும் வெளியேறியது. ஆனால் பைசாண்டியத் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்றன. கலீபா சுலைமான் ஆட்சியில் கி.பி. 717-ல் அவருடைய இளவல் மஸ்லாமா (Maslamah) தலைமையில் இரண்டாம் முறையாகவும் இறுதியாகவும் கான்ஸ்டாண்டிநோபிள் முற்றுகையிடப்பட்டது. நிலம், நீர் வழியாக நடந்த இக்கடுந்தாக்குதலுக்கு எகிப்தியக் கலங்கள் உதவின. முற்றுகைக்கான சிறந்த பீரங்கிப்படையும், இரசகற்பூரமும் (Naphtha) அரபுக்களிடமிருந்தன. பதினான்கு மாதங்கள் முற்றுகைக்குப் பின்னும், தலைநகர் பிடிபடவில்லை. கான்ஸ்டாண்டிநோபிள் துறைமுகத்திற்குள் அரபுக்கடல்படை புகாதவாறு சங்கிலியொன்று தடுத்தது. முற்றுகையிட்ட கலங்கள் கிரேக்கத் தீயால் அழிந்தன. பஞ்சம், நோய், கடுங்குளிர் முதலியவற்றாலும் அரபுக்கள் துன்புற்றனர். கலீபா சுலைமான் இறந்ததைப் பொருட்படுத்தாமல் மஸ்லாமா முற்றுகையைத் தொடர்ந்தார். புதிய கலீபா, போரை நிறுத்திவிட்டு ஊர் திரும்புமாறு மஸ்லாமாவிற்கு ஆணைபிறப்பித்தார். கடல் படை திரும்பும்போது பைசாண்டியர் தொடங்கிய அழிவுப்பணி கடற் சூறாவளியால் முற்றுப்பெற்றது. 1800 அரபுக்கப்பல்களில் ஐந்தே கலங்கள் சிரியாத் துறைமுகத்தை அடைந்தன என்று வரலாற்றாசிரியர் தியோஃபானிஸ் (Theophanis) தெரிவிக்கிறார். அரபுக் கடல் படை அழிந்தது. கான்ஸ்டாண்டிநோபிளை

அரபுக்கள் அப்போதே கைப்பற்றியிருந்தால் ஐரோப்பிய வரலாறு பெரிதளவு மாறியிருக்கும். பேரரசர் ஹெராக்ளியஸ் புறச்சமயப் பாரசிகரிடமிருந்து கிறித்தவ உலகினைக் காத்ததைப்போல், பேரரசர் லியோ (கி.பி. 717-741) அரபு முஸ்லிம்களிடமிருந்து ஐரோப்பாவைக் காத்தார்.

கி.பி. 782-ல் அரபுப்படை ஹரூன் தலைமையில் கான்ஸ்டாண்டிநோபிளை நெருங்கியபோது பேரரசி ஐரின் திறை செலுத்த ஒப்புக்கொண்டு உடன்படிக்கை செய்துகொண்டார். ஏறக்குறைய எழுநூறாண்டுகளுக்குப் பின்பு (கி.பி. 1453) மங்கோலியத் துருக்கியர்கள் கான்ஸ்டாண்டிநோபிளை மீண்டும் முற்றுகையிட்டபோது வெடிமருந்து அவர்கைக்கு உதவியது; வெற்றியும் பெற்றார்கள்.

வடக்கில் அரபுக்கள் ஊடுருவுவதைத் தடுத்த ஒரு கிறித்தவக் குலம் சிற்றாசியாவைப் பித்தளை அரண் போலக்காத்து பைசாண்டியருக்கு உதவியது. கி.பி. 666-ல் அக்குலம் லெபனான் நாட்டிற்குள் ஊடுருவி முஸ்லிம்களுக்குத் தொல்லை தரத் தொடங்கிற்று. பைசாண்டியப் பேரரசர் அவ்வுள்நாட்டுப் பகைவர்களுக்கு உதவாமல் இருக்க முவாவியா அவருக்குத் திறை செலுத்தவும் இசைந்தார். கி.பி. 689-ல் அக்கிறித்தவக் கூட்டத்தினரை இரண்டாம் ஜஸ்டினியன் சிரியா மீது ஏவி விட்டார். அவர்களுக்கு வாரந்தோறும் ஆயிரம் தினார்கள் தந்து நாட்டமைதியை அப்தல் மாலிக் காத்துக் கொண்டார்.

**உமையடுகளின் ஆட்சி**

உமையடு மரபின் மார்வானியக் கிளையைத் தோற்றுவித்த மார்வானுக்குப்பின் (683-85) அவருடைய மகன் அப்தல் மாலிக் (685-705) கலீபாவானார். அவருடைய ஆட்சியிலும், அவர் மக்கள் நால்வர் ஆட்சிக் காலத்திலும் டமஸ்கஸிலிருந்து ஆண்ட உமையடு வம்சம் ஆதிக்கத்திலும் புகழிலும் உச்சநிலை எய்திற்று. அல்வாலீது (705-718), ஹிஷாவும் (724-743) இருவர் ஆட்சிக் காலங்களில் முஸ்லிம் அரசு, மேற்கில் அட்லாண்டிக் கடற்கரை, பிரன்னீஸ் மலைத்தொடர் முதல், கிழக்கில் சிந்து ஆறு, சீனத்தின் எல்லை வரை பரந்து பண்டைக்காலத்தில் அதற்கிணையில்லை எனக்கூறுமளவு விரிந்திருந்தது. அவர்கள் காலத்தில் ஆக்சஸ் ஆற்றிற்கு அப்பால் உள்ள பகுதி, வட ஆப்பிரிக்க நாடுகள், ஸ்பெயின் ஆகியவை முஸ்லிம் ஆதிக்கத்திற்குட்பட்டன. அப்போதுதான் ஆட்சிமுறை அரபு மயமாயிற்று. தூய அரபு நாணயமுறை ஏற்பட்டது; அஞ்சல் துறை

வளர்ந்தது; ஜெருசலத்தில் புனிதமாடக் கோயில் (Dome of the Rock) எழுப்பப்பட்டது.

**அப்துல் மாலிக் (685-705)**

முவாவியாவின் மறு வடிவமாய்த் திகழ்ந்த இக்கலீபா பகைவர்களோடு பல முனைகளில் போரிட வேண்டியிருந்தது. ஆயினும் இருபதாண்டு ஆட்சியில் அவர் புதிய நாடுகளை வென்று இஸ்லாமிய அரசை வலுப்படுத்தி அமைதி நிலவச் செய்தார். அவருக்குப்பின் ஆட்சி செய்த அவர் மகன் அல்வாலிதும் திறமைமிக்க தந்தையின் திறமை வாய்ந்த மகனாய்த் திகழ்ந்தார்.

சிரியா, அல்-இராக், பாரசிகம், எகிப்து ஆகிய நாடுகள் கலீபா உமரால் இஸ்லாமிய ஆதிக்கத்திற்குட்படுத்தப்பட்டு, கலீபா உமர் காலத்தில் இஸ்லாம் ஆட்சி விரிவின் முதல் நிலை முடிவுற்றிருந்தது. அப்தல் மாலிக்கும் அல்வாலிதும் அதன் இரண்டாம் பருவத்தைத் தொடங்கி வைத்தனர்.

அல்-ஹிஜாசில் பள்ளியாசிரியராய் வாழ்ந்த அல்-ஹஜ்ஜாஜ், உமையடு ஆட்சியை நிலைநிறுத்தப் போர்வீரராய் மாறி, ஒன்பது ஆண்டுகள் போலிக்கலீபாவாய் இருந்து வந்த அல்-சுபேயிரை கி.பி. 692-ல் தோற்கடித்தபின் அரேபியாவின் ஆளுநராக்கப் பட்டார். அவர் ஈராண்டுகளில் அரேபியாவெங்கும் அமைதி நிலவச்செய்தார். கி.பி. 694-ல் அல்-இராக் மாகாணத்தின் குமுறலை அடக்க, அல்-ஹஜ்ஜாஜ் கலீபாவால் அங்கு அழைக்கப் பட்டார். கீழ்ப்படியாத மக்களுக்கு ஈவிரக்கம் காட்டாது, நபியின் தோழருக்கும் கண்ணோட்டம் காட்டாமல், நூற்று இருபதாயிரம் மக்களின் உயிர்களைப்போக்கிய அல்-இராக்கின் ஆளுநராகிய அல் ஹஜ்ஜாஜை அரபு வரலாற்றாசிரியர்கள் கொலை வெறி கொண்ட கொடுங்கோலன் என்றும், உரோமப் பேரரசர் நீரோவென்றும் அழைத்ததில் வியப்பொன்றுமில்லை. அல்-இராக்கிலும், பாரசிகத்திலும் பகைவர்கள் ஒடுக்கப்பட்டு ஒழுங்கு நிலைநாட்டப்பட்டது. அல்-பஸ்ராவிற்கும் அல்-கூஃபா விற்கும் இடையில் டைகிரிஸ் ஆற்றின் மேல்கரையில் புதிய தலைநகர் ஒன்று நிறுவப்பட்டது. அங்கிருந்து சிரியாப்படை நாட்டின் அமைதியைக்காத்தது. கி.பி. 699-ல் அல்-ஹஜ்ஜாஜின் தளகர்த்தர்களில் ஒருவன் திறை செலுத்த மறுத்த காபூல் மன்னனைத் தாக்கித் தோற்கடித்தான். அவருடைய மற்றொரு படைத்தலைவன் குராசானின் ஆளுநராய் அமர்த்தப்பட்டான்.

**அல்வாலிது I (705-715)**

இவருடைய ஆட்சியில் அரபு வீரர்கள் ஆக்சஸ் ஆற்றைக் கடந்து அதற்கப்பால் பாக் (Balkh), புக்காரா, சாமர்கண்டு, குவாரிசிம் முதலிய நாடுகளைக் கைப்பற்றி முஸ்லிம் ஆதிக்கத்தை ஏற்படுத்தினார்கள்; ஜக்ஸார்டிஸ் ஆற்றைக்கடந்து பர்கானாவைக் கைப்பற்றினார்கள். இந்த ஆற்றைக்கடந்த பின் முஸ்லிம்கள் மங்கோலியர்களோடு மோதினார்கள்; இஸ்லாம், பௌத்தத்தைச் சந்தித்தது. சாமர்கண்டில் பௌத்த வழிபாட்டுச் சிலைகளுக்கும், புக்காராவில் தீவழிபாட்டுக் கோயிலுக்கும் முஸ்லிம்கள் எரியூட்டினார்கள். சிலைகளை அழித்த அரபு வீரர்களுக்கு யாதொரு துன்பமும் நேரிடாததைக்கண்ட பலர் அச்சம் நீங்கி இஸ்லாம் சமயத்தைத் தழுவினார்கள்.

**இரண்டாம் உமர் (717-720)**

திறை செலுத்துவதிலிருந்து முஸ்லிம்கள் விடுவிக்கப் பட்டதால் ஏராளமான மக்கள் முஸ்லிம்களானார்கள். முஸ்லிம்கள் கைப்பற்றிய ஆசியாவின் இடைப்பகுதி பிற்காலத்தில் அரபுப்பண்பாட்டு மையமாய் வளர்ந்தது. கைப்பற்றிய நாடுகளில் அரபுக்கள் மக்களிடமிருந்து வரி வசூலித்தார்கள்; ஆட்சிப் பொறுப்பினை அந்தந்த நாட்டு அலுவர்களிடமே விட்டு விட்டார்கள். கி.பி. 751-ல் டாஷ்கண்டைக் கைப்பற்றியபின் நட்டாசியாவில் முஸ்லிம் ஆதிக்கம் சீனமக்களால் மறுக்கவியலாதவாறு ஏற்படுத்தப்பட்டது.

கி.பி. 637-லிருந்து குறிப்பாய்க் கலீபா அலிகாலம் முதல், இந்தியாவில் சிந்து மாகாணத்தை அரபுக்கள் கைப்பற்றப் பன்முறை படையெடுத்து வந்தனர். இறுதியாய் அரபுப் படை முகம்மது பின் காசிம் தலைமையில் கி.பி. 710-ல் மக்ரானைப் பிடித்து, பலுசிஸ்தான் வழியே முன்னேறிக் கி.பி. 711—12-ல் சிந்து நாட்டைக் கைப்பற்றியது. சிந்து மன்னன் தஹிர் இலங்கையிலிருந்து வந்த அரபுக் கலகங்களை வழிமறித்து, கலீபாவின் பரிசுப் பொருள்களைக் கவர்ந்ததால், அரபுப் படையெடுப்பு நிகழ்ந்தது. அரபு வீரர்கள் தென் பஞ்சாபில் மூல்தானைப் பிடித்தனர். இஸ்லாம் அவ் வட்டாரத்தில் பரவ வாய்ப்பேற்பட்டு அங்கு பிற்காலத்தில் இஸ்லாமிய நாடு (பாகிஸ்தான்) ஏற்படவும் வழிகோலப்பட்டது. தெற்கில் சிந்து மாகாணமும், வடக்கில் டாஷ்கண்டும், காஷ்கரும் கலீபா ஆட்சியின் கிழக்கெல்லையாயின. இஸ்லாமிய ஆதிக்க வட்டத்தில் சீனம் சிக்கவில்லை.

கிழக்கில் போரிட்டுக்கொண்டிருந்த நேரத்தில் அரபுக்கள் மேற்கிலும் போரிடத் தவரவில்லை. எகிப்தில் ஆதிக்கஞ் செலுத்திய முஸ்லிம்கள் வட ஆப்பிரிக்காவில் மேற்கில் ஊடுருவிச் சென்ருர்கள். கார்த்தேஜிலிருந்தும் ஏனைய கடற்கரைப் பட்டினங்களிலிருந்தும் பைசாண்டியர்களை அரபுக்கள் கடல்படை உதவியுடன் கி.பி. 698-ல் வெளியேற்றினுர்கள். பெர்பெர் மக்கள் தங்களுடைய பெண் நபியின் தலைமையில் முஸ்லிம்களை எதிர்த்து ஐந்தாண்டுகள் போரிட்டனர். ஆப்பிரிக்க அரசியாயிருந்த கஹீனுவை வஞ்சகமாய்த் தோற்கடித்துக் கொன்று முஸ்லிம்கள் அம்மக்களை ஒடுக்கினுர்கள். பிறகு பெர்பெர்கள் இஸ்லாம் சமயத்தைத் தழுவி, அரபுமொழி பேசி, அட்லாண்டிக் கடல் வரை அரபாதிக்கத்தை வளர்க்க உதவினுர்கள்.

வட ஆப்பிரிக்கக் கடற்கரையை அப் பகுதியின் ஆளுநராகிய மூசா வென்று வயப்படுத்தியபின் தென்மேற்கு ஐரோப்பாவில் முஸ்லிம் ஆதிக்கம் ஏற்பட வழிதிறந்தது. கி.பி. 711-ல் மூசாவின் தளகர்த்தனும், உரிமைபெற்ற பெர்பெர் இனத்தைச் சேர்ந்தவனுமான தாரிக் சூறையாடும் திட்டத்தோடு ஜிப்ரால்டர் இடைகழியைக் கடந்து ஸ்பெயினில் பெரும்படையுடன் நுழைந்தான். கார்டோவா, கிரனடா, டாலெடோ முதலிய ஸ்பானிய நகரங்கள் அரபுக்கள் வசமாயின. ஐபீரியத் தீவக்குறை ஏழாண்டுகளில் அரபுப் பேரரசின் பகுதியாயிற்று. வாண்டல்களின் நாடாகிய ஸ்பெயின் அரபாதிக்கத்தின் கீழ் அண்டலூசிய மாகாணமாயிற்று. கால்நாட்டின் தென்பகுதியில் ஏழு நகரங்களைக் கைப்பற்றி, அரபு-பெர்பெர் படை முன்னேறிச் சென்றபோது கி.பி. 732-ல் சார்லஸ் மார்டல் என்ற கால்நாட்டு அரசன் அப் படையை டூர்சிற்கும் பாய்ட்டியர்சுக்கும் இடையில் தடுத்து நிறுத்தினுன். படைமானிய ஆட்சியில் மிகத் தொல்லைக்காளாயிருந்த ஸ்பானிய மக்களின் துன்பம், அரபாட்சியில் ஓரளவு நீங்கிற்று.

முகம்மது நபி மறைந்து ஒரு நூற்றுண்டிற்குள் (கி.பி. 632-732) பிஸ்கே விரிகுடாவிலிருந்து சிந்து, சீனம் எல்லைகள் வரை, ஏரல் கடலிலிருந்து நைல் ஆற்றின் கீழ்ப்பகுதி நீர்வீழ்ச்சிகள் வரையிலும் இஸ்லாம் ஆதிக்கம் விரிவடைந்திருந்தது. தென்மேற்கு ஐரோப்பா, வட ஆப்பிரிக்கா, மேற்காசியா, நடு ஆசியா ஆகிய பகுதிகளைக் கொண்ட முஸ்லிம் பேரரசு பரப்பில் உரோமப் பேரரசினை விஞ்சிவிட்டது. டமஸ்கஸ் அப்பேரரசின் தலைநகரம் ஆகும். அத்தலைநகரின் நடுவில் உமையடு வம்சத்தைத் தொடங்கிய முவாவியா கட்டிய அரண்மனையும் அதனையடுத்து அல்வாலிது புதுப்பித்துப் பொலிவுறச்செய்த பள்ளிவாசலும்

காட்சியளித்தன. ஸ்பெயின் நாட்டை வென்று வாகை சூடிய முசா, தாரிக் இருவரும் காதிக் அரச குடும்பத்தினர் உள்ளிட்ட ஏராளமான போர்க்கைதிகளோடும் அளவிடற்கரிய அரும் பொருள்களோடும் அல்வாலிதை அரசவையில் கண்டு பாராட்டுப் பெற்றனர்.

பல நாடுகளையும் வென்று ஆட்சி புரிந்த பாலைவனவாசிகள் பொது நிதிப் பராமரிப்பைப் பற்றியும், கணக்கு முறைகளைப் பற்றியும் அறியாத நிலையில் அந்தந்த நாட்டில் ஏற்கனவே பணி புரிந்து வந்தவர்களையே ஆங்காங்கு பணிபுரியுமாறு ஏற்பாடு செய்திருந்தார்கள். டமஸ்கசில் கிரேக்க மொழியிலும், சிரியாவில் சிரியக் மொழியிலும் எழுதப்பட்டு வந்த அரசாங்கப் பதிவேடுகளையும், விவரப்பட்டியல்களையும் அப்தல் மாலிக் ஆட்சியிலும் அல்வாலிது ஆட்சியிலும் அரபு மொழி யில் எழுதத் தொடங்கினார்கள். மொழிமாற்றத்தோடு அலுவலர் மாற்றமும் ஏற்பட்டது. அரபு நாட்டைச்சாராத அதிகாரிகளில் சிலர் அரபு மொழியைக் கற்றுக்கொண்டு தங்கள் அலுவல்களைத் தக்கவைத்துக்கொண்டார்கள். அல்இராக்கிலும் அதன் கிழக்கு மண்டலங்களிலும் இம்மாற்றத்தைப் புகுத்தியவர் அல்-ஹஜ்ஜாஜ் ஆவார்.

அரபாட்சியில் உரோம, பாரசீக நாணயங்கள் எவ்வித மாற்றமுமின்றிப் புழக்கத்திலிருந்தன. சில காலங்களில் அந் நாணயங்களின் மீது குரான் வாசகம் பொறிக்கப்பட்டது. 'அல்லா ஒருவரே ஆண்டவன்' என்ற குரான் சொற்களைக் கண்ட பைசாண்டியர்கள் வெகுண்டு, நபியை நிந்திக்கும் சொற்களுடன் தங்கத்தினார்களை வெளியிடப்போவதாக அச்சுறுத்தினார்கள். இதனை அறைகூவலாய்க் கருதி, டமஸ்கசிலிருந்து அப்தல் மாலிக் கி.பி. 695–ல் தங்கத்தினார்களையும் வெள்ளி டர்ஹாம்களை யும் தூய அரபு நாணயங்களாய் வெளியிட்டார். அதனைப்பின் பற்றி அடுத்த ஆண்டில் அரசப் பிரதிநிதி அல்-ஹஜ்ஜாஜ் அல்-கூஃபாவில் வெள்ளி நாணயங்களை வெளியிட்டார். ஒரு தினாரின் மதிப்பு பத்து டர்ஹாம்களாகும்.

தலைநகரிலிருந்து மாகாணத் தலைநகரங்களுக்குப் பயணிகள் செல்லவும், அரசாங்க நடவடிக்கைத் தகவல்கள் அனுப்பவும் இடைமாற்றுக் குதிரைகளைப் பயன்படுத்தினார்கள். இதுவே முறையான அஞ்சல்நிலையத் தொடக்கமாகும். அவரவர்களுடைய பகுதிகளின் முக்கிய நிகழ்ச்சிகளை அஞ்சல்நிலையத் தலைவர்கள் கலீபாவிற்குத் தெரிவிக்க வேண்டும். அல்-ஹஜ்ஜாஜ் புதிய நிலங்களில் பயிரிட வகை செய்தார். டைக்ரிஸ், யூப்ரடீஸ்

ஆறுகளுக்கிடையே இருந்த பெரிய கால்வாயைப் புதுப்பித்துப் பாசன வசதியைப் பெருக்கினன். அரபுமொழி வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமான சில முறைகளைக் கையாளவும் அல்ஹஜ்ஜாஜ் உதவினன். ஆசிரியராயிருந்த அல்ஹஜ்ஜாஜிற்கு இலக்கியத்திலும் பேச்சுக் கலையிலும் இருந்த பற்றுக் குறையவில்லை. கவிகளையும் விஞ்ஞானிகளையும் அவர் ஆதரித்தார். உமையடுகளின் காலத்தில் வாழ்ந்த முப்பெருங் கவிஞருள் ஒருவரும், அங்கதக் கவியுமான ஜரீர் கலீபா உமரின், அரசவைக் கவிஞராயும் அல்ஹஜ்ஜாஜின் புகழ் பாடுபவராயும் திகழ்ந்தார். அல்ஹஜ்ஜாஜின் சிறந்த மருத்துவர் ஒரு கிறித்தவராவார்.

அக் காலத்தில் கட்டடக்கலை நன்கு பேணப்பட்டது. அப்போது கட்டப்பெற்ற சிறந்த கட்டடங்களில் சில இன்றளவும் நிலைத்துள்ளன. பாலஸ்தீனத்தில் பழைய நகரமிருந்து அழிந்த இடத்தில் அல்ரம்லா என்ற புதிய நகரை அமைத்து அந்நகரில் கலீபா சுலைமான் வாழ்ந்து வந்தார். அவர் காலத்திலிருந்து கலீபா தலைநகரில் வசிக்கும் வாடிக்கை நின்றுவிட்டது. தூயப் பயணம் மேற்கொண்டு மக்காவிற்குச் சென்ற மக்களை ஜெருசலத்திற்கு வருமாறு செய்ய அங்கு சிறந்த மாடக் கோயிலை (Dome of the Rock) அப்தல்மாலிக் கி.பி. 691-ல் கட்டினர். அப் பள்ளிவாசலுக்கருகில் மற்ெருரு பள்ளிவாசலையும் அவர் கட்டினர்.

அல்வாலிது ஆட்சியில் அமைதி நிலவியதாலும் செல்வம் கொழித்ததாலும் அவர் மிகப் பெரிய கட்டடக் கலைஞராய் விளங்கினர். சிரியாவில் பல பள்ளிகளையும், தொழுகை இடங்களையும் எழுப்பினர். டமஸ்கசில் கிறித்தவத் தலைக்கோயில் இருந்த இடத்தில் உலகிலேயே மிகச் சிறந்த வழிபாட்டுக் கூடம் ஒன்றினை அமைத்தது அல்வாலிதின் அரிய சாதனையாகும். அதற்கு அக்சா (Aqsa) பள்ளிவாசல் எனப் பெயர் சூட்டப்பட்டது. மேலும் மக்காப் பள்ளிவாசலை விரிவுபடுத்திப் பொலிவுறச் செய்தார். மதீனப் பள்ளிவாசலைத் திரும்பக் கட்டினர்; அல்வாலிதின் வேண்டுகோளுக்கு இணங்கிப் பைசாண்டியப் பேரரசர் மதீனப் பள்ளிவாசலைக் கட்டப் பொன்னையும், பல்வண்ணக் கற்களையும் சிற்பிகளையும் கொடுத்து உதவினர். டமஸ்கசில் சுலைமான் ஆட்சியில் மக்கள் கூடுமிடங்களில், பெண்கள், சமையல்கலை இரண்டையும் பற்றிப் பேசியது போல, உமர் காலத்தில் சமயமும் குரானும் அவர்களின் உரையாடலில் பெரும்பங்கு பெற்றிருந்தாற் போல, அல்வாலிது ஆட்சியில் அழகிய கட்டடங்களே அவர்களின் பேச்சில் முதலிடம் பெற்றன.

மேலும் கலீபா அல்வாலிது தொழுநோயினருக்கும், முடமானவர்களுக்கும், குருடர்களுக்கும் நிலையங்கள் ஏற்படுத்தி அவற்றிற்கு மானியங்கள் வழங்கினர். பேரரசில் சாலைகள் அமைத்து, ஆங்காங்குக் கிணறுகள் தோண்டிப் பயணிகளுக்கு மேலும் பல வசதிகள் செய்தார். அவர் பல கட்டுக்கால்வாய் களும் கட்டினர்.

கடவுட்பற்றற்ற வம்சமாய்க் கருதப்பட்ட உமையடுகளின் ஆட்சியில், இரண்டாம் உமர் கடவுட் பற்றிலும் துறவு மனப் பான்மையிலும் சிறந்து விளங்கினர். நூருண்டுகளுக்கு ஒரு முறை இஸ்லாம் சமயத்திற்குப் புத்துணர்ச்சியூட்டத் தோன்று பவர்களில் ஒருவராய் (Mab'uth) உமர் கருதப்பட்டார். கிழிந்து ஒட்டுப் போட்ட ஆடைகளை அணிந்து அவர் மக்களோடு எளிமை யாய்ப் பழகினர். வெள்ளிக்கிழமை வழிபாட்டில் அலியைப் பழித்துப் பேசும் வழக்கம் முவாவியா காலத்திலிருந்து ஏற்பட் டிருந்தது. அதனை உமர் நிறுத்தினர். அல்ஹிஜாஸில் ஆளுநரா யிருந்தபோது அறிஞர்களைக் கலந்துகொண்டு ஆட்சி செய்தது போலக் கலீபாவான பின்பும் அரசியல் அறிஞர்கள், சட்ட வல்லு நர்கள், கடவுட் பற்றுளர்கள் முதலியோரின் அறிவுரை கேட்டே ஆட்சி புரிந்தார். முஸ்லிம் அல்லாதவர்களைக் கொன்ற முஸ்லிம் களையும் உமர் தூக்கிலிட்டார். நிலங்கள் நியாயமின்றிப் பறிக்கப் பட்டிருந்தால் உரியவர்களுக்கு அவை திருப்பித் தரப்பட்டன. பொது மடைப்பள்ளியில் நாள்தோறும் ஒரு டர்ஹாம் கொடுத்து விட்டு ஏழைகளோடு உணவருந்தினர்.

**ஹிஷாம் (724-43)**

முவாவியாவிற்கும், அப்துல்மாலிக்குக்கும் அடுத்தாற்போல் ஹிஷாமே மூன்ருவதும் இறுதியுமான அரசியல் மேதையாய் விளங்கினர். உமரின் உத்தரவால் அரசின் வருவாய் பெரிதும் குறைந்துவிடவே ஹிஷாம் இஸ்லாம் சமயத்தைத் தழுவியவர் களுக்கு ஆள் வரிக்கு மட்டும் விலக்களித்து நிலவரி விலக்கினை நீக்கிவிட்டார். அவர்களிடமிருந்து நில வரி தண்டப்பட்டது. பொருள் துறையில் கருத்தாயிருந்து கலீபா கருவூலத்தை நிரப்பினர். அவருடைய நிதி நிர்வாகம் அப்பாசிடு கலீபா அல்-மன்சூரால் பாராட்டப்பட்டது.

வீரர்களல்லாதவர்களுக்கு ஓய்வு கால ஊதியத்தை நிறுத்தி ஞர். கால்வாய்கள் வெட்டியும், சதுப்பு நிலங்களை வடித்தும் வேளாண்மையைப் பெருக்கினர்; கோட்டைகள் கட்டினர்; ஆங்காங்குப் பூங்காக்கள் அமைத்தார். நாட்டுவிவரத் தொகுதிகள்,

பதிவேடுகள், ஆவணங்கள் முதலியவை வகைப்படுத்தப்பட்டு முறையாகக் காப்பாற்றப்பட்டன. பொது நிதியைப் பெரிதளவு கையாடிய குற்றத்திற்காக அல் இராக் ஆளுநர் காலீது சிறையிடப்பட்டு, கையாடிய பொருளைத் திருப்பித் தருமாறு வற்புறுத்தப்பட்டார். காலீது போன்ற ஆளுநர்களின் முறைகெட்ட ஆட்சியாலும் இலஞ்ச ஊழலாலும் உமையடு ஆட்சி நலிந்து அப்பாசிடு ஆட்சி ஏற்பட்டது. ஹிஷாம் ஆட்சியோடு உமையடுகளின் பொற்காலம் முடிவுற்றது.

ஹிஷாம் இறந்து அடுத்த ஈராண்டுகளில் மூன்று கலீபாக்கள் ஆட்சிப் பீடமேறினார்கள். அர்மீனிய ஆளுநராயிருந்த மார்வான் கி.பி. 745-ல் கலீபாப் பதவியைப் போரிட்டுப் பெற்றார். கலீபாவான இரண்டாம் மார்வான் சிரியாவில் நிகழ்ந்த கலகங்களை ஒடுக்கித் தம் பதவிக்கு வலிமை தேடினார். ஆயினும் அவரால் உமையடுகளின் ஆட்சியை நீடிக்கச் செய்ய முடியவில்லை. அவரோடு அவ்வாட்சி முடிவுற்றது.

உமையடு கலீபாக்களில் பலர் திறமையானவர்கள். அவர்கள் வலிவுள்ள ஆட்சியை ஏற்படுத்தி இஸ்லாமியக் கொடியைத் தொலைவான இடங்களில் பறக்கச் செய்தார்கள். அரசும், சட்டமும் சூழ்நிலைக்கேற்ப அவர்களாட்சியில் வளர்ந்தன. உமையடு ஆட்சியின் இறுதியில் நிர்வாகத்திலும் சமயத்திலும் கருத்தைச் செலுத்தாது, கலீபாக்கள் குடியிலும், வேட்டையிலும், கவிதையிலும். இசையிலும் திளைத்தனர். அலிகளாக்கப் பட்ட ஆண் பணியாட்கள் அமர்த்த முறையும், அதனையொட்டி அந்தப்புர நிறுவனமும் வளர்ந்தன. செல்வச் செழிப்பில், மக்கள் இன்ப வாழ்வில் தோய்ந்தனர். அடிமைகள் மலிந்தனர். மீண்டும் குல உணர்ச்சியும் பகையும் வளரத் தொடங்கின. பிற்கால உமையடுகள் கட்சித் தலைவர்களாயிருந்தார்களேயன்றிப் பேரரசின் ஆட்சித் தலைவர்களாயில்லை.

அரபு மக்கள் கேய்ஸ் (Qays) அல்லது வடபகுதி அரபுக்கள், யாமன் (Yaman) அல்லது தென்பகுதி அரபுக்கள் என இரு குலங்களாய் வளர்ந்து உமையடுகளின் வீழ்ச்சியை விரைவுபடுத்தினர். பேரரசின் பல்வேறு பகுதிகளிலும் பரவிய மரபு வழிப் பகை ஃப்ரான்சில் முஸ்லிம் ஆதிக்கம் பரவாதவாறு தடுத்தது; அண்டலூசியக் கலீபாவாட்சியை நலியச் செய்தது.

பதினான்கு கலீபாக்களில் நான்கே கலீபாக்களின் மக்கள் அவர் தம் தந்தையரைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தார்கள். ஒரு கலீபாவிற்குப் பின் அப் பதவிக்கு யார் வருவது என்பது பற்றி

## உமையடுகள் (கி.பி. 661–750)

- உமையடு
  - அபூ அல்-ஆஸ் (Abu-al-As)
    - அல்-ஹகம்
      - (4) மார்வான் I (683–685)
        - முகம்மது
          - (14) மார்வான் II (744–750)
        - (5) அப்தல் மாலிக் (685-705)
          - (6) அல்வாலிது I (705–715)
            - (12) யாசிது III (744)
            - (13) இப்ராகிம் (744)
          - (7) சுலேமான் (715–777)
          - (9) யாசிது II (720-724)
            - (11) அல்வாலிது II (743-744)
          - (10) ஹிஷாம் (724–743)
        - அப்தல்-அசிஸ்
          - (8) உமர் II (717–720)
    - அஃபான்
      - உதுமான் (644-656)
  - ஹார்பு (Harb)
    - அபுசுபியான் (Abu Sufyan)
      - (1) முவாவியா (661-680)
        - (2) யாசிது (680–683)
          - (3) முவாவியா II (683)

ஒரு திட்டவட்டமான நடைமுறை இல்லாததால் நாட்டமைதி அடிக்கடி குலைந்தது. தந்தைக்குப் பின் மகன் என்ற முறையை முவாவியா ஏற்படுத்தினார். ஆனால், அரபுக்களின் குலமுறையாகிய மூப்பு பற்றிய தகுதி அம் முறையோடு முரண்பட்டு அடிக்கடி மோதிற்று. அரியணையேற மக்கள் ஆதரவு ஒன்றே உறுதியான உரிமையாயிருந்தது.

அலிக்கும் அல்ஹுஸெயினுக்கும் உமையடுகள் இழைத்த அநீதியை ஷியாக்கள் மன்னிக்காததுடன் அவர்களின் ஆட்சியை மனதார ஏற்றுக்கொள்ளவுமில்லை. அல்இராக் மக்களில் பெரும்பாலோர் ஷியா வகுப்பைச் சேர்ந்தவர்கள். சிரியாவிலிருந்து நடைபெற்ற ஆட்சியை அவர்கள் எதிர்த்தனர். உமையடு ஆட்சியை வெறுத்தவர்களும் ஷியாக்களோடு சேர்ந்துகொண்டார்கள். கலீபாக்களின் உலகியலையும், சமயச் சட்டங்களின் புறக்கணிப்பையும் சாடிய சன்னிப் பிரிவைச் சேர்ந்த தெய்வப் பற்றுளர்களும் சமயத்தின் பெயராலேயே உமையடுகளை எதிர்க்க முன்வந்தார்கள்.

மேலும் நபியின் சிறிய தந்தை அல்-அப்பாஸின் குடும்பத்தில் தோன்றிய அப்பாசிடுகள் (Abbasids) ஆட்சிக்கு உரிமை கொண்டாடி அலியின் பற்றுளர்களோடு இணைந்துகொண்டார்கள். நாட்டில் பரவலாய்க் காணப்பட்ட மனக் குறையையும் அமைதியின்மையையும் பயன்படுத்திச் சமயத்தின் காவலர்கள் என்ற போர்வையில், அப்பாசிடுகள் உமையடு எதிர்ப்பணியின் தலைவர்களானார்கள். பொதுவாய் அரபு அல்லாத முஸ்லிம்கள்—சிறப்பாய் பாரசிக முஸ்லிம்களுக்கிடையில் மனக் கசப்பு மிகுந்திருந்தது. அவர்களுக்கு அரபு முஸ்லிம்களைப்போல் பொருளாதார, சமுதாய சமத்துவநிலை வழங்கப்படவில்லை. ஆள் வரியிலிருந்தும் அவர்களுக்கு விலக்களிக்கப்படவில்லை. தாங்கள் பழைமையான உயர்ந்த பண்பாட்டினர் என்ற உணர்வும் அவர்களின் மனக்குறையை மிகுதியாக்கிற்று. அல்இராக்கில் வலுப்பெற்ற ஷியாக் கொள்கை பாரசிகத்தில் பரவி அந் நாட்டின் வடகிழக்கில் குராசான் மாகாணத்தில் வேரூன்றியது. ஷியா இஸ்லாம் என்ற பெயரில் ஈரானிய உணர்ச்சி மீண்டும் உயிரூட்டப் பெற்றது.

ஷியாக்களும், குராசானியர்களும், அப்பாசிடுகளும் சேர்ந்த கூட்டணி தோன்றியதும் உமையடுகளின் முடிவுகாலம் நெருங்கிற்று. இக்கூட்டணிக்கு அல் அப்பாஸ் தலைமைதாங்கித் தன் னலத்திற்குப் பயன்படுத்திக்கொண்டார். நபியின் கொடியும் இப்போது அப்பாசிடுகளின் சின்னமுமாய் விளங்கிய கருப்புக்

கொடி கி.பி. 747-ல் குராசானில் உமையடு எதிர்ப்பின் அடையாளமாய் உயர்த்தப்பட்டது. பாலஸ்தீனத்தில் கலவரம் பரவிற்று. இரண்டாம் மார்வான் மிக ஊக்கமாய்க் கலகக்காரர்களுடன் போராடினர். ஆயினும் உமையடு பரம்பரைப் பகலவன் விரைவாய் மறையத் தொடங்கினன்.

குராசான் தலைநகரைக் கலகக்காரர்கள் கைப்பற்றி, அல்-கூஃபாவையும் தங்கள் வசமாக்கிக்கொண்டார்கள். அங்குள்ள பெரிய பள்ளிவாசலில் அபூ-அல்-அப்பாஸ் கலீபாவாய் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அப்பாசிடு கலீபாவாட்சி தொடங்கிற்று. அவர்களின் கருப்புக் கொடிக்குமுன் உமையடுகளின் வெள்ளைக் கொடி பின்னடைந்தது. ஸாபு (Zab) ஆற்றங்கரையில் நடைபெற்ற போரில் கி.பி. 750-ல் இரண்டாம் மார்வான் இறுதியாய்த் தோல்வியடைந்தார். டமஸ்கஸ் முற்றுகையிடப்பெற்றுக் கி.பி. 750-ல் சரணடைந்ததும் சிரியா நாடு அப்பாசிடுகளுக்குச் சொந்தமாயிற்று. அதன் பிறகு உமையடு குடும்பத்தைச் சேர்ந்த யாவரும் திட்டமிட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களில் அப்தல் ரஹ்மான் ஹிமாம் என்ற ஓர் இளைஞன் மட்டும் உயிர் தப்பிச் சென்று ஸ்பெயின் நாட்டில் கார்டோவாவில் கி.பி. 755-ல் உமையடு ஆட்சியை நிறுவினன். டமஸ்கஸ் முதலிய நகரங்களில் புதைக்கப்பட்டிருந்த கலீபாக்களின் சடலங்கள் கல்லறைகளிலிருந்து தோண்டியெடுக்கப்பட்டு அவமதிக்கப்பட்டன.

உமையடு ஆட்சியோடு சிரியா நாட்டின் தலைமை நிலையும் பெருமையும் மறைந்தன. பழைய நிலையை அடைய அந்நாடு செய்த படை முயற்சிகள் பயனளிக்கவில்லை. அதன் இடத்தை அல்-இராக் பிடித்துக்கொண்டது; அல்கூஃபா புதிய தலைநகராயிற்று. முக்கிய அரசாங்க அலுவல்களில் பாரசிக மக்கள் அமர்ந்தனர். கீழைநாடு மேலை நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்தலாயிற்று. இஸ்லாமிய வரலாற்றில் அரபுக்கள் காலம் முடிவுற்று, இரானிய முஸ்லிம்களின் ஆதிக்கம் ஏற்பட்டது. அரபு முஸ்லிம்களோடு, இஸ்லாம் சமயத்தைத் தழுவிய அயலவர்கள் கலந்து ஒன்றுயினர். அரபல்லாத முஸ்லிம்கள் அப்பாசிடுகளை ஆட்சியில் அமர்த்தி ஒரு புரட்சியைத் தோற்றுவித்தார்கள். அரபு, அரபல்லாதவர் என்ற வேறுபாடு மறைந்து முஸ்லிம்கள் யாவரும் உடன் பிறப்புக்கள் என்ற ஒற்றுமையுணர்ச்சி வலிவடைந்தது.

### உமையடு ஆட்சிமுறை

உமையடுகளின் பேரரசு முதலில் ஒன்பது பகுதிகளாய்ப் பிரிந்திருந்து பிறகு ஐந்தே மாகாணங்களாய்ப் பிரிக்கப்பட்டது.

அல் பஸ்ராவும் அல்-கூஃபாவும் சேர்ந்து அல்-இராக் மாகாண மாயும், அல்-ஹிஜாஸ், அல்-யாமன், அரேபியாவின் இடைப் பகுதி மூன்றும் இணைந்து இரண்டாம் மாகாணமாயும், டைகிரிஸ் யூப்ரடீஸ் ஆறுகளுக்கு இடைப்பட்ட நிலத்தின் வட பகுதியாகிய அல்-ஜாசிரா, அர்மீனியா, அதர்பேஜான், சிற்றாசியா வின் கிழக்குப்பகுதியாவும் சேர்ந்து மூன்றாவது மாகாணமாயும், எகிப்து நான்காவதாயும், வட ஆப்பிரிக்கா (Ifriquiyah), ஸ்பெயின், சிசிலி, அதன் அண்டைத் தீவுகள் முதலியன ஐந்தாம் பிரிவாயும் பேரரசில் இடம் பெற்றன.

ஆட்சியென்றால் நிதி நிர்வாகம் என்று கருதப்பட்டதால் முஆவியா ஆட்சியில் அதற்கெனத் தனியதிகாரியொருவர் அமர்த்தப்பட்டார். ஆட்சி, வரிதண்டல், சமயத் தலைமை என்ற அரசின் மூவினைகளும் முறையே மூன்று அதிகாரிகளின் பொறுப் பில் விடப்பட்டன. மாகாண ஆளுநராகிய அமீர் தனக்குக்கீழ் அமீல்களை மாவட்ட ஆட்சியாளர்களாய் அமர்த்திக் கொண்டான். மாகாண ஆளுநருக்கு ஆட்சிப்பொறுப்போடு நாட்டைப் படை வலிமைகொண்டு பாதுகாக்கும் பொறுப்பும் இருந்தது. வருவாய்த்துறை அதிகாரி கலீபாவிற்கு நேரிடையாய்ப் பொறுப் புடையவராயிருந்தார். குடிமக்கள் கொடுத்த திறைப்பணமே பேரரசின் முக்கிய வருவாயாகும். ஆட்சிச் செலவு, வீரர்களுக் குக் கொடுத்த உதவிப் பணம், முஸ்லிம்களுக்கு அரசால் வழங்கப் பட்ட ஆண்டுத்தொகை, சில்லறைப் பணிகளுக்குச் செலவிட்ட பொருள் போக எஞ்சிய தொகைதான் கலீபாவின் கருவூலத்தில் சேர்க்கப்பட்டது. அரசு வழங்கிய ஆண்டுத்தொகையிலிருந்து நூற்றுக்கு இரண்டரை விழுக்காடு சக்காத் தொகையைக் கழித்துக்கொண்டு கொடுத்த முவாவியாவின் வழக்கம் தற்காலத் தில் வருமானவரி வசூலிக்கும் முறையை ஒத்திருந்தது.

முஸ்லிம்களுக்கு மட்டுமே நீதி நிர்வாகம் ஏற்பட்டிருந்தது. முஸ்லிம் அல்லாதவர்களுக்கு நீதி வழங்கும் உரிமை அவர்களின் சமயத் தலைவர்களுக்கே அளிக்கப்பட்டிருந்தது. பெரிய நகரங் களில் மட்டுமே மாகாண ஆளுநர்களால் அமர்த்தப்பட்ட காதிகள் நடுவர்களாய்ப் பணிபுரிந்தார்கள். ஆளுநர்களுக்கே அவர்கள் பொறுப்புடையவர்களாயிருந்தார்கள் குரானிலும் முஸ்லிம் மரபுகளிலும் தேர்ச்சி பெற்றவர்களே நடுவர்களாயிருந் தார்கள். நீதி வழங்கியதோடு சமயப்பணி சார்பான நிதி நிறுவனங்களையும் (Waqf), அநாதைகளையும், அறிவிலிகள் (Inbeciles) ஆகியோரின் சொத்துகளையும் நடுவர்கள் நிருவகித் தார்கள். கலீபாக்களும், படைத்தலைவர்களும், மாகாண

ஆளுநர்களும் அரசியல் தொடர்பான வழக்குகளில் ஆங்காங்கே நீதி வழங்கினார்கள்.

கலீபா கையெழுத்திட்ட கடிதங்கள்போல் போலிக் கடிதங்கள் நாட்டில் நடமாடுவதை அறிந்த முவாவியா ஒரு பதிவேட்டு அலுவலகத்தை (Bureau of Registry) ஏற்படுத்தினார். ஆவணங்களின் மூலப் படிவங்களை முத்திரையிட்டு உரியவர்களுக்கு விடுப்பதற்கு முன் அவற்றிற்குப் படிபெடுத்துப் பாதுகாக்க வேண்டியது அப் பதிவேட்டத்தின் (Chancery) பொறுப்பாகும். அப்தல் மாலிக் ஆட்சிக் காலத்திற்குள் உமையடுகள் டமஸ்கசில் ஓர் ஆவணக்களரியை (Archives) உருவாக்கினார்கள்.

உமையாடுகளின் படையமைப்புப் பைசாண்டியர்களின் படையமைப்பை முன்மாதிரியாய்க் கொண்டிருந்தது. பழைய படைப் பிரிவுகளை விட்டுவிட்டு இரண்டாம் மார்வான் வீரர்களை வன்மையான சிறு குழுக்களாய்ப் பிரித்தார். கருவிக் கலங்களிலும், கவசத்திலும் அரபு வீரன் கிரேக்க வீரனிலிருந்து வேறுபடவில்லை. பாரஎறிபடைப்பொறி (Ballista), கவண்பொறி (Mangonel), மதிற்சுவர்களைத் தகர்க்கும் பெருந்தூலம் (Battering ram) முதலியவையே அரபுக்களின் பீரங்கித் தொகுதியாகும். முற்றுகைப் பொறிகளையும் ஏனைய பொருள்களையும் படைக்குப்பின் ஒட்டகங்கள் சுமந்து சென்றன. நிரந்தரப் படையிலிருந்த அறுபதினாயிரம் வீரர்களுக்குக் குடும்ப உதவித் தொகை உட்பட ஆண்டிற்கு ஆறு கோடி டர்ஹாம்கள் செலவாயிற்று. கலீபா மூன்றாம் யாசீது ஆண்டுத்தொகையில் பத்து விழுக்காடு குறைத்தார்.

அரபுக் கப்பல் படையும் பைசாண்டியரின் கடல் படை அமைப்பைப் பின்பற்றி அமைக்கப்பட்டிருந்தது. கப்பலின் கீழ்த்தளங்கள் ஒவ்வொன்றிலும் ஐம்பது ஆயுதம் தாங்கிய படகோட்டிகள் இருந்தனர். போர்வீரர்கள் மேல்தளத்தில் இருந்து போரிட்டனர்.

### உமையடுகளாட்சியில் சமுதாய நிலைமை

சிரியாவின் சிறப்புமிக்க டமஸ்கஸ் பட்டணம் கலீபாவின் தலைநகரமாகும். அந் நகரில் அரபுக்கள் தனித்தனியே குழுக்களாய்ப் பிரிந்து வாழ்ந்துவந்தனர். நகர மக்கள் வேறெங்கும் இல்லாத அளவுக்குத் தண்ணீர் வசதி பெற்றிருந்தார்கள். தெருவில் நடமாடிய ஒரு சில பெண்களும் முகத்திரையுடன்தான் காணப்பட்டார்கள். ஒட்டகங்களும் கழுதைகளும் விளைபொருட்களைச் சுமந்து தெருக்களில் சென்றவண்ணமிருந்தன. கலீபாவின்

குடும்பத்தாரும் ஆட்சிபுரிந்தோரும் டமஸ்கசில் வாழ்ந்த மேற்குடி மக்களாவார்கள். கலீபாக்களின் மாலை நேரங்கள் பொழுது போக்கிற்கும் மக்கள் தொடர்பிற்கும் என ஒதுக்கிவைக்கப் பட்டிருந்தன. முவாவியா வரலாற்றுக் கதைகளையும், பெரியவர் களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், கவிதைகளையும் கேட்டு மகிழ்ந்தார். பழங்கால வீரர்களின் கதைகளைச் சொல்ல அல்யா மனிலிருந்து ஷாரியா என்றொருவர் அழைக்கப்பட்டிருந்தார். ரோசா நறும்பானத்தை (Sharbet) எல்லோரும் விரும்பி அருந்தி னர். சில கலீபாக்கள் மதுக்குடியில் திளைத்தார்கள். இரண்டாம் அல்-வாலீது மதுக்கடலில் நீந்தினர். ஆடல், பாடல்கள் குடிப்ப தற்குத் துணைசெய்தன. இத்தகைய களியாட்டங்கள் எப்போதும் வெறும் சிற்றின்பக் கூத்தாட்டங்களாயிராமல் வாழ்வில் கலைச் சுவை ஊட்டியதோடு, கவிதை, இசை இரண்டையும் ஊக்கி வளர்த்தன. கலீபாக்களும் அரசவையினரும் சூதாட்டம், குதிரைப் பந்தயம், வேட்டையாடுதல் முதலியவற்றில் இன்புற்ற னர். அப்பாசிடுகள் மிக விரும்பி விளையாடிய குதிரைமீது இவர்ந்து செண்டுகொண்டு ஆடும் பந்தாட்டம் (Polo) உமையடு ஆட்சிக் காலத்தின் இறுதியில் பாரசிகத்திலிருந்து புகுத்தப்பட் டிருக்கலாம். சேவல் சண்டைகளையும் அக்கால மக்கள் கண்டு களித்தனர். முதலில் அரபுக்கள் நாயின் உதவியுடன் வேட்டை யாடினார்கள். பிறகு சிறுத்தைப்புலி வேட்டைக்குத் துணை செய்தது. அரண்மனைப் பெண்கள் சுதந்தரமாய் வாழ்ந்தார்கள். அலிகளைப் பணியாள்களாய்க் கொண்ட அந்தப்புர அமைப்பு இரண்டாம் அல்வாலீது காலம் வரையில் முழுமை பெறவில்லை. பைசாண்டிய முன்மாதிரியைப் பின்பற்றி அரபுக்கள் கிரேக்கர் களையே முதன்முதலாய் அலிகளாக்கிப் பயன்படுத்தினார்கள்.

பேரரசில் மக்கள் நான்கு பிரிவுகளாய்க் காணப்பட்டார்கள். முஸ்லிம்கள் குறைவாகவும் கிறித்தவர்கள் பெருவாரியாகவும் சிரியா நாட்டில் வாழ்ந்தார்கள். மக்களுக்குள் சமய, இன, மொழிப்போராட்டங்களுக்குக் குறைவில்லை. நாடுகளை வென்று ஆட்சி செய்த அரபுப் பெருங்குடி மக்கள் முதற்பிரிவினராவார் கள். அரபு முஸ்லிம்கள் அரசாங்க ஏடுகளில் பதிவாகி நாட்டு வரு வாயில் ஒரு தொகையைக் கருவூலத்திலிருந்து, ஆண்டுதோறும் பெற்றுவந்தனர். கட்டாயத்தாலோ, தூண்டப்பட்டோ இஸ்லாம் சமயத்தைத் தழுவிய புதிய முஸ்லிம்கள் (Clients) அரபுக்களின் குறுகிய நாட்டுப்பற்றுக் காரணமாய், முழுக்குடியுரிமை பெறுமலிருந்தார்கள். உமையடு ஆட்சியில், நிலச்சொந்தக்காரர் களாயிருந்த முஸ்லிம்களும், முஸ்லிமல்லாதவர்களும், கராஜ் என்ற நிலவரியைக் கொடுத்தார்கள். மாவலி (Mawali) என்ற

நிலைக்குத் தாழ்த்தப்பட்ட புதிய முஸ்லிம்கள், முஸ்லிம் சமுதாயத்தின் அடிமட்டத்தில் மன நிறைவின்றி வாழ்ந்து வந்தார்கள். அதனால் அடிக்கடி உட்பூசல் ஏற்பட்டுக் குருதி சிந்தப்பட்டது. அரபல்லாத முஸ்லிம்களே கல்வி, கலைத்துறைகளில் தேர்ச்சி பெற்று விளங்கியதால் அரசியல் தலைமைக்கு அரபு முஸ்லிம்களோடு போட்டியிட்டனர்.

அப்பாசிடுகளின் ஆட்சியில்தான் எகிப்தியர்களும் பாரசிகர்களும் பெருவாரியாய் இஸ்லாமியர்களாகி அரபு முஸ்லிம்களைச் சிறுபான்மையோராக்கினார்கள். இச்சமயமாற்றம் காரணமாய் அரசின் வரிவருமானம் குறைந்தது. இஸ்லாம் சமயத்தைத் தழுவிய கிறித்தவ, யூதச்சமயத்தினரில் ஒரு சிலரே முஸ்லிம்கள் அல்லாதவர்களைத் துன்புறுத்தினார்கள்.

சமுதாயத்தில் மூன்றும் பிரிவினராய் இருந்தவர்கள் ஆட்சியாளரோடு ஒப்பந்த அடிப்படையில் வாழ்ந்த கிறித்தவர்கள், யூதர்கள், சபியன்கள் (சொராஸ்டிரியர்கள்) பெர்பெர்கள் போன்ற இதர சமயத்தினரே. அவர்கள் திறை செலுத்தியதால் அரசின் பாதுகாப்பைப் பெற்றிருந்தார்கள். இம்முறை நபி நாயகத்தால் தோற்றுவிக்கப்பட்டது. நிலவரியும் ஆள்வரியும் கொடுத்த திம்மிகளுக்குச் (இதற சமயத்தினர்) சமய உரிமை அளிக்கப்பட்டது. அவர்கள் படைக்கலந்தாங்கிப் போர் செய்யவேண்டியதில்லை. அவர்களின் சமயத் தலைவர்களே அவர்களுக்கு நீதி வழங்கினார்கள். புனிதமான இஸ்லாமியச் சட்டம் அவர்கள் வழக்குகளில் அமலாக்கப்படவில்லை. சிரியாவில் கிறித்தவர்கள் அரசாங்கத்தொல்லையேதுமின்றி வாழ்ந்தார்கள். முவாவியாவின் மனைவி, அரசாங்க நிதிச்செயலர், அரசவைக்கவிஞர், மருத்துவர், ஆகியோர் கிறித்தவச்சமயத்தைச் சேர்ந்தவர்களே. கலீபா இரண்டாம் உமர் ஒருவரே கிறித்தவர்களுக்குத் தடை விதித்து இழிவு படுத்தினார். பொதுப்பணித்துறையில் அவர்களுக்கு அலுவல்கள் தரப்படவில்லை அவர்கள் தலைப்பாகை அணிவதைத் தடுத்துத் தனிப்பட்ட ஆடையணிய வேண்டுமென அரசு அவர்களை வற்புறுத்தியது. புதிய கோயில் கட்டுவதற்கும் தடை விதிக்கப்பட்டது. அஃதேபோல யூதர்களுக்கும் சில தடைகள் விதித்ததோடு அரசாங்க அலுவல்கள் தரவில்லை. அல்இராக்கில் ஹிஷாம் ஆட்சியில் அவர்களுக்குக் கோயில் கட்டும் உரிமை வழங்கப்பட்டது; சொராஸ்டிரியர்களுக்கு அரசாங்க அலுவல்களும் அளிக்கப்பட்டன.

சமுதாயத்தின் அடித்தளத்தில் நான்காம் பிரிவினராகிய அடிமைகள் இருந்தார்கள். போர்க்கைதிகள் யாவரும்,

பெண்கள், குழந்தைகள் உட்பட, அடிமையாக்கப்பட்டார்கள். செமிட்டிக் அமைப்பாகிய அடிமைமுறை அழியாமல் இஸ்லாம் பேணியது. ஆயினும், அடிமைகளின் நிலையைக் கணிசமாய் உயர்த்தியது. முஸ்லிம்கள் அடிமைகளாகாமல் இஸ்லாம் தடுத்தது. ஆனால், இஸ்லாம் சமயத்தை ஏற்றுக்கொண்டதன் காரணமாக அடிமைகள் சுதந்தரம் பெறவில்லை. அடிமைகளை விடுவித்தல் மறுமையில் நற்பயனளிக்கும் நல்வினையாய்க் கருதப்பட்டது. விடுதலைபெற்ற அடிமையின் ஆண்டை வாரிசின்றி இறந்தால் அந்த அடிமை, ஆண்டையின் சொத்திற்கு உரியவன் ஆனான். முஸ்லிம் நாடுகளில் அடிமை வணிகம் ஓங்கி வளர்ந்தது. பல நாட்டவர்கள் அடிமைகளாய் விற்கப்பட்டார்கள். முஸ்லிம் பேரரசில் ஆயிரக்கணக்கில் ஆண், பெண் அடிமைகள் மலிந்திருந்தார்கள். ஓர் அடிமையின் விலை 600 தினார் முதல் 1000 தினார் வரையில் இருந்தது. அரபுக்களும் அன்னியர்களும் ஒன்றாகிய இனக்கலப்பிற்கு அடிமை வணிகம் பெருங்காரணமாய் இருந்தது.

அரசியல் குழப்பங்களிலிருந்து ஒதுங்கி வாழ விரும்பியவர்களும் தேடிய பொருளைக்கொண்டு இன்ப வாழ்வில் திளைக்க விழைந்தவர்களும் அல் மதீனாவில் குடியேறி அரண்மனைகளையும், பூங்கா மாளிகைகளையும் கட்டிக்கொண்டு வாழலானார்கள். இன்ப நாட்டமுடையவர்கள் மக்காவிலும் வாழ்ந்தார்கள். ஆண்டுதோறும் அந்நகரங்களுக்கு வந்த தூயப் பயணிகள் மேலும் பெரும் பொருளைக் கொண்டு வந்து குவித்தார்கள். பணப் புழக்கம் மிகுந்திருந்ததால் அத்திருத்தலங்களின் தூய்மை குறைந்தது. களியாட்டிடங்களாகிவிட்ட இரு பட்டணங்களிலும் இசையும், காதல் கவிதையும் மலிந்திருந்தன. பல்வண்ண ஆடையணிந்து, பஞ்சணைகளில் சாய்ந்துகொண்டு, நறுமணப் புகைச் சூழலில், வெள்ளிக்கோப்பைகளில் மதுவுண்டபடி செல்வர்கள் ஆரணங்குகளின் ஆடல், பாடல்களில் மெய்மறந்திருந்தார்கள். சூதாட்டத்திலும், சதுரங்க விளையாட்டுகளிலும் மக்கள் காலங்கழித்தனர்.

கலீபா அலியின் பேர்த்தியாகிய சாயிதா சுகேனாவும், கலீபா அபூபக்கரின் பேர்த்தியான ஆயிஷாவும், அக்கால உலகில் தனிச் சிறப்பிற்குரிய மங்கையர் திலகங்களாய் விளங்கினார்கள். சுகேனாவின் மனங்கவர் அறிவும் அழகும், நகைத்திறமும் கவிதையார்வமும், அக்கால நடையுடை, அழகு, இலக்கியம் முதலிய துறைகளில் முடிவான கருத்தைத் தெரிவிக்கும் நடுவராய் அவளை விளங்கச் செய்தன. அவளுடைய வரவேற்புக் கூடத்தில் கூடிய கவிஞர்களும், சட்ட அறிஞர்களும் சுகேனாவின் நொடிப்

பேச்சாலும் நகைத்துணுக்காலும் மகிழ்ச்சியும் எழுச்சியு மடைந்தனர். சுகேனு சுதந்தரமாய்ச் செயல்படும் தன் உரிமையை விட்டுக்கொடுக்காமல் பல ஆண்களை ஒருவர் பின் ஒருவராய் மணந்துகொண்டார்.

அரபுப் பெண்களிடம் பெரிதும் போற்றப்பட்ட கண்கவர் வனப்பும், வீறார்ந்த பெருமிதமும் ஒருங்கே பெற்றிருந்த ஆயிஷா மதீனு, மக்கா நகரங்களின் வட்டத்தில் மற்றொரு குறிப்பிடத் தக்க பெண்மணியாவாள். ஆண்டவன் அளித்த அழகை முகத்திரையிட்டு மூடி மறைக்க அவள் விரும்பவில்லை. அவளும் மூவரை மணந்துகொண்டாள்.

**உமையடு ஆட்சியில் அறிவு, கலைத்துறைகளின் வளர்ச்சி**

பாலைவன மக்களாகிய அரபுக்கள் உள்நாட்டிலும் அயல் நாடுகளிலும் இடையறாது போர்களில் ஈடுபட்டுப் பல நாடுகளை வென்றனர். ஆதலால் முஸ்லிம்கள் நிலையான சமுதாய, பொருளாதாரச் சூழலைப் பெற்றிருக்கவில்லை. உமையடு ஆட்சி யில் அறிவு வளர்ச்சிக்கு அதிகவாய்ப்பில்லை. அவ்வாட்சிக்குட் பட்ட சிரியா, எகிப்து, பாரசிகம் முதலிய நாடுகள் அரபுக்களுக்கு அறிவையும் பண்பாட்டையும் ஈந்தன. அப்பாசிடுகளின் ஆட்சியில் பாக்தாது நகரில் தழைத்த விஞ்ஞானம், கலை முதலிய வற்றின் வேரினைக் கிரேக்க, பாரசிக, சிரியாப் பண்பாட்டில் காணலாம். உமையடு ஆட்சியில் விதைத்த அறிவு, நாகரிக விதை அப்பாசிடுகளின் காலத்தில் வளர்ந்து, பூத்துக் காய்க்கலாயிற்று.

பாரசிகர்கள், சிரியா மக்கள், பெர்பெர்கள் இன்னும் ஏனை யோரும் இஸ்லாமியர்களாகி அரபுக்களை மணந்து கொண்டதால் இனக்கலப்பு ஏற்பட்டு, அரபுக்கள், அரபுக்கள் அல்லாதவர் என்ற வேறுபாடு மறையத் தொடங்கிற்று. எந்நாட்டவராயினும் முஸ்லிம்களாகிவிட்டால் அரபுக்களாய்க் கருதப்பட்டார்கள். இது இஸ்லாமியப் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி யாகும். அரபுக் கணிதம், அரபு மருத்துவம் என்று பேசப்படுவன அரபுக்களால் தோற்றுவிக்கப்பட்டன என்று கொள்ளாது கலீபாவின் குடிமக்களாகிய பாரசிகர்கள், சிரியா மக்கள், எகிப்தியர், கிறித்தவர், யூதர், இஸ்லாமியர் ஆகியோர் அரபு மொழியில் தீட்டிக் குவித்த அறிவுச் செல்வம் எனக் கருத வேண்டும்.

அல்ஹிஜாஸ் நகரங்களாகிய மக்காவிலும் மதீனாவிலும் பாட்டும் இசையும், காதலும் கவிதையும் தழைத்ததைப்போல்

அல்இராக் பட்டணங்களாகிய அல்பஸ்ராவிலும் அல்கூஃபா விலும் அறிவும் கலையும் செழித்தோங்கின. அலியின் தலைநகரா யிருந்த அல்கூஃபா பண்டைய பாபிலோன் நகருக்கு அருகில் அமைந்திருந்தது. இட அமைப்பு, வாணிபம், குடியேற்றம் ஆகிய வாய்ப்புகளைப் பெற்ற அல்கூஃபாவும் அல்பஸ்ராவும் ஓரிலக்கத்தை விஞ்சிய மக்களையும் செல்வ வளத்தையும் பெற்றி ருந்தன. புதிய முஸ்லிம்கள் குரானைப் படிக்கவும், அரபுக்க ளோடு பழகவும் அரசாங்க அலுவல்களில் அமரவும் விரும்பிய தால் அரபுமொழியும் இலக்கணமும் ஆர்வத்தோடு கற்கப் பட்டன. பன்மொழி பேசுவோரிடையில் வளர்ந்து அன்றாட வழக்கிலிருந்த அரபு மொழி குரான் மொழியிலிருந்து பெரிதும் வேறுபட்டிருந்தது. பெயர், வினை, இடையாகிய மூன்றுவகைச் சொற்களையே கொண்ட ஓர் இலக்கண நூல் துவாலி என்பவ ரால் கி.பி. 688-ல் எழுதப்பட்டது. அல்-கலீல் அகமது எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முதல் அரபு மொழி அகராதியைத் தொகுத்தும் யாப்பிலக்கணத்தை வகுத்தும் தந்தார். குரான் ஆராய்ச்சியும் விளக்கமும் மொழிநூலையும் சொற்களஞ்சியக் கலையையும் தோற்றுவித்தன. குரான், இஸ்லாமிய மரபுகளின் அடிப்படையில் சட்டமும், சமய சித்தாந்தமும் எழுந்தன. இஸ்லாமியச் சட்டம் சமயத்தோடு நெருக்கமாய்த் தொடர்புற் றிருந்தது. மரபும் சட்ட முறைமையும் பிற்கால வளர்ச்சியில் அவ்வளவாகப் பழைமையைப் பின்பற்றவில்லை. அரபு விஞ் ஞானமும் இக் காலத்தில் தோன்றிற்று. அலெக்சாண்டிரியா வைச் சேர்ந்த கிறித்தவ குரு அரூன் கிரேக்க மொழியில் எழுதிய மருத்துவ நூலை யூத மருத்துவர் ஒருவர் அரபு மொழியில் பெயர்த்துத் தந்தார். மருத்துவத்தோடு அரபுக்கள் சிறப்பாய் வளர்த்த இடைக்கால வேதியியலும் வளர்ந்தது.

வரலாற்று ஆராய்ச்சியிலும் அரபு முஸ்லிம்கள் ஆர்வமுடைய வர்களாயிருந்தார்கள். தொடக்ககால கலீபாக்கள் தங்களுக்கு முன்னிருந்த ஆட்சியாளர்களின் செயல்முறைகளை அறிய விரும்பினார்கள். நபிநாயகம், அவருடைய தோழர்கள் பற்றிய பல செய்திகளையும் திரட்டி, அன்னார் வாழ்க்கை நூல்களையும் நாடுகளை வென்ற வரலாற்றினையும் முஸ்லிம்கள் எழுதினார்கள். தோற்ற மக்களும் தங்கள் பழைய சாதனைகளை உலகிற்குப் பறை சாற்ற விரும்பினார்கள். தென் அரேபியாவில் தோன்றிய அபீட் (Abid) இபின்ஷாரியா முவாவியாவின் அழைப்பையேற்று டமஸ்கசிற்குச் சென்று பண்டைய அரபு மன்னர்களையும், மக்களையும் பற்றி வரலாற்று நூல்களை எழுதியதாகவும் அவை வரலாற்றாசிரியன் அல்மசூதி காலத்தில் புழக்கத்தில் இருந்த

தாகவும் அறிகிறோம். உமையடு ஆட்சியில் சமயம், தத்துவம் தொடர்பான இயக்கங்களின் தொடக்கத்தையும், எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பகுத்தறிவுச் சிந்தனை தழைப்பதையும் காண்கிறோம். டமஸ்கஸ் நகரத்தைச் சேர்ந்த தூயஜான் வாயிலாகக் கிறித்துவ அறிவும், கிரேக்கக் கருத்துகளும் இஸ்லாமியர்களுக்கு அறிமுகமாயின.

நபிநாயகம் கடவுளையும் மனிதனையும் இணைக்கக் குரானை வெளிப்படுத்தினர். ஷியா வகுப்பினர் இமாமை இடைநிறுத்தி அப் பணியைத் தந்தனர். முஸ்லிம் சமுதாயத்திற்குத் தெய்வத்தால் குறிக்கப்பெற்ற முறையான தலைவர் இமாமே. அவரே நபிநாயகத்தின் நேர்வழித்தோன்றல் என்ற ஷியாக் கோட்பாடு உமையடு ஆட்சியில் உறுதியாய் உருப்பெற்றது. இக் கோட்பாட்டை உருவாக்குவதில் கிறித்துவக் கருத்துகளுக்கும் பங்குண்டு. பின்னால் ஷியா வகுப்பிலும் பல பிரிவுகள் தோன்றின.

உமையடுகளின் காலத்தில் பேச்சாற்றலை முறையாய்ப் பயின்றனர். வெள்ளிக்கிழமை நண்பகல் வழிபாட்டில் சமயக் கருவியாய் அது பயன்பட்டது. போர்வீரர்களுக்கு உணர்ச்சியூட்டத் தளகர்த்தர்களுக்கு நாவன்மை தேவையாயிருந்தது. கருத்துகளைப் பரப்பப் பேச்சுத் திறன் ஒன்றே அக் காலத்தில் வாய்ப்பளித்தது.

செய்யுட் கலை சிறப்பாய் முன்னேறியது. அதில் காதல் கவிதை முதலிடம் பெற்றுத் திகழ்ந்தது. மஜ்நுன் லெய்லாவைக் கதாநாயகராய்க் கொண்டு அரபு, பாரசிக, துருக்கி மொழிகளில் காதற்காவியங்கள் தீட்டப்பெற்றன. அரசியல் தொடர்பான பாடல்களும் உணர்ச்சி ததும்பும் பாடல்களும் பாடப்பெற்றன. இக் காலக் கட்சி நாளேடுகள் செய்வதை அக் காலப் பாவலர்கள் பாடலைக் கொண்டு செய்தார்கள்.

அக் காலத்தில் பள்ளிவாசல்களே பள்ளிகளாயிருந்தன; குரானைப் படித்தவர்களே ஆசிரியர்களாயிருந்தார்கள். அரபு மொழியை எழுதப் படிக்கக் கற்றல், செய்யுட்கலை பயிலுதல், அம்பு, வில் கொண்டு போரிடுதல், நீந்துதல் முதலியவற்றைக் கற்பதோடு அயலவர் உரிமைகளை மதித்தல், பெண்களை மதித்தல், வீரம், பொறை, ஆண்மை, வண்மை, வேளாண்மை முதலிய பண்புகளைப் பயிலுதல் ஆகியவையே அக் காலக் கல்விமுறையாகும்.

அரபுக்களின் மருத்துவம் பெரிதளவு கிரேக்கர்களுடைய தாகும். அலெக்சாண்டிரியாவிலிருந்த மருத்துவப் பள்ளிகளைக் கலீபா இரண்டாம் உமர் ஆண்டியோக்கிற்கு மாற்றிவிட்டார். அரபு மக்களின் கட்டடப்பாங்கை அல்யாமனில்தான் காண வேண்டும். சுடாத செங்கற்களைக் கொண்டு வீடுகளைக் கட்டி மரத்தாலும் மண்ணாலும் தட்டையான கூரைகளை அமைத்துக் கொண்டார்கள். மக்கள் திரண்டு சென்று வழிபட்ட காபாக் கோயில் கூரையின்றி இருந்தது. எகிப்திலும், சிரியாவிலும் காணப்பட்ட கிரேக்கக் கட்டடக் கலையைப் பின்பற்றிப் பெட்ரா விலும் பல்மைராவிலும் அரண்மனைகளும் ஆலயங்களும் கட்டப் பட்டன. அரபுக்களின் கட்டடக் கலை, சமயத் தொடர்பான கட்டடங்களிலே உச்சநிலை அடைந்தது. விழுந்து வணங்குகின்ற இடமென்று பொருள்படும் மஸ்ஜித் என்ற சொல்லிலிருந்து தோன்றிய மசூதியில் இஸ்லாமிய நாகரிக வரலாற்றின் வளர்ச் சியைச் சிறிய அளவில் காண்கிறோம். முஸ்லிம்களுக்கும் அயல் நாட்டினருக்கும் இடையில் ஏற்பட்ட பண்பாட்டுக் கலப்பின் விளைவினை விளக்க இதனைவிட வேறொரு சான்று சொல்வதற் கில்லை.

முகம்மதுவினால் மதீனாவில் எளியமுறையில் அமைக்கப் பட்ட தொழுகை இடமே கூட்டு வழிபாட்டுப் பள்ளியின் முந்தை வடிவமாய்த் திகழ்ந்தது. அப் பள்ளி சுடாத செங்கற்களால் எழுப்பிய சுவர்களுடன், கூரை வேயாது திறந்தவெளியிட மாகவே முதலில் இருந்தது. பின்னால் பகலவனின் வெப்பத் தாக்குதலைத் தடுக்கப் பக்கத்துக் கட்டடங்களின் கூரைகளை நீட்டி அம் முற்றம் மூடப்பட்டது. பேரீச்ச மரங்களின் அடிமரங் களைத் தூண்களாய் நிறுத்தி அவற்றின் இலைகளையும் சேற்றை யுங் கொண்டு கூரை அமைக்கப்பட்டது. தொழுகைக்கு வந்தவர் களுக்குக் கொள்கைவிளக்கம் தர முகம்மது நபிக்கு ஓர் அடிமரத்தை நிலத்தில் நட்டு மேடை போட்டிருந்தார்கள். பிறகு சிரியாவின் கிறித்தவக் கோயிலைப் பார்த்து மூன்று படிகளுடன் மரத்தாலான ஒரு மேடை அமைத்துக்கொண்டார்கள். ஒரு முற்றம், வெய்யில் தாக்காதிருக்க ஒரு கூரை, ஓர் உரைமேடை— இவையே பள்ளியின் அமைப்பாகும்.

மேலை ஆசியாவிலும், வட ஆப்பிரிக்காவிலும் வென்ற நாடு களில் மக்கள் பன்னெடுங்காலமாய் வளர்த்திருந்த கட்டடக்கலை முறையினைச் சமயத்துறையில் பயன்படுத்தி அரபுக்கள் சரேசன் (Saresan) கட்டடக்கலையை உலகிற்களித்தனர். அரபு அரசில் ஆங்காங்கிருந்த கட்டடங்களைப் பார்த்து முஸ்லிம் கட்டடக்கலை வளர்ந்தது. சிரியாவிலும் எகிப்திலும் அவ் வட்டார முன்மாதிரி

களையும் கிரேக்க-உரோமானிய முறைகளையும் அரபுக்கலை பின்பற்றிற்று. இராக்கிலும், பாரசிகத்திலும் பண்டைய சால்டியன் அசிரியன் முறைகளும், பாரசிகப் பாணியும் பின்பற்றப்பட்டன. ஸ்பெயினிலும் வடஆப்பிரிக்காவிலும் அங்கிருந்த பேகன் (Visigothic) கிறித்தவக் கட்டட முறைகளைக் கையாண்டு மூரிஷ் கலை தோன்றிற்று. இந்துக்களின் பாணியில் இந்திய-முஸ்லிம் கலை உருவாயிற்று. சீனத்தில் பௌத்தக் கோயிலைப் போன்றே பள்ளி அமைக்கப்பட்டது.

நகரங்களில் பழங் கட்டடங்களையே பள்ளிகளாய் மாற்றிக் கொண்டார்கள். டமஸ்கசில் ஒரு கிறித்தவக் கோயிலைப் (Cathedral of St. John) பள்ளியாக முதலாம் அல்வாலீது மாற்றியமைத்துக் கொண்டார். சிரியாவில் பள்ளிகளுக்கு முதன் முதலாகக் கல்லினால் தூபி கட்டினார்கள். மற்ற தூபிகளுக்கு-சிறப்பாய் வடஆப்பிரிக்காவிலும், ஸ்பெயினிலும்—அதுவே முன் மாதிரியாயிற்று. முதலாம் அல்வாலீது பல தூபிகளைக் கட்டினார். ஒவ்வொரு நாட்டிலும் ஆங்காங்கிருந்த கோபுரங்களமைப்பில் தூபிகள் உருப்பெற்றன.

மக்காவை நோக்கித் தொழுவதற்கு முன், ஜெருசலத்தை நோக்கி முஸ்லிம்கள் தொழுதார்கள். அங்கே ஒரு காலத்தில் சாலோமன் ஆலயமும், புறச்சமயத்தார் (Heathen) வழிபாட்டிடமும், கிறித்தவக் கோயிலும் இருந்த மோரியாக் குன்றில் கலீபா உமர் கி.பி. 638-ல் ஓர் எளிய பள்ளியைக் கட்டினார். அதே இடத்தில் இயேசுநாதரின் கல்லறைக் கோயிலை விஞ்சும் வகையில், மக்காப் பள்ளிக்குப் போட்டியாகக் கி.பி. 691-ல் அப்தல் மாலிக் பாறைமாடக் கோயிலைக் (Dome of the Rock) கட்டி முடித்தார். புறச்சமயத்தார், யூதர்கள், கிறித்தவர்கள், முஸ்லிம்கள் ஆகிய எல்லாச் சமயத்தினரும் திருத்தலமாய்க் கருதுமிடத்தில் அப் பள்ளி அமைக்கப்பட்டுள்ளது. அக் கோயிலிலுள்ள கல்வெட்டு மிகப் பழமையான ஒன்றாகும். அழகிலும், ஒப்பனையிலும் அப் பள்ளியை விஞ்சும் வேறொரு பள்ளி இல்லையென்றே சொல்லலாம். கிறித்தவ ஆலயங்கள் இருந்த இடங்களில், அக் கோயில்களின் பொருள்களைக் கொண்டே பல பள்ளிகள் கட்டப்பெற்றன. டமஸ்கசில் அல்வாலீதால் எழுப்பப்பட்ட உமையடுகளின் பள்ளி வடஆப்பிரிக்கா, ஸ்பெயின், சிரியா நாடுகளில் கட்டப்பட்ட தொழுகை இடங்களுக்கு முன்மாதிரியாயிருந்தது. இப் பள்ளியைக் கட்டக் கான்ஸ்டாண்டிநோபிள் பேரரசர் உதவிய தொழிலாளிகளையும், இந்தியக் கைவினைஞர்களையும் அல்வாலீது அமர்த்திக் கொண்டார். இப் பள்ளியில் தொழுகைக்கென முதன்முதலாய்க் கட்டப்பெற்ற அரைவட்டத்

தனியிடமும், இலாடவடிவில் அமைக்கப்பட்ட மேல்வளைவும், ஒப்பனை வேலைப்பாடும் சேர்ந்து இப் பள்ளி முஸ்லிம் கற்பனையில் நான்காவது உலக அதிசயமாய் இடம் பெற்றுள்ளது; இஸ்லாமிய உலகில் புனித வழிபாட்டிடங்களில் நான்காவதாய்க் கருதப் படுகிறது. கூட்டு வழிபாட்டிற்குரிய பள்ளிகள் மக்கள், மன்றங்களாயும், அரசியல், கல்வி, கருத்தரங்குகளாகவும் பயன்பட்டன.

உருவ வழிபாட்டுடன் உருவமைப்புக் கலையும் நபிநாயகத்தால் கண்டிக்கப்பட்டது. தீர்ப்பு நாளில் ஓவியர்கள் கடுமையாய்த் தண்டிக்கப்படுவார்களென நபிநாயகம் அறிவித்ததாகச் சொல்லப்படுகிறது. இது சிற்பிகளுக்கும் பொருந்தும், மனிதன், விலங்கு, ஆகியவற்றின் உருவமைப்பு ஆண்டவனின் தனிச் சிறப்புரிமையாகும். இவ்வுரிமையில் தலையிடுகிறவன் தெய்வத்தைப் பழிப்பவனாய்க் கருதப்பட்டான். பள்ளிகளில் மனித உருவங்களைக் காணவே முடியாது; ஆனால் ஒரோவிடங்களில் அரண்மனைகளிலும், புத்தகங்களிலும் காணலாம். பெரும்பாலும் ஒப்பனைகள் தாவரப்பகுதியிலிருந்தும் வடிவியல் உருவப் படங்களிலிருந்துமே கையாளப்பட்டன. இதுவே அராபிய வண்ணச்சித்திர வேலையாகப் (Arabesque) பின்னர் புகழ்பெற்றது. தோற்ற மக்களின் கலைச் சிறப்புகளின் பன்னலங்களையும் திரட்டித் தங்கள் சமயத் தேவைகளுக்கேற்ப முஸ்லிம்கள் உருவாக்கிக் கொண்டார்கள். டிரான்ஸ்ஜோர்டனில் முதலாம் அல்வாலீதின் இன்ப மாளிகையிலும், குளிப்பறையிலும் சுவர் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. அச் சித்திரங்களில் பாரசிகக் கலைக்கூறுகளைக் காணலாம். ஒரு வேட்டைக் காட்சியில் சிங்கம் ஒன்று காட்டுக் கழுதையைத் தாக்குகிறது. ஆடையின்றி ஆடல் பாடலில் ஈடுபடுவோரின் ஓவியங்களும் களியாட்டயர்வோரின் சித்திரங்களும் காணப்படுகின்றன. கொடி, மரம் முதலியவற்றின் இலைத்தொகுதிகள், பழக்குலைகள், பாலைவனப் பறவைகள் முதலியவற்றாலும் திரைச்சீலை தொங்கல் மடிப்புகளாலும் ஒப்பனை செய்தார்கள். கல்வெட்டுகள் பெரும்பாலும் அரபு மொழியில் இருக்கின்றன; சில பெயர்கள் கிரேக்க மொழியில் காணப்படுகின்றன.

இஸ்லாம் சமயம் தோன்றுவதற்கு முன் அரபுக்கள் பாலைவனங்களில் பயணம் மேற்கொள்ளும் காலத்தில் பாடும் பாடல்கள், போர்ப் பாடல்கள், காதல் பாட்டுகள், சமயப் பாடல்கள் முதலியவற்றைப் பாடி மகிழ்ந்தனர். சதுரக் கஞ்சிராவும், குழலும், ஒருவகை யாழும் அவர்களின் இசைக் கருவிகளாயிருந்தன. இசை புறச்சமயத்தார் வழிபாட்டோடு தொடர்புற்றிருந்ததால் நபிநாயகத்திற்குப் பிடிக்கவில்லை. பின்னால் மதுவோடும்

களியாட்டோடும் இணைந்திருந்த இசை, சட்ட வல்லுநராலும், இறைமை நூலாராலும் வெறுத்தொதுக்கப்பட்டது. இஸ்லாம் தோற்றுவித்த அச்சம் நீங்கியதும் இசைக்கலை வளரலாயிற்று.

அரபு இசையில் தாளலயக் கூறுகளைப் புகுத்திக் கஞ்சிரா உதவியுடன் முதன்முதலில் பாடியவர் டுவேயிஸ் (Tuways) என்பவரே. பைசாண்டியப் பாரசிகப் பாடல்களை அரபு மொழியில் பெயர்த்துக்கொண்டு பாடினார்கள். பாடகிகளில் கலையரசியாய்த் திகழ்ந்தவள் ஜாமிலா என்பவள். மக்காவிலும் மதீனாவிலும் வாழ்ந்த பெரும்பாலான பாடகர்களும் இசைக் கலைஞர்களும் அவளிடம் இசை பயின்றவர்கள். செல்வச் சீமாட்டிகள் வீடுகளில் நிகழ்ந்த இசையரங்குகளுக்குக் கலைஆர்வலர்கள் சென்று மகிழ்ந்தார்கள்.

டமஸ்கஸ் அரசவையை அலங்கரித்த இசைவாணர்கள் மக்காவிலிருந்தும், குறிப்பாய் மதீனாவிலிருந்துமே சென்றனர். கவிதை, இசை, பாட்டு மூன்றும் மக்கள் ஒழுக்கத்திற்குத் தீங்கிழைக்காது, சமூக ஒழுகலாறுகளைப் பண்படுத்தும், ஆண் பெண் உறவுகளைத் தூய்மைப்படுத்தும் என்று அவற்றின் ஆதரவாளர்கள் வாதிட்டனர். கலீபா முதலாம் யாசீது இசைப் பாடல்களை அமைத்துப் பாடினார். அவருடைய அரண்மனையில் நடைபெற்ற களியாட்டங்களில் மதுவும் பாட்டும் இடம் பெற்றன. பல கலீபாக்கள் பாடகர்களைப் போற்றி ஆதரித்தனர். உமையடு ஆட்சியின் இறுதியில் இசைக்கலைப் பயிற்சிப் பரவலாயிருந்ததைச் சுட்டிக்காட்டி, உமையடுகள் சமயப் பற்றற்றவர்கள் என்று குற்றஞ் சாட்டி அவர்கள்பால் நாட்டில் வெறுப்பையும், எதிர்ப்பையும் அப்பாசிடு கட்சியினர் வளர்த்தார்கள்.

போர்த்துறையில் தங்கள் திறமையை உலகிற்கு உணர்த்திய அரபுக்கள், கலைகளைக் கற்று அத் துறையிலும் வெற்றிகளைக் குவிக்கத் தொடங்கினார்கள்.

# 5. அப்பாசிடு ஆட்சி
## (கி.பி. 750—847)

இஸ்லாமிய வரலாற்றில் உமையடு ஆட்சியின் அழிவு ஒரு புதிய காலத்தைத் தோற்றுவித்தது. அப்பாசிடு ஆட்சி ஏற்பட்டதும் முஸ்லிம்களின் முக்கியமான மையம் கிழக்கில் யூப்ரடீஸ்-டைகிரீஸ் ஆற்றுப் படுகைக்கு இடம் மாறியது. செல்வத்திலும் செல்வாக்கிலும் அரேபியாவின் முக்கியத்துவம் குறைந்ததும், தலைநகராயிருப்பதற்கு வேண்டிய தகுதியை டமஸ்கஸ் இழந்துவிட்டது. இந்தியா, சீனு, நட்டாசியா கிழக்கிந்தியத் தீவுகளுடன் விரிவாக வாணிபஞ்செய்த இராக், சிரியா, எகிப்து நாடுகளைக் காட்டிலும் வளமிக்கதாயிருந்தது. உமையடுகளின் உலகப் பற்றைச் சுட்டிக்காட்டி அப்பாசிடுகள் மக்கள் ஆதரவைத் திரட்டிக் கொண்டார்கள். அலியின் பற்றுளர்கள் உமையடுகளைக் கடுமையாய் எதிர்த்தார்கள். அரசியலிலும் சமுதாயத்திலும் அரபல்லாத முஸ்லிம்களுக்கு அளிக்கப்பட்ட தாழ்ந்தநிலை அவர்களிடையே மனக் கசப்பை வளர்த்திருந்தது. இஸ்லாமிய உலகில் மனநிறைவின்றி வாழ்ந்தோர் அனைவரின் ஆதரவாளர்களாக அப்பாசிடுகள் காட்சியளித்தனர்.

கலீபா அபூ-அல்-அப்பாஸ் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தவுடன் அல்-இராக் மேடையில் இஸ்லாமிய அரசியல் நாடகத்தின் மூன்றுவது அங்கம் தொடங்கிற்று. அல்-கூஃபா பள்ளியில் அவர் நிகழ்த்திய தொடக்கக் குத்பாவில் தம்மைக் குருதி சிந்தியவர் (Al-suffah) எனக் குறிப்பிட்டுக்கொண்டார். அதுவே அவருக்கு மாற்றுப்பெயராயிற்று. அவர் தோற்றுவித்த மரபு படைவலிமை கொண்டே ஆட்சி செய்யவேண்டியதாயிற்று. கலீபாவின் அரியணைக்கு அருகிலேயே தூக்கிலிடுபவர்களின் தலைவருக்கும் கம்பளம் விரிக்கப்பட்டது. மிகவும் புகழ்பெற்ற, நீண்டகாலம் ஆட்சிபுரிந்த அரசகுலமாய் இம் மரபு திகழ்ந்தது. கி.பி. 750-1258 வரை அதாவது ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேல் அப்பாசிடுகளின் ஆட்சி நீடித்தது.

தங்கள் சமயச் சார்பின் அடையாளமாய்ப் புதிய கலீபா, நபிநாயகம் அணிந்திருந்த போர்வையை வெள்ளிக்கிழமை வழிபாட்டின்போதும், ஆட்சியேற்ற ஆண்டுவிழா நாள்களிலும்

அணிந்துகொண்டார் சமயச் சட்ட அறிஞர்களின் அறிவுரையைப் பெற்று ஆட்சிமுறைகளை வகுத்தார். ஆயினும் வெளிப்போற்றப்பட்ட டமஸ்கஸ் கலீபாவைப் போன்றே பாக்தாது கலீபாவும் உலகியல் நாட்டமுடையவராகவே வாழ்ந்தார். உமையது ஆட்சி முற்றிலும் அரபாட்சியாகும். அப்பாசிடு ஆட்சியை நிறுவிய புதிய முஸ்லிம்களில் அரபுக்கள் ஒரு பகுதியினரே. கலீபா ஆட்சியும் இஸ்லாமும் இனி ஒன்றல்ல.

எகிப்து, குராசான், சிந்து போன்ற நாடுகள் புதிய ஆட்சியை முற்றிலும் ஏற்கவில்லை. சிரியா கலவரம் செய்த வண்ணமிருந்தது. அப்பாசிடு-ஆலிது கூட்டுறவு நீடிக்கவில்லை. ஆலிதுகள் ஏமாற்றம் அடைந்தனர்.

### அபூ-அல்-அப்பாஸ் (கி.பி. 750-754)

அல்கூஃபாவில் சிறிது காலம் வாழ்ந்தபின் அல்-அப்பாஸ் அல்-அன்பாருக்குச் சென்று ஒரு மாளிகையும் கட்டிக்கொண்டார். உறவினர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் பேரரசினைப் பிரித்துக்கொடுத்தார். ஆயினும், வெளிநாட்டார் படையெடுப்பைத் தடுக்குமளவிற்கு அரசு வலிமை பெறவில்லை. கலீபா இளம் வயதில் பெரியம்மை நோய்க்கு இரையானார். இறப்பதற்கு முன் தம் இளவல் அல்மன்சூர் தமக்குப்பின் பட்டத்திற்கு வரவேண்டுமெனக் குறிப்பிட்டுச் சென்றார். மனித உயிரை மதிக்காமல் கொன்று குவித்துத் தமது பட்டப்பெயருக்குத் தம்மைத் தகுதியாக்கிக் கொண்டார். இன்ப வாழ்வில் திளைக்காது கடமைகளில் அவர் கண்ணுங்கருத்துமாயிருந்தார்.

### அல்மன்சூர் (754-775)

அபு-ஜஃபார் அல்-மன்சூர் என்ற சிறப்புப் பெயருடன் அண்ணனைத் தொடர்ந்து கலீபாவானார். பழி பாவத்திற்கஞ்சாத அல்-மன்சூர் அவ்வம்சத்தில் தலைசிறந்தவராய் விளங்கினார். புதிய மரபினை உறுதியாய் நிறுவியவர் அவரே. அவரைப் பின்பற்றி ஆட்சிபுரிந்த முப்பத்தைந்து கலீபாக்களும் அவருடைய நேர் மரபு வழியினரேயாவார்கள். அல்மன்சூரை எதிர்த்தவர்களும் ஆதரவாளர்களில் அஞ்சத்தக்கவர்களும் ஒருவர் பின் ஒருவராய் வஞ்சகமாய்க் கொல்லப்பட்டார்கள். குறைபட்டுக் கொண்டிருந்த ஷியாக்கள் இரக்கமின்றி நசுக்கப்பட்டார்கள். ஆலிதுகள் இமாம்களையே உண்மையான கலீபாக்களாய்க் கருதியதால் அப்பாசிடுகள் அப் பதவிக்கு உரிமையற்றவர்களெனக் கருதினார்கள். ஆதலால் இஸ்லாமிய அரசில் அவர்கள் ஒரு பிளவுச் சக்தியாகவே இருந்துவந்தனர். வடஆப்பிரிக்கா,

ஸ்பெயின் நீங்கலாக மற்ற பகுதிகளில் அடக்குமுறையால் புதிய ஆட்சி உறுதிப்பட்டது.

அல்மன்சூர் ஆட்சிக்கு வருமுன்பே ஒரு பரந்த பகுதியின் ஆளுநராயிருந்து ஆட்சித்திறம் பெற்றிருந்தார். பகை நகரமாய் விளங்கிய அல்-கூஃபாவிற்கு அருகில் அல்-அன்பாரில் வாழ அஞ்சிய அல்-மன்சூர் டைகிரிஸ் ஆற்றின் மேலைக்கரையில் ஒரு பெரும் நிலப்பரப்பைத் தேர்ந்தெடுத்தார். ஒரு குன்றைச் சுற்றித் தலைநகரம் அமைக்கத் திட்டமிட்டார். குன்றின்மேல் அரண்மனையைக் கட்டவும் முடிவு செய்தார். 'கடவுள் கொடுத்தது' எனப் பொருள்படும் பாக்தாது என்ற பழைய சசனீடு கிராமம் இருந்த இடத்தில் புதிய நகரம் நான்காண்டுகளில் நிர்மாணிக்கப்பட்டது. பேரரசின் பல பகுதிகளிலிருந்து கட்டடக் கலைஞர்கள், கைவினைஞர் போன்ற நூறாயிரம் தொழிலாளிகளைக்கொண்டு சற்றேறக் குறைய 49 இலட்சம் டர்ஹாம் செலவில் பாக்தாது நகரம் பெற்றது.

பண்டைய உலகின் சிறந்த தலைநகரங்கள் அமைந்திருந்த அதே ஆற்றுப் படுகையில் அல்மன்சூரால் 'அமைதி நகர்' (Madinat-al-Salam) என அழைக்கப்பட்ட வட்ட வடிவமான பாக்தாது 90 அடி உயரமுள்ள சுற்றுச் சுவரையும், ஓர் ஆழமான அகழியையும், செங்கற்களாலான இருபுறச்சுவர்களையும் பெற்றுச் சிறந்த அரணாக விளங்கியது. அச் சுவர்களில் சம தூரத்தில் நான்கு புறவாயில்களிருந்தன. அவ்வாயில்களிலிருந்து நான்கு பெரும் பாட்டைகள் தொடங்கிப் பேரரசின் நான்கு திசைகளிலும் சென்றன. தலைநகரம் போர்வீரர்களின் பாசறையாகவும் இருந்தது. கிழக்கில் சீனம் வரையிலுள்ள நாடுகளோடு தொடர்பு கொள்ள டைகிரிஸ் ஆறு பயன்பட்டது. மெசொபொடேமியா, அர்மீனியாவிலிருந்தும் அதன் சுற்றுவட்டாரங்களிலிருந்தும் உணவுப் பண்டங்களையும், கடல் கடந்த நாடுகளிலிருந்து வந்த பொருள்களையும் அவ்வாற்றின் வழியே கொண்டுவந்தார்கள். சிரியாவிலும், அதன் அண்டை நாடுகளிலும் கிடைப்பனவற்றைக் கொண்டுவர யூப்ரடீஸ் ஆறு பயன்பட்டது.

கலீபாவின் அரண்மனை, நகரின் மையத்தில் கட்டப்பெற்றுத் 'தங்கவாயில்' என்ற பெயருடன் விளங்கிற்று. வரவேற்புக் கூடத்தின் தூபி 130 அடி உயர்ந்திருந்தது. அண்டையிலிருந்த சசனீடு தலைநகர் ஒன்றின் அழிபாடுகள் புதிய நகருக்கு வேண்டிய கட்டடப் பொருள்களைத் தந்தன. அல்மன்சூர் வேறு இரு அரண்மனைகளையும் கட்டி முடித்தான். அவற்றில் ஒன்று கலீபாவின் மூத்த மகனுக்காகக் கட்டப்பட்டது. அரண்மனைக்

கருகில் பெரிய பள்ளி அமைந்திருந்தது. தெருக்கள் ஒழுங்காய் அமைந்திருந்தன. தெருக்கோடியில் கடைகள் கட்டப்பட்டுக் காவல் நிலையத்தின் மேற்பார்வையில் தூய்மையான பொருள் களை விற்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்காடிகள் நகருக்கு வெளியே இருந்தன.

ஒருசில ஆண்டுகளில் பாக்தாது வாணிப மையமாகவும், அரசியல் மையமாயும் வளர்ந்தது. மந்திரக்கோலால் மாயமாய்த் தோன்றியது போன்றிருந்த பாக்தாது, புகழ்பெற்ற பண்டைய தலைநகரங்களாகிய டீசிஃபோன், பாபிலன், நினவே, ஊர் (Ur) ஆகிய பெருநகரங்களின் வாரிசு போன்று விளங்கிற்று. கான்ஸ் டாண்டிநோபிளுக்கு அடுத்தாற்போல் பாக்தாது நகரம் இடைக் காலத்தில ஈடிணையற்ற நகரமாய்த் திகழ்ந்தது.

பாக்தாது அமைந்த இடம் கீழ்நாட்டுக் கருத்துகளுக்கும் பாரசிகப் பழக்கங்களுக்கும் வழி திறந்துவிட்டது. கலீபா ஆட்சி எளிய அரபாட்சியாயிராமல் ஆடம்பர இரானிய வல்லாட்சியாய் மாறிற்று. பாரசிகப் பட்டங்கள், பாடல்கள், கருத்துகள், எண்ணங்கள், மதுவகைகள் ஆட்சியில் இடம் பெற்றன. கலீபாக்களும் செல்வர்களும் பாரசிகப் பெண்களை மணந்தும் காமக்கிழத்திகளாய்க் கொண்டும் வாழ்ந்தார்கள். அல்மன்சூர் பாரசிகத் தலைப்பாகையை அணிந்தார். குடிமக்களும் அவரைப் பின்பற்றினார்கள். பாரசிகத் தொடர்பு அரபு மக்களின் வாழ் வைப் பண்படுத்திற்று; விஞ்ஞான வளர்ச்சிக்கும் புலமை நாட்டத்திற்கும் வழிவகுத்தது. அரபாதிக்கம் இருதுறைகளில் மட்டுமே இருந்தது அரபு மொழி ஆட்சி மொழியாயிருந்தது; இஸ்லாம் அரசின் சமயமாயிருந்தது.

பாரசிக முறையைப் பின்பற்றி அல்மன்சூர் அரசாங்கத்தில் அமைச்சர் பதவியை ஏற்படுத்தி இபின் பார்மக் என்பவருக்கு அப் பதவியினை அளித்தார். அவர் நிதித்துறைத் தலைவராய் உயர்ந்தார். பிறகு அவர் மாகாண ஆளுநரானார். அவர் குடும்பம் சிறந்த அமைச்சர்களை நாட்டிற்களித்தது. முஆவியா வகுத்த ஆட்சிப் பாதையினை உமையடுகள் பின்பற்றியதுபோல் அப் பாசிடுகளுக்கு அல்மன்சூர் வழிகாட்டியாய் அமைந்தார்.

பைசாண்டியப் பேரரசர் சிற்றாசியாவையும் அர்மீனியாவை யும் தாக்கிச் சூறையாடினார். அரபுப் படையின் வலிமையைக் கண்ட பேரரசர் ஏழாண்டுகளுக்கு அரபுக்களைத் தாக்குவதில்லை என ஒப்புக்கொண்டு தம்முடைய படையை விலக்கிக்கொண்டார் அதன்பிறகு கலீபா எல்லைப்புறங்களில் அரண்களமைத்துப்

பாதுகாப்பிற்கான ஏற்பாடுகளைச் செய்தார். காஸ்பியன் கடலுக்குத் தென்கிழக்கிலிருந்த நாடு அரபரசோடு இணைக்கப் பட்டது. அலியின் பின் தோன்றல்களும் கட்சியினரும் கலகஞ் செய்து தோற்றனர். கலகத் தலைவர்கள் முகம்மதுவும் இப்ரா கிமும் கொல்லப்பட்டனர். ஸ்பெயின் நாட்டில் படை யெடுத்துச்சென்ற அல்-மன்சூரின் வீரர்கள் படுகொலை செய்யப் பட்டு அங்கிருந்து விரட்டப்பட்டார்கள்.

ஆளுநர்களும் மற்ற பெரிய அதிகாரிகளும் கண்காணிக்கப் பட்டுக் கடமையில் தவறியவர்கள் ஒறுக்கப்பட்டார்கள். அல்-மன்சூரின் ஒற்றர்கள் அரசு அலுவர்களைக் கண்காணித்ததோடு பண்டங்களின் விலைவாசிகளைப் பற்றிய தகவல்களை அவ் வப்போது கலீபாவிற்குத் தெரிவித்து வந்தார்கள். ஏனெனில் விலைகளின் உயர்வால் மக்கள் தொல்லைப்படாமலிருந்தாலன்றி ஆட்சியைக் காப்பாற்ற முடியாதெனக் கலீபா கருதினர்.

அல்-மன்சூர் நிதித்துறையில் வல்லுநராயிருந்தார். பாக்தாது நகர நிர்மாணச் செலவினைத் தணிக்கைசெய்து அலுவலர்கள் அடைந்த சிறு ஆதாயத்தைக் கூட அவர்களிடம் விட்டுவைக்க வில்லை. வரி வசூலிப்பவர்களிடம் கலீபா கண்டிப்பாயிருந்தார். அல்-கூஃபா மக்களிடம் தண்டிய பணத்தைக்கொண்டு அந் நகருக்கு அரணமைத்தார். அவருடைய கருவூலம் நிரம்பி வழிந் தது. அல்-மன்சூரின் பெயரன் ஹாரூன் ஆட்சியின் செல்வச் செழிப்பு அல்-மன்சூரின் நிதி நிர்வாகத் திறமையின் விளைவே. அண்ணனைப்போல் அல்-மன்சூர் மது, மங்கை, இசை இன்பங் களில் மயங்கவில்லை; அறிஞர்களோடு உரையாடுவதில் இன்பங் கண்டார். அவர் ஒரு சிறந்த நாவலராயும் திகழ்ந்தார். விஞ்ஞான நூல்களை அரபு மொழியில் பெயர்த்தெழுதச் செய்த முதல் கலீபா அல்-மன்சூரே. அவர் ஒரு சமயப் பற்றுளரேயன்றிச் சமய வெறியர் அல்லர்.

**அல்-மாதி (755-785)**

ஆட்சிப்பீடமேறியவுடன் அல்-மாதி ஒரு சில கொடிய குற்ற வாளிகள் நீங்கலாகச் சிறைக்கைதிகளை விடுதலைசெய்தார். தந்தை திரட்டி வைத்திருந்த பெரும்பொருளைத் தாராளமாய் அள்ளித் தந்தார்; பல பள்ளிகளை விரிவுபடுத்தி அழகுபடுத்தினர். புனிதப் பயணம் மேற்கொண்டோருக்குத் தங்கல்மனைகள் கட்டப் பெற்றன. அஞ்சல்துறையில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டது. உலகின் பல பகுதிகளிலிருந்தும் வந்து குவிந்த பண்டங்களின் பெருநிலையமாய் பாக்தாது விளங்கிற்று. வளமாய் வாழ்ந்த

மக்கள் இசை, இலக்கியம், கவிதை போன்ற கலைகளில் திளைத்தார்கள்.

அல்-மாதியைப் பின்பற்றி அவர் மூத்த மகன் அல்-ஹாதி (785-86) சிறிது காலம் கலீபாவாயிருந்தார். அவர் ஆட்சிக் காலத்தில் இரு கலகங்கள் ஒடுக்கப்பட்டன. கவிஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் பெரும் பொருள்கொடுத்துப் பேராதரவு தந்தார்.

**ஹாரூன் அல்-ரஷீது (786-809)**

அல்-மாதியின் மகனும், அல்-ஹாதியின் இளவலுமான ஹாரூன் நேர்மையாளர் என்ற சிறப்புப் பெயருடன் கலீபாவானார். சிறுவயதில் ஹாரூன் காலீதின் மகன் யாஹியாவிடம் கல்விகற்றார். அவரைச் சிறையினின்று விடுவித்து அமைச்சராக்கி அவரிடம் ஆட்சிப்பொறுப்பைத் தந்தார். கலீபா யாஹியாவின் அதிகாரத்திற்கு எவ்விதக் கட்டுப்பாடும் ஏற்படுத்தவில்லை. யாஹியாவும் அவருடைய மக்கள் இருவரும் (Al-Fadl and Jafar) கி.பி.786-803 வரை பேரரசினை ஆண்டுவந்தனர். பார்மக் குடும்பத்தினர் அரண்மனைகளில் ஆடம்பரமாய் வாழ்ந்தனர். ஏராளமான செல்வத்தைத் திரட்டித் தங்களைச் சார்ந்தவர்களுக்கும் போற்றியவர்களுக்கும் தாராளமாய்ப் பொன்னும் பொருளும் வழங்கினார்கள். அரபு நாடுகளில் பிற்காலத்தில் வள்ளன்மைக்கு யாஹியாவின் மகன் ஜஃபார் உதாரணமாய் விளங்கியதோடு வள்ளல்களைப் பார்மகி என்றே அழைக்கும் வழக்கமும் ஏற்பட்டது. ஜஃபார் எழுத்தாற்றலும் இலக்கியத்திறனும் பெற்றிருந்தான்; உடையணிவதில் புதுப் பாணியை ஏற்படுத்தினான் இரமலான் மாதத்தில் பள்ளிகளில் விளக்குகளை ஏற்றிவைக்கும் வழக்கத்தை அல்-ஃபாதல் புகுத்தினான். கால்வாய்கள் வெட்டுவது, பள்ளிகள் கட்டுவது போன்ற பொதுப்பணிகளில் பார்மகிகள் தாராளமாய்ச் செலவழித்தார்கள்.

பார்மகிகள் இரானியராகவும், ஷியாப்பிரிவினராயுமிருந்தார்கள். உரிமைகளோடு மோதுகிற அளவிற்கு அவர்களதிகாரம் ஓங்கிவிட்டது. இதனை ஹாரூனால் சகிக்க முடியவில்லை. அவருடைய இன்பத் தோழன் ஜஃபார் கி.பி. 803-ல் கொல்லப்பட்டான். வயது முதிர்ந்த யாஹியாவும் அல்-ஃபாதல் உள்ளிட்ட மூன்று மக்களும் சிறையில் மடிந்தனர். அவர்களுடைய பெரும்பொருள் பறிக்கப்பட்டு அக் குடும்பம் அழிந்தது.

அப்பாசிடு பேரரசிலிருந்து மேலை ஆப்பிரிக்கா நழுவியதும், இழக்காப்பிரிக்கா அப்பாசிடு ஆட்சியை எதிர்த்துக் கலகஞ்செய்த

வண்ணமிருந்தது. எகிப்திய வருவாயிலிருந்து அதன் ஆட்சி ஆளுநர் இப்ராகிம் விரும்பியவாறு கிழக்காப்பிரிக்காவின் ஆட்சிப் பொறுப்பை நிரந்தரமாய் அவர் குடும்பத்திடமே விட்டுவிட ஹாரூன் சம்மதித்தார். ஹாரூன் மேலாணையை ஏற்பதற்கு அடையாளமாக, ஆண்டிற்கு 40,000 தினார்கள் திறையாகச் செலுத்தவும் இப்ராகிம் ஒப்புக்கொண்டார்.

நட்டாசியாவில் ஏற்பட்ட கிளர்ச்சிகளை அடக்கி ஹாரூன் இந்துகுஷ்வரை அரசினை விரிவாக்கினார். பைசாண்டியத் திடீர்த் தாக்குதல்களைச் சமாளிக்கச் சிற்றாசியாவைத் தனிமாகாணமாக்கி ஒரு படைத் தலைவனை ஆளுநராக்கினார். பைசாண்டியர் தூண்டுதலால் அர்மீனியாவின்மீது படையெடுத்துவந்த துருக்கியர்கள் கலிபாவின் படையால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள்.

பைசாண்டியப் பேரரசு, அப்பாசிடு பேரரசு இரண்டிற்குமிடையே நிலவிய அமைதி, புதிதாய்ப் பதவியேற்ற பைசாண்டியப் பேரரசர் மேற்கொண்ட நடவடிக்கையால் குலைந்தது. பேரரசி ஐரீன் கொடுத்த திறைப்பணத்தைத் திருப்பித் தராவிடில் போருக்கு ஆயத்தமாகுமாறு ஹாரூனுக்கு உரோமானியர்கள் எச்சரிக்கை மடல் விடுத்தார்கள். அதனைக்கண்டு ஹாரூன் பொங்கியெழுந்து பெரும்படையுடன் உரோமப் பேரரசை ஹெராக்ளியாவரை சூறையாடினார். உரோமானியர் மேலும் அதிகமான திறை செலுத்தச் சம்மதித்துச் சமாதானஞ் செய்து கொண்டனர். ஆனால், அவர்கள் ஒப்பந்தத்தை மதியாமல் மீண்டும் ஹாரூன் அரசின் எல்லைப்புறத்தைத் தாக்கினார்கள் மீண்டும் மீண்டும் கான்ஸ்டாண்டிநோபிளோடு போரிடவேண்டிவந்தது. இறுதியாக ஹெராக்ளியா கைப்பற்றப்பட்டு நெசிஃபோரஸ் என்ற உரோமானியப் பேரரசனும் அவன் குடும்பத்தில் ஒவ்வொருவரும் தனிப்பட்ட வகையில் கப்பங்கட்டவும் இசைந்தார்கள். உரோமானியரின் முறை திறம்பிய போக்கினால் இருபாலாரிடையிலும் சமய வெறுப்பு வளர்ந்து. ஹாரூன் தம் அரசில் இருந்த கிறித்தவர்கள் மீது இழிவான தடைகள் விதித்தார்; உரோமானியரும் முஸ்லிம்களைத் துன்புறுத்தலானார்கள்.

சுபேடா அரசியின் வேண்டுகோளுக்கிணங்கி ஹாரூன் அவனுக்குப் பிறந்த அல்-அமீனைத் தம் முதல் வாரிசாகவும், தம்முடைய மூத்த மகன் அல்-மாமூனை இரண்டாம் வாரிசாகவும் தேர்ந்தெடுத்து அறிவித்தார். பிறகு தம்முடைய அரசினைத் தம்முடைய மூன்று மக்களுக்கும் பிரித்தும் வைத்தார். இவ்வேற்பாட்டினைப் புனிதமாக்கவும் அவருடைய மக்கள் தங்கள் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றவும் சம்மதித்து எழுதித்

தந்த ஆவணங்கள் மக்காப் பட்டணத்துப் பள்ளியில் வைக்கப் பட்டன.

ஹாரூனின் பதினொரு புதல்வர்களும் பதினான்கு பெண்களும் (அல்-அமீனைத் தவிர) அடிமைப் பெண்கள் பெற்ற மக்களே. அப்பாசிடு அரசர்களில் ஹாரூன் துணிச்சல்மிக்கவர். ஏழைகள் பால் இரக்கமுள்ளவர். தினந்தோறும் அவர்களுக்கு ஓரிலக்கம் வெள்ளிக் காசுகளை வாரிவழங்கினார். விஞ்ஞானத்தில் மிக்கப் பற்றுக்கொண்டிருந்தார். புலவர்களோடு உரையாடிப் பெரு மகிழ்ச்சி அடைந்தார். அவரே ஒரு கவிஞர்; கவிதையை ஆய்ந்து சிறந்த கவிஞர்களைப் போற்றிவந்தார். அவருடைய அரசவையின் செல்வச் செழிப்பும், சிறப்பும் அவர் காலத்தில் உலகமறிந்த ஒன்றாயிருந்து; அரபு இரவுக் கதைகள் வாயிலாக இன்னும் மக்கள் மனத்தில் அவை நிலைபெற்றுள்ளன.

அரசனைப் புகழ்ந்து பாடியவர்களுக்குப் பெரும்பொருள் வழங்கப்பட்டது. அரசின் நான்கு திசைகளிலிருந்தும் தூதுக் குழுக்கள் அரிய பரிசில்களுடன் அரசனின் ஆதரவைத் தேடி வந்தன. ஹாரூனின் தாய் கைசூரான் ஓர் அடிமை. அவள் அல்-மாதியின் ஆசை மனைவியானாள். அரசவையில் அவள் தந்தை அரச குடும்பத்தினர் ஒருவரை மணந்து சுபேடா என்ற பெண்ணின் தாயானாள். சுபேடா ஹாருனை மணந்து பேரரசியாய்த் திகழ்ந்தாள். உண்கலங்கள் யாவும் தங்கத்தால் ஆனவையா யிருக்கவேண்டுமென்றும், சுவர் மீதான திரைச் சீலைகள் இரத் தினக் கற்கள் பதிக்கப் பெற்றிருக்க வேண்டுமென்றும் சுபேடா ஆணை பிறப்பித்தாள். தன்னுடைய மகன் மனதை அவன் மிகுந்த பற்றுவைத்திருந்த ஓர் அலியிடமிருந்து திருப்புவதற்காகச் சுபேடா நூற்றுக்கணக்கான அழகிய பணிப் பெண்களை ஆணுடை தரிக்கச்செய்து அவன் முன் நிறுத்தினாள். சுபேடா வின் சிறு விருப்பமும் அரசன் ஆணைபோல நிறைவேற்றப் பட்டது.

**அல்-அமீன் (809—813)**

கலீபாவான பிறகும் அவன் அற்பப் பொழுது போக்குகளை விட்டுவிடவில்லை. அரசப் பொறுப்பை அமைச்சரிடம் ஒப்படைத் தான். அவன் சொற்கேட்டு அண்ணன் அல்-மாமூன் சொத்தைப் பறித்துக்கொண்டான். குத்பாவிலிருந்து அல்-மா மூன் பெயர் நீக்கப்பட்டது. குராசான் ஆட்சிப் பதவியிலிருந்தும் அல்-மாமூனை விலக்கத் திட்டமிடப்பட்டதும் அல்-மாமூன் நாணயங்கள் அடித்துக் குராசானை உரிமையோடு ஆளத்தொடங்

னான். பிறகு அவன் படை பாக்தாது நகரை முற்றுகை யிட்டுக் கைப்பற்றிற்று. அல்-அமீன் கொலை செய்யப்பட்டான்.

**அல்-மாமூன் (813—833)**

அல்-அமீன் கொலையுண்ட பழி தன்மீது சுபேடாவால் சுமத்தப்படும் என அஞ்சிய 'அல்-மாமூன் கலீபாப் பதவியேற்ற பிறகும் குராசானிலேயே தங்கிவிட்டான். பாக்தாதில் அவன் வசீர் ஃபாதல் ஆட்சிசெய்தான். அல்-மாமூன் சமயச் சர்ச்சை களிலும் தத்துவ விசாரணையிலும் தன் காலத்தைக் கழித்து வந்தான். அரசின் பல பகுதிகளில் கொலை, கொள்ளை, கலவரம் நிகழ்ந்தன. மெசொபொட்டேமியா, அல்-இராக், அல்-கூஃபா, அல்-ஹிஜாஸ் பகுதிகளில் கிளர்ச்சிகள் நடைபெற்றன. இச் செய்திகள் அல்-மாமூனுக்கு எட்டாதவாறு வசீர் பார்த்துக் கொண்டான். அரசின் குழப்ப நிலையை உணர்ந்து அல்-மாமூன் விழித்தெழுவதற்குள் ஏழாண்டுகள் ஓடி மறைந்தன.

அல்-மாமூன் பாக்தாதை அடைந்தபின் குழப்பநிலை சீர் பட்டது; ஆட்சிமுறை திருத்தப்பெற்றது. மாகாணங்களில் புதிய ஆளுநர்கள் அமர்த்தப்பட்டார்கள். பைசாண்டியப் பேரரசன் முஸ்லிம் அரசுமீது படையெடுத்துவந்து மூன்று போர்க்களங்களில் தோல்வியுற்றான். அவனிடமிருந்து பொருளைப் பெற்று டயானாவில் முஸ்லிம்கள் பாதுகாப்பரண்கள் கட்டிக் கொண்டார்கள். இறப்பதற்கு முன் அல்-மாமூன் அல்முத்தா சிமைத் தனக்குப்பின் கலீபாவாகக் குறிப்பிட்டார்.

அல்-மாமூனின் நீதியுணர்வும் பெருமிதத் தோற்றமும் அச்சத்தையூட்டி, நண்பர், பகைவர் இருபாலாரின் நன்மதிப் பையும் பெற்றது. அவருடைய இருபதாண்டு ஆட்சி அப்பாசிடு கலீபாவாட்சியின் பொற்காலமாகும்; அறிவாராய்ச்சியும் கலை வளர்ச்சியும் அவர் காலத்தில் உச்ச நிலையை எட்டின. பலதுறை அறிஞர்களும் அவருடைய பேராதரவைப் பெற்றார்கள். பழைய ஏட்டுச் சுவடிகளைப் பெரும்பொருள் செலவிட்டுத் திரட்டினார். செவ்வாய்க்கிழமைதோறும் அரண்மனையில் தத்துவ ஆராய்ச்சி யும் விவாதமும் நடைபெற்றன. எல்லா வகையிலும் அவருடைய ஆட்சி சிறந்திருந்தது. முத்தாசிலைட்டுகளின் தேசியக் கொள் கையை ஒப்புக்கொள்ளாதவர்களிடம் அல்-மாமூன் கடுமையாய் நடந்துகொண்டார். இது ஒன்றே அவரிடம் காணப்பட்ட குறை யாகும்.

அல்-மாமூன் அவருக்குப் பின் வந்த கலீபாக்கள் அல்-முத் தாசிம், அவன் மகன் அல்-வாதிக் ஆட்சிவரை அப்பாசிடு ஆட்சி

சீரும் சிறப்புமாய் ஆதிக்கஞ் செலுத்தியது. அதன் பிறகு ஆட்சி சீர்குலையத் தொடங்கியது. ஏற்கனவே ஸ்பெயினில் உமையடு வம்சம் ஆட்சிபுரிந்தது. மொராக்கோவில் தனி அரசு ஏற்பட்டது. ஹாரூன் காலத்தில் கிழக்காப்பிரிக்காவின் ஆட்சியுரிமை அதன் ஆளுநருக்கே வழங்கப்பட்டுவிட்டது. அல்-மாமூன் மறைந்தபின் குராசானில் தகிர் ஹுசெயின் ஒரு புதிய அரச குலத்தைத் தோற்றுவித்தான். கி.பி. 868-க்குப் பின் எகிப்திய ஆளுநர் பாக்தாது ஆட்சிக்குக் கட்டுப்பட்டிருக்காததோடு சிரியாவையும் தன்னாதிக்கத்திற்கு உட்படுத்தினான் பத்தாம் நூற்றாண்டில் எகிப்து அப்பாசிடு ஆட்சியிலிருந்து விடுவித்துக்கொண்டது.

**அல்-முத்தாசிம் (833—842)**

துருக்கிய வீரர்களை மெய்க்காவலர்களாக அல்-முத்தாசிம் அமர்த்திக்கொண்டு தன்னுடைய மரபிற்கே அழிவைத் தேடிக் கொண்டான். பத்தாம் நூற்றாண்டில் மெய்க்காவற்படையின் துருக்கியத் தலைவனுடைய அதிகாரம் வரம்பின்றி வளர்ந்து விட்டது. ஃபாத்திமிடுகளின் (Fatimids) தோற்றம் கலீபாவின் சமய ஆதிக்கத்தையே அச்சுறுத்தியது.

கி.பி. 948 முதல் அப்பாசிடு கலீபாக்கள் புவேஹிடுகளின் (Buwayhids) ஆதிக்கத்தின் கீழ் வந்தார்கள். நாளடைவில் துருக்கிய சுல்தான்களின் ஆதிக்கத்திலிருந்து அப்பாசிடுகள் தங்களை விடுவித்துக்கொண்டார்கள். ஆயினும் பாக்தாது நகரம், அதன் சுற்று வட்டாரத்தோடு அப்பாசிடு ஆட்சி ஒடுங்கிவிட்டது.

அல்-அப்பாஸ்

- (1) அல்-சஃபா (750-54)
- (2) அல்-மன்சூர் (754-75)
  - (3) அல்-மாதி (775-85)
    - (4) அல்-ஹாதி (785-786)
    - (5) ஹாரூன் அல்-ரஷித் (786-809)
      - (6) அல்-அமீன் (809-813)
      - (7) அல்-மாமூன் (813-833)
      - (8) அல்-முத்தாசிம் (833-842)
        - (9) அல்-வாதிக் (842-847)
        - (10) அல்-முத்தாவக் (847-48)

**அப்பாசிடு ஆட்சியின் பொற்காலம்**

அப்பாசிடு கலீபாக்கள் ஆட்சிப்பீடமேறிய சில ஆண்டுகளி லேயே பாக்தாதை தலைநகராய்க்கொண்ட கலீபா வாட்சி அரசி யலிலும் அறிவு வளர்ச்சியிலும் உயரிய நிலை எய்திற்று. அவ் வம்சத்தில் தோன்றிய ஹாரூன் அல்-ராஷிது, அவருடைய மகன் அல்-மாமூன் இருவரும் ஆண்டகாலமே அப்பாசிடு ஆட்சியின் பொற்காலமாகும். இஸ்லாமிய வரலாற்றில் 'அவ்விருவரின் ஒளி மிக்க ஆட்சியே பல்லாற்றானும் மிக்கப் புகழ்பெற்றதாய் விளங் கிற்று. கலீபா அல்-வாதிக் ஆட்சிக்குப்பின் அவ்வரசின் வீழ்ச்சி தொடங்கிற்று எனலாம்.

அறிவாராய்ச்சித் துறைகளில் அப்பாசிடுகள் காட்டிய ஆர்வமும் வள்ளன்மையும் பொற்காலத்தை உருவாக்கின. கிரேக்க, உரோமானியர்கள், இரானியர்கள் இந்துக்கள் ஆகியோ ரின் அறிவாராய்ச்சி நூல்கள் அரபுமொழியில் பெயர்த்தெழுதப் பட்டு முஸ்லிம்கள் அப் புலமையைத் தங்களுடையதாக்கிக் கொண்டார்கள். வரலாறு, அரசியல் அறிவு, இலக்கியம், கவிதை, சமுதாய ஆசாரமுறை முதலியன இரானிலிருந்தும், வானநூலும் கணிதமும் இந்தியாவிலிருந்தும், தத்துவம், மருத் துவக்கலை, அறிவியல் மூன்றும் கிரீசிலிருந்தும் முஸ்லிம்களுக்குக் கிடைத்தன. அரச குடும்பத்தினரும் ஆளுநர்களும் உயர் அதி காரிகளும் அறிஞர்களை ஆதரித்தனர். ஒன்பதாம் நூற்றாண்டி லேயே அரிஸ்டாடில், பிளேட்டோ, யூக்ளிடு, டாலமி, ஹிப்போ கிராடிஸ், காலென் முதலியோரின் நூல்கள் அரபு மொழியில் பெயர்க்கப்பட்டு இஸ்லாமிய உலகிற்கு நன்கு அறிமுகமா யிருந்தன. மொழிபெயர்த்தலுக்குக் கலீபாக்கள் தந்த ஆதரவு அறிவை விரிவுபடுத்தியதோடு பரப்பவும் செய்தது.

ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஹாரூன் அல்-ராஷிதும் ஷார்லெமேனும் தலைசிறந்த மன்னர்களாய்த் திகழ்ந் தார்கள். ஆற்றலிலும், பண்பாட்டிலும் ஹாரூனே மற்றவரை விஞ்சியிருந்தார். இருவருக்கும் மற்றவரின் நட்பும் உதவியும் தேவைப்பட்டன. ஜெருசலம் செல்லும் கிறித்தவர்களுக்குப் பாதுகாப்புத் தேடியும், பைசாண்டியப் பகைமையைச் சமாளிக் கவும் ஷார்லெமேன் ஹாரூன் நட்பைநாடினான். ஸ்பெயினிலிருந்த உமையடு ஆட்சியை எதிர்க்க ஹாரூன் ஷார்லெமேனோடு உற வாடினான். இருவரும் தூதுவர்களையும் பரிசில்களையும் பரிமாறிக் கொண்டார்கள். இந்திய மன்னன் ஒருவன் சிறந்த பொருள்களை ஹாரூனுக்குக் கொடுத்தனுப்பியதாகத் தெரியவருகிறது.

**பைசாண்டியத்தோடு போர்**

ஒரு நூற்றாண்டிற்கும் மேலாகக் கலீபாவாட்சிக்கும் பைசாண்டியத்திற்கும் நடைபெற்றுவந்த போராட்டத்தை அல்-மாதி (775—85) மீண்டும் தொடங்கினான். இஸ்லாமியத் தலைநகரம் உள்நாட்டுக் கலவரங்களால் தொலைவான பாக்தாதிற்கு மாற்றப்பட்டதைப் பயன்படுத்திக்கொண்டு பேரரசன் ஐந்தாம் கான்ஸ்டண்டைன் (741—75) தன்னுடைய எல்லையைக் கிழக்கில் விரிவாக்கினான். அல்-மாதியின் இளையமகன் ஹாரூன் 782-ல் ஓர் அரபுப்படையுடன் பாஸ்பரசை அடைந்தான். ஆறும் கான்ஸ்டண்டைனுக்காக ஆட்சிசெய்த அவனுடைய தாய் ஐரீன் (797—802) அரபுக்களுக்குக் கப்பங்கட்டுவதாய் ஒப்புக்கொண்டு உடன்படிக்கையில் கையெழுத்திட்டுப் போரை நிறுத்தினாள். இச் சண்டையில் போர்த்திறம் காட்டிய ஹாரூனுக்கு அவனுடைய தந்தை அல்-ராஷிது என்ற பட்டத்தைச் சூட்டினான். கி.பி. 806-ல் அரபு வீரர்கள் ஹாரூன் தலைமையில் சிற்றாசியாவைச் சூறையாடிய பின் ஹெராக்ளியாவைக் கைப்பற்றினார்கள். இந் நிகழ்ச்சியே பைசாண்டியப் போரில் உயர்கட்டமாகும். பின்னர் அல்-முத்தாசிமின் பெரும்படை உரோமானியப் பேரரசில் ஊடுருவிச்சென்று சில இடங்களைக் கைப்பற்றிய போதிலும், அந்த முயற்சி இறுதியில் தோல்வியுற்றது. மீண்டும் 838-ல் கான்ஸ்டான்டிநோபிளைத் தாக்கப் புறப்பட்ட அரபுப்படை நாயகத்தில் கூட்டுச்சதி உருவாவதை அறிந்ததும் திரும்பவேண்டியதாயிற்று. அல்-முத்தாசிமின் முயற்சிக்குப்பின் அரபுக்கள் பைசாண்டியப் பேரரசைச் சூறையாட விரும்பினார்களேயன்றி வெல்ல முடியவில்லை. ஒன்பதாம் நூற்றாண்டு முடிய இரு படைகளும் ஆண்டுதோறும் கிழக்கெல்லைப்புறத்தில் மோதிக் கொண்டன. அத் தாக்குதல்களால் இருதரப்பு வீரர்களும் சுறுசுறுப்பாயிருந்தார்கள்; ஏராளமான சூரைப் பொருளும் கிடைத்தன. இடையறாப் போரினால் அப்பாசிடு பேரரசின் வலிமை குறைந்தது; அயல்நாட்டு உறவுமுறைகள் பாதிக்கப்பட்டன.

**பாக்தாது**

அரை நூற்றாண்டிற்குள்ளாகவே பைசாண்டியத்திற்குப் போட்டியாய் உலகில் ஒரு சிறந்த தலைநகரமாய் பாக்தாது வளர்ந்திருந்தது. பேரரசின் பெருவளத்திற்கேற்ப உலகில் அதற்கு ஈடில்லை எனச் சொல்லுமளவு பாக்தாது சீரும் சிறப்பும் பெற்றிருந்தது. வட்ட வடிவமான அந் நகரின் மூன்றில் ஒரு பகுதியில் அரண்மனையும் அதன் இணைப்புகளும் கட்டப்பட்டிருந்தன. கலீபா பதவியேற்கும்போதும், திருமணம், மக்காச் செலவு,

அயல்நாட்டுத் தூதுவர்களுக்கு அளிக்கப்படும் 'வரவேற்பு போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும்போதும் ஆரவாரத்திற்கும் ஆடம்பரத்திற்கும் அளவேயில்லை; பொருள் செலவிற்கும் கணக்கில்லை. விலைமதிப்புள்ள பரிசில்கள் வழங்கப்பட்டன. வரவேற்புக்கூடத்தில் தங்கம், வெள்ளியாலான பெரிய மரமொன்று இருந்தது. அதன் கிளைகளில் அதே உலோகங்களாலான பறவைகள், தானே இயங்கிக் கலகலவென ஒலித்த வண்ணமிருந்தன. ஒளி விளக்குகளால் இரவு பகலாய் மாற்றப்பட்டது. இஸ்லாமிய அரச பதவிக்கு எடுத்துக்காட்டாய் விளங்கிய ஹாரூன், மற்றும் அவரைத் தொடர்ந்து பதவியேற்ற கலீபாக்களின் வரையா வள்ளன்மை பாவலர்களையும், பாடகர்களையும், இசைக்கலை அறிஞர்களையும், சொற்றிறமுடையவர்களையும் அவர்கள்பால் ஈர்த்தது. அல்-ராஷிதின் இராக்கால இன்பத்தோழனான கவிஞன் அபு-நிவாஸ் அக்காலத்துப் பகட்டான அரசவை வாழ்வை நெஞ்சைவிட்டு நீங்காதவாறு சித்தரித்துள்ளான்.

துறைமுகப்பட்டினமான பாக்தாது அக்கால உலகின் பல பகுதிகளோடும் தொடர்புகொண்டிருந்தது. நூற்றுக்கணக்கான கலங்கள் சீனத்துப்பட்டு, பீங்கான், கத்தூரி ஆகியவற்றை, இந்தியாவிலிருந்தும் மலேயா ஆர்ச்சிபிலாகோவிலிருந்தும் நறுமணப் பொருள்கள், கனிப்பொருள்கள், சாயப்பொருள்களையும், நட்டாசியத்துருக்கியர் நாடுகளிலிருந்து மாணிக்கக் கற்கள், துணிவகைகள், அடிமைகளையும், கிழக்காப்பிரிக்காவிலிருந்து தந்தம், பொன் துகளையும் கொண்டுவந்து இறக்கிய வண்ணமிருந்தன. சீனத்துப் பொருள்களுக்குப் பாக்தாது நகரில் ஒரு தனி அங்காடியே இருந்தது. பேரரசின் மாகாணங்களாகிய எகிப்து அரிசி, கூலம், துணி, சிரியா கண்ணாடி, உலோகத்தாலான பொருள்கள், பழங்கள், அரேபியா பட்டுத்துணி, முத்து, படைக்கலங்கள் முதலியவற்றைத் தலைநகர் அங்காடியில் குவித்தன. தூரக்கிழக்கு நாடுகளுக்கும், ஐரோப்பிய, ஆப்பிரிக்க நாடுகளுக்கும் கடல்வழியே அரபுவணிகர்கள் துணிவகைகள், அணிமணிகள், கண்ணாடிமணிகள், உலோகத்தாலான முகம்பார்க்கும் கண்ணாடிகள், நறுமணப் பொருள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்தார்கள். அரபுக் காசுகள் உருசியா, ஃபின்லாந்து, சுவீடன், ஜெர்மனி போன்ற நாடுகளில் காணப்படுவதிலிருந்து முஸ்லிம் வாணிபம் அக்காலத்திலும், பிற்காலத்திலும், உலகளாவியிருந்ததை அறியலாம் ஆயிரத்தொரு இரவுக் கதைகளில் ஒன்றாகிய கடலோடி சிந்துபாதின் துணிகரச் செயல்கள் (Adventures of Sindbad the Sailor) முஸ்லிம் வணிகர்கள் மேற்கொண்ட கடற்பயணங்களின் விவரங்களை ஆதாரமாய்க்கொண்டே எழுதப்பட்டிருக்க

வேண்டும். பாக்தாது நகர சமுதாயத்தில் வணிகர்கள் முதன்மையாயிருந்தார்கள். மருத்துவர்கள் வழக்குரைஞர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் ஆகிய கலைத் தொழிலர்கள் அல்-மாமூனின் ஆதரவில் சிறப்பாய் வாழ்ந்தனர்.

அல்-மாதி, அல்-மாமூன் இருவரும் பைசாண்டியரோடு போரிட்டு வெற்றிபெற்றதால் அக்காலம் வரலாற்றில் சிறப்புப் பெற்றது. இன்பவாழ்வு அந்தக்காலத்தைக் கற்பனைக்கதை இலக்கியத்திலும் வரலாற்றிலும் இடம்பெறச் செய்தது. இஸ்லாமிய வரலாற்றில் ஏற்பட்ட அறிவுத்துறை விழிப்பு உலக வரலாற்றிலும், பண்பாட்டு வரலாற்றிலும் அக்காலத்திற்குப் புகழ் சேர்த்தது. அவ்விழிப்பு பாரசிக, சிரியா, கிரேக்க, ஸம்ஸ்கிருத மொழிகளிலிருந்த நூல்களை அரபு மொழியில் பெயர்த்தெழுதியதால் ஏற்பட்டது. அரபு முஸ்லிம்களிடம் காணப்பட்ட விஞ்ஞான, தத்துவ, இலக்கிய அறிவு குறைவாயினும், அறிவைத் தேடும் ஆர்வமும், கற்றலில் அவர்களுக்கிருந்த பெருவேட்கையும் நிறைந்திருந்தன. அரபுக்கள் தங்களிடம் தோல்வியடைந்த பண்டைய, பண்பட்ட மக்களிடமே கற்று நலமடைந்ததோடு அவர்களுடைய பண்பாட்டின் உரிமையாளர்களுமாகி விட்டார்கள் பாக்தாது நிறுவப்பட்டு எழுபத்தைந்து ஆண்டிற்குள் அரிஸ்டாட்டிலின் மெய்யுணர்வுப் படைப்புகளும், காலெனின் மருத்துவ நூல்களும், பாரசிகர், இந்தியர்களின் விஞ்ஞான ஏடுகளும் படித்த அரபுக்களுக்குக் கிடைத்துவிட்டன. கிரேக்கப் பாரசிகப் பண்பாடுகளை ஏற்றுக்கொண்ட இஸ்லாம் தன்னுடைய சிறப்பியல்பில் பெரும் பகுதியை இழந்தது. எகிப்து, பாபிலோனியா, ஃபினிஷியா, ஜுடேயா முதலிய நாடுகளில் ஊற்றெடுத்து கிரேக்க நாட்டில் பாய்ந்த பண்பாட்டு வெள்ளம் ஹெலனிசம் என்ற வடிவத்தில் கீழை நாடுகளில் பாய்ந்து ஓடத் தொடங்கியது. ஸ்பெயினிலும், சிசிலியிலும் ஆட்சிசெய்த அரபுக்கள் அந்த வெள்ளத்தை ஐரோப்பாவிற்குள் மீண்டும் திருப்பிவிட்டு ஐரோப்பிய மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்க உதவினார்கள்.

அரபுக்களை விழித்தெழச்செய்த முதல்நாடு இந்தியாவே. கி.பி. 771 அளவில் ஓர் இந்தியப்பயணி பாக்தாது மக்களுக்குச் சித்தாந்தம் என்ற வான நூலை அறிமுகஞ் செய்துவைத்தான். அல்-மன்சூரின் ஆணையால், அரபு மொழியில் அல்-ஃபசாரியால் அந்நூல் பெயர்த்து எழுதப்பட்டது. அம்மொழிபெயர்ப்பைப் பயின்ற அல்குவாரிஸ்மி கி.பி. 850 அளவில் இந்திய, கிரேக்க வான நூல் முறைகளை இணைத்து ஒருமைப்படுத்தியதன்றி தன் பங்கினையும் அதனுடன் சேர்த்தார். பாக்தாது மக்களுக்கு வான நூலை அறிமுகஞ்செய்த அதே இந்திய வழிப்போக்கன் ஒரு

கணித ஏட்டையும் அவர்களுக்கு அளித்தான். அதன் விளைவாக எண் குறிகளை முஸ்லிம் உலகம் பெற்றது. அவற்றை அரபுக்கள் இந்திய எண்கள் என்றும், ஐரோப்பியர்கள் அரபு எண்கள் என்றும் அழைத்தார்கள். மேலும் ஒன்பதாவது நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து பதின்மான முறையை (Decimal system) அரபுக்கள் பெற்றார்கள்.

அரபுக்கள் கலை, இலக்கியத்துறைகள் இரண்டிலும் பாரசிகர் களுக்குக் கடன்பட்டுள்ளார்கள். அரபுக்களின் பண்பாட்டு வாழ்வை நிறைவுசெய்யப்பாரசிகர்களின் கலையுணர்ச்சி பெரிதும் வேண்டியிருந்தது. வடமொழிப் பஞ்சதந்திரக் கதைகள் பாரசிக மொழியில் பெயர்க்கப்பட்டு, பஹ்லவிமொழியிலிருந்த புள், விலங்குக் கதைகளின் அரபாக்கமே அரபு இலக்கியத்தின் தொடக்கமெனலாம். அனுவிர்வான் (531—78) ஆட்சிக்காலத் தில் நீதிக் கதைகளின் வடமொழி மூலமும், சதுரங்க விளையாட் டும், இந்தியாவிலிருந்து பாரசிகத்திற்குக் கொண்டுசெல்லப்பட் டன. வடமொழி மூலமும், பாரசிக ஆக்கமும் மறைந்துவிடவே, அரபு மொழியிலிருந்தே ஐரோப்பிய மொழிகள் உள்ளிட்ட நாற்பது உலக மொழிகளில் அக் கதைகள் பெயர்த்தெழுதப் பட்டு உலகெங்கும் பரவின. ஆட்சி முறைகளை விலங்குக் கதை கள் வாயிலாக இளவரசர்களுக்குக் கற்பிக்க எழுந்த நூலே பஞ்ச தந்திரக் கதைகளாகும். அல்-முக்காஃபா என்ற பாரசிக முஸ்லிமே அவற்றை அழகு நடையில் அரபு மொழியில் ஆக்கிய வர். சிறந்த கற்பனையும் அணிநயமும் கனிந்த பாரசிகநடையில் அப்பாசிடு காலத்து உரைநடை உருவாயிற்று. சமுதாய ஆசார முறை, அறிவுத்திறம், ஆட்சிமுறை, வரலாறு ஆகியவை பற்றிய அரபு நூல்களில் இந்தோ-பாரசிக ஆதாரங்களைப் பற்றிய குறிப் புரைகள் பெருமளவில் உள்ளன.

கி.பி. 765-ல் கலீபா அல்-மன்சூர் தன் வயிற்றுநோயைக் குணப்படுத்தக் கிறித்தவ சமயத்தைச் சார்ந்த ஒரு பாரசிக மருத்துவரை (பக்தீஷா) அழைத்தார். அவர் கலீபாவின் மனதைக் கவர்ந்து அரசவை மருத்துவரானார். அம் மருத்துவ ரின் குடும்பத்தைச் சேர்ந்த ஆறேழுதலைமுறையினரே அடுத்த இரண்டரை நூற்றாண்டுகளுக்கு அரசவை மருத்துவப் பணியைச் செய்துவந்தனர்.

கிரேக்கப் பண்பாட்டால் அரபு வாழ்வில் ஏற்பட்ட பயன் அரியதும் பெரியதுமாகும். கிரேக்க நாகரிகம் எடிசா, ஆண்டி யோக், அலெக்சாண்டிரியா முதலிய நகரங்களை மையங்களாய்க் கொண்டு பரவிற்று. போர்களில் கிடைத்த கொள்ளைப் பொருள்

களில் கிரேக்கக் கையெழுத்துப் படிகளும் இருந்தன. கிரேக்க நூல்களைப்பெற அல்-மாமூன் கான்ஸ்டாண்டிநோபில் பேரரசர் லியேவிற்குத் தூதர்களை அனுப்பினார். யூக்ளிடு போன்ற கணித நூல்களைப் பைசாண்டியப் பேரரசரிடமிருந்தே அல்-மன்சூர் பெற்றார். கிரேக்க மொழியை அறியாத அரபுக்கள் அவற்றைத் தங்கள் குடிமக்களைக்கொண்டு மொழிபெயர்த்துக்கொண்டார்கள். கிரேக்கப் பண்பாட்டு விளைவின் உச்சக்கட்டத்தை அல்-மாமூன் ஆட்சியில் காணலாம். சமய வாசகங்கள் பகுத்தறிவு முடிவுகளுக்கு ஒத்திருக்கவேண்டும் என்ற நிலையை ஆதரித்த அல்-மாமூன் அதற்கான அடிப்படை நியாயத்தைக் கிரேக்க மெய்யறிவு நூல்களில் தேடினார். அதற்காகக் கி.பி. 830-ல் அல்-மாமூன் பாக்தாது நகரில் ஓர் அறிவகத்தை நிறுவினார். கி.மு. மூன்றும் நூற்றாண்டின் முற்பகுதியில் நிறுவப்பட்ட அலெக்சாண்டிரிய அரும்பொருள்காட்சி மனைக்குப்பின் (Museum) ஏற்பட்ட சிறந்த கல்வி நிலையம் அதுவேயாகும். அவ்வறிவகம் நூல் நிலையமாகவும், கலைபயில் களரியாகவும், (academy) மொழிபெயர்ப்பு நிறுவனமாகவும் பயன்பட்டது. இதுகாறும் தனிப்பட்டவர்களால் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புப் பணியின் பெரும் பகுதியை அல்-மாமூன் ஆட்சியிலும் அவருக்குப் பின்னால் வந்த கலீபாக்கள் காலத்திலும் அக் கல்விச்சாலையே மேற்கொண்டது. அப்பாசிடுகளின் மொழிபெயர்ப்புக் காலம் கி.பி. 750 முதல் ஒரு நூற்றாண்டு நீடித்தது.

கிரேக்க நூல்கள் முதலில் அரமேயிக் அல்லது சிரியக் மொழியில் பெயர்க்கப்பட்டுப் பிறகு அரபாக்கங்கள் வெளிவந்தன. அரபு மொழியில் சரியான மாற்றுச்சொல் கிடைக்காத போது கிரேக்கச் சொற்களையே சிறிது மாற்றிப் பயன்படுத்தினார்கள். அரபு மொழிபெயர்ப்பாளர்கள் கிரேக்க நாடகங்கள், கவிதை, வரலாற்று நூல்களோடு நேரடியாகத் தொடர்பு கொள்ளவில்லை. யூக்ளிடு போன்ற கிரேக்கக் கணக்கியல் ஏடுகளும், டாலமியின் வான நூலும், காலென் (Galen), பால் (Paul) போன்றோரின் மருத்துவ நூல்களும், பிளேடோ, அரிஸ்டாட்டில் ஆகியோரின் மெய்யறிவு நூல்களும் மொழிபெயர்க்கப்பட்டு அறிவாராய்ச்சிப் பயணம் தொடங்கிற்று. சரிவரச் செய்யப்படாத தொடக்கக்கால மொழிபெயர்ப்புகள் அல்-ராஷிது, அல்-மாமூன் ஆகியோர் காலத்தில் திருத்தப்பெற்றன.

மொழிபெயர்ப்பாளர்களில் ஹுனாயின் இபின்-இஷாக் (809-873) தலைசிறந்து விளங்கினார். அவர் பெரும் புலமையும் சிறந்த பண்பும் உடையவர். அல்-மாமூன் அவரைப் பாக்தாது அறிவகத்தின் தலைவராக்கினார். விஞ்ஞான நூல்களை மொழிபெயர்க்

கும் பணியை அவரும் அவருடைய மகனும் மேற்கொண்டார்கள் மொழிபெயர்த்த ஏடுகளின் எடைக்கு எடை அவருக்குக் கலீபா வால் பொன் வழங்கப்பட்டது. அவர் கலீபா அல்-முத்தாவாக்கி லின் (847-61) சொந்த மருத்துவராயிருந்தபோது அவருடைய பகைவன் ஒருவனைக் கொல்ல நஞ்சு வடித்துத்தர மறுத்ததற் காகக் கலீபாவால் ஓராண்டு சிறையிடப்பட்டார். மக்கள் நலத் திற்கும் உயிர் காப்பதற்குமே தான் மருத்துவம் கற்றதாகவும் உயிர்க்கொலை செய்வதற்கன்று என்றும் கலீபாவோடு அவர் வாதாடினர்.

தாபிதும் (836-901) அவருடைய சீடர்களும் கணித நூல் களையும் வான நூல்களையும் மொழிபெயர்த்தார்கள். அவற்றில் ஆர்கிமிடீஸ் புத்தகங்களும் அடங்கியிருந்தன. முன்னுள் மொழி பெயர்ப்புகளையும் திருத்திச் செம்மைப் படுத்தினர்கள். கலீபா அல்-முதாடிடு (892-902) அவருடைய புரவலராவார். அல்-பத்தானியும் அல்-ஹாசிபும் (940-997) சிறந்த வான நூல் புலவர்கள் ஆவர்.

மொழிபெயர்ப்பு நூற்றாண்டு முடிவடைவதற்குள் அரிஸ் டாட்டில் நூல்கள் யாவும் அரபு வாசகர்களுக்கு அறிமுகமாகி விட்டன. அக்கால ஐரோப்பா கிரேக்கக் கருத்தையோ விஞ்ஞா னத்தையோ அறிந்திருக்கவில்லை. கலீபாக்கள் அல்-ரஷிதும் அல் மாமூனும் கிரேக்க, பாரசிக மெய்யறிவு நூல்களை ஆராய்ந்து கொண்டிருந்தபோது அவர்களோடு சமகாலத்தில் வாழ்ந்த தூய உரோமப் பேரரசர் ஷார்லெமேனும் அவருடைய பிரபுக்களும் தங்கள் பெயர்களை எழுதிப் பழகிக்கொண்டிருந்தார்கள்.

இஸ்லாமியரின் கல்வியில் அரபு இலக்கணத்தோடு அரிஸ் டாட்டிலின் அறிவு இலக்கியமும் இடம்பெற்றது. முஸ்லிம்களின் மறைமெய்ம்மையாகிய சூபிசத்தில் (Sufism) பிளேட்டோக் கருத்துக்களின் மறுமலர்ச்சிக் கூறுகளைக் காணலாம். மொழி பெயர்ப்புக் காலத்தைத் தொடர்ந்து முதனூல்கள் வெளிவரத் தொடங்கின. முகம்மது நபிக்கு முன் வெறுங் கவிதை மொழியா யிருந்த அரபு மொழி, நபிநாயகம் காலத்தில் மறை வெளிப் பாட்டிற்கும் சமய விளக்கத்திற்கும் ஏற்றதாகிப் பத்தாம் நூற் றுண்டளவில் உயர்ந்த விஞ்ஞான, மெய்யறிவுக் கருத்துகளை வெளிப்படுத்தும் எளிய சாதனமாய் மாற்றம் பெற்றது; நட்டா சியாவிலிருந்து ஐரோப்பாவின் மேலைக் கோடிவரை பண்பட்ட அரசியல் மொழியாகவும் கருத்துப் பரிமாற்றத்திற்கு உகந்ததாக வும் அது வளர்ந்திருந்தது.

**அப்பாசிடு ஆட்சிமுறை**

**கலீபா:** நாட்டின் தலைவராய் இருந்த கலீபா எல்லாவித அதிகாரங்களுக்கும் மூலாதாரமாய் விளங்கினார். பொது ஆட்சித் துறையை வசிர் என்ற அமைச்சரிடமும், நீதித்துறையைக் காதி என்ற நடுவரிடமும் படைத்துறையை அமீர் என்ற படைப் பெருந்தலைவரிடமும் கலீபா ஒப்படைத்தார். ஆனால், ஆட்சிக் காரியங்கள் எல்லாவற்றையும் இறுதியாய் முடிவுசெய்பவர் கலீபாவே. தொடக்கக்காலக் கலீபாக்கள் பேரரசின் ஆட்சி முறையில் பண்டைய பாரசிகப் பாங்கினைப் பின்பற்றினார்கள். பிற்கால உமையடுகள் தெய்வப் பற்றின்மையால் மக்களாதரவை இழந்துவிட்ட நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு, அப்பாசிடுகள் இமாம் பதவியின் உயர்பணியை வற்புறுத்தி ஆட்சியைச் சமயம் சார்ந்ததாக்கினார்கள். பிற்காலத்தில் கலீபாக்களின் அதிகாரம் குறையக்குறைய சமயச்சார்பு மேலும் மேலும் வற்புறுத்தப்பட்டது. எட்டாவது கலீபா அல்-முத்தாசிம் பி-அல்லா (833-42) முதல் அப்பாசிடு மரபு முடியும்வரை ஆண்டவனின் கலீபாவென்றும், பூவுலகில் ஆண்டவனின் நிழலெனவும் கலீபாக்கள் பட்டப்பெயர்கள் தாங்கினார்கள்.

உமையடுகளால் நிறுவப்பட்டதும், நன்கு வரையறுக்கப் படாததுமான மரபுவழித் தொடர்கிற ஆட்சிமுறை அப்பாசிடுகளின் காலத்திலும் பின்பற்றப்பட்டு அதே தீய விளைவுகள் நிகழ்ந்தன. ஆட்சிபுரிந்த கலீபா தம் மக்களில் அல்லது உறவினருள் ஆட்சித் திறம்படைத்தவரையோ, தம் அன்பிற்குரியவரையோ தமக்குப்பின் ஆட்சியுரிமை உடையவரெனக் குறிப்பிடுவது வழக்கமாயிருந்தது. அல்-சஃபா தம் இளவலாகிய அல்-மன்சூரைத் தம் வாரிசாகக் குறிப்பிட்டார். அவர் மகன் அல்மாதி கலீபாப் பதவிக்கு வர அல்-மன்சூர் பெரும்பொருள் செலவழிக்க வேண்டியிருந்தது. படைத் தலைவர்களும் அமைச்சர்களும் அல்ஹாதியை ஓராண்டில் ஒதுக்கிவிட்டு அவன் இளவலாகிய அல்-ராஷிதைக் கலீபாவாக்கினார்கள். ஹாரூன் தம் மக்கள் மூவரும் எவ் வரிசையில் பதவிக்கு வரவேண்டுமென வரையறுத்ததோடு பேரரசினை அவர்களுக்குள் பிரிவினை செய்து விட்டுச் சென்றார். ஆனால், அவர்களுக்குள் கடும்போர் நிகழ்ந்தது. அல்-மாமூன் அப்பாசிடுகளின் கருப்பு ஆடையை விடுத்து ஷியாக்களின் பச்சை உடையை அணிந்து ஆலித் ஆதரவாளர்களில் ஒருவரைத் தன் வாரிசாய்க் குறிப்பிட்டதும் ஆத்திரமடைந்த பாக்தாது மக்கள் அல்-மாமூனின் சிற்றப்பனைக் கலீபாவாய்த்தெரிந்தெடுத்தார்கள். அவர் இறப்பதற்குமுன் தன் மகனை ஒதுக்கிவிட்டுத் தம்பி அல்-முத்தாசிமைக் கலீபாவாய்க் குறிப்பிட்

டார். ஆனால் படை அவர் மகனை ஆதரித்துக் கலகஞ்செய்தது. இருநூற்றைம்பது ஆண்டு அப்பாசிடு ஆட்சிக்காலத்தில் (750-991) இருபத்துநான்கு கலீபாக்கள் ஆட்சிக்கு வந்தனர். அவர்களுள் ஆறே கலீபாக்கள்தாம் தந்தையைத் தொடர்ந்து பதவிக்கு வந்தவர்கள் ஆவர்.

கலீபாவிற்கு நெருக்கமாயிருந்த ஓர் உயர் அதிகாரி (Chamberlain) தூதுவர்களையும் உயர் பதவியாளர்களையும் கலீபாவிடம் அழைத்துவந்து அறிமுகம் செய்துவந்ததோடு மிக்கச் செல்வாக்குடனும் விளங்கினன். பாரசிகநாட்டைப் பின்பற்றி அப்பாசிடு ஆட்சியில் ஒரு சோதிடன் இணைக்கப்பட்டிருந்தான். பாக்தாது அரசவையில் தூக்கிலிடும் அதிகாரி ஒருவன் சிறப்பிடம் வகித்தான். குற்றவாளிகளைச் சித்திரவதை செய்வதற்கென்றே அடிநில அறைகள் கட்டப்பெற்றன.

**வசீர் (அல்லது) விசியர்**

பாரசிக மரபைப் பின்பற்றிக் கலீபாவிற்கு ஆட்சியில் உதவ வசீர் என்ற ஓர் அமைச்சன் அமர்த்தப்பட்டான். கலீபா அந்தப் புரவாசியாகிவிட்ட காலத்தில் வசீரின் அதிகாரம் ஓங்கியிருந்தது. பிற்காலத்தில் கலீபா அல்-நசீர் (1180-1225) ஆட்சியில் தனக்குத் தெய்விக உரிமை உளது என்ற கொள்கையை வற்புறுத்திய போது, வசீர் அரசப் பிரதிநிதியெனவும், அவன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்களே தனக்குக் கீழ்ப்படிவதோடு, ஆண்டவன் கட்டளையையும் நிறைவேற்றுகிறார்களென்றும், அவ்வாறு வசீருக்குப் பணியாதவர்கள் நரகத்தில் உழல்வார்களென்றும் விளக்கினன். வசீர் கலிபாவின் இசைவுடன் மாகாண ஆளுநர்களையும், நடுவர்களையும் அமர்த்தவும், நீக்கவும் செய்தான். சில காலங்களில் வசீர்பதவி தன் குடும்பத்திலேயே நிலைத்திருக்கவும் வகை செய்துகொண்டான்.

அதிகாரிகள் பணியிலிருந்து நீக்கப்படும்போது அவர்களுடைய சொத்துகள் மேலதிகாரிகளால் பறிக்கப்படும்; அவர்கள் தங்கள் உயிரையும் இழக்க நேரிடலாம். பறிமுதல் இலாகா ஒன்றும் ஏற்பட்டது. ஒரு சில வசீர்கள் முழுஆட்சியுரிமையும், வேறு சிலர் நிர்வாக உரிமை மட்டும் பெற்றிருந்தார்கள். வசீர் மாதந்தோறும் ஆயிரம் தினார்களை ஊதியமாய்ப் பெற்றான். பத்தாம் நூற்றாண்டில் வசீர் செய்த பணிகளை அமீர் அல்-உமரா என்ற அதிகாரி மேற்கொண்டான். ஆட்சித்துறைகளின் தலைவர்கள் குழுவிற்கு வசீர் தலைவனாயிருந்தான்.

**வரிகள் இலாகா**

அப்பாசிடு ஆட்சியில் வரி வசூலும், நீதிநிர்வாகமும் ஒழுங்கு செய்யப்பட்டன. கலீபா ஆட்சியில் நிதித்துறைத் தலைவன் சிறப்பிடம் வகித்தான். பகைநாடுகளிலிருந்து பெற்ற கப்பம், தற்கால போர் நிறுத்த உடன்பாட்டுப் பணம் (Truce money), முஸ்லிம் அல்லாதவர்களிடம் வசூலித்த ஜிஸ்யா (ஆள்வரி), கராஜ் (நிலவரி), முஸ்லிம் அல்லாத வணிகர்களின் வாணிகப்பொருள், இறக்குமதி செய்த பொருள் இரண்டின் மீதும் விதிக்கப்பட்ட பண்டவரி, முஸ்லிம்கள் தந்த சக்காத் ஆகியவையே அரசின் வருவாயாகும். முஸ்லிம் அல்லாதவர்கள் கொடுத்த நிலவரியே பெருந்தொகையாகவும், வருவாயில் தலைமையானதாகவும் இருந்தது. அரசாங்கம் வருவாயைப் படைவீரர்களுக்கு ஊதியமாகவும், பள்ளிகளின் பராமரிப்பிற்கும், முஸ்லிம்களின் நலத்திற்கும், பாலங்கள் கட்டவும், பாட்டைகள் போடவும் செலவழித்தது. பயிரிடும் நிலங்கள், கால்நடை, விற்பனைப் பொருள்கள், தங்கம், வெள்ளி முதலியவற்றின் மதிப்பின் மீது சக்காத் வரிவிதித்து. அதிலிருந்து கிடைத்த தொகையை முஸ்லிம்களில் ஏழை எளியவர்கள், அநாதைகள், வெளிநாட்டவர் சமயப்போர்த் தொண்டர்கள், அடிமைகள், மீட்க வேண்டிய போர்க் கைதிகள் ஆகியோருக்காகச் செலவழித்தனர். அப்பாசிடு ஆட்சியின் முதல் நூற்றாண்டில் அதன் வளமையும், வருவாயும் கலீபாக்களின் ஆடம்பர வாழ்விற்குப் பெரிதும் பயன்பட்டன. செலவினங்களைக் கண்காணிக்க அல்-மாதி தணிக்கை முறையை ஏற்படுத்தினான்.

**ஆட்சித் துறைகள்**

அரசாங்கக் கடிதங்கள், அரசியல் ஆவணங்கள், அரசு ஆணைகள், பட்டயங்கள் முதலியவற்றை வழங்கவும், கையாளவும் ஒரு வாரியமும், மக்கள் குறைகளைக் கேட்டுத் தீர்வுகாண ஒரு குழுவும், அஞ்சல் துறையும், காவல் துறையும் அரசமைப்பின் உறுப்புகளாயிருந்து பணியாற்றின. நிர்வாகத்திலும், அரசியலிலும், நீதி கிடைக்காதவர்களின் வழக்குகளைக் கேட்டு நீதி வழங்கும் உயர் நீதிமன்றமாய் மக்கள் குறைகேட்டுத் தீர்வு காணும் குழு அமைந்திருந்தது. உமையடு ஆட்சியில் கலீபாக்கள் அப்தல்மாலிக்கும் இரண்டாம் உமரும் மக்கள் குறைகளைக் கேட்பதற்கென்றே ஒரு நாளை ஒதுக்கியிருந்தார்கள். அவ்வழக்கத்தை அப்பாசிடு கலீபா அல்-மாதி பின்பற்றினார். அவருக்குப்பின் வந்த கலீபாக்களும் மக்கள் முறையீடுகளைப் பெற்று ஆவன செய்தார்கள்.

காவல்துறைத் தலைவன் அரசனின் மெய்க்காவற் படைக்கும் தலைவனுயிருந்தான். பெரிய நகரம் ஒவ்வொன்றிலும் காவல் துறை இருந்தது. காவல் துறையினருக்கு நல்ல ஊதியம் அளிக்கப்பட்டது. நகரக் காவல்துறைத்தலைவன் (முத்தாசிப்) மக்கள் ஒழுக்கத்தையும், அங்காடிகளையும் கண்காணித்தான். சட்டத்தால் தடைசெய்யப்பட்ட சூதாட்டம், கடுவட்டிமுறை, மது விற்பனை ஆகியவை நடைபெறுமலும், வணிகத்தில் சரியான எடைகளும் அளவுகளும்பயன்படுத்தப் படுகின்றனவாவென்றும் நியாயமான கடன்கள் திருப்பித் தரப்படுகின்றனவாவென்றும், ஆண், பெண் இருபாலாரும் ஒழுக்கமாய் நடந்துகொள்கிருர்களா வென்றும் பார்த்துக்கொள்வது அவன் கடமையாயிருந்தது.

அஞ்சல்துறை அரசு நலனுக்கென்றே நிறுவப்பட்டிருந் தாலும் தனியார் கடிதத் தொடர்பினையும் ஓரளவு மேற் கொண்டது. ஹாரூன் அஞ்சல் துறையைத் திருத்தி அமைத் தான். மாகாணத் தலைநகரந்தோறும் ஓர் அஞ்சலகம் இயங்கிற்று. அரசின் முக்கிய பகுதிகளோடு பேரரசின் தலைநகரை அரச பாட்டைகள் இணைத்திருந்தன. பாட்டைகளில் இடைமாற் ருளர்கள் பரவலாயிருந்து கடிதங்களை விரைவாய் உரிய இடங் களுக்குக்கொண்டுசென்றனர். இடைமாற்ருளர்கள் பாரசிகத்தில் கழுதை மீதும், குதிரை மீதும், சிரியாவில் ஒட்டகத்தின் மீதும் ஏறிச் சென்றனர். மாகாண ஆளுநர்கள் அவர்கள் பணி இடங் களுக்குச் செல்லவும், போர் வீரர்கள் படைத்தளவாடங்களுடன் பயணம் மேற்கொள்ளவும், இத் துறை உதவியது. மேலும் கடிதங்களை எடுத்துச் செல்லப் புருக்கள் பயிற்றுவிக்கப்பட்டன. பேரரசிலிருந்த அஞ்சல் நிலையங்கள் அவை ஒவ்வொன்றிற்கும் இடையே உள்ள தூரம், ஆகியவை பற்றிச் செய்தியும் பயண வழியைக் காட்டும் விவர ஏடுகளும் பாக்தாதில் அஞ்சல் தலைமை யகத்தில் தரப்பட்டன. இவ்விவரங்கள் வழிப்போக்கர்களுக்கும், வணிகர்களுக்கும், புனிதப் பயணிகளுக்கும் பெரிதும் உதவிய தோடு பின்னல் நில இயல் ஆராய்ச்சிக்கும் அடிகோலின.

பேரரசின் பல பகுதிகளுக்குஞ்சென்ற நெடுஞ்சாலைகள் பாரசிகப் பேரரசின் கொடையாகும். குராசான் பெருஞ்சாலை வடகிழக்கில் புக்காரா, சாமர் கண்டுவரையில் நீண்டு, ஜக்சார் டிஸ் ஆற்றங்கரைப்பட்டினங்களையும், சீனத்தின் எல்லைப்புறங் களையும் தலைநகரோடு இணைத்தது. இப் பாட்டை நெடுகிலும் இருந்த முக்கிய நகரங்களிலிருந்து வடக்கிலும், தெற்கிலும் பல குறுக்குச் சாலைகள் பிரிந்து சென்றன. மற்ருெரு பெருஞ்சாலை பாக்தாதிலிருந்து டைகிரிஸ் ஆற்றின் விழுவாய் நோக்கிச்

சென்றது. பயணிகளின் வசதிக்காக வழிமனைகளும், மருத்துவ மனைகளும், நீர்த்தொட்டிகளும் ஆங்காங்கு கட்டப்பட்டன.

அஞ்சல் துறைத்தலைவர் ஒற்றுடல் துறைத் தலைவராயு மிருந்து வேவுத் தகவல் சேகரிக்கும் பணியை முதன்மையாகச் செய்தார். மாகாண ஆளுநர், மற்றும் மாகாண அதிகாரிகளின் செயல்களைப் பற்றிய செய்திகளைத் திரட்டுவது, அந்த மாகாண அஞ்சல் தலைவரின் கடமையாகும். வணிகர்கள், தலைச்சுமை அங்காடியர், பயணிகள் முதலியோரைத் துப்பறியும் பணியில் அல்-மன் சூர் ஈடுபடுத்தினன். அல்-மாமூன் தன்னுடைய வேவுத் தகவல் இலாகாவில் 1700 மூதாட்டிகளை அமர்த்தியிருந்தான். அப்பாசிடு ஆட்சியில் இருபாலாரும் ஒற்றர்களாய்ப் பணியாற்றினார்கள். அப்பாசிடாட்சி ஒற்றர்கள், மருத்துவராய் மாறுவேடமணிந்து உரோமானிய அரசில் உலவினார்கள்.

### நீதி நிர்வாகம்

முஸ்லிம் சமுதாயத்தில் நீதி வழங்குவது ஒரு சமயக் கடமையாகவே கருதப்பட்டதால் சமய நூல் வல்லார் ஒருவரையே தலைமை நடுவராய்க் கலீபா அமர்த்தினர். இஸ்லாமியச் சட்டப்படி நடுவர் முஸ்லிமாகவும், நேர்மையானவராகவும், இஸ்லாமிய சட்ட விதிமுறைகளை நன்கறிந்தவராகவும் இருக்க வேண்டும். முஸ்லிமல்லாதவர்கள் குற்ற இயல் சாராத (Civil) உரிமைகளில் அவர்களுடைய சமயத் தலைவர்கள் அல்லது நடுவர்களின் சட்ட அதிகாரத்திற்கே கட்டுப்பட்டவர்கள். நடுவர்கள் இருவகைப் பட்டனா. முதல் வகுப்பு நடுவர்கள், அனாதைகள், பித்தர்கள், வயதுவராதவர்கள் ஆகியோரின் பாதுகாவலராய் வழக்குகளுக்கு தீர்வு கண்டார்கள்; சமயப்பணி சார்பான நிதி நிறுவனங்களை நிருவகித்தார்கள்; மாகாண நடுவர்களை அமர்த்தினார்கள்; வெள்ளிக்கிழமைக் கூட்டுவழிபாட்டில் தலைமை வகித்தனர். அல்-மாமூன் காலத்தில் எகிப்திலிருந்த நடுவரின் மாத ஊதியம் நாலாயிரம் டர்ஹாம்களாகும். இரண்டாம்தர நடுவரின் அதிகாரம் கலீபாவாலோ, வசீராலோ, மாகாண ஆளுநராலோ வரையறுக்கப்பட்டிருந்தது.

### படை அமைப்பு

கலீபாவாட்சியில் ஒழுங்கான பயிற்சி, கட்டுப்பாடு நல்ல அமைப்புடன் கூடிய ஒரு பெரிய நிரந்தரப் படை இருக்கவில்லை. கலீபாவின் மெய்க்காவலர்களே அவருடைய படைவீரர்களாயும் இருந்தார்கள். போர்க்களத்தில் வீரர் கூட்டங்கள் தத்தம் தலைவர்களின் கீழ்ப் போர் புரிவது வழக்கம். மேலும், படையில்

கூலிக்காகப் போரிடும் அயல் நாட்டினரும், அவ்வப்போது திரட்டப்படுவோரும் இருந்தனர். படையில் நிரந்தரமாய்ப்பணியாற்றியவர்கள் அரசாங்க ஊதியம் பெற்றனர். அவ்வப்போது திரட்டப்பட்ட படைத் தொண்டர்கள் போரிடும் நாள்களில் உணவு முதலிய பொருள்களைப் பெற்றுவந்தார்கள். காலாள்படையினர், உணவுப் படியுடன் ஆண்டிற்கு ஏறத்தாழ ஆயிரம் டர்ஹாம்களை ஊதியமாய்ப் பெற்றார்கள். குதிரை வீரனுக்கு அத் தொகையைப் போல் இருமடங்கு ஊதியம் கிடைத்தது. அல்-மாமூன் ஆட்சியில் வீரர்கள் ஏற்கனவே பெற்றுவந்த ஊதியத்தில் நாலில் ஒரு பங்கே பெற்றார்கள். ஏனையோருக்குக் கிடைத்த ஊதியத்தோடு ஒப்பிடும் போது வீரர்களுக்கு நல்ல ஊதியம் கிடைத்தது என்றே சொல்லவேண்டும்.

காலாள்படை வீரர்கள் வாளையும், ஈட்டியையும் கொண்டு போரிட்டனர். அம்பு, வில்லைக்கொண்டு போரிட்ட ஒருபிரிவும் படையில் இருந்தது. குதிரைப்படையினர் தலைக்கவசமும், மார்புத்தகடும் அணிந்து, ஈட்டி, போர்க் கோடாரி தாங்கிச்சண்டை செய்தார்கள். வீரர்கள் வாள்களைத் தோளில் தாங்கிச் செல்வதற்குப் பதிலாகப் பாரசிகப் பழக்கத்தைப்பின்பற்றி இடையில் அணிந்திருந்தனர். தீப்பிடிக்காத உடைகளை அணிந்துகொண்டு எதிரிகளின் மீது எரியூட்டும்பொருள்களை எறியும் ஒரு பிரிவினர் வில்லாளர்களோடு இணைக்கப்பட்டிருந்தனர். கவண்கள், கவண் பொறிகள், மதிற் சுவர்களைத் தகர்ப்பதற்குரிய பெருந்தூலங்கள் முதலிய முற்றுகைத் தளவாடங்களுடன் பொறிவலாளர்கள் படையுடன் சென்றனர். காயமடைந்தோரைப் போர்க்களத்தினின்று எடுத்துச்செல்வதற்கான தூக்குக் கட்டில்களை ஒட்டகங்களின் மீது ஏற்றிச் சென்றனர். போர்க்களத்தில் மருத்துவ நிலையங்களை அமைத்துக்கொண்டார்கள்.

விஞ்ஞானத்தைப் போர்ப் பணியில் புகுத்தி வீரர்களுக்குப் பல வசதிகளைச் செய்துதந்த பெருமை வழக்கம்போல் ஹாரூனுக்கே உரியது. அரசியல் துறையில் அரபுக்கள் தங்கள் மேன்மையைப் பாரசிகர்களிடத்தில் இழந்ததுபோல், போர்த் துறையிலும் இழந்து விட்டனர். படையின் வலிமைமிக்க பகுதியாயிருந்த மெய்க்காவலர் குழுவில் பெரும்பாலோர் குராசானியர்களே. பர்கானா, நட்டாசியப் பகுதிகளிலிருந்து துருக்கிய வீரர்களின் பிரிவொன்றை அல்-முத்தாசிம் புதிதாய்ப் படையில் ஏற்படுத்தினான். இப் புதிய மெய்க்காவல் படையைக் கண்டு தலைநகர் மிகுந்த அச்சங்கொண்டது. கி.பி. 836-ல் கலீபா ஒரு புதிய நகரத்தை நிர்மாணித்து அங்கே தன் ஆட்சிப் பீடத்தை மாற்றிக் கொள்ள வேண்டியதாயிற்று. அல்-முண்டாசிர் (861-62)

இறந்த பிறகு உரோமப் பேரரசின் மெய்க்காவல் படைவீரர்களைப்போல் துருக்கிப்படை ஆட்சியில் வலிமையாய்ச் செயல்படத் தொடங்கினார்கள்.

உரோமானிய பைசாண்டியப் பாணியை ஒட்டிப் பத்துவீரர்களுக்கொரு தலைவரும், நூறு வீரர்களுக்கொரு தலைவரும் அமர்த்தப்பட்டிருந்தார்கள். பத்துப் பட்டாளங்களைக் கொண்ட பதினாயிரம் வீரர்களின் பெருந்தலைவர் அமீர் என அழைக்கப்பட்டான். அப்பாசிடு கலீபாக்கள் தங்கள் ஆட்சியை நிலை நிறுத்தவும், சிரியா, பாரசிகம், நட்டாசியா முதலிய இடங்களில் கலவரங்களை ஒடுக்கவும், பைசாண்டியப் பேரரசைத் தாக்கவும், வலிமையும், மனநிறைவும் கொண்ட படையை நம்பியே வாழ்ந்தார்கள். எண்ணிக்கையும் விரைந்து இடம் பெயரும் ஆற்றலும் செயல் நுட்பமும் நிறைந்திருந்த பத்தாம் நூற்றாண்டு சரேசனிய வீரர்களைக்கண்டு மற்றோர் அஞ்சினர். ஆயிரம் ஒட்டக வீரர்களையுடைய அவர்களுடைய பாசறையைக் கலைக்க முடியாதெனப் பைசாண்டியப் பேரரசர் அரபுக்களைப்பற்றி எழுதியுள்ளார்.

அரபுப்படையில் கட்டுப்பாடு குலைந்தால் அதை மீண்டும் ஏற்படுத்த முடியாது. பொதுவாய்க் காலாள் படையினர் கொள்ளைவீரர்களேயன்றிப் போர்வீரர்களல்லர். அவ்வாறிருந்தும் பைசாண்டியர்களுக்கு அரபுக்கள் வல்லமை மிக்க பகைவர்களாகவே காட்சியளித்தார்கள். ஆனால் அரபுக்களின் வலிமை குறைந்து கொண்டே வந்ததால் பத்தாம் நூற்றாண்டினிறுதியில் பைசாண்டியர்கள் டமஸ்கஸையும், பாக்தாதையும் வலுவில் தாக்கத் தொடங்கிவிட்டார்கள்.

அல்-முத்தாவக்கில் அன்னியப் படைப்பிரிவுகளைப் புகுத்தியதால் படையின் கட்டுப்பாடும், உணர்ச்சியும், குறைந்து படைவலிமை தேயத் தொடங்கியது. பேரரசின் வருமானம் குறையவே ஆளுநர்களுக்கும், படைத்தலைவர்களுக்கும், மாகாணங்களைக் குத்தகைவிட்டு அவ்வருமானத்திலிருந்து வீரர்களுக்கு ஊதியம்தர அல்-முக்டாதிர் (908-32) ஏற்பாடு செய்தார். படைவீரர்களுக்கு ஊதியத்திற்குப் பதிலாக நிலமானியங்கள் வழங்கப்பட்டன. இது நிலமானியப் படைமுறைக்கு வழி வகுத்தது.

**மாகாண ஆளுநர்**

உமையடு ஆட்சியில் பேரரசினை மாகாணங்களாய்ப் பிரித்து ஆளுநர்களை அமர்த்தும் முறை ஏற்பட்டது. அப்பாசிடு ஆட்சியில் அம்முறை தொடர்ந்தது. பாக்தாது கலீபாவாட்சியின் தொடக்

கத்தில் பேரரசு இருபத்து நான்கு மாகாணங்களாய்ப் பிரிக்கப்பட்டிருந்தது. பரந்து விரிந்திருந்த பேரரசில் இடைச் செய்தித் தொடர்பு நல்லவகையில் அமையாத காரணத்தால் நடுவாட்சி வலிமை தளர்ந்து மாகாண ஆட்சி வலுப்படுவது தவிர்க்க முடியாததாயிற்று. மாகாண ஆளுநர் (அமீர்) பதவி மரபுரிமையாயிற்று. அவருடைய உள்நாட்டதிகாரம் உச்சநிலையை எட்டிற்று.

வசீரின் பரிந்துரையின் மீது கலீபா மாகாண ஆளுநரை அமர்த்தினர். பதவியிலிருந்து வசீர் நீக்கப்பட்டால் அவர் பரிந்துரைத்த ஆளுநர்களும் பதவி விட்டு விலகிவிடுவார்கள். வசீர் பதவியைப்போன்று அமீர் பதவியிலும் இரு வகுப்புகள் இருந்தன. முதல்தர அமீர் முழுப்படைப் பொறுப்பும், நாட்டுப் பாதுகாப்புப் பொறுப்பும் பெற்றிருந்தார். நடுவர்களை அமர்த்தி அவர்களின் பணியைக் கண்காணித்தார்; வரி விதித்தார். சமயத்தை மாற்றம் ஏதும் ஏற்படாமல் காத்தார். காவல் துறையை நிருவகித்தார். வெள்ளிக்கிழமை பொது வழிபாட்டிற்குத் தலைமைவகித்தார். இரண்டாம் பிரிவு அமீருக்கு வரி விதிப்பதிலும் நடுவர்கள் மீதும் அதிகாரம் இல்லை. கலீபாவின் வலிமை, நடுவாட்சியின் நகரிலிருந்து மாகாணத்தின் தூரம், ஆளுநரின் ஆற்றல் இவற்றைப் பொறுத்து ஆளுநருடைய அதிகாரம் கூடியும், குறைந்துமிருக்கும். மாகாணத்தின் வருமானம் மாகாண ஆட்சிக்குச் செலவிடப்பட்டது போக மீதியுள்ள தொகை நடுவாட்சிக் கருவூலத்தில் சேர்க்கப்பட்டது. நீதி நிர்வாகம் மாகாணக் காதியிடமிருந்தது. மாகாணத்தின் உட்பிரிவுகளில் உதவி நடுவர்கள் காதிக்கு அடங்கிப் பணியாற்றினர்கள்.

**அப்பாசிடு சமுதாய அமைப்பு**

பன்மனைவியர் மணமுறையாலும் (Polygamy) காமக்கிழத்தியர் கூட்டுறவாலும், அடிமை வணிகத்தாலும் அரபுக்கள் அவர்களின் குடிமக்களோடு கலந்துவிட்டனர். அப்பாசிடு கலீபாக்களில் மூவரைத் தவிர ஏனையோர் அயல்நாட்டு அடிமைப் பெண்களின் மக்களே. பண்டைய அரபுக்குல அமைப்பு தகர்ந்துவிட்டது. பல நாட்டினங்களைச் சேர்ந்த அதிகாரிகள் மேற்குடி அரபுக்களிடத்தைப் பிடித்துக்கொண்டார்கள். அதிகாரிகள் முதலில் பெரும்பாலும் பாரசிகர்களாகவும், பிறகு துருக்கியராகவும் இருந்தனர்.

சமுதாய அமைப்பை இலக்கிய ஆதாரங்களைக்கொண்டு காண்போம்.

**அகவாழ்வு—பெண்கள்**

பத்தாம் நூற்றாண்டினிறுதியில் பெண்கள் உரிமை இழந்து ஆண், பெண் கலந்து பழகுவது தடுக்கப்பட்டு, ஆண்கள் பார்வையில் படாமல் பெண்கள் ஒதுக்கிவைக்கப்பட்டனர். அப்பாசிடு ஆட்சித் தொடக்கத்தில் பெண்கள் உரிமையோடு வாழ்ந்தார்கள். அவர்கள் படைக்குத் தலைமைதாங்கிப் போருக்குஞ் சென்றனர். இலக்கியப் பொழுதுபோக்குகளில் ஆண்களோடு போட்டியிட்டனர்; கவிதைகள் புனைந்தனர். தங்கள் நகைத்திறமை, இசைத்திறமை, குரல்சிறப்பு ஆகியவற்றால் மக்களை மகிழ்வித்தனர். அல்-முத்தாசிம் காலத்தில் உபேடா அல்-துன்பூரியா பேரழகியாகவும், பாடகியாகவும், இசைக்கலை வல்லவளாயும் புகழ்பெற்று விளங்கினாள். ஹாரூன் அல்-ராஷிதின் தாயாகிய அல்-கைசூரான் அல்-மாதியின் மகள் உலையா, அல்-ராஷிதின் துணைவி சுபேடா, அல்-மாமூனுடைய மனைவி பூரான் முதலிய அரசகுலப் பெண்கள் தனிச் சிறப்போடு, அரச காரியங்களிலும் செல்வாக்குடன் வாழ்ந்தார்கள். அரபு நாட்டு இரவுகள் என்ற கதைக்கொத்தில் வஞ்சகம், உட் சூழ்ச்சி இவற்றின் உருவங்களாய், இழிவான உணர்ச்சிகளுக்கும், எண்ணங்களுக்கும் உறைவிடமாய்ப் பெண்கள் சித்திரிக்கப்பட்டுள்ளார்கள்.

திருமணத்தை ஒரு கடமையாய் இஸ்லாம் வற்புறுத்துகிறது. மக்கட்பேறு, அதிலும் புதல்வரைப் பெறுதல், ஆண்டவனின் அருட்கொடையாகவே கருதப்பட்டது. மனைவி, கணவனையும் மக்களையும் பேணிக் குடும்பக்காரியங்களைக் கவனித்த நேரம் போக ஓய்வுநேரத்தில் நூல் நூற்பதிலும் ஆடை நெய்வதிலும் ஈடுபட்டாள். பெண்கள் கைவளையலும் காற்சிலம்பும் அணிந்து ஒப்பனை செய்துகொண்டார்கள்.

ஆண்கள் உடையில் அதிக மாற்றமில்லை. நிலத்தில் மெத்தைகளில் அமர்ந்து உரையாடினார்கள்; உண்டியருந்தினார்கள்; பாரசிக முறையில் தயாரித்த உணவுவகைகளில் திளைத்தனர்; சர்பத் அருந்தினார்கள். தனிமையிலும், நண்பர்களோடும் மது அருந்துவது பெருவழக்காயிருந்தது. இஸ்லாம் மதுவைத் தடைசெய்திருந்தபோதிலும், கலீபாக்களும், வசீர்களும், நடுவர்களும், புலவர், கவிஞர், பாடகர்களோடு மதுக்குடியில் திளைத்தனர்.

**குளிப்பகங்கள்**

அப்பாசிடு ஆட்சியில் மக்களின் வசதிக்காகப் பொதுக் குளிப்பகங்கள் ஆங்காங்கு கட்டப்பட்டன. பல்வண்ணக் கற்களால்ஆன தளத்துடனும் சலவைக்கல் சுவர்களுடனும் கட்டப் பெற்ற குளிப்பகங்களில் பல அறைகளிருந்தன. புற அறைகள் ஓய்வு பெறுவதற்கும், சிற்றுண்டி அருந்தவும், சிறுகுடிக்கும் பயன்பட்டன. அல்-முக்தாதிர் (908-32) காலத்தில் பாக்தாது நகரில் 27,000 நீராடுமிடங்கள் இருந்தனவாம். அவற்றில் வெந்நீரும் தண்ணீரும் கிடைத்தன. பெண்கள் நீராடுவதற் கென்று சில நாள்கள் ஒதுக்கப்பட்டன.

**பொழுதுபோக்கு**

பொழுதுபோக்கிற்கு மக்கள் மனையகக் கேளிக்கைகள் சில வற்றைப் பயன்படுத்தினார்கள். பல மாற்றங்களைக்கண்ட அல்-ராஷிதே சதுரங்க ஆட்டத்தையும் ஊக்குவித்த முதல் அப்பாசிடு கலீபாவாவார். பகடைக்குப் பதிலாகப் பிரபுக்கள் இந்திய விளை யாட்டாகிய சதுரங்கத்தை ஆடினார்கள். புனித உரோமப் பேரரசர் ஷார்லெமேனுக்கு ஹாரூன் அனுப்பிய நன்கொடை களில் சதுரங்கப்பலகை ஒன்றாகும். மற்றொரு இந்திய விளையாட்டாகிய கட்ட ஆட்டமும் (Backganmon) பொழுது போக்க உதவிற்று. விற்றொழில் கலை, குதிரைமீதிவர்ந்து செண்டுகொண்டு ஆடும் ஒருவகைப் பந்தாட்டம் (Polo), வாள் பயில் கலை, வேல் எறிதல், குதிரை ஏற்றப்பந்தயம், வேட்டை யாடுதல் ஆகியவை பொழுதுபோக்கிற்கான திறந்தவெளி விளை யாட்டுகளும் பந்தயங்களுமாகும். குதிரை ஓட்ட விளையாட்டில் பந்தயங்கட்டி மேலும் மகிழ்ச்சியடைந்தனர்.

கலீபாக்களும், அவர்தம் மக்களும் வேட்டையைப் பெரிதும் விரும்பினார்கள். அல்-அமீன் அரிமா வேட்டையில் திளைத்தான். வேட்டையாட அல்-முத்தாசிம் சிறுத்தைப் புலியைப் பயன்படுத் தினான். வல்லூறைக்கொண்டு புள்வேட்டையாடினார்கள். குடி மக்களையும் பார்க்கவந்தவர்களையும் அச்சுறுத்த சில கலீபாக்கள் சிங்கத்தையும் புலியையும் வைத்திருந்தார்கள். வேறுசிலர் நாய்களையும் குரங்குகளையும் செல்லமாக வளர்த்தார்கள்.

**அடிமைகள்**

கலீபா, அவர்குடும்பம், அரசாங்க அலுவலர்கள், ஹாஷி மைட் குலத்தோன்றல்கள், அவர்களைச் சார்ந்தோர் முதலியவர் கள் சமுதாய விவரப்பட்டியலில் முதலிடம் வகித்தார்கள். வீரர்

களும், மெய்க்காவலர்களும், இன்பத் தோழர்களும் பணியாள் களும் அவர்களைச் சார்ந்தோர்களாவார்கள்.

ஊழியர்கள் பெரும்பாலும் அடிமைகளே. போரில் சிறைப் பட்டும், விலைக்கு வாங்கப்பட்டும் முஸ்லிம் அல்லாதவர்களே அடிமைகளாயிருந்தார்கள். அடிமைகளில் சிலர் நீக்ரோக்கள்; சிலர் துருக்கியர். மற்றோர் பெரும்பாலும் கிரேக்கர்களாகவும், ஸ்லாவ் மக்களாகவும் பெர்பெர்களாகவும் இருந்தார்கள். அவர்களில் அலிகளாய் இருந்தவர்கள் அந்தப்புரத்தில் காவலர்களாய்ப் பணிபுரிந்தார்கள். வேறுசிலர்—அவர்களும் அலிகளாயிருக்கலாம்—கவர்ச்சி ஆடையணிந்து, பெண்களைப் போல் உடலில் நறுமணம் பூசிக்கொண்டு ஆண்டைமாரின் இயற்கைக்குமாறான பால் உறவிற்குப் பயன்பட்டார்கள். அவர் கள் ஃகில்மன் (Ghilman) எனக் குறிப்பிடப்பெற்றார்கள். இந்த ஃகில்மன் அமைப்பு பாரசிகப் பழக்கத்தைப் பின்பற்றி ஏற்பட்டது. கவிகள் தவறான தங்கள் காம இச்சைகளைப்பற்றிப் பாடவும், தாடி முளைக்காத இளஞ்சிறுவர்களுக்குக் காதல் பாடல் கள் எழுதவும் தயங்கவில்லை. அடிமைகளில் கன்னிப்பெண்கள் ஆடவும், பாடவும், ஆசைநாயகிகளாகவும் பயன்பட்டார்கள். அவர்களுள் சிலர் கலீபாக்களைத் தங்கள் இச்சைகளுக்கிணங்கச் செய்து ஆட்டிப் படைத்தார்கள். ஒருசில அடிமை மகளிர் வியத்தகு புலமையும் கலையறிவும் பெற்றிருந்தார்கள். அல்-அமீன் பெண்களின் முடியைக் கத்தரித்துப் பையன்களைப்போல் ஆடை யணிவித்துப் பட்டுத் தலைப்பாகையுடன் காட்சியளிக்குமாறு செய்தார். இப்புதுப் பழக்கத்தைச் சமுதாயம் பெரும்விருப்புடன் ஏற்றுக்கொண்டது. ஆளுநர்களும், படைத்தலைவர்களும் கலீபா விற்கும், வசீருக்கும் அவ்வப்போது அழகிய பெண்களைக் கொடைப்பொருளாக அனுப்புவது வழக்கமாயிருந்தது. அவ் வாறு அனுப்பாவிடில் அது அடங்காமையின் அறிகுறியாய்க் கருதப்பட்டது.

எழுத்தாளர்கள், அறிஞர்கள், கலைஞர்கள், வணிகர்கள், கை வினைஞர்கள், கலைத்தொழிலர்கள் சமுதாயத்தில் உயர் வகுப்பினர் ஆவார்கள். உழவர்கள், இடையர்கள், நாட்டுக்குரியவர்கள் கீழ் வகுப்பினராய்க் கருதப்பட்டார்கள்.

பரந்திருந்த பேரரசில் பேரளவில் வாணிபம் நடைபெற்றது. தொடக்கத்தில் கிறித்தவர்களும், யூதர்களும், சொராஸ்டிரியர் களும் வணிகர்களாயிருந்தார்கள். பிறகு முஸ்லிம்களும் அரபுக் களும் அவ்வணிகத்தைக் கைப்பற்றிக்கொண்டார்கள். பாக்தாது பஸ்ரா, கெய்ரோ, அலெக்சாண்டிரியா ஆகிய துறைமுகங்கள்

வழியாக நில வணிகமும் கடல் வாணிகமும் நடைபெற்றன. முஸ்லிம் வணிகர்கள் கிழக்கில் சீனத்தோடும், மேற்கில் மொராக்கோ, ஸ்பெயின் நாடுகளோடும் வாணிபத் தொடர்பு கொண்டார்கள். சூயஸ் நிலச்சந்திப்பில் ஒரு கால்வாய் வெட்ட ஹாரூன் அல்-ராஷிது டிலெசெப்ஸுக்கு ஆயிரமாண்டுகளுக்கு முன்பே திட்டமிட்டான். நண்ணிலக் கடலிலும், கருங்கடலிலும் அரபு வாணிபம் செழிக்கவில்லை. ஆனால், காஸ்பியன் கடற்பகுதியில் வாணிபம் செழித்தோங்கியது. ஆண்டிற்குப் பத்துலட்சம் டர்ஹாமை வருமானமாய்ப் பெற்ற வணிகர் பலர் பஸ்ராவில் வாழ்ந்தார்கள். முஸ்லிம்கள் பேரீச்சம்பழம், சர்க்கரை, பருத்தி, கம்பளித் துணிகள், எஃகாலான கருவிகள், கண்ணாடிச் சாமான்களை விற்றும், கிழக்காசியாவிலிருந்து நறுமணப் பொருள்கள், கற்பூரம், பட்டு, ஆப்பிரிக்காவிலிருந்து தந்தம், கருங்காலிமரம், நீக்ரோ அடிமைகளை வாங்கியும் வாணிபஞ் செய்தனர்.

பேரரசில் வேளாண்மையும் கைத்தொழிலும் விரிவான முறையில் நடைபெறாமலிருந்திருந்தால், வாணிபம் அவ்வளவு செழித்தோங்கியிருக்கவியலாது. பேரரசின் பல பகுதிகளிலும் கைத்தொழில் தழைத்தோங்கியது. மேலை ஆசியாவில் கம்பளி விரிப்புகள், திரைச்சீலை, பட்டு, பருத்தி, கம்பளித்துணிகள், சரிகை, மரச்சாமான்கள், அடுக்களைப் பாத்திரங்கள் முதலியன தயாரித்தார்கள் பாரசிகத்திலும், இராக்கிலும் தறிகள் உயர்ந்தரகக் கம்பளங்களையும் துணிகளையும் உற்பத்தி செய்தன. அல்-கூஃபா பட்டுத் தலைக்குட்டைகளைத் தயாரித்தது. சிடான், டயர், மற்றும் சிரியாப் பட்டணங்களில் கண்ணாடித்தொழில் சிறந்திருந்தது. கண்ணாடித் தொழிலைப்போன்று உலோகத்தாலான மலர்ப் படிக்கங்களிலும் சிரியா வேலைப்பாட்டைக் காணலாம்.

எட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சீனாவிலிருந்து காகிதத்தொழில் சாமர்க்கண்டை வந்தடைந்தது. அந்நூற்றாண்டு முடிவதற்குள் முதல் காகிதஆலை பாக்தாதில் ஏற்பட்டது. பின்னால் எகிப்திலும், மொராக்கோவிலும், ஸ்பெயினிலும், காகித ஆலைகள் ஏற்பட்டன. வெள்ளைக் காகிதமும், வண்ணக் காகிதமும் ஆலைகளில் உற்பத்தியாயின. முஸ்லிம் ஸ்பெயினிலிருந்தும் இத்தாலியிலிருந்தும் காகிதத்தொழில் கிறித்தவ ஐரோப்பாவிற்குப் பன்னிரண்டு, பதின்மூன்றும் நூற்றாண்டுகளில் பரவிற்று.

முஸ்லிம் வாணிபத்தின் பெரும்பகுதி தூரக்கிழக்கு நாடுகளாகிய சீனம், இந்தியா, ஆர்ச்சிபிலாகோவோ தீவுக்குழு ஆகியவற்றுடன்தான் நிகழ்ந்தது. ஐரோப்பிய நாடுகளுடன்

நடைபெற்ற வாணிபம் சிறிதளவாயிருந்ததால் அதனைச் சிறித்தவ, யூதர்களிடமே விட்டுவிட்டார்கள். நேர்த்தியானதும் விலையுயர்ந்ததுமான மேலை ஆசியப் பொருள்கள் பண்படாத மேலை நாடுகளில் தேவைப்படவில்லை; அவற்றிற்கு மாற்றாகத் தருவதற்கும் அந்நாடுகளிடத்தில் ஒன்றுமில்லை. பேரரசின் ஒவ்வொரு மாகாணத்திலும் நகரத்திலும் ஏதாவதொரு சிறந்த பொருள் செய்யப்பட்டது. மேலை ஆசிய நாடுகளில் நடைபெற்ற மட்பாண்டத்தொழில் மிகப்பழமையானது. அப்பாசிடு ஆட்சியில் நேர்த்தியான மட்கலங்களும் வண்ணமெருகிட்ட ஓடுகளும் தயாரிக்கப்பட்டன. எகிப்தில் அழகான கண்ணாடிச் சாமான்கள் செய்தார்கள். சாமர்கண்டு, பாக்தாது, டமஸ்கஸ் பட்டணங்கள் வேலைப்பாடான பல வண்ணப் பீங்கான் கலங்களுக்குப் பெயர் பெற்றிருந்தன. செம்பு, இரும்பு, வெள்ளி, தங்கம் முதலிய உலோக வேலைப்பாடும் சிறந்திருந்தது. நாட்டின் மற்ற தொழில்கள் சவர்க்காரம் (Soap), சாயம், நறுமணம், நகை, தோல், மரம், இறுமல் பொருள்களை உற்பத்தி செய்தன.

வேளாண்மையே நாட்டு வருவாய்க்கு முக்கிய மூலமாயிருந்தது. நாட்டுக் குடிமக்களே பெரும்பாலும் அத்தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள். தொடக்கக்கால அப்பாசிடுகள் உழவுத் தொழிலைப் பல்லாற்றாலும் ஊக்குவித்தார்கள். நிலவளத்தில் எகிப்திற்கு அடுத்தாற்போலிருந்த டைகிரிஸ்-யூப்ரடீஸ் ஆற்றுப் படுகை நடுவணரசின் தனிக்கவனத்தைப் பெற்றது. பாபிலோனியர்கள் காலமுதல் இருந்துவந்த கால்வாய்களில் தூர்ந்து போனவற்றைக் கலீபாக்கள் மீண்டும் தோண்டிப் புதுப்பித்தார்கள். யூப்ரடீசிலிருந்து கால்வாய்கள் குறுக்கும் மறுக்குஞ்சென்று வலைபோல் நாட்டைப் பின்னிக்கொண்டிருந்தன. இராக்கிலும் எகிப்திலும் முதன்மையான பணி பழைய கால்வாய்களைச் செம்மைப் படுத்தியதேயாகும்.

நாரத்தை, எலுமிச்சை வகையைச் சேர்ந்த கிச்சிலிமரம் இந்தியா, மலேயாப் பகுதிகளிலிருந்து மேலை ஆசியாவிற்கும், நண்ணிலக்கடல் பகுதிக்கும், ஸ்பெயின்வழியாக ஐரோப்பாவிற்கும் கொண்டுசெல்லப்பட்டது. வடமேற்குப் பாரசிகத்தில் கரும்புத் தோட்டங்களும், சர்க்கரை ஆலைகளும் இருந்தன. அத்தொழில் சிரியாவில் பரவி, அங்கிருந்து சிலுவைப் போர்வீரர்கள் கரும்பையும் சர்க்கரையையும் ஐரோப்பிய நாடுகளில் அறிமுகஞ் செய்தார்கள். சர்க்கரை இந்தியாவில் வங்காளத்திலிருந்து சென்றிருக்கலாம்.

வேளாண்மையை இழிவாய்க்கருதிய அரபுக்கள் அதில் ஈடுபடவில்லை. பேரரசின் பெரும்பகுதி மக்களாய் அதன் வருவாய்க்கு முக்கிய மூலமாயிருந்த உழவர்கள் நாட்டின் குடி மக்களே. அவர்கள் சமயத்துறையில் உரிமைபெற்றுச் சமுதாயத் துறையில் திம்மிகளாய் (Dhimmis) வாழ்ந்தார்கள். வேளாண் மக்கள் பெரும்பாலும் கிறித்தவர்கள், யூதர்கள், சபியன்களாகவே இருந்தார்கள். நாட்டுப்புறங்களிலும் பண்ணைகளிலும் தங்கள் மொழியையும் பண்பாட்டையும் அவர்கள் காத்துக்கொண்டார் கள். நகரங்களில் தொழில், நிதித்துறைகளில் கிறித்தவர்களும், யூதர்களும் சிறப்பிடம் வகித்தார்கள். இந்த நிலைமையை முஸ்லிம்கள் விரும்பவில்லையெனினும் மாற்ற முடியவில்லை. சமயப்பற்றுமிக்க உமையடு கலீபா இரண்டாம் உமர் கிறித்தவர் களையும் யூதர்களையும் தனியாடை அணியச்செய்து அரசு அலுவல்களிலிருந்து விலக்கிவைத்தார். அல்-ராஷிது சட்ட வாயிலாக முஸ்லிம் அல்லாதவர்களுக்குச் சமயத்துறையில் சில தடைகள் விதித்தான். கி.பி. 850-லும், 854-லும் அல்-முத்தா வக்கில் கிறித்தவர்களுக்குச் சில கட்டுப்பாடுகள் விதித்துத் தொல்லைதந்தான். கிறித்தவர்கள், யூதர்களின் சான்றுரைகளை (testimony) முஸ்லிம்களுக்கெதிராக ஏற்றுக்கொள்ளக்கூடா தென முஸ்லிம் சட்ட அறிஞர்கள் பணித்தார்கள். இது திம்மி களுக்கிருந்த பெருங் குறைபாடாகும். பலவிதத் தடைகளுக் கிடையிலும் கிறித்தவர்கள் அவர்கள் சமயவழியில் செயல்படு வதைத் தடுக்கவில்லை. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிறித்தவர்கள் வசிர்களாகவும் உயரதிகாரிகளாகவும் பணிபுரிந் தார்கள். அவர்கள் கரங்களை முத்தமிட சில முஸ்லிம்கள் மறுத் தார்கள் என அறியக்கிடக்கிறது. இந்தியா, சீனம் போன்ற நாடுகளுக்குச் சமயப்பரப்பூழியர்களை அனுப்பும் அளவிற்குக் கலீபாவாட்சியில் கிறித்தவ சமயம் போதிய உள்ளுரம் பெற்றருந்தது.

குரானில் யூதர்களைப்பற்றிய குறிப்புகள் அவர்களுக்குச் சாதகமாயில்லாவிடினும், கலீபாக்கள் யூதர்களை உயர் பதவிகளில் அமர்த்தியிருந்தார்கள். பாக்தாதில் அவர்களின் குடியிருப்பு பெரியதாயிருந்தது. அங்கு யூதத் திருக்கோயில்களும் பல கல்விச் சாலைகளுமிருந்தன. கி.பி. 985-ல் சிரியாவில் வங்கி நடத்துபவர் களாகவும் நாணய மாற்றுக்காரர்களாவும் இருந்தவர்களில் பெரும்பாலோர் யூதர்களே; பெரும்பாலான கிறித்தவர்கள் எழுத் தர்களாயும் மருத்துவர்களாயுமிருந்தார்கள்.

அரபுக்கள் மக்களை படைகொண்டு வென்று தங்களாதிக்கத் தின்கீழ்க் கொண்டுவந்தார்கள். பிறகு பையப்பைய அவர்களைச்

சமயமாற்றஞ் செய்து முஸ்லிம்களாக்கினர்கள். சாதாரணமாய் சமயமாற்றம் மெதுவாகவும் அமைதியாகவும் நடைபெற்றது. சிலவேளைகளில் தனிப்பட்டவர்களாகவும் கூட்டமாகவும் கட்டாய மாற்றமும் நிகழ்ந்தது. சமயமாற்றத்தைத் தன்னலமே தாண்டிற்று. மானக்குறைவான ஆள்வரியிலிருந்தும் மற்ற தகுதியின்மைகளிலிருந்தும் தப்பவும், சமுதாயத்தில் உரிமையோடும் பாதுகாப்போடும் வாழவும், அரசியல் உயர்வும் செல்வாக்கும் பெறவும் இஸ்லாம் சமயத்தை ஏற்க மக்களே முன்வந்தார்கள்.

மூன்றாவது கட்டமாக அரபுமொழி ஆதிக்கமேற்பட்டது. அரசியலிலும் சமயத்துறையிலும் காணாத பற்றையும் எதிர்ப்பையும் மொழித்துறையில் காண்கிறோம். மக்கள் தங்கள் தாய்மொழியை விட்டு அரபுமொழியை ஏற்க மறுத்து நீண்டகாலம் போரிட்டார்கள். அரபு மக்கள் மொழி, பேச்சுமொழியாவதற்கு முன்பு இலக்கிய மொழியாய் வெற்றிநடை போட்டது. அப்பாசிடு ஆட்சியின் பிற்பகுதியில்தான் அரபு, பொதுமக்களின் பேச்சு மொழியாயிற்று. பாரசிகத்தில் அரபு மொழிக்கு முழுவெற்றி நிரந்தரமாய் ஏற்படவில்லை.

பைசாண்டியம், பாரசிகம், இந்தியா, சீனு முதலிய நாடுகளின் கருத்துகள், கலைகள், திறமைகள், தொழில் நுட்பங்கள் எல்லாம் சேர்ந்து பேரரசில் கி.பி. 800 அளவில் ஒரு புதிய பண்பாட்டை உருவாக்கின. அரபு நாகரிகம் அரபு மொழி வாயிலாகப் பரவத்தொடங்கி அறிவுலகில் ஒரு பொற்காலத்தைத் தோற்றுவித்தது.

**அறிவியலும் இலக்கியமும்**

மொழிபெயர்ப்புக் காலமுடிவில், ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் முதனூல்கள் இலக்கியத் துறையிலும் அறிவியல் துறையிலும் அரபு மொழியில் வெளிவரத் தொடங்கின. பாரசிக, கிரேக்க நூல்களைத் தங்கள் சிந்தனை நெறிகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்ப மாற்றி அமைத்துக்கொண்டார்கள். அறிவியல் கடவுளைப்பற்றிய இறைமைநூல் (Theology) மனிதனைப்பற்றிய மருத்துவம் என இருவகைப்படும் என்று நபிநாயகம் கூறியதாகச் சொல்லப்படுகிறது. இடைக்காலத்தில் முஸ்லிம் மெய்ந்நூல் அறிஞர்களும், விஞ்ஞானிகளும் மருத்துவத்துறை அறிஞர்களாயிருந்தார்கள்; மருத்துவத் தொழிலையும் மேற்கொண்டிருந்தார்கள். நோய்களைக் குணப்படுத்தும் மருந்து வகைகளில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டது. அரபுக்களே மருந்தாக்கக் கலைமுறையை முதன்முதலில் கண்டு,

முதல் மருந்துப்பொருள் தொகுதியைத் தொகுத்து, மருந்துக் கடைகளையும் திறந்தார்கள். அல்-மாமூன் காலத்தில் மருத்துவர்களுக்கும், மருந்தாக்கக் கலைஞர்களுக்கும் தேர்வுகள் நடத்தினார்கள். மருத்துவத்துறையில் ஏற்பட்ட தவற்றையொட்டிக் கி.பி. 931-ல் புகழ்பெற்ற மருத்துவரைக்கொண்டு மற்ற மருத்துவர்களுக்குத் தேர்வுவைத்துத்தேறியவர்களுக்குத் தகுதிச்சான்றுகள் வழங்குமாறு கலீபா உத்தரவிட்டார். தேர்ச்சிபெறாத அரைகுறை மருத்துவர்கள் தொழிலிலிருந்து நீக்கப்பட்டார்கள். பாக்தாது நகரில் 860 மருத்துவர்களே தகுதிபெற்றவர்களாயிருந்தார்கள். மருந்துகளுடன் நோயாளிகளைத் தேடிச்சென்று மருத்துவர்கள் மருத்துவஞ் செய்தார்கள். நாள்தோறும் மருத்துவர்கள் சிறைச்சாலைக்குச் செல்லவேண்டும். அரபு அரசு மக்கள் உடல்நலம் பேணுவதில் காட்டிய அக்கறையை அக்கால உலகில் வேறெங்கும் காணமுடியாது.

ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், பாரசிக முன்மாதிரியைப் பின்பற்றி முதல் மருத்துவ மனையை ஹாரூன் ஏற்படுத்தினார். பேரரசில் ஆங்காங்கு 34 மருத்துவ மனைகள் நிறுவப்பட்டன. பதினோராம் நூற்றாண்டில் நடமாடும் பண்டுவ மனைகளைத் (clinic) தொடங்கினார்கள். மருத்துவ மனைகளில் பெண்களுக்குத் தனிக் கூடங்கள் இருந்தன. மருத்துவமனையை ஒட்டி மருந்து வழங்கும் பகுதியொன்றிருந்தது. சில மருத்துவ மனைகளில், மருத்துவப் பயிற்சி அளிக்கப்பட்டது. மருத்துவ நூலகங்களிருந்தன. பாரசிகர்களே சிறந்த மருத்துவ நூலாசிரியர்களாயிருந்தார்கள். இராசிசும் (Rhazes 865-925) அவிசென்னாவும் (Avicenna 980-1037) அவர்களில் முதன்மையானவர்கள். பாக்தாத் மருத்துவமனையில் இராசிஸ் தலைமை மருத்துவராயிருந்து, அறுவை மருத்துவத்தில் நிபுணராய் விளங்கினார். அவருடைய மருத்துவநூல்களில் தலைசிறந்தது பல்பொருள் மருத்துவச் செய்திக் களஞ்சியம்(Al-Hawi) ஆகும். அவி சென்னாவின் மருத்துவப் புத்தகம் ஐரோப்பிய மருத்துவ மாணவர்களுக்குப் பாடப் புத்தகமாயிருந்தது. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதி முப்பதாண்டுகளில் மட்டும் அப் புத்தகம் பதினைந்து முறை பதிப்பிக்கப்பெற்றது. அந்நூலில் 760 மருந்துச் சரக்குகள் தொகுக்கப்பெற்றுள்ளன. மேலை நாடுகளில் அவ்வேட்டுச்சுவடி மருத்துவத்துறையில் சிறந்த நூலாகப் பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து பதினேழாம் நூற்றாண்டுவரை விளங்கிற்று. நிலம், நீர் மூலம் நோய்கள் பரவுகின்ற செய்தி அவிசென்னாவிற்குத் தெரிந்திருந்தது. மருத்துவராயும், மெய்ந்நூல் அறிஞராயும் கவிஞராயுமிருந்த அவிசென்னா அரபு அறிவியலின் திருவுருவமாய்த் திகழ்ந்தார்.

அரிஸ்டாடில், பிளேடோ போன்ற கிரேக்கத் தத்துவ ஞானி களின் நூல்களை ஆராய்ந்து தங்கள் மெய்ந்நூலை அரபுக்கள் அமைத்துக்கொண்டார்கள். அரபுக்களின் மெய்ந்நூலைக் கிறித்தவ ஞானிகள் படித்துப் பயனடைந்தார்கள். இஸ்லாமிய ஒரு கடவுட் கோட்பாட்டை கிரேக்க மெய்ந்நூலோடு பொருத்திச் சமரசங் கண்டது இடைக்கால இஸ்லாம் சமயத்தின் அரிய சாதனையாகும். உலகம் படைக்கப்படவில்லை அதற்குத் தொடக் கமும் கிடையாது என்ற அரபுஞானி அல்-ஃபாரபியின் (Al-Farabi) கூற்று முஸ்லிம்களுக்கு அதிர்ச்சியளித்தது.

இஸ்லாமிய உலகில் அறிவுத்துறை கணிதம், வானநூல், இசை என இன்றுபோல் பிரிந்திருக்கவில்லை. மெய்ந்நூல் அறிஞர்கள் கணித அறிஞராகவும், இசைக்கலை அறிஞராகவும், வானூலார் கவிஞராகவும் இருந்தார்கள். உமர் அல்-கயாம் ஒரு பாரசிகப் பாவலர்; புகழ்பெற்ற ருபையத் (Rubaiyat) என்ற கவிதையைப் படைத்தவர். அவர் ஒரு பகுத்தறிவுச் சிந்தனை யாளர். சிறந்த வானூலார் பட்டியலில் அவரும் ஓரிடம் பெற் றிருந்தது வியப்பாயிருக்கும். அல்-கயாமும் அவருடைய தோழர் களும் ஈடுபட்டிருந்த ஆராய்ச்சியில் விளைந்த ஆண்டுக்குறிப்பேடு (calendar) கிரெகோரியன் குறிப்பேட்டைக் காட்டிலும் செம்மையாயிருந்தது.

கி.பி. 771-ல் பாக்தாதிற்கு எடுத்துச் செல்லப்பட்ட சித்தாந்தா என்ற இந்தியச் சுவடி வானநூலாய்வை விஞ்ஞான முறையில் அங்கு தொடங்கிவைத்தது. தென்மேற்குப் பாரசிகத் தில் ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நுட்பமான கருவிகளைக்கொண்டு வான்வெளிக் கோளங்கள் கூர்ந்து நோக்கப் பட்டன. அந்நூற்றாண்டின் இடைப்பகுதிக்கு முன்பே கலீபா அல்-மாமூன் பாக்தாதிலும், டமஸ்கசிற்குப் புறத்திலும் வானிலை ஆய்வுக் கூடங்கள் அமைத்துத்தந்தார். நாற்கூறுவட்ட மானி (quadran), ஆஸ்ட்ரலேஃப் (astrolabe), நாழிகைக்கோல் (dial), கோளங்கள் (globes) ஆகியவை அவர்களுக்கு அக்காலத்திலிருந்த துணைச் சாதனங்களாகும். கலீபாவின் வானநூலார் இப்புவியின் பரப்பளவைக் கணிப்பதில் மிக நுட்பமான கணிப்பு முறையைக் கையாண்டனர். புவிமையத்தில் ஒரு பாகை அளவுகோணத்தைத் தாங்கும் வில்லின் நீளத்தை அளந்தறிந்தார்கள். இவ்வுலகம் ஒரு கோளம் என்ற அடிப்படையில் அதன் பரப்பையும் சுற்றள வையும் கண்டார்கள். யூப்ரடீஸ் ஆற்றின் வடக்கே பல்மைரா விற்கு அருகில் உள்ள சமநிலப்பகுதியில் கணிக்கப்பட்ட அளவு ஒருபாகைக் கோணத்திற்கு $56\frac{2}{3}$ அரபிய மைல்களாகும். அவ்விடத்தில் ஒரு பாகைக் கோணத்திற்குரிய சரியான நீளத்தை

விட அது 2877 அடியே மிகுந்துள்ளது. அச்சரியான கணிப்பு பாராட்டிற்குரியது. இடைக்காலக் கணித அறிஞர்களில் தலை சிறந்த அல்-குவாரிஸ்மி (கி.பி. 780-850) அக்கணிப்பில் பங்கு பெற்ற வானூலார்களில் ஒருவர். அவருடைய இயற்கணித நூல் மிகப் பழமையானது. ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களில் 16ஆம் நூற்றாண்டுவரை அந்நூலின் இலத்தீன் மொழிபெயர்ப்பு முதன்மையான பாடநூலாயிருந்தது. அரபு எண்குறி இலக்கம் என வழங்கும் இந்திய இலக்கங்களை அவர் மேலைநாடுகளுக்கு அளித்தார். அல்ஜிப்ரா, சைஃபர் (சுழி) என்பவை அரபுச் சொற்களே. தாபிட் என்பார் ஒரு வடிவியல் (Geometry) வல்லுநர் ஆவார்.

பள்ளியில் வழிபாட்டிடத்தை மெக்காவை நோக்கி அமைப்பதற்கு வானநூலறிவு வேண்டியிருந்தது. அவர்கள் மிக்க நாட்டம் கொண்டிருந்த சோதிடத்திற்கும் சாதகக் கணிப்பிற்கும் விண்மீன் இயக்கம் பற்றிய அறிவு இன்றியமையாததாயிருந்தது. கணிதத்தை அடுத்து அவர்கள் வானநூலை ஆய்வுசெய்தார்கள். கிரேக்க, இரானிய, இந்திய வானநூல் அறிவினை அடிப்படையாய்க்கொண்டு வளர்ந்ததே முஸ்லிம் வானநூல். பாக்தாது அரண்மனைகள் பலவற்றில் வானிலை ஆய்வுக்கூடங்கள் இருந்தன. பூமியின் குறுக்களவு 6500 மைல் என்றும் சுற்றளவு 20,400 மைல் என்றும் கணக்கிட்டார்கள். பல விண்மீன்களுக்கு அரபுப் பெயர்கள் வழங்குகின்றன.

கி.பி. 776-ல் அல்-கூஃபாவில் கிபர் என்ற விஞ்ஞானி செம்பு, இரும்பு போன்ற உலோகங்களைத் தங்கம், வெள்ளியாக மாற்றும் இரசவாதமுயற்சியில் ஈடுபட்டிருந்தார். செய்முறையால் தேர்ந்து ஆய்வதின் சிறப்பை அவர் நன்கு உணர்ந்திருந்தார். வேதியியலையும், பூதவியலையும் நன்கு ஆராய்ந்து அவ்விரு துறைகளிலும் முன்னேறினார்கள்.

காபாவின் திசையை அறிவதற்கும், பள்ளிகளை மெக்காவை நோக்கி அமைப்பதற்கும், நிலஇயல் அறிவும் ஆராய்ச்சியும் முஸ்லிம்களுக்கு வேண்டியிருந்தது. அயல்நாடுகளுக்குச் சென்று திரும்பிய வணிகர்களின் அறிக்கைகள் தொலைவில் இருந்த நாடுகள், அங்கு வாழ்ந்த மக்கள் ஆகியவைபற்றி மேலும் அறியத்தூண்டின. ஏழாம் நூற்றாண்டிற்கும் ஒன்பதாம் நூற்றாண்டிற்குமிடையில் முஸ்லிம் வணிகர்கள் கடல் வழியாகவும், நில வழியாகவும், கிழக்கில் சீனத்திற்கும், தெற்கில் ஆப்பிரிக்க நாடுகளுக்கும், மேற்கில் அட்லாண்டிக் பெருங்கடல்வரையிலும், வடக்கில் உருசியாவிற்கும் சென்றுவந்தார்கள். டாலமியின் நில

நூலை அரபு மொழியில் பெயர்த்தெழுதிக்கொண்டார்கள். அந் நூலை முன்மாதிரியாய்க்கொண்டு குவாரிஸ்மியும் அவருடைய தோழர்களும், அல்-மாமூன் கட்டளைக்கிணங்க இப்பூவுலகப் படத்தையும் ஒரு துணைப் புத்தகத்தையும் உருவாக்கினார்கள். முஸ்லிம் ஒவ்வொருவரும் அவருடைய ஆயுட்காலத்தில் ஒரு முறையேனும் மக்காவிற்குச் செல்லவேண்டும் என்ற சமயக் கட்டளை, பயணம் மேற்கொண்டு உலகினைச் சுற்றிவர முஸ்லிம் களைத் தூண்டிற்று. முஸ்லிம் பயணிகளும் வணிகர்களும் தாங்கள் கண்ட நாடுகளையும் சென்ற வழிகளைப்பற்றியும் பயண நூல்கள் எழுதி மற்றவர்களையும் ஊக்கினார்கள்.

இந்தியாவில் வான ஆராய்ச்சிக் கூடமிருந்த உஜ்ஜயினி உலக மையமென்றும், அதன் நிலவுலக மைவரை வட்டத்தில் (Meridian) குவிமாடம் (World cupola) இருந்ததாகவும் அரபு நூலாசிரியர்கள் அறிந்திருந்தார்கள். உஜ்ஜயினி, ஓசீன் (Ozene) என டாலமியின் நிலநூலில் குறிக்கப்பெற்றுள்ளது. பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆசிய, ஆப்பிரிக்கப் பெரு நிலப் பகுதிகளைச் சுற்றிய அல்-மசூதியின் நூல்கள் நிலவியல் தகவல் களஞ்சியமாயிருந்தது. மேற்கண்ட கடல் பயணங்களிலிருந்து உருப்பெற்றதே மாலுமி சிந்துபாதின் கதைகளாகும்.

அரபுமொழியில் காணப்படும் பழமையான வரலாற்று இலக்கியங்கள் அப்பாசிடு காலத்தவையே. முகம்மது நபி நாயகக் கால மரபுகளையும், வழிவழிச் செய்திகளையும் திரட்டி அக்கால வரலாற்றுச் செய்திகளாக உலகிற்கு அளிக்கப்பட்டன. நபி நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றினை எட்டாம் நூற்றாண்டில் இபின் இஷாக் எழுதினார். எகிப்து, வடஆப்பிரிக்கா, ஸ்பெயின் முதலிய நாடுகளை வென்று முஸ்லிம் ஆதிக்கம் பரவின வரலாற் றினை ஒன்பதாம் நூற்றாண்டில் அல்-ஹக்கம் என்ற எகிப்தியரும் அல்-பாலாதூரி என்ற இரானியரும் அளித்தார்கள். கலீபாக்கள் அவரவர்கள் காலத்துச் செய்திகளைத் தொகுத்தெழுதுவதற்கு வரலாற்றாசிரியர்களை அமர்த்தியிருந்தார்கள். அல்-டபாரி (838-923) என்பவர் நாற்பதாண்டுகள் பல இடங்களைச் சுற்றிச் செய்தி களைத் திரட்டிப் பெரிய அளவில் வரலாற்றினைத் தொடர்ச்சியாக எழுதினார் பாக்தாதுவாசியும் அவரோடு சமகாலத்தவருமான அல்-மசூதி வரலாற்றுச் செய்திகளை ஆராய்ந்து நாகரிகங்களின் வளர்ச்சியையும் விரிவையும் வர்ணித்துள்ளார்; செய்திகளைக் கால வரிசைப்படுத்தாது அரசர்குலம், மக்கள் வாழ்க்கை என்ற தலைப்புகளின் கீழ்த் தொகுத்துள்ளார். அவர் திரட்டிய வரலாற்றுச் செய்திகளும், நிலவியல் தகவல்களும் முப்பது பெரும் பகுதிகளாலான ஒரு களஞ்சியமாயுள்ளது.

குரானுக்கு விளக்கம்தரத் தொடங்கிய காலத்தில் அரபுக்கள் மொழியையும் மெய்ந்நூலையும் ஆராயத்தொடங்கினர்கள். கிறித்தவச் சமயத்தோடு டமாஸ்கசில் முதல் நூற்றாண்டில் தொடர்பு ஏற்பட்டதால், சிந்தனை தூண்டப்பட்டு மூர்ஜியைட் (Murjiite), காதரைட் (Qadarite) என்னும் முஸ்லிம் கொள்கைகள் வளர்ந்தன. குரானும், நபிநாயகத்தின் சொற்களும் செயல்களும் சட்டத்துறைக் கோட்பாட்டிற்கும், மெய்ந்நூலிற்கும் ஆதாரங்களாய் அமைந்தன. நபிகளின் சொல்லையோ, முடிவையோ தேடிக்கண்ட பிறகே சமய, சமுதாய, அரசியல் துறைகளில் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. நபிகளின் சொல்லென்றும் செயலென்றும் பலவற்றைப் பலரும் பரப்பினர்கள். அவற்றுடன் நபிகளின் வாழ்க்கை நிகழ்ச்சிகளும், வியத்தகு செயல்களும் உருவகக்கதைகளும் சேர்ந்து சமய இலக்கியம் உருவாயிற்று.

உரோமானியர்களுக்குப் பின் இடைக்கால மக்களில் அரபுக்களே சட்ட இயலைப் பேணி வளர்த்தார்கள். குரானில் உள்ள ஆறாயிரம் சிறு பாக்களில் ஏறத்தாழ இருநூறு மட்டுமே சட்டச் சார்புடையவை என்று சொல்லலாம். குரான் சட்டங்களைக்கொண்டு எல்லா வழக்குகளுக்கும் தீர்வுகாண முடியாத நிலையில் புதிய கோட்பாடுகளும், மரபுகளும் தோன்றின. அக்கால இஸ்லாமிய உலகில் அபு-ஹனிஃபா செல்வாக்குமிக்க முதல் சட்ட அறிஞராய் விளங்கினர் அவருடைய கொள்கை சமரசத் தன்மை உடையதாயிருந்தது. மனிதன் செயல்கள்யாவும் ஐந்தே சட்டப்பிரிவுகளில் அடக்கப்பட்டன. அவை, (1) கட்டாயமாய் நிறைவேற்றவேண்டிய கடமைகள், நிறைவேற்றப் படாவிடில் தண்டனைக்குரியவை; (2) போற்றற்குரிய செயல்கள் செய்தால், பாராட்டிப் பரிசிற்குரியவை; (3) அனுமதிக்கப்பட்ட செயல்கள்; (4) கண்டனத்திற்குரியவை, ஆயினும் தண்டிக்கத்தக்கவையல்ல; (5) தடுக்கப்பட்ட செயல்கள், செய்தால் கண்டிக்கப்படவேண்டியவை என்பனவாம்.

### இலக்கியம்

வரலாறும், நிலவியலும், மெய்ந்நூலுமே அக்கால இலக்கியமாயிருந்தது. கவின்கலை இலக்கியம், உரைநடைக் கதை, நாடகம் முதலியவற்றை அரபுக்கள் உயர்வாய் மதிக்கவில்லை. அல்-அகானி என்ற பாடல் திரட்டு இருபது பெரும் பகுதிகளுடன் சிறந்து விளங்கிற்று. ஃபிர்தாசியின் ஷாநாமா சிறந்த தேசியக் காவியமாகும் இக்காவியம்போன்று வேறொன்றும் இரானிய மக்கள் மனதைக் கவரவில்லை. ஹாரூன், அல்-அமீன் ஆகிய இரு கலீபாக்களின் இன்பத்தோழனுயிருந்த அபு-நுவா

சின் பாடல்களில் காதலும் மதுவும் மிகச்சிறப்பாய்ப் பேசப் பட்டுள்ளன. அவர் சிற்றின்ப மொழியிலும் இனிய நடையிலும் இணையற்று விளங்கினர். தங்கள் புகழ் பாடவே கலீபாக்கள் கவிஞர்களை ஆதரித்தனர். கவிஞர்களும் தங்கள் கலையை விற்கத் துணிந்தனர். 'ஆயிரத்தொரு இரவுகள்' என்ற கதைக்கொத்து பத்தாம் நூற்றாண்டில் பாரசிகக் கதைத்திரட்டிலிருந்து உரு வாக்கப்பட்டது. பின்னல் அதில் இந்திய, கிரேக்க, யூத, எகிப்தியக் கதைகள் சேர்க்கப்பட்டன. ஹாரூன் அல்-ராஷிதின் அவையில் நிகழ்ந்த நகைச்சுவை நிகழ்ச்சிகளும் காதல் கதை களும் அத்தொகுப்பில் இடம்பெற்றன. இப்புத்தகமே மேலை நாடுகளில் மக்கள் மனதைக் கவர்ந்த அரபு இலக்கியமாகும்.

**கல்வி**

தந்தை தன் மகவிற்கு 'அல்லாவன்றி வேறு ஆண்டவனில்லை' (லாஇலாஹிா இல்லல்லா) என்று கற்பிப்பதிலிருந்து கல்விப் பயிற்சி வீட்டில் தொடங்கிற்று. ஆறும் வயதிலிருந்தே முறை யான பயிற்சி தரப்பட்டது. மசூதியின் இணைப்பாகவே தொடக் கப்பள்ளி அமைக்கப்பட்டிருந்தது; குரானே பாடப்புத்தகம்; குரான் படிப்போரே ஆசிரியர்கள். சமயச் சார்பில்லாத கவிதை களைப் பார்த்து எழுதிக் குழந்தைகள் எழுதப் பழகினர்கள். நபி நாயகத்தின் கதைகள், பாடல்கள், இலக்கணம், எண்கணக்கு இவையே தொடக்கப்பள்ளியில் கற்பிக்கப்பட்டன. கையெழுத் துப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. பள்ளிப்படிப்பு முடியு மட்டும் மனப்பாடஞ்செய்யும் பழக்கம் வாயிலாக நினைவாற்றலை வளர்த்துக்கொள்ள வாய்ப்பளித்தார்கள். பாக்தாது பள்ளிக் கூடங்கள் சிறந்த மாணவர்களை ஒட்டகங்கள்மீது ஏற்றித் தெருக் களில் ஊர்வலம் வரச்செய்தன. கீழ் வகுப்புகளில் பெண்கள் சமயக்கல்வி கற்றார்கள். நூல்நூற்பதே அவர்களின் தொழி லாகக் கருதப்பட்டதால் மேற்கொண்டு அறிவுத்துறையில் அவர் களுக்குப்பயிற்சி தரவில்லை. செல்வக்குடும்பங்களில் குழந்தைகள் தனி ஆசிரியர்களிடம் சமயம், இலக்கியம், செய்யுளியற்றல் போன்றவற்றைப் பயின்றார்கள். குழந்தைகளின் திறமைகளை ஆசிரியர்கள் அன்போடு வளர்க்கவேண்டும்; அதேநேரத்தில் சரிவரக் கற்காத குழந்தைகளிடம் அவர்கள் மிகக்கண்டிப்பாய் இருக்கவேண்டும். தேவைப்பட்டால் கோலையும் பயன்படுத்த அவர்கள் தயங்கக்கூடாது. சமுதாயத்தில் தொடக்கப்பள்ளி யாசிரியர் மதிக்கப்படவில்லை; அவர்கள் மடமையின் உறைவிட மாய்க் கருதப்பட்டார்கள். ஆனல் மேல்மட்ட ஆசிரியர்கள் நன்கு மதிக்கப்பட்டார்கள். அவர்கள் சங்கம் வைத்துக்கொண்டு நலலவகையில் தங்களிடம் பயிற்சிபெற்ற மாணவர்களுக்குத்

தகுதிச் சான்றுகள் வழங்கினார்கள். ஓர் எழுத்தைக் கற்பித்த ஆசிரியனுக்கும் தாம் அடிமையெனச் சொல்லிய அலியின் கூற்றைச் சுட்டிக்காட்டி, மாணவர்கள் ஆசிரியர்களை மதித்து நடக்கவேண்டும் என வற்புறுத்தினார்கள்.

கி.பி. 830–ல் அல்-மாமூன் ஏற்படுத்திய அறிவகமே முதல் உயர்கல்வி நிறுவனமாகும். மொழிபெயர்க்கும் பணியோடு, கல்விக் கூடமாகவும், நூலகமாகவும் அறிவகம் விளங்கிற்று. அங்கு வானஆராய்ச்சிக்கூடமும் இருந்தது. அக்கால மருத்துவ மனைகள் மருத்துவப் பள்ளிகளாகவும் பணியாற்றின. உமார் அல்-கயாமின் ஆதரவாளரும் பாரசிக வசீருமாய் விளங்கிய நைசாம்-அல்-முல்க் தொடங்கிய நைசாமியா (Nyzamiyah) நிறுவனம் உண்மையில் உயர்கல்விக்கூடமாயும், பின்னால் தொடங்கப்பட்டவற்றிற்கு முன்மாதிரியாயுமிருந்தது. மெய்ம்மை நூலில் பயிற்சிதரும் திருப்பணியை அது மேற்கொண்டது. அக்கல்விச் சாலையில் மாணவர்கள் உண்டு, உறங்கினார்கள். அறக்கொடைகளிலிருந்து பல மாணவர்களுக்கு உதவிப்பணம் கிடைத்தது. தொடக்கக்கால ஐரோப்பியப் பல்கலைக்கழகங்கள் நைசாமியா அமைப்பு முறையைப் பின்பற்றின.

மெய்ம்மைநூல் கல்விச்சாலையாக விளங்கிய நைசாமியாவில் ஆசிரியர், கலீபாவின் இசைவுடன் அமர்த்தப்பட்டார். திறமைக் குறைவான மாணவர்களுக்கு அவர் கற்பித்ததை மீண்டும் கற்பிக்க ஆசிரியருக்கு உதவியாளர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். ஆசிரியரிடம் வினாக்கள் தொடுத்து மாணவர்கள் விளக்கம் பெற்றார்கள். அறிவு புகட்டுவதைக் காட்டிலும் ஒழுக்கப் பயிற்சியளிப்பதே ஆசிரியரின் முதற்கடமையாய்க் கருதப்பட்டது. அக் கல்விக்கூடத்தின் வாயிலில் ஒருவகை நீர்வட்டில் நாழிகைப் பொறி (clepsydra) வைக்கப்பட்டிருந்தது. அக்கட்டடத்தில் சமையல் அறைகள், குளிப்பகங்கள் அன்றி, மருத்துவமனையும், நூலகமும் இருந்தன. கி.பி. 1321–ல் பாக்தாதிற்குச் சென்ற இபின் பட்டூடா அக் கட்டடத்தின் முழுவர்ணனையைத் தந்துள்ளார். அப்பாசிடுகாலக் கட்டடங்களில் எஞ்சியிருப்பவை அக் கல்விக்கூடமும், இப்போது அரும் பொருட்காட்சிச்சாலையாக விளங்கும் அரண்மனையுமேயாகும்.

நைசாமியா போன்ற மத்ரசாக்கள் குராசான், அல்-இராக், சிரியா முதலிய நாடுகளில் நிறுவப்பட்டன. மத்ரசா நிறுவுவதைச் சமயப் பணியாகவே இஸ்லாம் கருதியது. பாக்தாதில் முப்பது பள்ளிக்கூடங்களும், டமஸ்கசில் இருபதும் இருந்ததாக இபின்-ஜுபேயிர் கணக்குத்தருகிறார். எவ்வித நாள்குறிப்புகளும்

இல்லாத அந்நாள்களில் நினைவாற்றல் மிகச் சிறப்பாய்ப் பேணி வளர்க்கப்பட்டது. ஏட்டுச்சுவடிகள் மனப்பாடஞ் செய்யப்பட்டு மனதிலேயே காக்கப்பெற்றன. மதுருகளில் பல்வேறு துறைப்பாடங்களைப் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. சமய நூல் அறிவோடு, மொழியறிவும், கவிதைத் தொடர்பான செய்திகளும் கற்பிக்கப்பட்டன. பதினோராம் நூற்றாண்டுவரை மதுருகளே கல்விபரப்பும் நிறுவனங்களாயிருந்தன.

கலீபாக்களின் முன்னிலையில் கவிதைப் போட்டிகளும், சமய சர்ச்சைகளும், இலக்கியக் கூட்டங்களும் அடிக்கடி நடைபெற்றன. இவ்விவாதங்களின் பயனாகச் சில நூல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. செல்வர்களின் இல்லங்களிலும் இலக்கிய ஆராய்ச்சி நடைபெற்றது. நன்கொடையாய்க் கிடைத்த சமய நூல்களையும் ஏனைய நூல்களையும் கொண்டு மதுருகளில் நூலகங்கள் ஏற்பட்டிருந்தன. செல்வர்கள் சொந்தமாய்ச் சில நூலகங்களை அமைத்துப் பல்துறைப் புத்தகங்களையும் சேமித்து வைத்தார்கள். சில நூலகங்களில் புத்தகப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டுப் படிக்கவருவோர் வேண்டும் நூல்களை வழங்க அலுவலர்கள் அமர்த்தப்பட்டிருந்தார்கள். அல்-பஸ்ரா நூலகத்தில் பணியாற்றிய புலவர்களுக்கு உதவிப்பணம் அளித்தார்கள். அறிவியல் ஆராய்ச்சிக் கூட்டங்கள் நூலகங்களில் நிகழ்ந்தன. தம்முடைய நில இயல் அகராதிக்கு வேண்டிய செய்திகளை யாகூத் நூலகங்களில் மூன்றாண்டுகள் தேடித் தயாரித்தார்.

பாக்தாது தெருவொன்றில் நூறு புத்தகக் கடைகள் இருந்ததாக அறிகிறோம். புத்தக விற்பனையாளர்களில் பலர் புத்தகங்களைப் படிசெய்பவர்களாயும், எழுத்தாளர்களாயுமிருந்தார்கள்.

ஆட்டுத்தோலும் நாணற் புல் தாளுமே எழுதுவதற்குத் தொடக்கத்தில் பயன்பட்டன. பின்னால் அல்-இராக் சீனாவிலிருந்து காகிதம் தருவித்துக்கொண்டது. கி.பி. 751-ல் சில சீனக் கைதிகள் சணல், நார் முதலியவற்றைக்கொண்டு காகித உற்பத்தியைச் சாமர்கண்டில் தொடங்கிவைத்தார்கள். காகிதத் தொழில் விரைவில் பேரரசுத் தொழில்களில் ஒன்றாயிற்று. ஆங்காங்கு பலநகரங்களில் காகிதத்தொழில் தொடங்கப்பட்டது. ஹாரூனுடைய வசீர் அல்-ஜாஃபர் அரசாங்க அலுவலகங்களில் ஆட்டுத்தோலிற்குப் பதிலாகக் காகிதத்தைப் பயன்படுத்தச் செய்தார். பத்தாம் நூற்றாண்டின் முடிவில் ஆட்டுத்தோலுக்கும், நாணற்புல் தாளுக்கும் பதிலாக முஸ்லிம் உலகில் எழுதுவதற்குக் காகிதமே பயன்பட்டது.

அப்பாசிடு ஆட்சியில் உயர்கல்வி ஓரளவு பரவியிருந்தது. பலதுறைகளிலும் மக்கள் அறிவை வளர்த்துக்கொண்டார்கள். கோள்கள் ஏழென்றும், மனித உடலில் 240 எலும்புகளும், 360 குருதிக் குழாய்களும் உள்ளனவென்றும், மனிதன் நான்கு முதற் பொருள்களாலாகி, ஐம்புலன்களோடு வாழ்கிறான் என்றும் உடலுறுப்புகளின் தன்மைகளையும், வயிறே நோய்களுக் கெல்லாம் பிறப்பிடமென்றும், ஊட்ட முறையே அவற்றைக் குணப்படுத்தும் மூலமென்றும் மேலும் பல துறைச் செய்திகளை யும் அறிந்திருந்தார்கள்.

மூன்றாம் அப்தல் ரஹ்மானால் கார்டோவாவில் முதல் முஸ்லிம் பல்கலைக்கழகம் பத்தாம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. சில ஆண்டுகளுக்குப்பின் அதே நூற்றாண்டில் ஃபாதிமிடு (Fatimid) கலீபா அல்-அஸிஸ் கெய்ரோவில் அல்-அஷார் பல்கலைக்கழகத்தை நிறுவினார்.

**கவின்கலைகளின் வளர்ச்சி**

கலீபாக்கள் அல்-மன்சூர், அல்-ராஷிது ஆட்சிக்காலத்தில் தலைநகர் பாக்தாதை அலங்கரித்த கட்டடங்களில் அடையாளத் திற்கு ஒன்றுகூட இன்று இல்லை. அவ்வப்போது பெருஞ் செலவில் கட்டப்பட்ட பல்வேறு அரண்மனைகளும் தடம்கூடத் தெரியாமல் அழிந்து மண்மூடிப்போய்விட்டன. அல்-அமீ னுக்கும் அல்-மாமூனுக்கும் இடையில் நிகழ்ந்த உள்நாட்டுப் போரினால் ஏற்பட்ட அழிவு, 1258-ல் மங்கோலியத் தலைவர் ஹலாகு தலைநகரை அழித்தபோது முற்றுப்பெற்றது. அல்-முத்தாவக்கில் (847-861) எழுப்பிய பள்ளிப் பலகணிகளின் வளைவுகளில் இந்தியக் கட்டடக் கலைஞரின் கைவண்ணத்தைக் காண்கிறோம். எஞ்சியுள்ள அப்பாசிடு கட்டடங்களில் பாரசிகக் கட்டட மரபினைக் காணலாம். சமாராவில் அல்-முத்தாசிமின் அரண்மனைச் சுவர்களில் ஆடையற்ற பெண்களின் உருவங்களும் வேட்டைக் காட்சிகளும் தீட்டப்பெற்றிருந்தன. அவை கிறித் தவக் கலைஞர்களின் ஓவியங்களாயிருக்கலாம். ஓவியக்கலையைக் கிறித்தவ, பௌத்த சமயங்கள் பயன்படுத்தியதுபோல் இஸ்லாம் பயன்படுத்தவில்லை.

பாரசிகர்களின் முயற்சியால் முஸ்லிம்கள் கைத்தொழில் களில் கலையைப் புகுத்தினார்கள். வேட்டைக்காட்சிகளும் தோட்டக்காட்சிகளும் கம்பள விரிப்புகளை அலங்கரித்தன. எகிப்திலும் சிரியாவிலும் அழகிய பட்டாடைகள் கைத்தறியில் உற்பத்தி செய்யப்பட்டன. பல்வகை ஓவியங்களைப் பீங்கான்

பாத்திரங்களில் பார்க்கலாம். மனிதன், விலங்கு, செடி, வடிவியல் உருவங்கள் அவ்வோவியங்களில் இடம்பெற்றன. உயர்ந்த உலோக வேலைப்பாட்டிலும் கண்கவர் மட்பாண்டங்களிலும் அக்காலக் கலையுணர்ச்சியைக் காண்கிறோம். சமாரா, அல்-ஃபுஸ்டாடு போன்ற பட்டணங்களில் கிடைத்த சிறந்த பல் வண்ணப் பாத்திரங்கள் இங்கிலாந்து, ஃபிரான்ஸ் முதலிய நாடுகளிலும், கெய்ரோவிலும் உள்ள அரும்பொருட்காட்சிச் சாலைகளில் வைக்கப்பட்டுள்ளன.

அழகிய கையெழுத்து மிக உயர்ந்த கலையாய்க் கருதப்பட்டுப் பேணி வளர்க்கப்பட்டது. உயிருள்ள பொருள்களின் வாயிலாக வெளிப்பட முடியாத முஸ்லிம்களின் கலை உணர்ச்சி அழகிய கையெழுத்து மூலம் வெளிப்பட்டது. ஏட்டுச் சுவடிகளை ஒளிரச் செய்தலும் புத்தகம் கட்டும் தொழிலும் கையெழுத்துக் கலையோடு இணைந்த கலைகளாக வளர்ந்து சிறப்புற்றன.

குரான் கண்டனத்தையும் பொருள்படுத்தாது கலீபாக்கள் இசையை ஆதரித்தார்கள். அல்-ராஷிது இசைக் கலைஞன் இப்ராகிமை இன்பத் தோழனாக்கிக்கொண்டு மாதந்தோறும் பதினாயிரம் டர்ஹாம்களை அவனுக்கு ஊதியமாய்த் தந்தார். ஏனைய அறிஞர்களோடு, பாடகர்களும், இசை அறிஞர்களும் அவருடைய அவையை அலங்கரித்தனர். அவர் ஆதரவில் நடைபெற்ற ஓர் இசைவிழாவில் ஈராயிரம் பாடகர்கள் கலந்துகொண்டார்கள். அவருடைய மகன் அல்-அமீன் நடத்திய ஓர் இரவு விருந்தில் அரண்மனையைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் பொழுதுபுலரும் வரையில் ஆடிக்களித்தார்கள். இசைக்கலைஞர்கள் புலவர்களாகவும், செய்யுளியற்றுபவர்களாகவும் திகழ்ந்தார்கள்.

ஹாரூனின் இளவல் அல்-மாதி சிறந்த இசைக்கலைஞராகவும், பாடகராகவும் விளங்கினார். கலீபா அல்-வாதிக் நூறு பண்திறங்களை இயற்றினார். இசை, கணிதப் பிரிவுகளில் ஒன்றென்றும், பித்தகோரஸ் இசைக்கோட்பாட்டைத் தோற்றுவித்தார் என்றும் கருதினார்கள். பத்தாம் நூற்றாண்டில் அல்-ஃபாரபி சிறந்த இசைக் கோட்பாட்டு எழுத்தாளராய் விளங்கினார். இசைக் கருவிகளில் யாழ்போன்ற ஒன்று முதன்மையானதாகவும், ஒருவகை நரம்பிசைக்கருவி இரண்டாவதாகவும் கருதப்பட்டன. அந்தரப்புரப் பெண்கள் திரைமறைவிலிருந்து பாடினார்கள். மக்கள் ஆடல் பாடல்களில் திளைத்தார்கள்.

**சமயப் பிரிவுகள்**

அப்பாசிடு ஆட்சியின் முதல் இரண்டரை நூற்றாண்டுகளில் (750-1000) உருப்பெற்ற முஸ்லிம் நாகரிகத்தில் ஒரு தனித்தன்மை இருந்தது. இறைமையியலிலும், சட்டத்துறையிலும், விஞ்ஞானத்திலும், தத்துவத்திலும், இலக்கியத்திலும், கலைகளிலும் ஏறத்தாழ ஆயிரமாண்டுகளுக்கு முன் இஸ்லாம் இருந்த நிலையிலேயே இன்று உள்ளது. அப்போது வளர்ந்த சமயக் கருத்துகளில் சில இன்றும் நிலைத்திருக்கின்றன அக்கருத்து வேறுபாட்டால் சமயத்தில் பிளவு ஏற்பட்டுக் கட்சிகள் ஏற்பட்டன.

**முத்தாசிலா** (Mu'tazila) இயக்கத்தில் குரானைவிட அறிவை மதித்த ஒரு பகுத்தறிவுப் பிரிவு பிற்காலத்தில் வளர்ந்தது. அரபு மொழியிலுள்ள குரான் விண்ணுலக மூலத்தின் சரியான மறுபடி எடுப்பு என்ற மரபுக்கொள்கையை மறுத்துக் குரான் ஒரு படைப்பே என்ற கொள்கையை ஆதரிக்கும் வகையில் அல்-மாமூன் கி.பி. 827-ல் பெரும் விளைவுகளை உண்டாக்கவல்ல ஓர் அறிவிப்பை வெளியிட்டார். இப்புதிய படைப்புக்கொள்கை முஸ்லிம் நம்பிக்கையின் உரைகல்லாயிற்று. அதனை மறுப்பவர்களை விசாரிக்க ஒரு மன்றம் ஏற்பட்டது. நடுவர்கள் அச்சோதனையில் தேறவேண்டும் பகுத்தறிவுச்சிந்தனையை வளர்க்கத் தோன்றிய இயக்கம் அதனை அடக்கும் கருவியாய் மாறியது. முறண்பட்ட சமயக் கருத்தை அடக்கி இஸ்லாம் மக்களை வருத்தியது முதல் முறையன்று, உமையடு ஆட்சியிலே முரண்பட்டவர்களை ஹிஷாம் (724-743) தண்டித்தார். அல்-முத்தாவக்கில் முத்தாசிலாக் கொள்கையை அடியோடு மாற்றி, 848-ல் மரபுக்கொள்கையை ஏற்றுக்கொண்டார். முத்தாசிலாத் தலைவராகிய அல்-நஸ்ஸாம், இஸ்லாம் சமயத்தில் ஊடுருவிய பாரசிக இருபொருள் போக்கைத் (dualistic tendency) தடுக்க முயன்றார். அறிவைப் பெற முதலில் வேண்டப்படுவது ஐயுறவே என அவர் அறிவித்தார்.

**சூஃபிசம்** (Sufism)

சூஃபிசத்தை ஒரு கொள்கைத் தொகுதியாய்க் கருதுவதைக் காட்டிலும் சமயத்துறையில் சிந்திக்கும் முறை அல்லது ஒரு வகை உணர்ச்சியாய்க் கொள்வதே பொருத்தமாயிருக்கும். நபி நாயகம் அளித்த மறைபொருளுக்கு உண்மை விளக்கம் தருபவர்கள் என்று சூஃபிகள் தங்களை அறிவித்துக்கொண்டார்கள். பிளேட்டோக் கருத்துகளையும் கீழ்த்திசை மறைமெய்ம்மை சேர்ந்த கலவைக் கோட்பாட்டினையும் (Neo-Platonism), கிறித்தவ, பௌத்தக் கொள்கைகளையும் இணைத்துக்கொண்டு

அனைத்திறைக் கொள்கையின் (Pantheism) படி நிலைகளைக் கடந்து, சூபிசம் ஒரு சமரச இயக்கமாய் வளர்ந்தது. சூஃபி என்ற சொல் முதன்முதலாக ஒரு துறவிக் கூட்டத்தைக் குறிக்கும் சொல்லாக ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி அரபு இலக்கியத்தில் காணப்படுகிறது. தொடக்கத்தில் சூபிசம் சிரியாவில் தோன்றி வளர்ந்தது. மெய்மறந்த பரவச நிலை ஒன்றிலேதான் ஆண்டவனை உண்மையாய் அறியலாம் என்ற கருத்தைத் தூ-அல்-நூன் என்ற எகிப்தியர் சூபிசத்திற்கு அளித்தார். ஆண்டவனோடு அடியவர் இரண்டறக் கலந்துவிடுகிற நிலையைப் பாரசிக அல்-ஹல்லாஜ் ஒரு கவிதைவாயிலாக விளக்கியுள்ளார்.

ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி ஆண்டவனை அறிந்து, அவன்பால் பற்றுக்கொண்டு அவனோடு இணைந்திருக்கவே துறவறம் மேற்கொள்ளப்பட்டது. இறைவணக்கம், உணவு உண்ணாமை, தனித்த தியானம், நீடித்த கண்விழிப்பு இவையே கடவுளை அடைய வழியாகும். வறுமை, அடக்கம், பொறுமை, கழிவிரக்கம், மோனம் ஆகிய பண்புகள் ஒருவனை ஆண்டவன் திருமுன்பு கொண்டுபோய் நிறுத்தும் திருமணஞ் செய்துகொள்ளாத நோன்பினை இஸ்லாம் மரபு ஆதரிக்கவில்லை; அதனைக் கிறித்தவத் துறவிகளிடமிருந்து பழகிக்கொண்டார்கள். இந்துக்கள் செபமாலையைச் செப வழிபாட்டில் பயன்படுத்துவதைப் பார்த்து கீழைநாட்டுக் கிறித்துவ ஆலயங்கள் அதனைப் பின்பற்றின. சூபிக்கள் அம்முறையை அவர்களிடமிருந்து கற்றார்கள். சிலுவைப் போர்கள் நடைபெற்றபோது அம்முறை உரோமன் கத்தோலிக்க ஆலயங்களில் புகுந்தது. அருள் தொண்டர்களை வழிபடும் முறையை ஏற்படுத்தி மக்களிடத்தில் பரப்பியவர்களும் சூபிக்களே. இவ்வித வழிபாட்டினைக் குரான் ஆதரிக்கவில்லை. இதுவும் கிறித்தவப் பழக்கத்தை ஒட்டிவந்தது. மானிடனுக்கும் ஆண்டவனுக்கும் இருந்த நீண்ட இடைவெளியை நிரப்ப இடையில் அருள் தொண்டர்கள் ஏற்பட்டார்கள். அவர்களை வேண்டி வழிபடுதலை உருவ வணக்கமாய்க் கருதிய எண்ணம் பன்னிரண்டாம் நூற்றாண்டில் சூபிக்கள் செல்வாக்கால் மறைந்துவிட்டது. 'அல்லாவின் நண்பர்' களை வரிசைப்படுத்துங்கால் இருபாலாரிடத்தும் சமத்துவக் கொள்கையைச் சூபிக்கள் கடைப்பிடித்தார்கள். இஸ்லாம் சமயத்திற்கு மடாலய முறையையும், சடங்கு முறையையும் அளித்தவர்கள் சூபிக்களே.

இஸ்லாம் சமயத்தில் சமய அமைப்புகள் சூபி சமய அமைப்புகளே (orders). சூபிக்களில் பல அமைப்புகளிருந்தன. சூபிக்களின் முயற்சியால் வட ஆப்பிரிக்கப் பெர்பெர்களும்

முஸ்லிம் நாடுகளில் பாமர மக்களும் இஸ்லாம் சமயத்தைத் தழுவினார்கள்.

**ஷியாக்கள்**

நபியின் ஒன்றுவிட்ட சகோதரரும், அவருடைய மகளாகிய ஃபாத்திமாவின் கணவருமான அலியை முதல் மூன்று கலீபாக்களும் வஞ்சித்து அவருக்குரிய பதவியைப் பறித்துக்கொண்டதாக அவரைச் சார்ந்தவர்கள் கருதினார்கள். கி.பி. 657-ல் உமையடு வம்சத்தை நிறுவிய முவாவியாவிற்கும் அலிக்கும் இடையே நிகழ்ந்த சிஃபின் சண்டையில் அலி வெற்றிபெறும் தறுவாயில் சூழ்ச்சியாய்ப் போர் நிறுத்தம் ஏற்பட்டது. உமையடுகளால் கி.பி 661-ல் அலி கொல்லப்படவே அவருடைய பற்றாளர்கள் கலீபாக்களை ஏற்றுக்கொள்ளாது அலியையே முதல் இமாமாகவும் அவருடைய மக்களையும் பின்தோன்றல்களையும் இமாம்களாகவும் மதித்தார்கள். அலியின் இரண்டாவது மகனாகிய அல்-ஹுசேயினையும் அவருடைய ஆதரவாளர்களையும் கலகக்காரர்களெனக் கூறிக் கி.பி. 680ஆம் ஆண்டு கர்பாலா என்ற இடத்தில் உமையடு படைத்தலைவர் கொன்றுவிட்டான். அல்-ஹுசேயின் கர்பாலாவில் சிந்திய குருதி ஷியாப்பிரிவினைத் தோற்றுவித்தது. கலீபாக்களை வீழ்த்த ஷியாக்கள் இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக அரசியலிலும் போர்வாயிலாகவும் அவ்வப்போது செய்த முயற்சிகள் தோல்வியுறவே, சன்னிப் பிரிவினருக்கு மாறாக அவர்கள் சிக்கலான ஓர் இறைமையியலை வளர்த்துக்கொண்டார்கள்.

அப்பாசிடு ஆட்சியில் வளர்ந்து இறுதி வடிவம்பெற்ற சமய இயக்கங்களில் ஷியாப்பிரிவும் ஒன்றாகும். இஸ்லாம் வரலாற்றிலும், கலீபா ஆட்சியிலும் குறிப்பிடத்தக்க அளவு ஷியாக்கள் பங்குபெற்றனர். அலியைப் பின்பற்றியவர்கள் உமையடு ஆட்சியைக் கவிழ்த்து அப்பாசிடுகளை ஆட்சிப்பீடத்தில் அமர்த்த அரும்பாடுபட்டும் அவர்களுக்கு அதனால் எவ்வித ஆக்கமும் ஏற்படவில்லை. அவர்களின் பச்சைநிற ஆடையை அணிந்து, அவர்களின் இமாம் ஒருவரைத் தன் வாரிசாக அறிவித்து அல்-மாமூன் அளித்த ஆதரவினாலும் நீடித்த பயன் ஒன்றும் உண்டாகவில்லை. அல்-முத்தாவக்கில் ஷியாக்களைத் துன்புறுத்தும் வாடிக்கையைக் கி.பி. 850-ல் மேற்கொண்டார்.

அலியின் பின்தோன்றல்களாகிய இமாம்கள் இவ்வுலகத் தலைமையோடு இஸ்லாமியச் சட்டத்திற்கு விளக்கம்தரும் உரிமையையும் நபியிடமிருந்து பெற்றிருந்தார்கள். பிழையாத் தன்மையோடு (Infallibility) குற்றமற்றதன்மையும் (Impecca-

bility) இமாமிற்கு இருந்தது. ஷியாக்களின் முதல் இமாம் அலியே. அவருடைய இரு மக்களும் முறையே இரண்டாவது, மூன்றாவது இமாம்களானார்கள். மற்றும் ஒன்பது இமாம்களும், மூன்றாவது இமாமின் வழித்தோன்றல்களே. பன்னிரண்டாவது இமாம் முகம்மது அல்-முந்தாசர் (874-878) சமாராப்பள்ளியின் குகையில் மறைந்துவிட்டார். அவர் உரிய காலத்தில் மாதியாய்த் தோன்றி, உண்மையான இஸ்லாம் சமயத்தைத் திரும்பக் கொண்டுவந்து, இவ்வுலகம் முடிவடைவதற்குமுன் ஒரு பொற்காலத்தைச் சிறிதுகாலத்திற்கு ஏற்படுத்துவார் என்று நம்பப்பட்டது. இமாம்-மாதிக்கொள்கை ஷியாக்கோட்பாட்டில் ஒரு முக்கிய அம்சமாகும்.

புறக்கோட்பாடுகள் வளர ஷியாக்கோட்பாடு தாராளமாய் இடமளித்தது. இஸ்ரேலியர் எழுபத்திரண்டு சமயப்பிரிவுகளாய்ப் பிரிந்துள்ளார்கள். கிறித்தவர்களிலும் அத்தனை கட்சிகளிருக்கின்றன என்று நபிகளிடம் தெரிவித்தபோது, தம்முடைய சமுதாயம் எழுபத்து மூன்று பிரிவுகளாயிருக்குமென நாயகம் சொன்னாராம். அவற்றில் பல ஷியாக்குழுக்களே ஆவார்கள்.

இமாமைட் ஷியாக்களில் பன்னிரு இமாம்களையும் ஏற்றுக் கொண்டவர்கள் ஒரு பிரிவினர். ஆறு இமாம்களை ஒப்புக்கொண்டு ஏழாவது இமாமைப்பற்றிக் கருத்து வேற்றுமை கொண்டவர்கள் மற்றொரு பிரிவினராவார்கள். ஆறாவது இமாம் முதலில் தம்முடைய மூத்த மகனாகிய இஸ்மெயிலைத் தமக்குப்பின் இமாம் ஆவார் என அறிவித்திருந்தார். அவர் மது அருந்தின காரணத்தைக் காட்டி அவரை நீக்கிவிட்டுத்தம்முடைய இரண்டாம் மகன் மூசாவை வாரிசாக்கிக்கொண்டார். ஷியாக்களில் பெரும்பாலோர் மூசாவையும் சிலர் இஸ்மெயிலையும் ஏழாவது இமாமாய்க் கருதினார்கள். இஸ்மெயிலை ஏற்றுக்கொண்டவர்கள் அவரையே இறுதி இமாமாகவும் கருதினார்கள். இமாம் பிழையாமைத் தன்மையைப் பெற்றவராகையால் அவரை அப்பதவிக்கு மதுக்குடி தகுதியற்றவராக்க முடியாது என அவரை ஏற்றுக்கொண்டவர்கள் கருதினார்கள். அவரை மாதியென எண்ணியவர்கள் இஸ்மேலைட்டுகள் எனப் பெயர்பெற்றனர்.

**இஸ்மேலியர்கள்** தங்கள் அரசியல்—சமயக் கருத்துகளை நுட்பமாகவும் பயன்தரத்தக்க வகையிலும், பரப்பினார்கள். சமயத் தொண்டர்கள் முஸ்லிம் உலகெங்கும் சென்று குரான் தொடர் உருவகமாய் விளக்கப்பட வேண்டுமென்றும் சமய உண்மைகாணப் புறத்திரையை நீக்கி உட்பொருளை அறிய வேண்டுமென்றும் தெரிவித்தார்கள். ஏழை பாரசிகக் கண்

மருத்துவரின் மகன் அப்துல்லா அரபு முஸ்லிம்களுக்கும் பாரசிக முஸ்லிம்களுக்கும் வளர்ந்துவந்த பகையைப் பயன்படுத்திக் கொண்டு கலீபா ஆட்சியை அழிக்க ஒரு துணிச்சலான திட்டத்தைத் தீட்டினுன். அக்குழு சமயக் கொள்கையைப் பயன் படுத்தி அப்துல்லாவிற்கோ அவருடைய சந்ததியார்களுக்கோ அரியணையைத் தேடித்தரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. டுனிசியாவிலும், எகிப்திலும் ஃபாதிமைடு ஆட்சி தோன்ற அத்திட்டம் வழிவகுத்தது.

இஸ்மேலி இயக்கத்தை நிறுவிய அப்துல்லா சமயத் தொண்டர்களை இரகசியமாய் வட சிரியாவிலிருந்து அனுப்பி மக்கள் மனதில் ஐயுறவைத் தோற்றுவித்து, விரைவில் வரவிருந்த மாதியைப்பற்றி அவர்களுக்கு அறிவித்தார். அப்துல்லாவின் சீடராகிய ஹம்தான் கார்மத் பொதுஉடைமைக் கொள்கையின் அடிப்படையில் ஒரு புரட்சிகரமான இயக்கத்தைக்கண்டார். அதுவே அவர்பெயரைத் தாங்கிய கார்மேஷியன் இயக்கமாயிற்று எதிரிகள் முஸ்லிம்களாயினும் அவர்கள் குருதியைச் சிந்தவும் அவர்கள் தயங்கவில்லை. அவர்கள் பாரசிக வளைகுடாவின் மேலைக்கரையில் கி.பி. 899-ல் ஒரு அரசை ஏற்படுத்திப் பக்கத்து நாடுகளைச் சூறையாடிப் பாக்தாதிலிருந்த கலீபா ஆட்சியை அச் சுறுத்தினுர்கள். கார்மேஷியன்கள் கி.பி. 930-ல் மக்காவைத் தாக்கிக் காபாவிலிருந்த புனிதக் கருப்புக்கல்லை எடுத்துக் சென்றுர்கள்.

பித்தகோரிய முறையிலிருந்ததுபோல் இஸ்மேலிய அமைப் பிலும் ஏழு ஒரு புனித எண்ணுகக் கருதப்பட்டது. இவ்வுலகில் தோன்றிய நபிகள் எழுவர், படைப்பு இயக்கத்தின்படி நிலைகளும் ஏழு என்று இஸ்மேலியர்கள் அறிவித்தார்கள். இஸ்லாமிய மக்கள்தொகையில் ஷியாக்கள் நூற்றுக்குப் பதினுன்கு விழுக் காடே இருந்தனர்.

# 6. எகிப்திலும், வட ஆப்பிரிக்காவிலும் ஃபாதிமைடு கலீபாக்கள்

பாக்தாதில் அரசோச்சிய அப்பாசிடுகளின் சமயத் தலைமைக்கு அறைகூவலாய், 909-ல் ஃபாதிமைடு கலீபா ஆட்சியை அரபாக்கள் டுனிசியாவில் நிறுவினார்கள். இஸ்மேலைட் பிரிவை ஏற்படுத்திய அப்துல்லா இபின்-மாய்மூனின் பின்தோன்றலாகிய சையது இபின்-ஹுசெயின் அவ்வாட்சியைத் தோற்றுவித்தார். ஆலிடுகளின் ஆதரவோடு அப்பாசிடு ஆட்சி ஏற்பட்டதுபோல், இஸ்மேலைட்டுகளின் திறமையான பிரச்சாரத்தால் ஃபாதிமைடு ஆட்சி அமைந்தது. அப்துல்லா அல்-ஹுசெயினின் தனிப்பட்ட முயற்சி, அதற்குப் பெரிதும் துணைசெய்தது. வணிகனைப் போன்று உடையணிந்து, இஸ்மேலைட் செயற்களமாகிய சலாமியாவிலிருந்து புறப்பட்டுச் சையது வடமேற்கு ஆப்பிரிக்காவிற்குச் சென்றான். ஃபாதிமாவின் மரபினராய் ஏற்றுக்கொள்ளப்பட்ட சையது, இமாம் உபேதுல்லா அல்-மாதி என்ற பட்டத்தோடு கலீபாவானார். அவருடைய ஃபாதிமைடு தொடர்பை வரலாற்றாசிரியர்கள் ஒரு முகமாய் ஏற்கவில்லை. அவருடைய தந்தை ஒரு யூதர் என்றும் அவருடைய பகைவர்கள் கூறினார்கள்.

**உபேதுல்லா அல்-மாதி (909-934)**

உபேதுல்லா மிகத் திறமையானவர். தம்முடைய ஆட்சிப் பரப்பை மொராக்கோவிலிருந்து எகிப்து வரையில் விரைவாக விரிவாக்கிக்கொண்டார். கி.பி 914-ல் அலெக்சாண்டிரியா கைப்பற்றப்பட்டது. சிசிலியை ஆட்சிசெய்ய ஆளுநரை அனுப்பினார்; ஸ்பெயின் நாட்டுடன் நட்புறவை ஏற்படுத்தினார். பண்டைய வம்சமாகிய அஃகலாபிடுகளிடமிருந்து (Aghlabid) கிடைத்த கப்பற்படையைக்கொண்டு மால்டா, சார்டினியா, கார்சிகா, போன்ற நண்ணிலக்கடல் தீவுகளைத் தம் வசமாக்கிக்கொண்டார். பழைய தலைநகருக்கருகில் டுனிசியாக் கடற்கரையில் அல்மாதியா என்று அவர் பெயரைத் தாங்கிய புதிய தலைநகரத்தை அமைத்துக்கொண்டு கி.பி. 920-ல் குடியேறினார்.

உபேதுல்லாவின் மகன் முகம்மது அல்-காயிம் (934-946) தந்தையின் வழியில் அரசை மேலும் விரிவாக்கும் எண்ணத்தோடு அண்டை நாடுகளைத் தாக்கினார். அவருடைய கப்பல் படை ஃப்ரான்சின் தென்கரையைச்சூறையாடி,ஜெனோவாவைக் கைப்பற்றிப் பல அடிமைகளுடனும், பெருங் கொள்ளைப்பொருளுடனும் திரும்பிற்று.

**அல்-மூயிஸ் (952-975)**

அல்-காயிமினுடைய பெயரனாகிய அல்-மூயிஸ் கி.பி. 955-ல் கப்பற்படையைக்கொண்டு ஸ்பெயின் கடற்கரையைத் தாக்கிச் சூறையாடினார்; கி.பி. 958 ல் ஃபாதிமைடு படை மேற்கில் அட்லாண்டிக் பெருங்கடலை அடைந்தது. கி.பி. 969-ல் எகிப்து அதனை ஆண்டுகொண்டிருந்த அரசர்களிடமிருந்து பறிக்கப்பட்டது. புதிய கப்பல்களைக் கட்டிக் கப்பல்படையை வலிமை உடையதாக்கினார். எகிப்தைப்பிடித்த ஜவஹர் அல்-ரூமி சிசிலியில் கிறித்தவக் குடும்பத்தில் பிறந்து அடிமையாக டுனிசியாவிற்கு வந்தவன். வெற்றிபெற்று அல்-ஃபஸ்டாட் தலைநகரில் காலூன்றியதும், கெய்ரோ நகரத்தைக் கட்டத்தொடங்கினான். கி.பி. 973-ல் அது ஃபாதிமைடு தலைநகரமாயிற்று. அல்-அஜ்ஹார் (Al-Azhar) என்ற பெரும்பள்ளியையும் ஜவஹர் கட்டி முடித்தான். கலீபா அல்-அசிஸ் காலத்தில் அது பல்கலைக்கழகமாயிற்று. வட ஆப்பிரிக்கா முழுவதும் பரவியிருந்த ஃபாதிமைடு பேரரசின் இரண்டாவது நிறுவனராய் ஜவஹர் விளங்கினார். எகிப்திய மண்ணில் வேரூன்றியபிறகு ஜவஹர் ஒரு படையைச் சிரியாவிற்கு அனுப்பி டமஸ்கசைப் பிடிக்கச்செய்தான். சிரியாவின் பல பகுதிகளிலும் ஆதிக்கஞ் செலுத்திய கார்மேஷியன்கள் அவனுடைய முதன்மையான பகைவர்களாயிருந்தார்கள்.

**அபு-மன்சூர் நிசார் அல்-அசிஸ் (975-996)**

ஐந்தாவது கலீபாவாகிய இவருடைய ஆட்சியில் பேரரசு உச்சநிலை அடைந்தது. அட்லாண்டிக் மாக்கடல் முதல் செங்கடல் ஈறாக உள்ள நாடுகளிலும், அல்-யாமன், மக்கா, டமஸ்கஸ் முதலிய இடங்களிலும் அவர் பெயர் வெள்ளிக்கிழமை வழிபாட்டின்போது குறிப்பிடப்பட்டது. பெயரளவிலேனும் அப்பரந்த பகுதி அவர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. எகிப்திலிருந்த கலீபா பாகதாது ஆட்சிக்குப் பெரும் போட்டியாயிருந்ததல்லாமல் அதனையும் விஞ்சி, நண்ணிலக் கடலின் கீழ்ப்பகுதியில் ஒரு பெரிய முஸ்லிம் ஆட்சியாய்த் திகழ்ந்தது. ஸ்பெயின் நாட்டிலும் ஆதிக்கஞ்செலுத்த அல்-அசிஸ் விரும்பினார்; ஆனால் அவ்வெண்ணம் கைவிடப்பட்டது.

ஃபாதிமைடு கலீபாக்களில் அல்-அசிஸ் அறிவில் சிறந்து, மக்கள் நலனைப் பேணுவதில் முனைந்திருந்தார். பல பள்ளிவாசல்களையும், அரண்மனைகளையும், கால்வாய்களையும், பாலங்களையும் கட்டினார். கிறித்தவர்களுக்கு அதுகாறும் அவர்கள் கண்டிராத அளவிற்குச் சமய சுதந்திரம் அளித்தார். இதற்குக் காரணமாயிருந்தவர்கள் அவருடைய உருசிய மனைவியும், கிறித்தவ வசீராகிய இசா-இபின் நஸ்நூரும் ஆவார்கள். இல்வாழ்க்கையிலும் கலீபா திளைக்கத்தவறவில்லை. அப்பாசிடுகளைப் பின்பற்றித் துருக்கியரையும் நீக்ரோக்களையும் தம் படையில் சேர்த்துக்கொண்டு அசிஸ் கோட்டைத் தேடிக்கொண்டார். அவர்கள் கீழ்ப்படியாமல், தங்களுக்குள்ளும், மெய்க்காவல் படையோடும் சண்டையிட்டுப் பேரரசின் வீழ்ச்சிக்கு வழிதேடினார்கள். சர்க்காஷியரும் துருக்கிய வீரர்களும் அடிமைகளும் ஆட்சியைக் கைப்பற்றிப் பின்னால் புது வம்சங்களை ஏற்படுத்தினார்கள். அல்-அசிஸ் ஆட்சிக்குப்பிறகு ஃபாதிமைடு ஆதிக்கத்தில் சரிவு ஏற்பட்டது.

அல்-அசிசிற்குப் பின் பதவிக்குவந்த அல்-ஹக்கிம் (996—1021) பதினொருவயது சிறுவன். தன் வசீர்களில் பலரைக் கொன்றான்; இயேசுவின் கல்லறை உட்படப் பல கிறித்தவ ஆலயங்களை இடித்தான்; கிறித்தவர்களையும், யூதர்களையும் கருப்பு ஆடை அணியச் செய்து துன்புறுத்தினான். முஸ்லிம் அல்லாதவர்களைத் துன்புறுத்தியவர்களில் இரண்டாம் உமார், அல்-முத்தாவக்கில் இருவருக்கும் பின் அல்-ஹக்கீம் மூன்றாவது ஆவார். இயேசுவின் கல்லறையை அழித்தது, சிலுவைப்போர்கள் நிகழ ஒரு காரணமாயிற்று.

அல்-ஹக்கீமிற்குப் பின் கலீபாப் பதவிக்கு வந்தவர்கள் இளைஞர்களாயிருந்ததால், வசீர்கள் மாலிக் என்ற அரச பட்டத்தைச் சூட்டிக்கொண்டு ஆட்சிபுரிந்தார்கள். அரசு எகிப்தோடு சுருங்கலாயிற்று. ஆப்பிரிக்க மாகாணங்கள் சுதந்தரமடைந்தன; மற்றும் சில அப்பாசிடு ஆட்சிக்குட்பட்டன. சிசிலி நார்மானியர் வசமாயிற்று. ஏழாண்டுப் பஞ்சத்தில் நாட்டின் பொருளாதார நிலை சீர்குலைந்தது. வசீர்கள் ஒருவரோடொருவர் போரிட்டு ஃபாதிமைடு வீழ்ச்சியை விரைவு படுத்தினார்கள். இறுதியாகப் பதினான்காவது கலீபா அரியணையிலிருந்து கி.பி. 1171-ல் இறக்கப்பட்டான்.

## ஆட்சிமுறை, கல்வி, அறிவாராய்ச்சி, கலைவளர்ச்சி

ஃபாதிமைடு வம்சம் விட்டுச்சென்ற பண்பாட்டு அடிப்படைக் கூறுகளை எகிப்தில் மட்டுமே காணமுடிகிறது. எகிப்தின்

பண்பாட்டு வரலாற்றில் அக்காலம் அரபு—பாரசிகக் காலமாகும். அரபு மக்கள் பாரசிகப் பண்பாட்டினைப் பெருமளவு ஏற்றுக் கொண்டார்கள். ஃபாரோக்களின் காலத்திற்குப் பிறகு முதன் முதலாய் ஃபாதிமைடு காலத்தில் சமய அடிப்படையில் வலிமை பெற்ற ஒரு சுதந்தர அரசு எகிப்தில் ஆட்சிபுரிந்தது. அவ்வாட்சியின் பொற்காலம் அல்-மூயிஸ் ஆட்சியில் தொடங்கி அல்-அசிஸ் ஆட்சியோடு முடிவுற்றது. எனினும் அல்-முஸ்தான்சிர் (1035—1094) காலத்திலும் எகிப்து முதன்மையான இஸ்லாம் நாடாயிருந்தது. அவர் ஆட்சியில் கண்ட வளமான வாழ்வைப்போல் வேறெங்கும் காணவில்லையெனக் கி.பி. 1046-49 ஆம் ஆண்டுகளில் அந்நாட்டில் பயணஞ்செய்த பாரசிக இஸ்மெயிலி சமயத் தொண்டர் நசீரிகுஸ்ராவ் வர்ணித்துள்ளார். கலீபாவின் அரண்மனையில் வாழ்ந்த 30,000 மக்களில் ஊழியர்கள் 12,000 பேர்; வீரர்கள் ஆயிரம்பேர்; நைல் ஆற்றங்கரையில் ஏழு கப்பல்கள் காணப்பட்டன. தலைநகரில் கலீபாவிற்குச் சொந்தமாய் ஐந்து, ஆறு அடுக்கு மாளிகைகள் இருபதினாயிரமும் அதே எண்ணிக்கை கடைகண்ணிகளும் இருந்தன. முக்கிய தெருக்கள் கூரைவேயப் பட்டு விளக்கொளியுடனிருந்ததை அப்பயணி பார்த்தார். கடைக்காரர்கள் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கே பொருள்களை விற்றார்கள். ஏமாற்றுபவர்களை ஒட்டகங்களில் ஏற்றித் தெருக்களில் மணியடித்துக்கொண்டு, அவர்கள் குற்றத்தைச் சொல்லிய வண்ணம் ஊர்வலமாய் அழைத்துச் செல்வது வழக்கமாம். நாணய மாற்றுக் கடைகளும் நகைக் கடைகளும்கூடப் பூட்டப்படுவதில்லையாம். கெய்ரோவில் எட்டு மசூதிகளிருந்தன; நாடெங்கும் அமைதி நிலவிற்று என்றெல்லாம் குஸ்ராவ் எழுதியுள்ளார்.

எகிப்திய கலீபாக்களில் பெருஞ் செல்வராய் வாழ்ந்த அல்-முஸ்தான்சிர் காபாவைப்போன்று தம் அரண்மனையில் ஒரு விதான மண்டபம் கட்டிக்கொண்டு, அதில் அமர்ந்து அழகிய பாடகர்களின் பாட்டைக் கேட்டவண்ணம் மதுவைச் சுவைப்பது வழக்கம். தொழுகைக்கு அழைப்பவரின் சலிப்பான உரத்த குரலைச் செவிமடுத்து, தூய்மையற்ற தண்ணீரைப் பருகியவண்ணம் காபாவில் கருப்புக்கல்லை உறுத்து நோக்குவதைவிட தன் வாடிக்கை மகிழ்ச்சி ஊட்டுவதாகக் கலீபா கருதினர்.

### ஆட்சிமுறை

ஃபாதிமைடு கலீபாக்கள் பழைய பாரசிக ஆட்சிமுறையையோ, அப்பாசிடு ஆட்சிமுறையையோ பின்பற்றினர்கள்.

அவர்களின் தாணையில் கலீபா, வசீரின் பெயரை அல்லது நாட்டினப் பெயரைத்தாங்கிய பல்வேறு படைவகுப்பணிகள் இருந்தன. உயர் அதிகாரி அமீர் என அழைக்கப்பட்டான். காவல்படையில் தனி அதிகாரிகள் இருந்தார்கள். வசீர்கள் பல வகையாய்ப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில், படையையும் அதன் அலுவலகத்தையும் மேற்பார்த்த வாள்வீரர்களும், அயல்நாட்டுத் தூதுவர்களைக் கலீபாவிடம் அழைத்துச்சென்று அறிமுகஞ் செய்வோரும், அரண்மனைவாயில் பிரபுக்களும் உயர்ந்தவர்கள் ஆவர். அடுத்த வரிசையில் காதி, அளவு கருவிகளை நெறிப்படுத்தும் அங்காடி மேற்பார்வையாளர், அரசுக்கருவூல அதிகாரி ஆகியோர் இருந்தார்கள். காதி, நாணயச்சாலை இயக்குநராயும் இருந்தார். ஆட்சித்துறைதோறும் எழுத்தர்களும் செயலாளர்களும் பணியாற்றினர்கள். கலீபாக்கள் அல்-அஸீசும், அல்-அசீசும் உள்நாட்டு ஆட்சிமுறையை அமைத்தார்கள். பத்தாம் நூற்றாண்டில் வசீராயிருந்த யாகூப் இபின் கில்லிஸ் என்ற பாக்தாது யூதர், ஃபாதிமைட் ஆட்சியில் நைல் ஆற்றுப் படுகையின் பொருளாதார வளத்திற்கு வழிவகுத்தார்.

ஃபாதிமைட் கலீபாக்களில் சிலர் தொடக்கத்தில் கல்வி, கலைகளில் சிறந்து விளங்கியபோதிலும் சிறப்பான இலக்கிய ஆசிரியர்களோ, விஞ்ஞானிகளோ அவர்கள் காலத்தில் தோன்றவில்லை. அல்-அசிஸ் கவிஞராயும் கல்வியில் ஆர்வமுடையவராயுமிருந்தார். இபின் கில்லிஸ் மாதம் ஆயிரம் தினார் செலவில் ஒரு கல்விச்சாலையை ஏற்படுத்திக் கல்வியை ஆதரித்தார். கலீபாக்கள் ஷியாப்பிரிவைச் சேர்ந்தவர்களாயிருந்ததால் அவர்களின் அவை இஸ்லாமிய அறிஞர்களை ஈர்க்க முடியவில்லை. பத்தாம் நூற்றாண்டில் அல்-கிந்தி, அல்-குதை போன்ற வரலாற்றாசிரியர்களும், அல்-தமீமி போன்ற மருத்துவர்களும் சிறப்பாய் வாழ்ந்தார்கள். பிற்காலத்தில் பேரரசின் அமைதி குறையவே அறிவாராய்ச்சிகள் நடைபெறவில்லை.

ஷியாக்கோட்பாடுகளைக் கற்பித்துப் பரப்ப அல்-ஹக்கீம் கி.பி. 1005-ல் தாரல் ஹிக்மா என்ற மெய்யறிவு மன்றத்தைத் தொடங்கினர். அதற்கென்று ஒதுக்கப்பட்ட நிதியைக்கொண்டு ஏட்டுச் சுவடிகளைப் படியெடுத்தார்கள்; புத்தகங்களைப் புதுப்பித்தார்கள். அம் மன்றத்தில் கூட்டங்கள் நடைபெற அறைகளும், நூலகமும் இருந்தன. பாடதிட்டத்தில் இஸ்லாமியச் சமயத் தொடர்பான பொருள் தலைப்புகளைத்தவிர மருத்துவமும், வானநூலும் இணைக்கப்பட்டிருந்தன. சோதிடக் கணிப்பில்

ஆர்வமுள்ள அல்-ஹக்கீம் ஒரு வானஆராய்ச்சிக் கூடத்தையும் நிறுவினர். அவர் அவையில் அலி-இபின் யூனஸ் சிறந்த எகிப்திய வானநூல் புலவராய் விளங்கினர். அல்-ஹாசன் இபின், அல்-ஹேதம் ஆகியோர் சிறந்த இயல்நூல் வல்லுநராகவும் ஒளியியல் அறிஞராகவும் வாழ்ந்தார்கள்.

அல்-அசிஸ் தொடங்கிய நூலகத்தில் இருநூறுயிரம் புத்தகங்கள் இருந்தன; பொன், வெள்ளி மெருகிட்ட (illuminated) இரண்டாயிரத்து நானூறு குரான் சுவடிகள் நூலகத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. கி.பி. 1068-ல் நூலகம் கொள்ளையிடப்பட்டபோது இருபத்தைந்து ஒட்டகங்கள் சுவடிகளைச் சுமந்து சென்றன. துருக்கி அதிகாரிகள் சுவடிக் கட்டடத்தில் பயன்படுத்தியிருந்த தோலை அடிமைகளுடைய செருப்புகளைப் பழுதுபார்க்கவும், ஏட்டுச்சுவடிகளை எரிபொருளாகவும் பயன்படுத்தினர்கள்.

ஃபாதிமைடு ஆட்சியில் இலக்கியமும் அறிவியலும் வளர வாய்ப்பில்லை; கலைகள் சிறப்பாய் வளர்ந்தன. முதலிரண்டு கலீபாக்களின் ஆட்சியிலும் பின்னுல் இரு அர்மீனிய வசீர்கள் காலத்திலும் நாட்டின் வளர்ச்சியைக் கலை முன்னேற்றத்தில் காணலாம்.

ஜவஹர், சதுரவடிவத் தூபியுடன் அஷார் பள்ளியைக் கி.பி. 972-ல் கட்டினர். அல்-ஹக்கீம் கட்டிய பள்ளியில் கருங்கல் பயன்படுத்தப்பட்டது. கட்டடக்கலையில் ஃபாதிமைடுகள் சில கவர்ச்சிக் கூறுகளைப் புகுத்தினர்கள். பள்ளியோடு அதனைக் கட்டியவரின் கல்லறையை இணைக்கும் வழக்கம் கி.பி. 1085-ல் ஏற்பட்டது. கெய்ரோவில் பைசாண்டிய முறையில் கட்டிய மூன்று பெரிய வாயில்களே எகிப்தில் எஞ்சியுள்ள ஃபாதிமைடு காலத்து வரலாற்றுச் சின்னங்களில் சிறப்பானவை. கெய்ரோ அரும்பொருள்காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுள்ளபொருள்களில் அருமையான மர வேலைப்பாட்டினைக் காணலாம். அங்கே வெண்கலத்தாலான கண்ணடிகள், கூக்குவளைகள், தூபக் கலங்கள் சேமிக்கப்பட்டுள்ளன. சிங்கத்தின் உடலில் கழுகின் தலையையும் அதன் இறகுகளையும் பொருத்திய ஒரு கற்பனை விலங்கின் உருவத்தில் சிறந்த வெண்கல வேலைப்பாட்டைப் பார்க்கலாம். அதன் உயரம் நாற்பது அங்குலங்களாகும்; இப்போது அது பைசாவிலிருக்கிறது. நேர்த்தியான துணிவகைகள் தயாரிக்கப்பட்டு சிலுவைப்போர்கள் நிகழ்ந்த காலத்தில் மேனுடுகளுக்குச் சென்றன. ஆங்கிலக்கவி சாசர் காலத்தில் வழங்கிய ஃபஸ்டியன்

துணிவகை அல்-ஃப்ஸ்டாட் என்ற எகிப்தியத் தலைநகரிலிருந்து வந்ததே. அவர்களின் பீங்கான் பாத்திரக்கலை இரானியப் பாங்கினைப் பின்பற்றி வளர்ந்தது. பீங்கான் பாத்திரங்களிலும் துணியிலும் விலங்குருவங்கள் தீட்டப்பட்டுள்ளன. எகிப்தியர்கள் பளபளப்பான சீன மட்கலங்களை வாங்கினார்கள். எட்டாம் நூற்றாண்டிலேயே எகிப்தில் புத்தகம் கட்டும் கலை வளரத் தொடங்கிற்று.

# 7. ஐரோப்பாவில் அரபுக்கள்

## (ஸ்பெயின், ஸிஸிலி)

**ஸ்பெயின்**

இடைக்கால வரலாற்றிலே அரபுக்கள் ஸ்பெயின் நாட்டில் தங்களாதிக்கத்தை மிக விரைந்து நிறுவினார்கள். உமையடு களின் வட ஆப்பிரிக்க ஆளுநர் மூசாவால் அனுப்பப்பட்ட தாரிஃப் நானூறு பெர்பெர் வீரர்களோடு சென்று கி.பி. 710-ல் ஸ்பெயின் நாட்டின் நிலைமையை அறிந்துவந்தான். கி.பி. 711-ல் மூசா அனுப்பிய ஏழாயிரம் வீரர்கள் தாரிக் தலைமையில் அந் நாட்டின்மீது படையெடுத்துச் சென்றனர். அந்நாட்டில் அவன் பாசறை அமைத்த இடத்திற்கு அருகிலிருந்த பெரிய குன்று அவன் பெயரால் ஜபல்தாரிக் என அழைக்கப்பெற்று அப்பெயர் ஜிப்ரால்டர் என மருவிற்று. அந்நாட்டு மன்னன் ரோடரிக் தன் பெரும் படையுடன் தாரிக்கிடம் தோற்கவே, தாரிக் நாட்டினுள் ஊடுருவி உலாவந்தான். விசிகாத்திக் வீரர்கள் நகரங்களில் மட்டுமே முஸ்லிம்களை எதிர்த்துப் போராடினார்கள். பிற்காலத் தில் தலைநகரமாய் விளங்கிய கார்டோவா இருமாத முற்றுகைக்குப் பின் முஸ்லிம்கள் வசமாயிற்று. தலைநகரமாகிய டாலெடோவை நோக்கித் தாரிக் தன் படையுடன் விரைந்தான். டாலெடோவை யூதர்கள் காட்டிக்கொடுத்ததால் தாரிக் அதனை எளிதில் கைப் பற்றிச், சில மாதங்களில் ஸ்பெயின் நாட்டில் பாதிக்குமேல் பிடித்துவிட்டான். அடுத்த ஆண்டிலேயே மூசா ஒரு படையுடன் சென்று மற்ற பகுதிகளைத் தன் வசமாக்கிக்கொண்டான். ஸ்பெயின் அல்-அண்டாலஸ் என்ற அரபுப் பெயரோடு கலீபா அரசில் ஒரு மாகாணமாயிற்று. ஐரோப்பாவில் மிகப் பெரியதும் அழகானதுமான ஸ்பெயின் மாகாணம் ஏழாண்டுகளில் அரபு ஆதிக்கத்திற்குட்பட்டது. அவ்வாதிக்கம் பல நூற்றாண்டுகள் நீடித்திருந்தது.


பிரன்னீஸ் மலைகளைத் தாண்டி ஃப்ரான்சையும் படை யெடுக்க முஸ்லிம்களைத் தூண்டியது அந்நாட்டின் மடங்களிலும் மாதாகோயில்களிலும் இருந்த பெருஞ் செல்வமே. பாய்ட்டி யர்சுக்கும் டூர்சுக்கும் இடையில் முஸ்லிம் தலைவன் அப்தல் ரஹிமானும், மெரோவிங்கிய தலைவன் சார்லஸ்மார்டலும் கி.பி.

732-ல் தத்தம் படையுடன் சந்தித்தனர். அச்சண்டையில் அப்தல் ரகிமான் கொல்லப்படவே, முஸ்லிம்கள் பின்னடைந்தனர். ஜிப்ரால்டரிலிருந்து ஏறத்தாழ ஆயிரம் மைல்கள் உள்நாட்டில் ஊடுருவிய அரபு—பெர்பெர் படை மேலும் முன்னேறாது அப்போர்க்களத்தில் தடுத்து நிறுத்தப்பட்டது. ஆதலால் அவர்கள் வேறிடங்களைத் தாக்கத் தொடங்கினார்கள். வெற்றி முழக்கத்தோடு முன்னேறிச்சென்ற முஸ்லிம்களின் ஆதிக்கப் பரப்பின் மேற்கெல்லையாக டூர்ஸ் அமைந்திருந்தது. நபிநாயகம் மறைந்த ஒரு நூற்றாண்டிற்குள் டமஸ்கசில் ஆதிக்கஞ் செலுத்திய கலீபாவின் அரசு சீனத்திலிருந்து கால்நாடு வரையில் பரவி உலக அரசாயிற்று.

முஸ்லிம்கள் இரு கட்சிகளாய்ப் பிரிந்து கி.பி. 732 முதல் 755 வரையிலும் போரிட்டுக்கொண்டிருந்தனர். அது வட அரேபியாவிற்கும் தென் அரேபியாவிற்கும் நிகழ்ந்த சண்டையே; சன்னி ஷியாக்களின் பூசலே ஆப்பிரிக்காவிலிருந்து ஸ்பெயின் நாட்டில் பெர்பெர்கள் பெருவாரியாகக் குடியேறி காரிஜைட் கோட்பாட்டினைக் கடைப்பிடித்தார்கள். அரபுக்கள் அண்டலூசியாவின் வளமிக்கப்பகுதிகளைத்தாங்களே வைத்துக்கொண்டு முன்னணியிலிருந்து ஸ்பெயினைப் பிடித்த பெர்பெர் வீரர்களுக்கு நாட்டின் நடுவிலிருந்த வறண்ட மேட்டு நிலத்தைக் கொடுத்தார்கள். ஆதலால் கலகஞ்செய்த பெர்பெர்களை ஒடுக்கக் கலீபா ஹிஷாம் சிரியாப் படையை அனுப்பினார். சிரியா வீரர்களும் ஸ்பெயினில் குடியேறி அந்நாட்டின் நிலைமையை மேலும் சிக்கலாக்கினார்கள். நாட்டை ஆட்சிசெய்த முதல் அமீர் செவில் நகரத்திலிருந்து அரசோச்சினான்; நான்காவது மன்னன் கார்டோவாவைத் தலைநகராக்கிக்கொண்டான். அந்நகரமே மேலை உமையது வம்சத்தின் ஆட்சிப்பீடமாய்ப் பல நூற்றாண்டுகள் விளங்கிற்று. கி.பி. 732 லிருந்து இருபத்து மூன்றாண்டுகளில் இருபத்துமூன்று அமீர்கள் ஆட்சிப்பீடமேறினார்கள்.

## ஸ்பெயினில் உமையது ஆட்சி

கி.பி. 750-ல் அப்பாசிடுகள் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டு உமையது வம்சத்தினரைக் கொன்றனர். பத்தாவது உமையது, கலீபா ஹிஷாமின் பெயரன் அப்துல் ரஹ்மான் இபின் முவாவியா என்ற இளைஞன் உயிர்தப்பி, பாலஸ்தீனம், எகிப்து, வட ஆப்பிரிக்கா முதலிய நாடுகளில் ஐந்து ஆண்டுகள் அலைந்து திரிந்து, இறுதியாய் ஸ்பெயினை அடைந்தான். சிரியா மக்களும் யாமனைட்டுகளும் அவனுக்கு ஆதரவளித்தனர். உமையது வம்சத்தின் கான்முளையாகிய பனூஉமையாவைத் தென் பகுதியி


அண்டலூசியா - ஸ்பெயின்
நண்ணிலக் கடல்
பார்சிலோனா
பிரனிஸ்
அரகான்
நவார்
சரகோசா
காஸ்டில்
டொலிடோ
அண்டலூசியா
கார்டோவா
கிரனடா
அல்மேரியா
மலாகா
ஜிப்ரால்டர்
காடிஸ்
செவில்
லிஸ்பன்
காலிசியா

லிருந்த ஸ்பானிஷ் நகரங்கள் வரவேற்றன. அவனை எதிர்த்த பழைய ஆளுநர் தோற்று ஓடினன். அப்துல் ரஹ்மான் கி.பி. 756-ல் கார்டோவாவில் உமையடு ஆட்சியை நிறுவினன். கி.பி. 764-ல் டாலெடோ நகரம் கைப்பற்றப்பட்டது. அப்துல் ரஹ்மானை ஆதரித்த யாமனைட்டுகளும், ஷியாக்களும் அப்பாசிடு களின் தூண்டுதலால் தொடர்ந்து கலகஞ்செய்தனர். பெர்பெர் கலவரங்களை ஒடுக்கப் பத்தாண்டுகள் பிடித்தன. அப்பாசிடு கலீபா அல்-மன்சூர், கி.பி. 761-ல் ஸ்பானிஷ் ஆளுநராய் ஒருவனை அமர்த்தினன். அவன் கொல்லப்பட்டு அவன் தலை கலீபாவிற்கு அனுப்பப்பட்டது. வடகிழக்கு ஸ்பெயினிலிருந்த அரபுக்கள் அப்துல் ரஹ்மானோடு போரிட ஷார்லெமேனை அழைத்தார்கள். படையெடுத்துவந்த ஷார்லெமேன் சரகோசா நகரம் தன்னை எதிர்த்துக் கோட்டைவாயிலை மூடியதைக் கண்டு பின்னடைந் தான். தன்னுடு திரும்பிய ஷார்லெமேன் படை தாக்கப்பட்டு ரோலண்டு என்ற ஒரு பெருந்தலைவனை இழந்தான். கிழக்கு நாட்டுக் கலீபாவிற்கும் மேலைநாட்டுப் பேரரசனுக்கும் இணை யான வீரனாய் அப்துல் ரஹ்மான் விளங்கினன்.

**அப்துல் ரஹ்மான் I (756-788)**

பகைவர்களை ஒடுக்கி வெற்றிகண்ட அப்துல் ரஹ்மான் சிறந்த பயிற்சியும், கட்டுப்பாடுமுள்ள ஒரு பெரும்படையை வைத்திருந்தான். பெர்பெர்களுக்கு நல்ல ஊதியம் தந்து தன் னிடம் பற்றுள்ளவர்களாய் மாற்றிக்கொண்டான். அப்பாசிடு கலீபாவின் பெயரைக் குறிப்பிட்ட குத்பாவைக் கி.பி. 757-ல் நிறுத்தினன்; ஆனல், அவன் கலீபாப் பட்டத்தைத் தாங்கவில்லை. அவனும் அவனுக்குப்பின் பதவியேற்றவர்களும் மூன்றும் அப்துல் ரஹ்மான் காலமட்டும் அமீர் என்றே தங்களை அழைத்துக்கொண்டார்கள். அவன் ஆளுகைக்குட்பட்ட ஸ்பெயின் நாடு கலீபாவின் ஆதிக்கத்தை உதறியெறிந்த முதல் மாகாணமாகும்.

ஸ்பானிஷ் திவக்குணற்றை வலுப்படுத்தி அப்துல் ரஹ்மான் அமைதியை நிலைநாட்டினன். போரில் சிறந்து விளங்கியதுபோல் ஆட்சித்துறையிலும், அறிவு, கலைத்துறைகளிலும் உயர்ந்து விளங்கினன். தலைநகருக்குக் குடிதண்ணீர் கொண்டுவரக் கட்டுக் கால்வாய் அமைத்தான். தலைநகரைச்சுற்றி மதில் எழுப்பும் பணியைத் தொடங்கினன். அவனுடைய முன்னேன் ஹிஷாம் சிரியாவில் தனக்கென ஓர் அரண்மனையைக் கட்டிக்கொண்டது போல, கார்டோவாவிற்குப் புறத்தே பூம்பொழில் சூழ்ந்த அரண் மனையைக் கட்டினன். அரண்மனைத் தோட்டத்தில் அயல்நாட்டுப்

பழச் செடிகளைப் பயிராக்கினன். சிரியாவிலிருந்து கொண்டு வந்த பேரீச்சமரம் ஒன்றும் அத்தோட்டத்தில் வளர்க்கப்பட்டது. அதற்கு ஒரு கவிதை புனைந்து மகிழ்ந்தான். ஜெருசலத்திலும், மக்காவிலும் இருந்த இரு திருக்கோயில்களுக்கும் போட்டியாகக் கார்டோவாவிலிருந்த பெரும்பள்ளியைத் திரும்பக்கட்டினன். அவனுக்குப் பிறகு பதவிக்கு வந்தவர்கள் அப்பள்ளியை விரிவாக்கி மேலைநாட்டுக் காபாவாய்த் திகழச்செய்தார்கள். கி.பி. 1236-ல் அது கிறித்தவக் கோயிலாய்த் திருத்தியமைக்கப்பட்ட பிறகும் மக்களால் மசூதியென்றே அழைக்கப்பட்டு வருகிறது. தலைநகரத்தில் ஓடும் ஆற்றிற்குப் பாலம் ஒன்று கட்டப்பட்டது. ஏனைய நகரங்களையும் அப்துல் ரஹ்மான் பொலிவுறச்செய்தான்.

அமீர், மக்கள் உடல்நலத்திலும், மற்றைய நலங்களிலும் கருத்துச் செலுத்தினன். ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து பதினோராம் நூற்றாண்டுவரை உலகில் இஸ்லாமிய ஸ்பெயினைப் பண்பாட்டு மையங்களில் ஒன்றாக்கிய அறிவு இயக்கத்தைப் பலதுறைகளிலும் அமீர் தொடங்கினன். அரபுக்கள், சிரியா மக்கள் பெர்பெர்கள், காத்துகள், நூமிடியர்கள் ஆகிய பல்வேறு மக்களையும் ஒரு நாட்டினமாக்கவும் முயன்றான். ஆனால், அது அக்காலச் சூழ்நிலைக்கு மீறிய செயலாயிருந்தது.

அப்துல் ரஹ்மான் தொடங்கிய மரபு கி.பி. 756 முதல் 1031 ஆம் ஆண்டுவரை நிலைத்திருந்தது. எட்டாவது அமீராகிய மூன்றாம் அப்துல் ரஹ்மான் (912-961) காலத்தில் அம்மரபு மிகச் சிறப்பெய்தியது. கார்டோவா, பாக்தாது நகரோடு போட்டியிட்டுச் சீரும் சிறப்புடன் விளங்கிற்று. பத்தாம் நூற்றாண்டின் பிஸ்மார்க்காய்த் திகழ்ந்த அல்-ஹஜிப், அல்-மன்சூர் ஆட்சிக்குப் பின் (கி.பி. 1002) உமையடு ஆட்சி தேய்ந்து கி.பி. 1031-ல் மறைந்தது. அதன் அழிவிற்குப்பின் சிறுசிறு அரசுகள் தோன்றி ஒன்றோடொன்று போரிட்டு ஒடுங்கின.

ஸ்பானிஷ் மக்கள் இஸ்லாம் சமயத்தையும் கிறித்துவத்தையும் தழுவினதால் இரு கூறாகப் பிரிந்து பிளவுபட்டிருந்தார்கள். புதிய ஸ்பானிஷ் முஸ்லிம்களுக்கும், அரபு முஸ்லிம்களுக்கும் பொறாமையும் போட்டியும் இருந்துகொண்டேயிருந்தன. முஸ்லிம் ஆட்சியின் வழக்கப்படி கிறித்தவர்களிடத்திலும் யூதர்களிடத்திலும் அவரவர்களின் செல்வ நிலைக்கேற்ப ஆள்வரி வசூலிக்கப்பட்டது. விளைச்சலில் ஐந்தில் ஒரு பகுதி கராஜ் என்ற நிலவரியாகத் திம்மிகளிடமிருந்து வசூலித்தார்கள். திம்மிகள் முஸ்லிம்களானாலும் வரி விலக்களிக்கப்படவில்லை. வாள் கொண்டு வென்ற நிலப்பரப்பும், கிறித்தவக்கோயில் நிலமும்,

படையெடுப்பின்போது நாட்டை விட்டோடிய பிரபுக்களின் நிலச் சொத்தும் பறிமுதல் செய்யப்பட்டு நாட்டை வென்று ஆண்டவர்கள்பிரித்தெடுத்துக்கொண்டனர். நிலங்களைப்பயிரிட்ட பண்ணையாள்கள் விளைவில் ஐந்தில் நான்கு பங்கினைத் தங்கள் ஆண்டைகளுக்குக் கொடுத்துவிட்டு எஞ்சிய இருபது விழுக்காட்டைப் பெற்று வாழ்ந்தார்கள். பறிமுதல் செய்யப்பட்ட நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி அரசுடைமையாக்கப்பட்டது. அதன் விளைவு மூன்றில் இருபங்கு உழைத்தவர்களுக்கும் ஒரு பங்கு அரசுக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. கலகங்களை அடக்குவதற்காகக் குடியேற்றப்பட்ட சிரியா மக்களுக்கும் அரபுக்களுக்கும் நில மானியங்கள், அரசுக்குச் சொந்தமாயிருந்த நிலப் பகுதியிலிருந்து வழங்கப்பட்டன.

கிறித்தவர்கள் தங்கள் சமயத்தைப் பின்பற்றுவதில் எவ்விதத் தடையுமில்லை. அவர்களுடைய வழக்குகளைக் கிறித்தவ நடுவர்களே கேட்டு நீதி வழங்கினார்கள். முஸ்லிம்கள் தொடர்பான வழக்குகளையும் இஸ்லாம் சமயத்திற்கு எதிராகச் செய்யப்படும் குற்றங்களையும் முஸ்லிம் நடுவர்களே விசாரித்து நீதி வழங்கினார்கள். ஸ்பெயினில் முஸ்லிம் ஆட்சி நிறுவப்பட்டதால் அந்த நாட்டுக் குடிமக்களுக்கு எவ்விதத் தொல்லையும் ஏற்படவில்லை; சிலவகைகளில் அது அவர்களுக்கு ஆக்கமாயிருந்தது. கிறித்தவர்கள் தங்கள் நில உடைமையை விற்கவும் பிறருக்குக் கொடுக்கவும் உரிமை பெற்றிருந்தார்கள். பிரபுக்களுக்கும் பாதிரிமார்களுக்குமிருந்த உரிமைகள் பறிக்கப்பட்டன. அடிமைகளின் நிலை உயர்ந்தது. கிறித்தவர்கள் பெருவாரியாக முஸ்லிம்களானார்கள். பண்ணையாள்களும் விடுதலைபெற்ற அடிமைகளும்தாம் மிகுதியாய் இஸ்லாமிய சமயத்தைத் தழுவினார்கள். சிலர் புறத்தே முஸ்லிம்களாயும் அகத்தே கிறித்தவர்களாயும் வாழ்ந்தார்கள். ஒரு நூற்றாண்டிற்குள் மக்கள் தொகையில் புதிய முஸ்லிம்களே நகரப்பகுதிகளில் பெரும்பான்மையினராய் இருந்தார்கள். சமுதாய அமைப்பை எதிர்த்து முதன் முதலில் அவர்களே போர் தொடுத்தார்கள்.

**ஹிஷாம் I (கி.பி. 788-796)**

புலமையும் கடவுட்பற்றும் ஒருங்கே அமைந்திருந்த இவருடைய ஆட்சி தொல்லையேதுமின்றி நடைபெற்றது.

**அல்-ஹக்கம் (கி.பி. 796—822)**

வேட்டையிலும் மதுக்குடியிலும் திளைத்த இவருடைய ஆட்சியில் அந்த நிலைமை மாறிவிட்டது. அரபுமொழி அறியாத

அயலாரும் நீக்ரோக்களும் நிரம்பியிருந்த அவருடைய மெய்க் காவலர் படையும், அமீருடைய பொறுப்பற்ற போக்கும், மக்களிடையில் மனக்கசப்பை வளர்த்தன. கார்டோவாவில் புதிய முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதியில் கலவரங்கள் ஏற்பட்டவண்ணமிருந்தன. கி.பி 814-ல் அமீரை அரண்மனையில் கலகக்காரர்கள் பூட்டிவிட்டனர். அவர்களை அடக்கித் தலைவர்களைத் தலைகீழாகச் சிலுவைகளில் அறைந்தார்கள். கார்டோவாவில் புதிய முஸ்லிம்கள் வசித்தஇடம் தரை மட்டமாக்கப்பட்டு, அவர்கள் நாடு கடத்தப்பட்டார்கள். மொராக்கோவிலும், அலெக்சாண்டிரியாவிலும், கிரீட் தீவிலும் அவர்கள் குடியேறினார்கள். டாலெடோவிலும் கிளர்ச்சிக்காரர்கள் அமைதியைக் குலைத்தனர். அமீரின் மூத்தமகன் அந் நகருக்கு வருகைதந்ததையொட்டி நடைபெற்ற விருந்திற்குத் தலைவர்கள் அழைக்கப்பட்டுச் சூழ்ச்சியாகப் படுகொலை செய்யப்பட்டனர். அதன்பின் பல ஆண்டுகள் அந்நகரம் அமைதியாயிருந்தது.

**அப்துல் ரஹ்மான் II (கி.பி. 822—852)**

உமையடுகளுக்கும் ஸ்பானிஷ் மக்களுக்கும் இடையில் ஒற்றுமைகாண இவர் அரும்பாடுபட்டார். இசையும், வானநூலும் அமீர் ஆதரவுடன் வளர்ந்தன. இவருடைய வாழ்க்கையையும் கொள்கையையும் உருவாக்கிய நால்வரில் இவருடைய ஆசை மனைவி சல்டானுதாரூப் ஒருவராவார். மற்றொருவர், அலியும் அடிமையுமாயிருந்த நசீர்; அவர் அரண்மனையில் ஓர் உயரதிகாரி; அரசிக்கு மிக வேண்டியவர். கார்டோவாவில் நிகழ்ந்த கலகத்திற்குத் தலைவனும், இறைமையியல் புலவனுமான யாஹியாவும், பாக்தாது பாடகன் சிரியாஃபும் மற்ற இருவராவர்.

கார்டோவாவை இரண்டாவது பாக்தாது ஆக்க விரும்பிய அப்துல் ரஹ்மான் ஹாரூனைப் பின்பற்றிப் பெரும்பொருள் செலவிட்டு அறிஞர்களையும், கலைஞர்களையும் ஆதரித்தான். ஹாரூன் அவையையும் அவனுடைய மக்கள் அவைகளையும் அலங்கரித்த சிரியாஃபை அப்துல் ரஹ்மான் அழைத்துப் பெருமைப்படுத்தினான். சிரியாஃப் கவிஞனும் வான நூல், நில இயல் இரண்டிலும் அறிஞனுமிருந்தான்.

நகரப் பகுதிகளில் வாழ்ந்த கிறித்தவர்களில் பெரும்பாலோர் அப்துல் ரஹ்மான் ஆட்சி முடிவில் அரபுமொழி, இலக்கிய நிறுவனங்களால் ஈர்க்கப்பட்டு அரபு வாழ்க்கை முறைகளைப் பின்பற்றினார்கள். கிறித்தவர்களின் இப்போக்கைச் சில ஆர்வமிக்கக் கிறித்தவர்கள் எதிர்த்து, இஸ்லாம் சமயத்தைப் பழித்து

அதற்குரிய தண்டனையைப் பெற்றுத் தங்கள் சமயத்திற்காக உயிர்துறந்தார்கள். மக்கள் தங்களைப் பலிபாக்கிக்கொள்ளும் அவ்வழக்கம் கார்டோவா மேற்றிராணியர் தூக்கிலிடப்படும் வரையில் தொடர்ந்து இருந்துவந்தது.

**முகம்மது I (கி.பி. 852—886)**

தற்கொலையில் ஈடுபட்டக் கிறித்தவர்களின் கிளர்ச்சியை ஒடுக்கக் கார்டோவா மேற்றிராணியாரைத் தூக்கிலிட முகம்மது உத்தரவிட்டார். அவருடைய மக்கள் அல்-முந்திரும் (கி.பி. 886-888), அப்துல்லாவும் (கி.பி. 888–912), உமையபடு பரம்பரையினர் சமயத்துறையில் கையாண்டுவந்த சகிப்புத்தன்மைக்குப் புறம்பானவர்களாயிருந்தார்கள். அல்-முந்திர், அவருடைய இளவலின் தூண்டுதலால், அன்னாருடைய மருத்துவராலேயே நஞ்சூட்டப்பட்டு இறந்தார்.

புது முஸ்லிம்கள் தொடர்ந்து கிளர்ச்சிசெய்துகொண்டே வந்தனர். நாட்டின் சில பகுதிகள் அமீர் ஆட்சியிலிருந்து விலகி பெர்பெர் அல்லது ஸ்பானிஷ் முஸ்லிம் தலைமையில் சுதந்தரம் அடைந்தன. நாட்டின் நலிவைப் போக்கி, அமைதியை நிலைநாட்டி, அமீரின் அதிகாரத்தை மீட்கும் ஆற்றல்பெற்ற ஒரு தலைவரை ஆட்சி எதிர்பார்த்திருந்தது. அவரே மூன்றும் அப்துல் ரஹ்மான்.

**அப்துல் ரஹ்மான் III (கி.பி. 912—961)**

பாட்டன் அப்துல்லாவைப் பின்பற்றிப் பதவியேற்ற அப்துல் இருபத்துமூன்று வயது இளைஞன். அவர் பெயரைத் தாங்கிய அவருடைய முன்னோன் நிறுவிய அரசு, கார்டோவா அதன் சுற்றுப்புறங்களோடு ஒடுங்கியிருந்தது. மக்கள் தலைவர்களுக்கு இன்றியமையாத பண்புகளாகிய நெஞ்சுரமும், நேர்மையும், அஞ்சாமையும் புதிய அமீரிடம் காணப்பட்டன. தம்முடைய அரை நூற்றாண்டு ஆட்சிக் காலத்தில் அவனுக்கே உரிய ஆற்றலோடு இழந்த மாகாணங்களை மீட்டும் நான்கு திசைகளிலும் புதிய நாடுகளை வென்றும் அரசை விரிவாக்கினான். ஆட்சியிலிருந்து பிரிந்த பகுதிகள் அமீருக்கு அடிபணிந்தும், ஒப்பந்தஞ் செய்துகொண்டும் அவருடைய ஆட்சிக்குட்பட்டன. கி.பி. 932-ல் டாலெடோவும் அமீரிடம் சரணடைந்தது. மக்கள் நலத்தில் அக்கறைகொண்ட அமீரின்கீழ் நாடு அமைதிபெற்று, வலிமை அடைந்தது. உள் நாட்டுக் கலவரங்களை அடக்கியபின் அமீர் புறப்பகைவர்களைச் சந்திக்கப் புறப்பட்டார்.

கி.பி 909-ல் உபேதுல்லா அல்மாதி ஃபாதிமைடு மரபினை டுனிசியாவில் நிறுவி ஸ்பெயினையும் தன்னுடைய ஆதிக்கத்தில் கொண்டுவர முயற்சித்தான். ஆப்பிரிக்கப் பகைவன் ஒடுக்கப் பட்டாலன்றி ஸ்பெயினில் தன்னுடைய ஆட்சி உறுதிப்படாது என உணர்ந்த அப்துல் ரஹ்மான் பார்பரிக்கரை நாட்டைத் தன் தலைமையை ஏற்றுக்கொள்ளச் செய்தான். விரிவாக்கப்பட்டுப் புதுப்பிக்கப்பட்ட அவனுடைய கப்பல்படை எந்நாட்டுக் கடல் படைக்கும் இளைத்ததல்ல. தலைமைத் துறைமுகமாகிய அல்-மேரியாவிலிருந்து உமையடு கடல்படை நண்ணிலக் கடலின் மேலைப் பகுதியின் ஆதிக்கத்திற்கு ஃபாதிமைடு கப்பல்படை யோடு போட்டியிட்டது. ஃபாதிமைடு கலீபாவின் ஆணைப்படி ஸ்பானிஷ் கடற்கரையைச் சிசிலியன் கடல்படை தாக்கியதற்கு எதிராக ஸ்பானிஷ் கப்பல்படை எழுபது கப்பல்களுடன் கி.பி. 956-ல் ஆப்பிரிக்கக் கரையைத் தாக்கிப் பாழாக்கிற்று.

வடக்கில் லியான்பகுதிக் கிறித்தவ மன்னர்களோடும் முஸ்லிம் கள் போராட வேண்டியிருந்தது. கி.பி. 914-ல் லியான் மன்னன் நாட்டின் தென்பகுதியை அடிக்கடி தாக்கிச் சூறையாடிவந்தான். அப்துல் ரஹ்மான் ஒரு படையுடன் சென்று கிறித்தவர்களும் முஸ்லிம்களும் தமதெனக் கருதிய எல்லைப் பகுதியில் பல அரண் களை இடித்துக் கி.பி. 920-ல் நவார், லியான் மன்னர்களைப் புற முதுகிட்டோடச்செய்தான். கி.பி. 924-ல் நவார் மன்னனின் தலைநகர் அழிக்கப்பட்டது. கிறித்தவர்கள் ஆண்ட வடதிசையி லும் எதிர்ப்பு ஓய்ந்து அமைதி ஏற்பட்டது.

அப்துல் ரஹ்மான் ஒன்றன்பின் ஒன்றாய் வெற்றிகளைக் குவித்த போர் வீரனாக மட்டுமல்லாமல் சிறந்த ஆட்சித்தலைவனு மாயுமிருந்தான். கி.பி. 929ஆம் ஆண்டு முதல் வெள்ளிக்கிழமை வழிபாட்டிலும், பணித்துறை ஆவணங்களிலும் அமீரைக் கலீபா வெனக் குறிப்பிட வேண்டுமென்று ஆணை பிறந்தது. ஸ்பெயினில் இதுகாறும் இல்லாத வலிமையும் பெருமையும் முஸ்லிம் ஆட்சிக்கு அளித்த அப்துல் ரஹ்மானுக்குக் கலீபாப்பட்டம் மிகப் பொருத்தமாயிருந்தது. கலீபா, இஸ்லாம் சமயத்தின் காவலர் என்ற நிலையில் வடக்கில் கிறித்தவர்களோடு கி.பி. 939-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து போரிட்டான். இருபத்தேழு ஆண்டு இடையறாப் போரில் அவன் படை முதன்முதலாய் அந்த ஆண்டு தோல்வியைச் சந்திக்க நேரிட்டது. கலீபாவின் படை அழிந்தே போய்விட்டது. அவன் உயிர் தப்பியதே அரிதாயிற்று. கி.பி. 960-ல் கலீபாவின் முயற்சியாலும், உதவியாலும் கிறித்தவ மன்னன் சாங்கோ தான் இழந்த லியான் நாட்டாட்சியைத் திரும்பப் பெற்றான்.

ஐரோப்பாவிலே அப்துல் ரஹ்மான் அவை புகழ்பெற்று விளங்கிற்று. பைசாண்டியப் பேரரசும், ஜெர்மனி, இத்தாலி, ஃப்ரான்சு முதலிய நாடுகளும் அவருடைய நாட்டிற்குத் தூதுவர்களை அனுப்பின. ஐந்துலட்சம் குடிமக்களையும், எழுநூறு பள்ளிவாசல்களையும், முன்னூறு பொதுக்குளிப்பகங்களையும் பெற்றுப் பெருமிதத்தோடு விளங்கிய கார்டோவா எல்லாவகையிலும் பாக்தாதையும் கான்ஸ்டாண்டிநோபிளையும் நிகர்த்திருந்தது. குன்றின்மேல் கட்டப்பட்டிருந்த அரண்மனை நானூறு அறைகளோடும் ஆயிரக்கணக்கான அடிமைகளோடும், காவலர்களோடும் குன்றின் அருகிலே ஓடிய ஆற்றை நோக்கியவாறு காட்சியளித்தது. அதைக்கட்ட நுமிடியாவிலிருந்தும், கார்த்தேஜிலிருந்தும் சலவைக்கற்களைக் கொண்டுவந்தார்கள். தூண்களும், தங்கச் சிலைகளும் கான்ஸ்டாண்டிநோபிளிலிருந்து அன்பளிப்பாகவும், இறக்குமதிப் பொருள்களாகவும் வந்திறங்கின. இ.பி. 936-ல் தொடங்கிய அரண்மனையை 1500 சுமை விலங்குகளின் உதவியுடன் பதினாயிரம் தொழிலாளிகள் இருபது ஆண்டுகளில் கட்டி முடித்தார்கள். அரண்மனைக்கு அல்-ஷாரா என்று அவருடைய ஆசைநாயகி ஒருத்தியின் பெயர் இடப்பட்டது.

கலீபாவின் மெய்க்காவல் படையில் 3750 ஸ்லாவ் வீரர்களும், அவருடைய படையில் ஒரு லட்சம் போர் வீரர்களுமிருந்தார்கள். விலைக்கு வாங்கிய அயல்நாட்டு இளைஞர்கள் ஸ்லாவ் மக்கள் என அழைக்கப்பட்டார்கள். ஃப்ராங்குகள், ஃகலிசியர்கள், லம்பார்டுகள் முதலிய அயல்நாட்டாரே மெய்க்காவலர்களாயிருந்தார்கள். அவர்கள் ஜானிசரிகள் (Janissaries) அல்லது மாம்லூக்குகள் (Mamluks) எனப் பெயர்பெற்றார்கள். அரசு எதிர்ப்பு, சதி, வழிப்பறி முதலியவற்றை அடக்க அவர்கள் பயன்பட்டார்கள். பழைய அரபுப் பிரபுக்களின் செல்வாக்கையும் கலீபா குறைத்தார். ஆதலால் வாணிபமும் வேளாண்மையும் செழித்தன; நாட்டின் வருவாய் வாய்ப்புகள் பெருகின. அரசாங்க வருமானம் அறுபத்திரண்டரை தினார்களை எட்டிற்று. அத் தொகையில் மூன்றில் ஒரு பகுதி படைக்கும், அதேஅளவுத்தொகை பொதுப் பணிகளுக்கும் செலவிடப்பட்டது. எஞ்சிய தொகை சேமவைப்பில் வைக்கப்பட்டது. கலீபாவின் அறிவாற்றலால் அண்டலூசியா, செல்வவளமும் வாழ்வுவளமும் பெற்றிருந்தது. எழுபத்து மூன்றாவது வயதில் இறந்த கலீபா தம் வாழ்வில் பதினான்கே இன்ப நாள்களைக் கண்டாராம்.

மூன்றாம் அப்துல் ரஹ்மானுக்குப் பிறகு இரண்டாவது அல்-ஹக்கம், அல்-முஸ்டான்சிர் (இ.பி. 961-976) பதினைந்து ஆண்டுகளும், அல்-ஹாஜிப், அல்-மன்சூர் (இ.பி. 977-100) இருபத்

றைந்து ஆண்டுகளும் ஆட்சிசெய்தனர். இம் மூன்று கலீபாக்களின் காலத்திலும் முஸ்லிம் ஆட்சி மேற்கில் உச்சநிலை அடைந்தது. அதற்கு முன்னும் பின்னும் முஸ்லிம் ஸ்பெயின் ஐரோப்பாவிலும், ஆப்பிரிக்காவிலும் அந்த அளவு செல்வாக்கு அரசியலில் பெற்றிருக்கவில்லை.

அல்-ஹக்கம் ஓர் அறிஞன்; அறிஞர்களையும், புலவர்களையும் ஆதரித்தான். தலைநகரில் இருபத்தேழு இலவசப் பள்ளிக்கூடங்கள் அவனால் நிறுவப்பட்டன. மூன்றாம் அப்துல் ரஹ்மான் தொடங்கிய கார்டோவாப் பல்கலைக்கழகம் அவர் காலத்தில் உலகக் கல்வி நிறுவனங்களில் முதலிடம் வகித்தது. கெய்ரோ அல்-அஷார் கல்வி நிறுவனத்திற்கும் பாக்தாது நிசாமியாக் கல்விச்சாலைக்கும் முந்திய அப்பல்கலைக்கழகத்தில் கல்விகற்கக் கிறித்தவ மாணவர்களும், முஸ்லிம் மாணவர்களும் மூன்று கண்டங்களிலிருந்தும் வந்தார்கள். பல்கலைக்கழகமிருந்த மசூதியைக் கலீபா இரண்டரை லட்சம் தினார் செலவில் பல்வண்ணக்கற்கள் பதித்துப் பொலிவுறச் செய்தான். அதற்கு வேண்டிய தண்ணீரை ஈயக்குழாய்களில் கொண்டுவந்தான். கீழை நாடுகளிலிருந்து பேராசிரியர்களை அழைத்துப் பல்கலைக்கழகத்தில் கற்பிக்கச் செய்தான். அவர்களுக்கு ஊதியமளிக்க நிதி ஒதுக்கினான்.

அல்-ஹக்கம் ஒரு புத்தக ஆர்வலர். அவருடைய ஆள்கள் ஏட்டுச் சுவடிகளை வாங்கவும், படிசெய்யவும் அலெக்சாண்டிரியா, டமஸ்கஸ், பாக்காது புத்தகக் கடைகளைத் துருவித் தேடினார்கள். அவ்வாறு நான்கு லட்சம் சுவடிகள் திரட்டப்பெற்றன; புத்தகப் பட்டியலும் தயாரிக்கப்பட்டது. கலீபாக்களில் சிறந்த புலவராயிருந்த அல்-ஹக்கம் பல நூல்களைப் படித்து அவற்றின் ஓரப் பகுதிகளில் குறிப்புகளும் எழுதியுள்ளார். அல்-இராக்கில், அல்-இஸ்பஹானி உருவாக்கிக்கொண்டிருந்த அல்-அகானியின் முதற் படியைப் பெறுவதற்காக அன்னாருக்குக் கலீபா ஆயிரம் தினார்களை அனுப்பினார்.

அண்டலூசியாவில் அறிவும் கலையும் எய்திய உயர் நிலையைக் கண்டு டச்சு அறிஞன் டோசியும் மற்ற புலவர்களும் நாட்டில் அநேகமாய் எல்லோருக்கும் எழுதப்படிக்கத் தெரியும் என்று கருதினார்கள்.

அல்-ஹக்கிமிற்குப்பின் பன்னிரண்டு வயது சிறுவனாகிய அவன் மகன் ஹிஷாம் II (976-1009) பதவிபெற்றான். அவனுடைய திறமைமிக்க, அழகிய தாய் அரச காரியங்களைக் கவனித்து வந்தாள். அவள் ஆதரவிலிருந்த முகம்மது இபின்-அபி-அமீர்

வாழ்க்கையின் அடிமட்டத்திலிருந்து படிப்படியாக முன்னேறி நாட்டை ஆட்சிசெய்யும் உயர் நிலைக்கு உயர்ந்தான். துணிவு, திறமை புகழார்வம் இம்மூன்றும் முஸ்லிம் நாட்டில் என்ன சாதிக்கமுடியும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாய் அவன் விளங்கினன். நாட்டின் வசீராய் இருந்தகாலத்தில்மெய்க்காவல் படையிலிருந்த ஸ்லாவ் வீரர்களை நீக்கிவிட்டுத், தன்னிடம் பற்றுள்ள மொராக்கோ வீரர்களை அமர்த்திக்கொண்டான். கலீபாவை அரண்மனையிலேயே சிறை வைத்துவிட்டு ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொண்டான். கார்டோவாவிற்குக் கிழக்கில் தனக்கெனத் தனியாகக் கட்டிய அரண்மனையில் குடியேறினன். உலேமாக்களின் ஆதரவைப்பெற அவர்கள் வெறுத்துக் கண்டித்த நூல்களை எரித்தான். கவிஞர்களுக்குத் தாராளமாய் பொன்னும் பொருளும் அளித்து அவர்களைத் தன்வசமாக்கிக்கொண்டான். இறுதியாகக் குத்பாவிலும் நாணயங்களிலும் அவன் பெயரைக் குறிப்பிடுமாறு ஆணை பிறந்தது. அரசாங்க ஆவணங்களிலும் அவன் முத்திரையைப் பொறித்தார்கள். ஆனல், உமையடு கலீபாவை அகற்றிவிட்டு அவன் அமீரிடு ஆட்சியை ஏற்படுத்தவில்லை.

இப்ன்-அபி-அமீர் படையில் குலமரபு முறையை மாற்றிவிட்டு அதனை அணிவகுப்பு முறையில் திருத்தி அமைத்தான். ஆண்டுதோறும் லியான், காஸ்டில், காடலோனியாக் கிறித்தவர்களைப் படைகொண்டு தாக்கிவந்தான். பல இடங்களைப் பிடித்தும், பல இடங்களைக் கொள்ளையிட்டும், அழித்தும் வெற்றிக் கொடி நாட்டினன். கிறித்தவ நாடாகிய லியான் அவனுக்குத் திறைசெலுத்தச் சம்மதித்தது. கி.பி. 997-ல் நாட்டின் வடமேற்கிலிருந்த சாண்டியாகோ திருக்கோயிலைத் தரைமட்டமாக்கினன். அவ்வெற்றிக்குப்பின் அல்-ஹாஜிப்-அல்-மன்சூர் தலைநகர் திரும்புங்கால் கிறித்தவக் கைதிகள் திருக்கோயில் கதவுகளையும் மணிகளையும் சுமந்து அவன்பின் சென்றார்கள். அக்கதவுகள் கார்டோவா பெரிய மசூதியின் கதவுகளாயின; மணிகள் முஸ்லிம் மாளிகைகளில் விளக்குகளாய்ப் பயன்பட்டன. கிறித்தவக் கைதிகள் கால் விலங்கோடு மசூதியைப் பழுதுபார்த்தார்கள். மூன்றும் அப்துல் ரஹ்மான் ஆட்சிக் காலத்தைத்தவிர வேறெந்தக் காலத்திலும் ஸ்பானிஷ் இஸ்லாம் அத்தனை ஒளியோடு புகழ் ஏணியின் உச்சியில் இருக்கவில்லை. போர்க்களத்தில் சாக வேண்டும் என்று அல்-மன்சூர் விரும்பியவாறு அவனுடைய ஐம்பதாவது படையெடுப்பில் காஸ்டிலிலிருந்து திரும்புங்கால், கி.பி. 1002-ல் இறந்தான்.

அடுத்த எண்பது ஆண்டுகளில் பெர்பெர்கள், அரபுக்கள், ஸ்லாவ் மக்கள், ஸ்பானிஷ் மக்கள் எல்லோரும் சேர்ந்து

நாட்டைச் சின்னபின்னமாக்கிவிட்டார்கள். மெய்க்காவல் படையைக்கொண்டு உரோம் நகரையும் பாக்தாதையும் எவ்வாறு அழித்தனரோ அஃதேபோல் கார்டோவாவையும் அழித்தார்கள். நாட்டிலிருந்த ஒவ்வோரினமும் ஒரு கலீபாவை அமர்த்தி அவனுக்கு ஆதரவுகேடிற்று. அவர்கள் பெயரளவில் பதவி வகித்தார்கள்; தானையிடந்தான் அதிகாரமிருந்தது. குழப்பம் நிலவிய காலத்தில் மூன்று கலீபாக்கள் இரண்டாவது முறையும் பதவியிலமர்த்தப்பட்டுக் கீழே இறக்கப்பட்டார்கள். சில கலீபாக்கள் கொடுமையாய்த் துன்புறுத்தப்பட்டார்கள். இறுதியில் வசிர்கள் கலீபாவாட்சியை ஒழித்துவிட்டு ஜாவர் தலைமையில் நாட்டை ஆள ஒரு மன்றம் அமைத்தார்கள்.

## ஆட்சிமுறை

உமையடுகளின் தலைநகரமாகிய கார்டோவா பாக்தாது, கான்ஸ்டாண்டிநோபிள் போன்று ஐரோப்பாவின் அறிவுக்கூடமாயும் கலை மையமாயும் திகழ்ந்தது; உலக அணிகலனுயும் இருந்தது. மசூதிகளும், அரண்மனைகளும், புத்தகக் கடைகளும் மலிந்திருந்த கார்டோவாவில் எழுபது நூலகங்கள் இருந்தன. அந் நகரைக் கண்ட பயணிகள் எல்லோரும் வியந்து பாராட்டினுர்கள். தெருக்கள் தளவரிசை செய்யப்பட்டிருந்தன. ஸ்பெயினின் வட பகுதியிலிருந்த லியான், நவார், பார்சிலோனு முதலிய கிறித்தவ அரசுகளுக்குத் தேவைப்பட்ட அறுவை மருத்துவர், கட்டடக் கலைஞர், சிறந்த பாடகர், உடுப்பு தைப்பவர் ஆகியோரைக் கார்டோவாவிலிருந்தே பெறவேண்டியிருந்தது.

மேற்கில் கலீபாவின் ஆட்சிமுறை கிழக்கிலிருந்த ஆட்சிமுறையிலிருந்து வெகுவாய் வேறுபடவில்லை. கலீபாப் பதவி மரபுரிமையாகத் தொடர்ந்தது. சில காலங்களில் கலீபாக்கள் படைத் தலைவர்களாலோ பிரபுக்களாலோ தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அரசகுடும்ப அலுவல் உயரதிகாரி (Chamberlain) இருப்பானுகில், வசிகர்களுக்கு மேலானவனுயிருந்தான். அவன் வாயிலாகத்தான் கலீபாவிடம் செய்தித் தொடர்புகொள்வார்கள். வசிகர்களுக்கு அடுத்த நிலையில் செயலாளர்கள் இருந்தனர். வசிர்களும் செயலாளர்களும் சேர்ந்து உயர் அரசியல் மன்றமாய்த் திகழ்ந்தார்கள்.

நாடு, கார்டோவா நீங்கலாக ஆறு மாகாணங்களாய்ப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் வாலி என்ற ஆளுநரால் பரிபாலிக்கப்பட்டது. சில முதன்மையான நகரங்களிலும் வாலிகள் ஆண்டனர். கலீபாவே நடுவராயிருந்து நீதி வழங்கினுர். கலீபா

தன்னுடைய அதிகாரத்தைக் காதிகளிடம் ஒப்படைத்தார். குற்ற இயல் தொடர்பான வழக்குகளையும் காவற்றுறை வழக்கு களையும் கேட்டுத் தீர்ப்பளிக்கத் தனி நடுவர் இருந்தார். அதிகாரி களின்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைக் கேட்டு முடிவு செய்யக் கார்டோவாவில் சிறப்பு நடுவர் ஒருவரிருந்தார். தண்டப் பணம், சாட்டை அடி, சிறைத் தண்டனை, உறுப்புகளைத் துணித்தல் இவையே குற்றவாளிகளுக்குப் பெரும்பாலும் வழங்கப்பட்ட தீர்ப்புகளாகும். தெய்வ நிந்தனை, சமய எதிர்ப்பு, முரண் சமயக்கருத்து இவற்றிற்குத் தூக்குதண்டனை தரப் பட்டது.

முத்தாசிப் என்ற ஓர் உயர் அதிகாரி காவற்படையை இயக் கினார்; வணிகத்தையும் அங்காடிகளையும் கண்காணித்தார்; எடைகளையும் நிறைகளையும் தணிக்கை செய்தார்; சூது, ஆண் பெண் ஒழுக்கக்கேடு, முதலியவற்றில் தலையிட்டுத் திருத்தினார்.

உமையது ஆட்சியில் ஐரோப்பிய நாடுகளில் ஸ்பெயின், மக்கள் நெருக்கமாய் வாழ்ந்த நாடு; செல்வமிகுந்த நாடு; நாட்டின் வருமானம் பெருமளவு அதன் ஏற்றுமதி இறக்குமதி வரிகளைப் பொறுத்திருந்தது. தலைநகரில் தோல் தொழில் மிகச் சிறப்பாய் நடைபெற்றது. தோலைப் பதனிட்டு அதில் உருவங்களை முனைப் பாய்ப் பொறிக்கும் கலை ஸ்பெயினிலிருந்து மொராக்கோவிற்குச் சென்று, பிறகு அவ்விரு இடங்களிலிருந்தும் இங்கிலாந்து, ஃப்ரான்சு நாடுகளுக்குப் பரவிற்று. தோல் பொருள்கள் அவ்விரு இடங்களின் பெயர்களால் குறிப்பிடப்பட்டன. கார் டோவாவில் பதின்மூன்றாயிரம் நெசவாளிகள் இருந்தார்கள். கம்பளி, பட்டு நெசவுத்தொழில் பலவிடங்களில் சிறப்பாய் நடைபெற்றது. சீனாவின் தனியுரிமையாயிருந்த பட்டுப்புழு வளர்ப்பை முஸ்லிம்கள் ஸ்பெயினில் புகுத்தினார்கள். அல்-மேரியாவில் கண்ணாடிப் பொருள்களும் பித்தளைக் கலங்களும் செய்தார்கள். மட்பாண்டத் தொழில் படெர்னாவில் சிறந் திருந்தது. ஜேன், அல்கார்வே தங்கம், வெள்ளி உலோகங்களுக் கும், கார்டோவா இரும்பு, ஈயத்திற்கும், மலாகா சிவப்புக் கற்களுக்கும் பெயர்பெற்றிருந்தன. டமஸ்கசில் செய்யப்பட்ட வாளைப்போன்று டோலெடோ வாளும் உலகப் புகழ் பெற்றிருந் தது. இரும்பிலும், வேறு உலோகங்களிலும் தங்கம், வெள்ளி பதித்து, பூவேலைப்பாடு செய்யும் கலை டமஸ்கசிலிருந்து ஸ்பெயினில் புகுத்தப்பட்டு நன்கு வளர்ந்தது.

ஸ்பெயினில் மேற்கு ஆசிய வேளாண்மை முறைகளை அரபுக்கள் பின்பற்றினார்கள். கால்வாய்கள் வெட்டப்பட்டுப்

பழவகைகளும், பருத்தி, கரும்பு, நெல், கோதுமையும் பயிரிடப் பெற்றன. எகிப்திலிருந்து அடிமைகளும், துணிகளும் ஐரோப்பா, ஆசியாவிலிருந்து பாடும் பெண்களும் செவில் துறை முகத்தில் வந்திறங்கினுர்கள்; துணிவகைகள் எகிப்திலிருந்து இறக்குமதி செய்யப் பெற்றன. அவ்வாற்றுத் துறைமுகத்தி லிருந்து எண்ணெயும் பருததியும் ஏற்றுமதி செய்யப்பட்டன. மலாகாவிலிருந்தும ஜேனிலிருந்தும் குங்குமப்பூ, அத்திப்பழம், சலவைக்கல், சர்க்கரை முதலியவை வெளிநாடுகளுக்குச் சென்றன. அலெக்சாண்டிரியா, கான்ஸ்டாண்டிநோபிள் வழியாக ஸ்பானிஷ் விளைபொருள்கள் மத்திய ஆசியாவிற்கும் இந்தியாவிற்கும் சென்றன.

அரசாங்கம் அஞ்சல்துறைப் பணியைச் சிறப்பாயும் ஒழுங் காயும் செய்தது. நாணயங்கள் கீழைநாட்டு முறையில் வெளி யிடப்பட்டன. தங்க நாணயத்தைத் தினர் என்றும், வெள்ளிக் காசை டர்ஹாம் எனவும் வழங்கினர். செப்புக்காசுகளும் புழக்கத்திலிருந்தன. ஸ்பெயினிலிருந்த கிறித்தவ அரசுகள் அரபுக் காசுகளையே பயன்படுத்தின. ஏறத்தாழ நானூறு ஆண்டுக் காலம் அந் நாடுகளுக்கு அரபு அல்லது ஃப்ரெஞ்சுக் காசுகளைத் தவிர வேறு நாணயம் இல்லை.

**சிசிலி**

அலெக்சாண்டிரியாவிலிருந்த பைசாண்டைன் கப்பல்படை அழிக்கப்பட்டுக் கடலாதிக்கம் அரபுக்களிடம் மாறிய ஆண்டாகிய கி.பி. 652-ல் பைசாண்டிய சிசிலியும் முவாவியாவின் படைத் தலைவனுல் தாக்கப்பட்டது. அந்த நாட்டுப் பெண்களின் அழகும். திருக்கோயில் செல்வமும், மற்ற பொருள்களும் மீண்டும் மீண்டும் அந் நாட்டைப் படையெடுத்து வருமாறு முஸ்லிம் கொள்ளைக்காரர்களைத் தூண்டின. எட்டாவது நூற்றுண்டில் வட ஆப்பிரிக்காவிலிருந்தும் ஸ்பெயினிலிருந்தும் பெர்பெர், அரபு கடற்கொள்ளைக்காரர்கள் சிசிலி, கார்சிகா, சார்டினியா முதலிய தீவுகளைத் தாக்கிவந்தார்கள். அக்காலத்தில் கிறித்தவர் களும் முஸ்லிம்களும் கடற்கொள்ளையைப் பிழைப்பிற்கு ஒரு நேரிய வழியாகக் கருதினுர்கள்.

பைசாண்டிய ஆளுநரை எதிர்த்துப் போராடிய சைரக்யூஸ் கலகக்காரன் வேண்டுகோளுக்கிணங்கி, ஆப்பிரிக்காவில் டுனிசி யவை ஆண்ட முதலாம் சியாதத் அல்லா (கி.பி. 817-38) என்ற மூன்ரும் அக்லாபிடு (Aghlabid) மன்னன் கி.பி. 827-ல் பதினு யிரம் வீரர்களையும் எழுநூறு குதிரைகளையும் எழுபது கப்பல்

களில் ஏற்றி அனுப்பினான். ஸ்பெயினிலிருந்தும் ஒரு படை சிசிலியில் வந்திறங்கிற்று. கி.பி. 831-ல் பாலெர்மோவும், கி.பி. 843-ல் மெசீனாவும் முஸ்லிம்களால் கைப்பற்றப்பட்டன. ஒன்பது மாத முற்றுகைக்குப் பின் வலுவான சைரக்யூஸ் கோட்டையும் முஸ்லிம்களிடம் கி.பி. 878-ல் சிக்கிச்சீரழிந்தது. சிசிலித் தீவு முழுவதும் முஸ்லிம்களின் ஆதிக்கத்திற்குள் வருவதற்கு எழுபத்தைந்து ஆண்டுகள் பிடித்தன. அடுத்த 189 ஆண்டுகளுக்கு (902—1091) சிசிலித் தீவு முற்றிலுமோ பகுதியோ அரபு மாகாணமாயிருந்தது.

சிசிலியை அடித்தளமாய்க்கொண்டு முஸ்லிம்கள் இத்தாலியைத் தாக்கினார்கள்; சில பகுதிகளைத் தங்கள் ஆதிக்கத்திற்குட்படுத்தினார்கள். கி.பி. 846-ல் அரபுப் படை உரோமாபுரியை அச்சுறுத்தியது. அந்நகரத்திற்குள் நுழையமுடியாமல் செயிண்ட் பீட்டர், செயிண்ட் பால் திருக்கோயில்களைச் சூறையாடித் திரும்பிற்று. இத்தாலியில் முஸ்லிம் ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டு போப்பு எட்டாவது ஜான் (கி.பி. 872-82) அவர்களுக்கு ஈராண்டுகள் திறை செலுத்தினார். முஸ்லிம் படை ஆல்ப்ஸ் மலையையும் கடந்து ஐரோப்பிய நாடுகளைத் தாக்கியதற்கு அடையாளமாய் ஆல்ப்ஸ் மலையில் காவற் கோட்டைகளும் சுவர்களும் காணப்படுகின்றன. சுவிட்சர்லாந்தில் சில இடப்பெயர்களின் மூலம் அரபாயிருக்கலாமெனக் கருதப்படுகிறது.

சிசிலியை ஆண்ட அமீர் முதலில் டுனிசியாவில் ஆட்சிசெய்த அக்லாபிடு வம்சத்தின் ஆதிக்கத்திலிருந்தார்; அவ்வம்சம் கி.பி. 909-ல் அழிந்து ஃபாதிமைடு ஆட்சி ஏற்பட்டபோது அதன் ஆதிக்கத்தினை ஏற்றுக்கொண்டார். கி.பி. 948-ல் கலீபா அல்-மன்சூர் சிசிலியில் அமர்த்திய ஆளுநர் அல்-கல்பீ, நிலையான சுதந்தர அரசிற்கு அடிகோலிக் கால்பைட் மரபினைத் தோற்றுவித்தார். அம்மரபின் ஆட்சிக் காலத்தில் பன்மொழி பேசிய சிசிலித் தீவில் அரபுப் பண்பாடு வேரூன்ற வாய்ப்பேற்பட்டது. அப்துல்லா (கி.பி. 989—998) ஆட்சியில் சிசிலி உச்சக்கட்டத்தை எட்டிற்று. கால்பைட் அமீர்கள் இன்பவாழ்வில் திளைத்தார்கள். அவர்கள் அவையை அறிஞர்களும் கலைஞர்களும் அலங்கரித்தனர். தலைநகரமாயிருந்த பாலெர்மோவில் முன்னூறு மசூதிகளும், நூற்றைம்பது இறைச்சிக் கடைகளும் இருந்தனவென்று இபின் ஹாக்கல் (கி.பி. 943—977) என்ற பயணி எழுதியுள்ளார். அந்நாட்டிலிருந்த முன்னூறு ஆசிரியர்களும் குடிமக்களால் மதிக்கப்பட்டார்களென்றும் அவர் அறிவிக்கிறார். பைசாண்டியத் தலையீட்டாலும் உள்நாட்டுப் பூசல்களாலும் கால்பைட் ஆட்சி அழிந்தது. பிறகு சிசிலித் தீவில் நார்மானியர் ஆதிக்கம்

ஏற்பட்டது. நார்மானிய ஆட்சியில் கிறித்தவ-முஸ்லிம்களின் கலவைப் பண்பாடு மலர்ந்தது. சிசிலியில் இரு பண்பாடுகள் சந்தித்தன. நார்மானியர் வாயிலாக முஸ்லிம் பண்பாடு இத்தாலியிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பரவிற்று. கீழைநாட்டு ஊடுருவல் கலை, அறிவியல், இலக்கியத் துறைகளில் தெளிவாய்க் காணப்படுகிறது.

**இலக்கியம், கல்வி, அறிவியல், வரலாறு, கைத்தொழில், கட்டடக் கலை, இசைக்கலை முதலியன.**

இடைக்கால ஐரோப்பிய அறிவுவளர்ச்சி வரலாற்றில் முஸ்லிம் ஸ்பெயின் ஒரு சிறந்த அதிகாரத்தைத் தீட்டியுள்ளது. எட்டாவது நூற்றாண்டின் இடைப்பகுதி முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கம்வரை அறிவொளியைப் பெருமளவு உலக முழுவதும் பரவச் செய்தவர்கள் அரபு பேசிய மக்களே யாவார்கள். பண்டைய அறிவியலையும் மெய்யுணர்வையும் மீட்டு, நிறைவுசெய்து, மேலை ஐரோப்பிய நாடுகளுக்கு வழங்கி, அங்கு மறுமலர்ச்சி தோன்ற அரபுக்கள் உதவினார்கள். இப் பணியில் ஸ்பானிஷ் அரபுக்களுக்குப் பெரும்பங்கு உண்டு.

அரபுமொழி பேசப்பட்ட இடங்களிலெல்லாம் செய்யுள் இயற்றும் ஆர்வம் மிகுதியாயிருந்தது. பாட்டின் உட்பொருளைக் காட்டிலும் அதன் சொல் நயமும் இன்னோசையுமே அதிகமாய்ப் பாராட்டப்பட்டது. ஸ்பெயினில முதல் உமையாடு அமீரும் அவரைத் தொடர்ந்து பதவிக்கு வந்தவர்களில் பலரும் கவிஞர்களாயிருந்தார்கள். அமீர்கள் நாட்டில் பயணஞ் செய்யும் போதும் போர்க்காலத்தும் அரசவைக் கவிஞர்களைக் கூடவே அழைத்துச்சென்று பாடுவதற்கு வாய்ப்பளித்தார்கள். அவர்களின் புலமையையும் சுவைத்து இன்புற்றார்கள். கார்டோவாவில் தோன்றிய கவிதைச் சுடரொளி கிரெனடாவில் பேரொளியாய் வளர்ந்தது. செவில் நகரம் பல உணர்ச்சிமிக்க கவிஞர்களைக் கண்டது. கவிதையிலும் இலக்கியத்திலும் அரபுப் பெண்களுக்குத் தனிச்சுவை இருந்தது. கலீபாவின் மகள் அல்-வல்லாதா அழகிலும் இலக்கியத்திலும் சிறந்து விளங்கினாள். நாட்டுப் பாடல்களும் காதல் பாடல்களும், புதுமை உணர்ச்சியையும் புத்தெழுச்சியையும் ஊட்டின. அரபு உணர்ச்சிப் பாடல் வகையைக் கிறித்தவப் பாசுரங்களிலும் கிறித்துமஸ் பாடல்களிலும் பயன்படுத்தினார்கள். எட்டாம் நூற்றாண்டில் ஸ்பானிஷ் மொழியில் வளர்ந்த பொறியுணர்ச்சி இல்லாக் காதல் (Platonic Love) இலக்கிய வகை அரபுக் கவிதையின் கொடையாகும்.

அரபு இலக்கிய வரலாற்றில் மூன்றும் அப்துல் ரஹ்மானின் அரசவைக் கவிஞன் இபின்-அப்த்-ரப்பியின் (கி.பி 860—940) பாடல் திரட்டு, அல்-அகானிக்கு அடுத்தாற்போல் இடம் பெற்றுள்ளது. ஆலி-இபின் ஹாசம் (கி.பி. 994—1064) ஸ்பானிஷ் இஸ்லாம் தோற்றுவித்த ஒரு பெரும் அறிஞரும் தற்சிந்தனையாளருமாவார். அவருடைய வளமிக்கப் புலமையில் பல நூல்கள் தோன்றின. வரலாறு, இறைமையியல், கவிதை, ஏரணம், மரபு ஆகியவைபற்றி நானூறு நூல்கள் எழுதினாராம் அந்நூல்களுள் இன்றளவில் கிடைத்துள்ள சமயங்களை ஒப்பு நோக்கி எழுதப்பட்டிருக்கிற நூலே அறிவுலகத்தில் அவருக்கு முதலிடத்தைத் தந்துள்ளது. ஈபுரு இலக்கணம் முஸ்லிம் ஸ்பெயினில் தோன்றிற்று.

தொடக்கப் பள்ளிகளில் குழந்தைகள் குரானைப் படிப்பதிலும், பார்த்தெழுதுவதிலும் பயிற்சி பெற்றார்கள். அரபு இலக்கணமும் பாட்டும் கற்பிக்கப்பட்டன. அறிவாராய்ச்சியிலும் கல்வியிலும் பெண்கள் சிறப்பிடம் பெற்றிருந்தார்கள். குரான் விளக்கம், இறைமையியல் தத்துவம், அரபிலக்கணம், கவிதை, சொற்களஞ்சியக்கலை, வராலறு, நிலஇயல் முதலியவை உயர் கல்வியில் இடம் பெற்றிருந்தன. கார்டோவா, செவில், மலாகா, கிரெனடா முதலிய முதன்மையான நகரங்களில் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டிருந்தன. கார்டோவாப் பல்கலைக் கழகத்தில் வானநூல், கணிதம், மருத்துவம், இறைமையியல், சட்டம் ஆகிய பாடத்துறைகள் இணைக்கப்பட்டிருந்தன; ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி கற்றார்கள். அப் பல்கலைக்கழகம் வழங்கிய தகுதிச் சான்றுகள் ஆதாயமான அரசப் பணிகள் பெற உதவின. கிரெனடா பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் இறைமையியல், சட்டஇயல், வேதியியல், வானநூல், தத்துவம், மருத்துவம் முதலிய பாடங்களைப் பயின்றார்கள். அங்கு அயல்நாட்டு மாணவர்கள் படித்தார்கள். மக்களில் பெரும்பாலோருக்கு எழுதப் படிக்கத் தெரியும். தொடக்கப்பள்ளியாசிரியரின் பணி மதிக்கப்பட்டது.

பல்கலைக்கழகங்களுக்கு இணையாக நூலகங்கள் நிறுவப்பட்டிருந்தன. கார்டோவா அரசு நூலகத்தில் சிறந்த புத்தகங்கள் ஏராளமாயிருந்தன. பெண்களை உள்ளிட்ட சிலர் சொந்தமாய் நூலகங்கள் வைத்திருந்தார்கள். முஸ்லிம் சமுதாயத்தில் அறிவை வளர்க்க அரசியல் மன்றங்களோ நாடகக் கொட்டகைகளோ இல்லாததால், அதனைப்பெற புத்தகங்களைத் தவிர வேறு வழியில்லை. தாள் உற்பத்தித் தொழில் அண்டலூசியாவில் இருந்திராவிடில் அவ்வளவு புத்தகங்களை அங்கு குவித்திருக்க

இயலாது. கீழை நாடுகளிலிருந்து மொராக்கோவில் புகுத்தப் பட்ட தாள் உற்பத்தித் தொழில் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இடையில் ஸ்பெயினிற்குக் கொண்டுசெல்லப்பட்டது. சிசிலியி லிருந்து அத் தொழில் இத்தாலிக்குச் சென்றது.

முதலாம் முகம்மதுவால் (கி.பி. 852—886) தொடங்கப்பட்டு மூன்றும் அப்துல் ரஹ்மானுல் விரிவாக்கப்பட்ட நூலகத்தில் இரண்டாம் அல்-ஹக்கம் திரட்டிய நூல்களும் இடம்பெற்று அது ஒரு பெரிய நாலகமாய் விளங்கிற்று. அப்துல் ரஹ்மான் செயலாளர்களில் ஒருவர் அரசாங்க அறிவிப்புகளைக் கையால் எழுதி, மறு படியெடுப்பிற்கு ஒரு தனி அலுவலகத்திற்கு அனுப்பி அங்கிருந்து படிகள் அதிகாரிகளுக்குச் சென்றன.

ஸ்பானிஷ் கல்லூரி நுழைவாயில் ஒன்றில் 'உலகத்தைத் தாங்கி நிற்கும் ஆதாரங்கள் நான்காகும். அவை முறையே அறிஞர்களின் புலமை, பெரியவர்களின் நீதி, நேர்மையாளர் களின் இறைவணக்கம், மன உரமிக்கவரின் பேராண்மை, என எழுதப்பட்டிருந்தது.

முஸ்லிம் ஆதிக்கம் ஸ்பெயினில் ஏற்பட்ட தொடக்கக் காலத்தில் ஸ்பானிஷ் அறிஞர்கள் அறிவைத்தேடி எகிப்து, சிரியா, இராக், பாரசிகம் ஆகிய நாடுகளுக்குச் சென்றூர்கள். பதின்மூராம் நூற்றுண்டிலும் அதற்குப் பின்னுலும் அந்நாடுகளிலிருந்து மாணவர்கள் கிரெனடா, கார்டோவா முதலிய பல்கலைக்கழகங் களுக்கு வந்தார்கள்.

பாக்தாதில் அறிவியல் அறிவு வளர்ந்ததுபோல் கார்டோவா வில் வளரவில்லை. வானநூற்குரிய கணிதம், மருத்துவம், தத்துவம் போன்ற துறைகளில் ஸ்பானிஷ் முஸ்லிம்கள் தனிச் சிறப்பு அடைந்திருந்தார்கள்.

அண்டலூசியாவில் பத்தாம் நூற்றுண்டில் வாழ்ந்த அபு-பக்கர் இபின் உமார் ஒரு சிறந்த வரலாற்றுசிரியன். அவன் எழுதிய அண்டலூசிய வரலாற்றில், முஸ்லிம்கள் நாட்டை வென்றதிலிருந்து, மூன்றும் அப்துல் ரஹ்மான் ஆட்சியின் முற் பகுதி முடிய நிகழ்ச்சிகள் விவரிக்கப்பட்டுள்ளன. இபின்-ஹயான் (கி.பி.988—1076) மற்றொரு வரலாற்றுசிரியனுவான். இபின் அல்-ஃபாரதி (கி.பி. 962—1013) ஸ்பானிஷ் அரபு அறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகளை எழுதித் தொகுத்துள்ளார். மனிதனின் மண்ணுலக வாழ்வில் பிறப்பு இறப்பிற்கு இடையே நிகழும்

நிகழ்ச்சிகளுக்கு விண்மீன்களே காரணம் என அண்டலூசிய வானூலார்கள் கருதினார்கள்.

பத்தாம் நூற்றாண்டில் கார்டோவாவில் தந்த வேலைக்காரர்கள் பேழைகளும் பெட்டிகளும் செய்து ஓவியங்களால் அலங்கரித்தார்கள். அவை நகை, நறுமணப்பொருள்கள், மிட்டாய் முதலியவை வைக்கப் பயன்பட்டன. அவற்றின்மீது பொறித்துள்ள எழுத்துகளிலிருந்து அவை கொடைப்பொருள்களாய் இருந்தன என்று அறிகிறோம்.

ஒரு காலத்தில் உரோமன் கோயிலாய் இருந்த இடத்தில் கிறித்தவக் கோயில் கட்டப்பட்டது. அக் கிறித்தவக் கோயில் இருந்த இடத்தில் முதல் அப்துல் ரஹ்மான் கி.பி. 786-ல் கார்டோவா பெரும்பள்ளிக்கு அடிக்கல் நாட்டினான். அவன் மகன் முதல் ஹிஷாம் கி.பி. 793-ல் அதனை முடித்து ஒரு சதுரத் தூபியும் கட்டினான். ஹிஷாமிற்குப் பிறகு பதவிக்கு வந்தவர்கள் அப் பள்ளியை, புதிய கட்டடங்கள் கட்டி மேலும் விரிவாக்கினார்கள். 1,293 கம்பங்கள் அதன் கூரையைத் தாங்கி நின்றன. கிறித்தவக் கோயில்களின் மணிகளைக்கொண்டு செய்த பித்தளை ஒளிக் கூண்டுகள் பள்ளிக்கு ஒளிதந்தன. ஒரு சரவிளக்குச் சட்டத்தில் ஆயிரம் விளக்குகளும் சிறிய கொத்தில் பன்னிரண்டு விளக்குகளும் எரிந்தன. பைசாண்டைன் கைவினைஞர்கள் அப் பள்ளியைக் கட்டி முடித்தார்கள். அதனைத் தொடங்கியவர் அதற்கு எண்பதாயிரம் தங்கக் காசுகள் செலவழித்தார்.

2166

மூன்றும் அப்துல் ரஹ்மான் கட்டிய அரண்மனைக்குத் தூண்கள் உரோம், கான்ஸ்டாண்டிநோபிள், கார்த்தேஜ் முதலிய இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டன. அரண்மனை நுழைவாயிலின்மேல் அவருடைய காதல் நாயகியின் சிலை வைக்கப்பட்டிருந்தது.

இரண்டாம் அப்துல் ரஹ்மான் காலத்தில் சிரியாப் என்ற பாடகர் யாழ்போன்ற இசைக்கருவிக்கு ஐந்தாவது நரம்பை இணைத்தார். அவர் ஓர் இசைப் பள்ளியையும் தொடங்கினார். ஒன்பதாம் நூற்றாண்டில் இபின் ஃபர்நாஸ் கோள்நிலை இயக்கங்களைக் காட்டும் பொறியைத் தன் வீட்டில் அமைத்துக்கொண்டு அதில் விண்மீன்களையும், மேகங்களையும், மின்னலையும் கண்டு ஆராய்ந்துவந்தாராம். அவர் முதன்முதலில் விண்ணில் பறக்கவும் முயன்றார்; இறக்கைகளைக் கட்டிக்கொண்டு ஆகாயத்தில் வெகுதூரம் மேலே சென்று வந்ததாகச் சொல்லப்படுகிறது.

**அரபுக்களின் சரிவும் வீழ்ச்சியும்**

நபிநாயகம் மறைந்து ஒரு நூற்றாண்டிற்குள் அரபுக்கள் நாகரிக உலகின் பெரும்பகுதியை விரைவாய் வென்றதுபோலவே அவர்களாதிக்கமும் விரைவாகத் தளர்ந்தது. கி.பி. 820-ல் வேறெவரிடமும் காணமுடியாத அளவு அதிகாரமும் செல்வாக்கும் பாக்தாது கலீபாவிடம் குவிந்திருந்தது. கி.பி. 920-ல் அவர் வழித்தோன்றிய கலீபாவின் ஆதிக்கம் தலைநகரில் கூடப் பெயரளவில்தானிருந்தது. கி.பி. 1258-ல் பாக்தாது அழிந்துவிட்டது. அதன் வீழ்ச்சியோடு அரபுக்கள் செல்வாக்கும் ஒழிந்தது; கலீபா ஆட்சி வரலாறும் முடிந்தது. மங்கோலியர்களின் கடுந்தாக்குதல்களும் அரபுக்களின் இறுதி வீழ்ச்சிக்குத் துணைசெய்தன. கலீபா அரசின் எல்லைப்புறங்களிலும் மையத்திலும் காளான்போல் தோன்றிய பல அரசுகளும் நோயின் அறிகுறியே அன்றி நோயல்ல.

ஆதிக்கஞ் செலுத்திய நாடுகளில் ஆட்சிமுறை உறுதியானதாகவோ நிலைத்திருக்கத்தக்கதாகவோ அமையவில்லை. நாடுகளின் மூலப்பொருள்கள் ஆளுவோரால் சுரண்டப்பட்டதால் குடிமக்களுக்குப் பயன்படவில்லை. மிகு வரியாலும் மக்கள் துன்புற்றனர். அரபுக்கள், அஃதல்லாதவர்கள், அரபு முஸ்லிம், புதிய முஸ்லிம், முஸ்லிம் அல்லாதவர் என்று மக்களிடையில் காணப்பட்ட வேறுபாடுகள் சமூகத்தைச் சின்னபின்னமாக்கி விட்டன. அரபுக்களுக்குள் வடக்கு தெற்கு வேறுபாடும் நீடித்தது. அவர்களை எந்த உணர்ச்சியும் ஒன்றுபடுத்தவில்லை. தங்கள் பழம்பெருமையை எண்ணிக்கொண்டிருந்த இரானியர்களால் முஸ்லிம் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பெர்பெர்கள் தங்கள் குல உணர்ச்சியையும் வேற்றுமையையும் பிளவு இயக்கங்களோடு சேர ஆயத்தமாயிருந்ததன் வாயிலாய் வெளிப்படுத்தினர்கள்.

சிரியா மக்கள் அப்பாசிடுகளின் ஆதிக்கத்திலிருந்து விடுபட ஒரு தலைவனை நெடுங்காலமாய் எதிர்பார்த்திருந்தார்கள். ஷியாக்கள், கார்மேஷியன்கள், இஸ்மேலைட்டுகள் போன்ற சமயப் பிரிவினைச் சக்திகள் அரபு ஆதிக்கத்தைக் குலைத்தன. பேரரசின் கீழ்ப்பகுதியைக் கார்மேஷியன்கள் தாக்கித் தடுமாறச்செய்தார்கள். அதன்பின் ஃபாதிமைடுகள் மேலைப் பகுதியைக் கைப்பற்றிக்கொண்டார்கள். நாடுகளை இணைக்கக் கலீபாவாலும் முடியவில்லை; தன் பற்றுளர்களை ஒன்றுபடுத்த இஸ்லாம் சமயத்தாலும் இயலவில்லை.

அந்தப்புர வாழ்வு, எண்ணற்ற அலிகள், காமக் கிழத்திகள், இசை, மது எல்லாம் சேர்ந்து குடும்ப வாழ்வின் உள்ளுரத்தை உறிஞ்சிவிட்டன. வாரிசுரிமைபற்றிய முடிவற்ற பூசல்கள் வலிமையற்றவர்களின் நிலைமையை மேலும் உறுதியற்றதாகச் செய்துவிட்டன. ஆளுவோர் நலத்திற்காக நடைபெற்ற ஆட்சியும், வரிவிதிப்பு முறையும் வேளாண்மை, தொழில் இரண்டையும் வளரவிடவில்லை. ஆட்சியாளர்கள் செல்வர்களானார்கள்; மக்கள் வறுமையில் வாடினார்கள்; போரும், பஞ்சமும், வெள்ளமும். கொள்ளைநோயும் மனித ஆற்றலை வெகுவாய்க் குறைத்துவிட்டன; பேரரசின் கீழ்ப்பகுதியை மங்கோலியர்கள் தாக்கி நலிவுறச் செய்தார்கள்; மேலைப் பகுதியைக் கிறித்தவர்கள் அழித்தார்கள்.

2166

# சிறப்பு நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| கி. பி. 571 | முகம்மது நபிப் பிறப்பு |
| 622 | நபிநாயகம் மதீனா சேர்தல் |
| 624 | பத்ரு சண்டை, முஸ்லிம்களின் முதல் வெற்றி |
| 625 | மக்கா-மதீனாவைத் தாக்குதல் |
| 627 | மதீனா முற்றுகை |
| 628 | ஹுதைபியா உடன்படிக்கை |
| 630 | முகம்மது மக்கா திரும்புதல் |
| 632 | முகம்மது மறைவு |
| 632—634 | அபூபக்கர் |
| 634—644 | கலீபா உமார் |
| 635 | டமஸ்கஸ் பிடிபடுதல் |
| 636 | யார்முக் வெற்றி |
| 637 | அல்-காதிசியாச் சண்டை |
| 638 | ஜெருசலம் பிடிபட்டது |
| 642 | எகிப்து அரபு நாடாகியது |
| 644—656 | உதுமான் |
| 649 | முதல்கடல் வெற்றி-சைப்ரசை முவாவியா பிடித்தார் |
| 651 | திருக்குரான் தொகுக்கப் பெறுதல் |
| 652 | கிரேக்கக் கப்பல்படை முறியடிக்கப் பட்டது |
| | அர்மீனியா முஸ்லிம் நாடாயிற்று |
| 655 | தூ-அல்-சவாரிக் கடல்சண்டை பைசாண் டியக் கடலாதிக்கத்தின் முடிவு |
| 656 | ஒட்டகச் சண்டை |
| 656—661 | ஆலி |
| 657 | சிஃபின் சண்டை |
| 661—750 | உமையடு கலீபாக்களின் ஆட்சி |
| 661—680 | முவாவியா |
| 674—680 | கிரேக்க-அரபுக் கடல் சண்டை |
| 685—705 | அப்தல் மாலிக் |
| 705—715 | அல்வாலிது-I |

| | |
|---|---|
| இ. பி. 712 | சிந்து கைப்பற்றப்பட்டது |
| 732 | டூர்ஸ் சண்டை |
| 750—847 | அப்பாசிடு கலீபா ஆட்சி |
| 750—754 | அபூ-அல-அப்பாஸ் |
| 754—775 | அல்-மன்சூர் |
| 786—809 | ஹாரூன்-அல்-ராஷிது |
| 813—833 | அல்-மாமூன் |
| 842—847 | அல்-வாதிக் |
| 909—996 | எகிப்திலும் வட ஆப்பிரிக்காவிலும் ஃபாதிமைடு ஆட்சி |
| 909—934 | உபேதுல்லா அல்-மாதி |
| 952—975 | அல்-மூயிஸ் |
| 975—996 | அல்-அசிஸ் |
| 750—976 | அண்டலூசியாவில்-ஸ்பெயினில் அரபாட்சி |
| 756—788 | அப்துல் ரஹ்மான்-I |
| 919—961 | அப்துல் ரஹ்மான்-III |
| 961—976 | அல்-ஹக்கம்-II |

## மேற்கோள் நூற்பட்டியல்

1. *Philip K. Hitti* ... History of the Arabs
2. *Muir, W.* ... The Caliphate
3. *S. N. Fisher* ... The Middle East
4. *Syed Ameer Ali* ... The Spirit of Islam
5. *Lane Poole* ... Moors in Spain

# கலைச்சொற்கள்

## (அரபு—ஆங்கிலம்)

### A

Al-Andalusia — Land of the Vandals
Al-Muntazar — The Expected
Amir-al-Umara — Prince of Princes, Commander of Commanders
Arin — Ujjaini (India)

### D

Dervish — Member
Dhimoni — Non-Muslim (Jew, Christian, Zoroastrian, Berbar)
Dinar — Gold coin
Dirham — Silver coin
Diwan — Register

### F

Fatimid — Shiite
Fatwa — Proper Decision
Fustat — Cairo

### H

Hadith — Tradition
Hajj — Pilgrimage to Mecca
Hijrah — Migration

### I

Ibadat — Religious duties
Ifrikiyah — Algeria
Ihsan — Good work
Ijma — Public consensus

J

Jabal Tarik — Gibralter
Jinn — Angels

K

Kadi — Muslim Judge
Kanun — Law and Regulation
Kharijites — Seceders
Khutbah — Sermon
Kibla — The prayer Niche
Kitab-al-Agharri — Book of Songs

M

Maghrib — Morocco
Mahdi — Saviour
Mamluk — Slave
Mawali — Clients (non-Arab Muslim)
Mufti — Learned Jurist

R

Ramadan — Ninth Lunar Month

S

Sea of Fars — Indian ocean
Sea of Rum — Mediterranean Sea
Shariah — Path to Salvation
Shiite — Persian or Sect of Ali
Sufi — Holyman (one garbed in wool)
Sunnah — Custom
Surah — Chapter

T

Tarifa — Spanish Peninsula

# கலைச்சொற்கள்

## (ஆங்கிலம்—தமிழ்)

**A**

Allegory — தொடர் உருவகம்
Alms giving — ஐயம்
Alphabet — நெடுங்கணக்கு
Animist — ஆன்மவாதி
Arithmetic — எண்கணக்கு
Artisan — கம்மியர்

**B**

Base — அடித்தளம்
Bishop — மேற்றிராணியார்
Blasphemer — தெய்வம் பழிப்பவன்

**C**

Caliphate — கலீபாவாட்சி
Census — மக்கள்தொகைக் கணக்கு
Chemistry — வேதியியல்
Clan — குலம்

**D**

Dialect — கிளைமொழி
Dispensation — இறைமையின் அருளாட்சி
Document — ஆவணம்
Dynasty — மரபு

**E**

Era — ஊழி

**F**

Fable — புள், விலங்குக் கதை
Fasting — (உண்ணா) நோன்பு

**G**

Geography — நில இயல்
Geometry — வடிவியல்

**H**

Heresy — முரண் சமயம், சமய மறுப்பு
Heterodoxy — புறக்கோட்பாடு

**I**

Illuminate — ஒளிரச் செய்தல்
Inscription — எழுத்துப் பொறிப்பு
Intuition — உள்ளுணர்வு

**L**

Lyric — எழுச்சிப் பாடல்

**M**

Mediterranean Sea — நண்ணிலக் கடல்
Messiah — மீட்பாளர்
Mosque — பள்ளிவாசல், பள்ளி, மசூதி
Movable property — இயங்குடைமை
Museum — அரும்பொருள்காட்சிச் சாலை
Mysticism — மறைமெய்ம்மை

**N**

Nation — நாட்டினம்
Number — எண்
Numeral — இலக்கம்

**O**

Oath — சூளுறவு
Ode — துள்ளற்பாடல்
Old Testament — பழைய ஏற்பாடு

**P**

Paganism — புறச்சமயம்
Papyrus — நாணற் புல்தாள்
Parchment — ஆட்டுத்தோல்
Philosophy — மெய்ந் நூல், மெய்யறிவு
Physicist — இயல் நூல் வல்லுநர்
Poll-tax — ஆள்வரி, தலைவரி
Prophet — நபி

**R**

Regiment — படை வகுப்பணி
Representation — உருவமைப்பு
Revelation — மறை வெளிப்பாடு
Ritual — சடங்குமுறை

**S**

Saint — அருள்தொண்டர்
Sanction — இசைவாணை
Scepticism — ஐயுறவு
Scion — கான்முளை
Sear — மெய்யுணர்வாளர்
Sojourn — இடைத்தங்கல்
Strait — இடைகழி
Survey — அளவாய்வு

**T**

Theology — இறைமையியல்
Tradition — மரபு
Tribe — குடும்பு
Tribute — திறை, கப்பம்

**V**

Valley — ஆற்றுப்படுகை